# அவர்களுக்கு வயது வந்து விட்டது




க. அருள்சுப்பிரமணியம்

M. SH[illegible]ATHY, B.A. HONS

# அவர்களுக்கு வயது வந்து விட்டது

(நாவல்)

க. அருள்சுப்பிரமணியம்

மலர்

வெளியீடு-2

**Avarkalukku Vayathu Vanthu Viddathu**
(*Novel*)

*Author*:- Kanapathipillai Arulsubramaniam

*Printed by*:- Ranjana Printers,
98, Vivekananda Hill,
Colombo-13.

*First Edition*:- November, 1973.

*Price*:- 3/90

*Cover designed by*:- Mr. W. Wickramanayake

*Malar Publications* No.2

*Sole distributors*:- VEERAKESARI (வீரகேசரி)
Express Newspapers (Ceylon) Ltd.,
185, Grandpass Road,
Colombo-14.

1. கலாநிதி கா. சிவத்தம்பி
2. திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி)
3. திரு. எஸ். இராஜகோபாலன்
4. திரு. தி. சுதந்திரபாலன்
5. திரு. பீ. டீ. ஜினதாச
6. திரு. டபிள்யூ. விக்கிரமநாயக்கா
7. திரு. வி. தர்மலிங்கம்
8. இரஞ்சனா அச்சகத்தார்

*இவர்களுக்கு எனது*
*உளமார்ந்த நன்றிகள்.*

க. அருள்சுப்பிரமணியம்
*60, இரீன் வீதி,*
*திருகோணமலை.*
*25-10-73.*

என்னுயிர்க்

குமாரதயாளனுக்கு

இந்நூல் சமர்ப்பணம்.

# முன்னுரை

வீட்டுக்குள் நுழையவிருக்கும் விருந்தாளியை, வாசற் படியில் நிறுத்தி வைத்து, வீட்டின் அமைப்பையும், வீட்டுக்காரரின் சிறப்பையும் பற்றி மூன்றும் மனிதர் ஒருவர் எடுத்து விளக்க முனையும் முயற்சிதான் விமர்சகன் ஒருவன் ஆக்க இலக்கிய நூலுக்கு எழுதும் முன்னுரை. விமர்சகனைப் பொறுத்த வரையில் இது சற்று 'இக்கட்டான' ஒரு நிலைதான். பார்வையும் சந்திப்பும் முடிந்த பின்னர் வீட்டையும் வீட்டுக்காரரையும் பற்றி விருந்தாளியின் கண்ணிற் படாத, கண்ணிற் பட்டும் கருத்தில் விழாத, நினைவிலே எழாத விடயங்கள் சம்பந்தமாக, அவ்விடயங்கள் சம்பந்தமாக சிறப்பறிவுடையவர் என்று 'கருதப்' படுகின்ற ஒருவர் கலந்துரையாடுவதுதான் பொருத்தம். ஆனால், நூல்களுக்குப் பின்னுரைகள் எழுதப்படும் வழக்கம்தான் இல்லையே. பின்னுரைகள், மதிப்புரைகள் என்ற பெயருடன் வேறு இடங்களிற் பிரசுரிக்கப்படுவதுதான் இன்றைய இலக்கிய சம்பிரதாயம்.

ஆயினும், இந்நாவல் பற்றியோ, நாவலாசிரியர் பற்றியோ ''பூசி மெழுகிச்'' சொல்ல வேண்டிய தேவையோ அவசியமோ இல்லை என்பதைத் திரிகரண சுத்தியுடன் கூறிக்கொள்ள வேண்டிய தர்மக் கட்டுப்பாட்டினை நாவலாசிரியரின் திறமையும் நாவலின் தரமும் ஏற்படுத்தியுள்ளன.

இந்நாவலின் ஆசிரியரான திரு. அருள் சுப்பிரமணியத்தின் வயதினையும், எழுத்துலக ஈடுபாட்டினையும் எழுத்துக்களையும் கொண்டு நோக்கும் பொழுது, இவர் இன்றைய ஈழத்திலக்கியகாரரின் பரிபாஷையில் ''இளம் எழுத்தாளர்'' என்ற சான்றிதழுக்கே உரிமையுடையவராகக் காணப்படுகின்றார். நான் அறிந்த மட்டில், இந்நாவலை எழுதுவதற்கு முன்னர்—இவர் எழுதியுள்ள பிரபலமான இலக்கிய ஆக்கம்—''அஞ்சலி''யின் கிழக்கிலங்கைச் சிறப்பிதழில் (1971, திசெம்பர்) வெளிவந்த ''சாந்தி ஓடி விட்

டாள்'' என்னும் சிறுகதைதான். காலமும் தொகையும் கொண்டு பார்க்கும் பொழுது இளம் எழுத்தாளர்தா னெனினும், எழுத்தின் ஆழமும் கலர்ச்சியுங் கொண்டு நோக்கும் பொழுது, இவரிடம் வியக்கப்படத்தக்க முதிர்ச் சியும் ஆக்கத்திறனும் காணப்படுகின்றன.

''அவர்களுக்கு வயது வந்து விட்டது'' என்ற இந் நாவலே அவருக்கு இத்தகைமையை அளிக்கின்றது.

இந்நிலையில், இந்த நாவலைப் பற்றி, அதன் கதை, அமைப்புப் பற்றிக் கூறவேண்டிய அத்தியாவசியம் ஏற்படு கின்றது. அறிமுகஞ் செய்யும் நிலையில், நாவலின் கதையை யும், அமைப்பையும் பற்றி எப்படி, எதைக் கூறலாம் என்று முனையும் பொழுது, இந்நாவலின் கருத்தாழமும், சித்தரிப்பழகும் சுலபமான பொதுக் கூற்றுகளை—போதா தவை, குறைபாடுடையவையாகச் செய்து விடுகின்றது. கதைப் பின்னலைக் கொண்டு மாத்திரம் கூறுவதானால்— இது, திருகோணமலைத் தமிழ் இளைஞன் ஒருவன் சிங்களப் பெண்ணொருத்தியை மணஞ் செய்வது பற்றிய அத் திரு மணத்தினால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய; திருமணத்திற் கிடமளித்த சூழ்நிலைகள், பூர்வாங்கங்கள் பற்றிய ஒரு நாவலே. ஆனால் நாவலை வாசித்து முடிக்கும் பொழுது தான், இக் கூற்று—உயிரற்ற, நாவலின் உயிரையே பிரதி பலிக்காத வெறும் சட்டகம் என்பது தெரியவரும். 1956க் குப் பின் ஈழத்தில் தோன்றி வளர்ந்துள்ள தமிழ் இளஞ் சந்ததியினரின் வாழ்க்கைப் பின்னணி பற்றியும், அவர் களை ஆட்கொள்ளும் கருத்துகள் பற்றியும், சிங்கள தமிழ் உறவின் தன்மைகள் பற்றியும், அவ்வுறவில் இன்று காணப் படும் போலி—விகற்பங்கள் பற்றியும், தமிழ்க் குடும்பங் களின் இலட்சியங்கள், வாழ்க்கை நடைமுறைகள் பற்றி யும் இந்த நாவல் ஆராய்கின்றது.

ஆனால், அருள் சுப்பிரமணியம் எடுத்துக் கொண்ட விடயங்கள் மாத்திரம் முக்கியமானவையல்ல. இவ் விட யங்கள் பற்றி ஈழத்தின் சிரேஷ்ட எழுத்தாளர்களும் தமிழ் நாவல்கள் எழுதியுள்ளனர். ஆனால் இவ்விடயங்களை அருள்

சுப்பிரமணியம் சித்தரிக்கின்ற முறைமையும், கூறுகின்ற முறைமையும், ஈழத்தின் பொது வாழ்க்கையின் பிரத்தியட்ச உண்மையாக அவற்றினை எடுத்துக் காட்டுகின்ற தன்மையுந்தான் அவரை ஒரு நல்ல நாவலாசிரியனாகவும், "அவர்களுக்கு வயது விட்ட"தை குறிப்பிடத் தக்க நாவலாகவும் ஆக்கி விடுகின்றன.

அருள் சுப்பிரமணியம் தமது கதைப் பொருளையும், கதைப் பின்னலையும் கையாள்கின்ற முறையில் அவை கதைக்காக கூறப்படுகின்றவையாக வல்லாது, அவ்வச் சூழலில் அவ்வப் பாத்திரங்களின் இயல்பான, மனித நிலைப் பட்ட இயக்கங்களாக, சிந்தனைகளாக அமைந்து விடுகின்ற தன்மையைக் காணலாம்.

அரியம், முத்தர், மொனிக்கா, மொனிக்காவின் தாய், மாஸ்டர், சிவபாதம்... யாவருமே இந்த இயற்கையான சூழலிலே பேசுகின்றனர்; மோதிக் கொள்கின்றனர், தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றனர்.

நாவலின் இச் சிறப்பே நாவலாசிரியரின் ஆக்கத் திறனுக்குச் சாட்சியாகவமைகிறது.

நாவலாசிரியன் என்ற வகையில் அருள் சுப்பிரமணியத்தின் கணிக்கப்படத்தக்க சிறப்புக்கள், அவரது பாத்திர வார்ப்புத்திறன், அவதானிக்கும் பண்பு, கதை சொல்லும் பாங்கு என்பனவே. உண்மையில், இவை மூன்றும் இருந்தாற்றான் ஒருவன் நல்ல நாவலாசிரியனாக முகிழ்க்க முடியும். இந்தத் திறமைகள் பிரிக்க முடியாதபடி ஒன்றிணைகின்ற பொழுதுதான் நாவல் தோன்றுகிறது.

> "தெருவில் போகும் இங்களவர்களுக்குக் கூறி வைத்து எறிய போத்தல்களுக்குள், அயல் பொடியன்களோடு சேர்த்து மண் அடைத்து வைத்து"

ப் பின்னர் சிங்களப் பெண்ணை மணஞ் செய்த நிலையில்,

> "தங்கையின் பிற்கால வாழ்க்கைக்கு என்னையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள் அம்மாவும் ஐயாவும், இந்

நிலையில் என் தங்கைக்கு நல்வாழ்வு அமைத்துத் தர வேண்டியது எனது கடமை. ஆனால், என்னை நம்பி வந்திருக்கும் ஒருத்தியின் வாழ்க்கையை நான் கெடுக்க முடியாது. அவளுடைய வாழ்க்கையைக் கெடுத்துத் தான் நான் எனது தங்கைக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமா''

என்ற தர்மப் பிரச்சினையை எதிர்நோக்கி, இறுதியில், தனது தங்கையையும் அழைத்துக் கொண்டு மனைவியுடன் கொழும்பிற்குப் பயணம் செய்யத் தீர்மானிக்கின்ற அரியத்திற்கு மாத்திரமல்ல, சிங்களப் பெண்ணை அன்பு மச்சாளாக ஏற்றுக் கொண்ட அவன் தங்கைக்கும்

''என்னையும் கைவிடாமல், உங்கள் குடும்பத்தாரையும் பகைத்துக் கொள்ளாமல் எங்கள் வாழ்க்கை ஓடம் ஓட வேண்டுமென விரும்புகின்றீர்கள்; இதிலிருந்தே எனக்கு உங்கள் இதயம் புரிகின்றது''

என்று கூறிக்,

''கீழான சின்னத்தனமான உணர்ச்சியான வகுப்புவாதம் எங்களுடைய ஆழ்ந்த அன்பின் தாற்பரியங்களை அழித்துவிடக் கூடாதென்றும், அன்பென்னும் உயரிய உணர்ச்சிக்கு முன்னால் ஏளனமான குற்றச்சாட்டுக்கள், வகுப்புவாதக் கூச்சல்கள் எல்லாம் நிற்க முடியாது விழுந்துவிடும்''

என்று தன் தாய் கூறியதை நினைவுபடுத்திச் செயற்படுகின்ற மொணிக்காவும், சிங்களத்தியென்று முதலிற் கூறி ஒதுக்கிய பெண்ணிடம் — மருமகளிடம், முடிவில் வருசக்கை விசேஷமாக ஐந்து ரூபாவை ''இந்தாங்க பிள்ளையள்'' என்று கூறித் தரும் முத்தரும் ''வயது வந்து விட்ட''வர்களாக முதிர்ச்சியுறும் தன்மையையும், இந்த மனமாற்றங்களுக்கு, அடிப்படையான சமூக, பொருளாதார, வரலாற்று நிலையையும் — மனித உணர்ச்சிகள் என்ற களத்தின் பகைப்புலத்தில் வைத்து அழகாகச் சித்தரித்துள்ளார் அருள் சுப்பிரமணியம்.

நல்ல நாவல் சமூகப் பொறுப்புணர்வுடன், சமூகப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து முற்போக்கான வழியினைக் காட்டுகின்ற பொழுது, முக்கிய இலக்கியப் படைப்பு ஆகிவிடுகின்றது.

இதற்கு நாவலாசிரியனுக்கு வேண்டிய மேலே குறிப்பிட்ட ஆக்கத்திறன்களைவிட, அவற்றினடியாகத் தோன்றி அத்திறன்களை நன்கு பயன்படுத்த உதவும் சமூகக் கடப்பாடு எனும் இலக்கிய அறம் வேண்டும். அருள் சுப்பிரமணியத்திடம் இந்த இலக்கிய அறம் இயற்கையான ஆக்கத்திறனுடன் இணைந்து நிற்கின்றது. அவர் தம்முடைய தெளிவான சமூக நோக்கினை இந்நாவலிற் பலவிடங்களிற் காட்டியுள்ளார். கதையைக் கூறிச் செல்லும் பொழுது உள்ளார்ந்தவோர் அங்கத உணர்வு காணப்படுகின்றதெனினும், முக்கிய கட்டங்களில் அவர் கூறுவனவும், தம் பாத்திரங்களைச் கூறச் சொல்வனவும் — சிறப்பாக, மொணிக்காவின் தாய், அரியம் ஆகிய பாத்திரங்கள் — அவரது தேசிய நோக்கினை எடுத்துக் காட்டுகின்றன.

சிங்கள தமிழ் உறவுகளைச் சித்தரிப்பதே இந் நாவலின் சிறப்பம்சம் எனலாம். தேசிய ஒருமைப்பாட்டுணர்வினையே தமது கதை சுட்டும் பொருளாகக் கொண்டுள்ள அருள் சுப்பிரமணியம், சிங்கள தமிழ் மக்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் கொண்டுள்ள கருத்துக்களை, சிறப்பாகச் சிங்களவர் பற்றித் தமிழ் மக்கள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள் என்பதை ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டுகின்றார். அப்படிக் காட்டுவதன் மூலம் அவ்வெண்ணங்களின் போலித் தன்மையையும் அவர் கூறாமலே கூறி விடுகின்றார். இவ்வம்சத்தை நோக்கும் பொழுது எனக்கு என் நண்பர் குணசேன விதான சிங்களத்தில் எழுதியுள்ள "பாலம்" என்னும் சிறுகதையின் நினைவுதான் வருகின்றது. அவர் அச் சிறுகதையில், தமிழ் மக்கள் பற்றி சிங்கள மக்கள் கொண்டிருக்கும் எண்ணங்களை ஒளிவுமறைவின்றிக் காட்டி, தமிழ் சிங்கள நல்லுறவுக்கான வழியைக் காட்டுகின்றார்.

"அவர்களுக்கு வயது வந்து விட்டது" என்ற இந்த நாவல் திருகோணமலைத் தமிழ் வாலிபன் ஒருவனது வாழ்க்கையையே சித்தரிக்கின்றதெனினும், சிங்கள — தமிழ் உறவுச் சித்தரிப்பினைப் பொறுத்த வரையிலும், தமிழ் சமூகத்து விவாகக் கோடபாடுகளைப் பொறுத்த வரையிலும், இது இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழரையும் பிரதிபலிக்கின்றது எனலாம்.

அந்த அளவில், இலங்கைத் தமிழ் மக்களின் சிந்தனை ஓட்டங்களையும், தமிழ் இளஞ் சந்ததியின் முற்போக்கு நிலைப்பாட்டினையும் சிங்கள மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமெனின், அவர்கள் இந்நாவலை வாசிக்க வேண்டுவது அவசியமென்றே கூறுவேன்.

இந்நாவல் விரைவில் சிங்களத்தில் மொழிபெயர்க்கப் படல் வேண்டும். அதற்கான முயற்சிகளை சிங்கள அறிவுள்ள தமிழ் எழுத்தாளர் எடுத்தல் அவசியமாகும்.

நாவல் இலக்கியத்துக்கு வேண்டிய பொருட் சிறப்பும், ஆக்கச் செம்மையும் கொண்டது இந்நாவல். ஈழத் தமிழிலக்கியத்தின் பதச் சோறாக விளங்கக் கூடிய தகைமை இதற்கு எல்லா வகையிலும் உண்டு.

பொருட்சிறப்பும், சமூகப் பயன்பாடுமுள்ள தமிழ் நாவல் என்ற அளவில் இந்நாவலும், ஆக்கத்திறனும் சமூக — கடப்பாட்டுணர்வுமுள்ள எழுத்தாளர் என்ற அளவில் இந்நாவலாசிரியரும், — தமிழ் நாவல், தமிழ் நாவலாசிரியர் என்ற பொதுப் பகைப் புலத்தில் வைத்து ஆராயப்பட வேண்டிய ஓர் இலக்கியத் தேவையும் உள்ளது.

"அவர்களுக்கு வயது வந்து விட்டது" என்ற இந் நாவலின் ஆற்றொழுக்கான கதை ஓட்டம், இந்நாவலில் வரும் பாத்திரங்கள் உரையாடும் பொழுது காணப்படும் செயற்கை வாடை சிறிதும் வீசாத இயல்பான நடை ஆகியன தமிழகத்து நாவலாசிரியரான தி. ஜானகிராமனை நினைவுறுத்துவனவாகவுள்ளன. இவ் ஒப்பீடு அருள் சுப்பிரமணி

யத்தை ஈழத்து ஜானகி ராமனுக்கும் முயற்சியன்று. தமிழி
லக்கியப் பரப்பில் ஈழத்துத் தமிழ் நாவலாசிரியன் ஒரு
வனது முதல் முயற்சி அவனை எத்தகைய மதிப்பீட்டுக்கு
அருகதையுள்ளவனாக்குகின்றது என்பதைச் சுட்டிக் காட்டு
வதாகும்.

ஈழத்தில் தேசிய நோக்குள்ள, சமூகக் கடப்பாடு
டைய தமிழ் இலக்கியங்களைத் தோற்றுவிக்க, வளர்க்க,
பேண முனையும் அதேவேளையில் தமிழ் இலக்கியத்தின்
பொதுப் பரப்பில் எமது இடத்தினை அறியவும், மதிப்பிட
வும், நாம் தயங்குதல் கூடாது.

இலக்கியம் கலைப்படைப்பேயெனினும் அது சமூகக்
கண்ணாடியாகவும் அமைந்து விடுகின்ற உண்மையினை நாம்
அறிவோம். சமூகவியல் மாணவன் என்ற முறையில் இந்
நாவலிலிருந்து திருகோணமலைத் தமிழ் மக்களது
வாழ்க்கை, கருத்துக்கள் பற்றிப் பல உண்மைகளை அறிந்து
கொண்டேன்.

இன வேற்றுமையுணர்வு பற்றி ஆராய்ந்துள்ள சமூக
வியலாளர், அவ்வுணர்வு சம்பந்தப்பட்ட இரு கூட்டத்தின
ரும் ஒருங்கு வாழும் ''எல்லைப் — பிரதேசங்களிலே தான்
அதிகம் காணப்படும் என்பர். தனியே ஓர் இனம் மாத்தி
ரமே வாழும் பகுதியிலும் பார்க்க இரண்டு இனங்களும்
ஒருமித்து வாழும் இடங்களிலேயே இன உணர்வு தலை
தூக்கி நிற்கும். மதுரை மாவட்டத்தில் வாழும் தமிழரி
லும் பார்க்கத் திருத்தணிப் பகுதியில் வாழும் தமிழர் இன
உணர்வுள்ளவர்களாக விருப்பதற்கும், யாழ்ப்பாணத்துக்
கிராமங்களில் வாழும் தமிழர்களிலும் பார்க்க கொழும்
பில் வாழ்கின்ற தமிழர்கள் இன உணர்வுள்ளவர்களாக
விருப்பதற்கும் இதுவே காரணமாகும். திருகோணமலை
யில் தமிழர்களும் சிங்களவர்களும் ஒருங்கு வாழும் தன்
மையினால் அங்குள்ள தமிழ் மக்களிடத்தே இன உணர்வு
எண்ணங்கள் முனைப்பெய்தி நிற்பதனை, இந்நாவலில் வரும்
கதாபாத்திரங்கள் நன்கு காட்டி நிற்கின்றன.

மேலும், இந்நாவலை வாசிக்கும் பொழுது, திருகோண மலையில் வசிக்கும் தமிழ் மக்களது வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், சிந்தனையோட்டங்கள் ஆகியன இலங்கையின் வட பகுதியில் வசிக்கும் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், சிந்தனையோட்டங்கள் ஆகியனவற்றிலிருந்து வேறுபட்டனவல்ல என்பது தெரிய வரும். பேச்சு வழக்கிலுள்ள சொற்களிற் கூட (பேச்சொலி வேறுபடலாம்) ஒருமைப்பாட்டினைக் காணலாம். இலங்கைத் தமிழ் மக்களுடைய பண்பாடு சில பொதுப்படையான அம்சங்களைக் கொண்டுள்ளது என்ற சமூகவியலுண்மையினை இந் நாவல் நிறுவுகின்றது.

தேசிய நிலை நின்று நோக்கும் பொழுது, பிரிந்து நின்று வாழும் பொழுது தான் ஒவ்வொரு இனமும் மற்றைய இனத்தைப் பற்றிப் பீதியுணர்வுகள் பலவற்றைக் கற்பித்துக் கொண்டு பின்னர் அவை உண்மையென நம்பி வாழ முனைகின்றன என்ற உண்மையையும் இந்நாவல் எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய இலக்கிய ஆக்கங்கள் தான் தேசிய ஒருமைப்பாட்டுக்கான யதார்த்த பூர்வமான தளத்தை ஏற்படுத்துகின்றன.

இதுவரை இம்முன்னுரையை வாசித்தவர்கட்கு கூறும் இறுதி வார்த்தை இதுதான். ஈழத்தில் இதுவரை வெளிவந்துள்ள, சுவாரசியமும் சமூக முக்கியத்துவமுள்ள நாவல்களில் ஒன்று அடுத்த பக்கத்திலே தொடங்குகின்றது.

கார்த்திகேசு சிவத்தம்பி

தமிழ்ப்பிரிவு, மொழி, பண்பாட்டுத்துறை,
வித்தியோதய வளாகம்,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
நுகேகொடை.
27 - 7 - 1973.

# பதிப்புரை

ஈழத்தின் இலக்கிய வரலாற்றில், பழம் எழுத்தாளர்கள் பலர் ''அந்தக்காலத்து'' இலக்கிய உணர்வுடன் செக்கு மாடு சுற்றிவருகின்ற வேளையில், நவீன இலக்கியப் பிரக்ஞையுடன், யதார்த்த ரீதியான அல்லது புதுமை இலக்கிய நோக்கிலமைந்த இலக்கியப் படைப்புகளை உருவாக்குபவர்கள் இன்றைய இளம் எழுத்தாளர்களே என்பது என் கருத்து. குறிப்பாகச் சொல்லப்போனால், அருள், சுப்பிரமணியம், வேதாந்தி, கவிதா முதலியோரைக் குறிப்பிடலாம். இம்மூவருள்ளும் அருள் சுப்பிரமணியம் அவர்களின் படைப்புகள் எமது மண்ணில் கால்லூன்றியதாக, எமது மக்களை உயிர்த்துடிப்புடன் படம்பிடிப்பதாக எமது வாழ்க்கைமுறைகளை,—ஆசாபாசங்களை அதன் அம்மணமான தோற்றத்தில் இலக்கியச்சுவை ஏற்றித் தருவதாக அமைந்துள்ளன.

மிகக்குறுகிய காலத்தில், தமது சிறுகதைகள் மூலம் ஈழத்து இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்துவிட்ட திரு. அருள் சுப்பிரமணியத்தின் முதல் நாவல் ''அவர்களுக்கு வயது வந்துவிட்டது''. முதல் நாவலாக இருந்த போதிலும் ஈழத்தில் முதன்மைபெற்ற நாவலாகவும் இது அமைந்துவிடுகிறது. இந்த நாவலின் சிறப்புகள் என்ன?

## (1) கதைக்கரு:

சாதாரணமான ஒரு கதையை ஏனைய எழுத்தாளர்கள் பார்க்காத ஒரு புதுமைக் கோணத்தில் பார்த்து அந்தக் கதையின் மூலம் சொல்லப்பட வேண்டிய புதுமைக் கருத்தை ஆழமாகவும், ஆணித்தரமாகவும் கூறியிருப்பது. அப்படிக் கூறிய பாங்கில் அதையிட்டு வாசகர்கள் தாமாகவே சிந்தனையிலீடுபட்டு, சிறந்த முடிவைப் பெற வாய்ப்பளித்திருப்பது. இலக்கியத்தின் நோக்கம் சிந்தனைப் புரட்சி. அது இங்கு வெற்றிகரமாக நிறைவேறுகிறது.

வாலிப வயதில், இளமைத் துடிப்பில் அரியரெட்ணம் தவறிழைத்துவிடுகிறான். அதன் விளைவுகளிலிருந்து அவன் சுலபமாகத் தப்பித்துக்கொள்ள முடியும். ஆனால் அப்படிக் கோழையாக, துரோகியாக, சுயநலமியாக, மனிதப்பண்பற்றவனாக, மாறவேண்டிய நிர்ப்பந்தம் எது? இன்றைய சமூதாயத்தின் போலி மதிப்பீடுகள்—மூட சம்பிரதாயங்கள், போலி கௌரவம், சுயசிந்தனையற்ற தன்மை, அரியரெட்ணம் கொஞ்சம் சிந்திக்கிறான். அவ்வளவுதான் இத்தக்கதையின் உயிர்நாடி.

தான் உறவு கொண்ட மொனிக்காவை ஏற்றுக் கொண்டு தர்மத்தை வாழவைப்பதா அல்லது அவளைக் கைவிட்டுவிட்டு, தனது ஊராரின் புகழ்மொழிகளையும், தன் சமூகத்தின் மதிப்பையும், தனது பெற்றோரின் 'நல்ல பிள்ளை' பட்டத்தையும் பெறுவதா? முந்தியதே சரி எனத் தீர்மானிக்கிறான் அரியரெட்ணம். அதனால் ஏற்படக்கூடிய அத்தனை விளைவுகளையும் ஏற்க அவன் தயார்! ஏன்? இந்தப் போலியான சமுதாயத்தின் மூடத்தனங்களுக்கு வளைந்து கொடுப்பதை அவன் மனச்சாட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. அவனை ஒரு புரட்சிவாதி எனக் கூறலாமா? நிச்சயமாக! கதையில் வரும் சம்பவங்கள் அதையேஉறுதிப் படுத்துகின்றன.

சிங்களவனாயிருந்தாலும், தமிழனாயிருந்தாலும் 'மானிதம்' பொதுவானது. சிங்களவர்களால் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்பதற்காக அல்லது, சிங்களவர்கள் தமிழர்களைப் போல் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ளவில்லை என்பதற்காக, ஒரு சிங்களத்திக்குத் துரோகம் இழைப்பதோ அல்லது சிங்களவர்களுக்கு ஏற்படும் துன்பங்களையிட்டு மனம் மகிழ்வதோ மனிதத் தன்மை அல்ல என்பதை அரியரெத்தினத்தின் 'கதை' வலியுறுத்துகிறது.

ஒரு வாலிபனுக்குக் கடிதம் எழுதியதால், பெண் கற்புக் கெட்டுவிட்டாள் என்றும், அவளே பதினாயிரம் கொண்டு வந்தால் கற்புக்கரசியாகிவிட்டாள் என்றும்—

ஒரு சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டால், சமூகத்துரோகி என்றும், பெற்ருேரால் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவன் என்றும், பொறுப்பற்ற முறையில் வீண் வம்பளப்பவர்களுக்கு நல்லவர்கள்—மனச்சாட்சியை மதிப்பவர்கள் — பயந்து நடக்க வேண்டும் என்று நமது மக்கள் கொண்டுள்ள கபோதித் தனமான, கன்மூடித்தனமான சம்பிரதாயங்களை, மூடக்கொள்கைகளை முறியடிக்கிறது அரியரெத்தினத்தின் 'கதை'.

போலிகள் தங்கைக்கு வாழ்வளிக்கப் போவதில்லை, தானே — தர்மமே — அவளுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற நிதர்சன உண்மையையும் வலியுறுத்துகிறது அவன் கதை.

சிந்திக்க வேண்டிய, செயல்படுத்த வேண்டிய பல கருத்துக்கள் கதையினூடே விரவிக்கிடக்கின்றன. உணர்ச்சியுள்ளவர்கள், இதயத்தில் கொஞ்சம் ஈரம் உள்ளவர்கள் அவற்றைக் கண்டு கொள்வார்கள்.

## (2) பாத்திரப்படைப்பு:

நம் கண்முன்னே தினம் உலவுகின்ற ஓய்வுபெற்ற மூத்தர், நம் சமுதாயத்திலே சராசரியாக உள்ள அவரது குடும்பம், குடும்ப அங்கத்தினர்கள், கிளாக்கர் அரியரெத்தினம், கொழும்பில் அவர் தங்கியிருக்கும் வீடு, வீட்டில் உள்ள இரு சிங்கள உயிர்கள்; சித்திரவேலு மாஸ்டர், மாணிக்கராசா, நண்பன் சிவபாதம் இவர்கள் மட்டுமல்ல, கதைசெல்கின்ற பாதையில் உள்ள அத்தனை மனித உயிர்களும் உயிர்த்துடிப்புடன், முழு உருவத்துடன், நம் கண்முனனே தெரிகின்றன.

பாத்திரங்களைப் போலவே, கதை நடைபெறும் இடங்களும்,—சந்திக்கடைக் கூட்டங்கள், ஒழுங்கைகள், சனசமூக நிலையம்.—விடியற்காலையில் நோட்டீஸ் ஒட்டித் திரிபவர்கள், திருமணங்கள், வீடு, வளவு, கிணற்றடி, கோழிக்கூடு...... ஒவ்வொன்றும் உயிருள்ளதாக இக்கதையிலே தெரிகின்றன.

இவ்வாறே சம்பவங்களும்—பேவ்மெண்ட் வியாபாரம், புகைவண்டிப் பிரயாணிகள், ஸ்டேஷன் நிறுத்தங்களில் ஏற்படும் சலசலப்புகள்—பிளாட்போம் வியாபாரம், ரயில் சிநேகிதம், வீட்டில் தாய்—மகள் உறவு, தந்தை—மகன் உறவு—இப்படி ஒவ்வொன்றும் உயிருள்ளதாக, நெஞ்சை நிறைப்பதாக அமைந்துள்ளன.

கதையில் வரும் ஒவ்வொரு பாத்திரத்தினதும், சிறப்புகள், சின்னத்தனங்கள், மனக்குகையில் உள்ள சுயநல எண்ணங்கள், அற்ப ஆசைகள் அத்தனையும் ஆசிரியரின் கைவிளக்கில் அப்படியே துலாம்பரமாகத் துல்லியமாகத் தெரிகின்றன.

இந்தப் பாத்திரங்களினூடே கதை நகர்ந்து செல்கின்றபோது ஆங்காங்கே தென்படும் சிறுமைத்தனங்கள் மீது ஆசிரியர் 'நறுக்'கிடும் குண்டூசிக் குத்தல்கள்: சில வேளைகளில் அவர் மனதில் குமுறும் தார்மிகக் கோபம் ஆகியவை மெல்லிய நகைச்சுவை இழையோடு பின்னப்படும்போது நமது அகமும், முகமும் மலரவே செய்கின்றன.

வரிக்குவரி உயிருள்ளதாக அமைந்துள்ள ஒரே நாவல் 'அவளுக்கு வயது வந்துவிட்டது', இந்த வகையில் அதாவது உயிருள்ள இலக்கியப் படைப்புகளைப் படைப்பதில் இன்று ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர் என கணிக்கப்படத்தக்கவர் திரு. அருள் சுப்பிரமணியம். 'பெயர் பிரபலத்தை' மட்டுமே அளவுகோலாகக் கொள்கிற இன்றைய ஈழத்து இலக்கிய உலகில் இந்த உண்மையை இப்போது புரிந்து கொள்வது கடினமாக இருக்கும். ஆனால் காலம் இதை நிரூபிக்கும்.

## (3) உருவம்

பிசிறு இல்லாத முழு உருவத்தில் நாவல் அமைந்துள்ளது. ஒரு சிறுகதைக்குரிய இறுக்கத்துடனும் ஒரு கவிதைக்குரிய தெளிவுடனும் நாவல் அமைந்துள்ளது போற்றற்குரியது. கதைமுழுவதும் இரண்டே நாட்களில் இரண்டே

இடங்களில் நடந்து முடிவுறுகிறது. எவ்வித திருகலிடும் திருப்பங்களும், சஸ்பென்ஸ்களும், அதிர்ச்சி முடிவுகளும் இல்லாமல் தெளிந்த ஆற்றோட்டம் போல், அதே நேரம் வாசகர் கவனத்தை அகலவிடாத உருவ அமைப்பை இந் நாவல் கொண்டுள்ளது.

## (4) உத்திகள்:

பாத்திர அறிமுகம், கதையின் சம்பவ வளர்ச்சிக்குத் தேவையான காட்சிகள் வர்ணனை ஒவ்வொன்றிலும் புது மையும் சிறப்பும் கொண்ட 'காமரா கோணங்களை' அமைத்துள்ளார் கதாசிரியர்.

கொழும்பு பேவ்மெண்டில் பிரயாண அவதியுடன் பொருட்கள் வாங்கும் அரியரெட்ணம், கோட்டை ஸ்டே ஷனில் மொனிக்கா அறிமுகம், ரயில்வண்டியில் மாஸ்டர் குடும்பம் இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்திகள் புதுமையாகவும் கவர்ச்சியாகவும் அமைந்துள்ளன.

கார் ஓட்டம், கட்டழகி, டுமீல் ஹஹ் ஹா'ஹா! முத லிய எதுவுமே இல்லாமல் சாதாரணமான வாழ்க்கைப் பிரச்சினை ஒன்றைக் கருவாகக் கொண்ட கதையை துப்பறி யும் மர்மக் கதையின் விறுவிறுப்புடன் ஆசிரியர் வளர்த்துச் சென்றுள்ளார் என்றால் அதற்குக் காரணம் கதையின் ஊடே பாவோடி நிற்கும் மானிதத்தின் உண்மையான படப்பிடிப்புத்தான். இந்த உத்தி மேல் நாட்டு எழுத்தா ளர்களிடம் அபூர்வமாகக் காணப்படுகிறது. அந்த வகை யில் மிகவும் உயர்ந்து நிற்கிறார் அருள் சுப்பிரமணியம்.

ஈழத்து வாசகர்கள் அவரை இனம் கண்டு கொள்ள வேண்டும்.

இரா. நாகலிங்கம்
("அன்புமணி")

கல்வித் திணைக்களம்,
மட்டக்களப்பு.
15 - 8 - 73.

# ஒன்று

## 11-4-72 இரவு

கொழும்பு இருட்டுகிலேப் போர்க்கத் தொடங்கியது. இருந்தாலும் இரைச்சல் இன்னும் குறைந்த பாடில்லே. கோட்டை புகையிரத நிலேய மணிக்கூடு ஏழேகாலேக் காட்டுகிறது. பஸ் களும், டாக்சிகளும் உயிருள்ளதும் அது அற்றதுமான எத்தனேயோ பொதிகளே இறக்கியவண்ணம் கடமை செய்துகொண் டிருக்கின்றன. எல்லாப் பொதிகளும் எட்டு மணி மெயிலில் ஏறிக் கொள்ளத்தான் இவ் வளவு ஆரவாரத்துடன் வந்திருக்கின்றன. நிலேயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விலத்திச் செல்ல முடியாத அளவிற்கு சனம். யந்திரங்களின் செயலாக்கம். சனக்கூட்டத் தின் அசைவாக்கம். சலசலப்பின் பிறப்பிற்கு வேறு காரணிகளா தேவை!

ஹோட்டல் டீ புஹாரிசில் புரியாணிப் பார்சல்களும், ஆனந்தபவானில் தோசை இடியப்பப்பார்சல்களுமாக ரெயில் பிரயாணிகளுக்காக மாறி மாறிக் கட்டப்படுகின்றன.

பேவ்மெண்டில் இறுதிநேர வியாபாரம் பரபரக்கிறது. "தோடங் ருப்பியலட்ட துனயி, கண்ட மாத்தயா...... மல்லி......அதை பாக்கில போட்டுக் குடு. ... பொடி சல்லி நத்த மாத்தயா"..... சில கிராக்கிகள், பழங்கள் வாங்கி விட்டுப் போனதும் மற்ற நடைபாதசாரிகளையும் தம் கிராக்கி களாக்கி தம்மிடமிருக்கும் பழ்ங்களை அவர்கள் தலையில் கட்டி விடவேண்டுமென்ற அவசர முனைப்பில், அந்த பேவ்மெண்ட் முதலாளிகள் ராகம் இசைக்கிறார்கள்.

"பெயார்ஸ் பனகட்ட தெகயி, ருப்பியலட்ட பகயி"... நடைபாதையில் நடந்து போபவர்களில் — இவர் சிங்களவர், இவர் தமிழர் என்ற வித்தியாசம் அவர்களுக்கு எப்படித்தான் தெரிகிறதோ. ஆட்களுக்கேற்ற விதமாக அவர்களுடைய வாய்களில் அடிக்கடி மொழிகள் மாறுபடுகின்றன. கொச்சை ஆங்கிலத்திற்கும் குறைச்சலில்லை.

"யெஸ் சேர், கிறேப்ஸ், பிப்ரின் றுப்பீஸ் வன் பவுண்ட்... ஈற் அண்ட் சீ அண்ட் பை சேர்"..... பழங்களை விற்றுக் காசாக்க வேண்டுமென்பதால் உருவான ஆங்கிலம் அது. அவர்களது தோற்றங்கள் ஒருவிதமாக இருக்கின்றன. பரட்டைத் தலைகளும், பட்டிகள் கட்டப்பட்ட சாரங்களும்... விலையை மட்டும் கேட்டு விட்டுப் போய் விட்டால் அடித்து விடுபவர்கள் போன்ற பயங்கரமான தோற்றம். ஆயினும்... தம் வியாபாரப் பொருட்களை மற்றவர்கள் தலையில் கட்டி விடும் சக்தி நிறைந்த, குழைவு மிகுந்த வார்த்தைப் பிரயோகம் அவர்களுடைய மூலதனம்.

இப்பொழுதெல்லாம் இந்த நடைபாதை வியாபாரிக ளிடம் அவ்வளவு நம்பிக்கை வைக்க முடிவதில்லை. ஐம்பது றம்பிட்டான் பழங்கள் போடுகிறேன் என்ற சாட்டில் நாற்பத்திரண்டை எண்ணி விட்டு அனுப்பி விடுகிறார்கள்.

"என்னப்பா குறையுதே, திருப்பி எண்ணு" என்று அவர்களது திருட்டுத் தனத்தைச் சோதிக்கும் அனுபவஸ்தர்கள் இருக்கிறார்கள். இவனோடை கதைச்சுக் கொண்டு நிண்டா, வீண் வம்பு என்று பழங்களை அவசரத்தில் வாங்கிக் கொண்டு நடக்கும் ஆறுதலானவர்கள் இருக்கிறார்கள். அவர்களது முறைகேடான வியாபாரத்தைப் பற்றி பக்கத்தே போய்க் கொண்டிருக்கும் பொலீஸ்காரரிடம் ஆங்கிலத்தில் முறையீடு செய்யும் ஜாக்கிரதையானவர்களுமிருக்கிறார்கள்.

இப்படி எத்தனையோ ரகங்களில் மக்கள். இப்பொழுது பழங்கள் வாங்கிக் கொண்டு நிற்கிறானே அரியரெத்தினம் ..அவன் மேற்கூறியவர்களில் எந்த ரகம்? "பெயார்ஸ் ...சீயக் தாண்ட இக்மனட்ட"..., நம்புட்டான் நூறு"... அரியரெத்தினம் அவசரத்தில் "அதில நூறு இதில நூறு" என்று சொல்லிக் கொண்டு நிற்கிறான். ஐந்து பழங்கள் குறைந்து போனாலுமோ, அல்லது ஐந்து சதம் கூடிப் போனாலுமோ அவனுக்கு இப்போது கவலையில்லை. பழங்கள் வாங்கி மினக்கெடுவதால் - ஐந்து நிமிடங்கள் ஓடிவிடக் கூடாதென்பதில் தான் அவனுக்குக் கண். அவனது அவசரமும், அடிக்கடி கையை உயர்த்தி மணி பார்த்துக் கொள்ளும் விதமும்... பேவ்மெண்ட் முதலாளிக்குப் பேரானந்தத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். காற்றடிக்கும் போதே தூற்றிவிட வேண்டும் என்பதில் பலத்த நம்பிக்கையுடையவன் அவன். 'அதில தொண்ணூறு' இதில எண்பது' எண்ணிப் போட்டு வியாபாரத்தை முடிக்கிறான்.

"ஏய் லமயா, ஐயாக்குப் பெரிய பாக்கில போட்டு சுத்திக் குடு"......தன் கள்ளத்தனத்திற்கு ஆளானவன் என்ற அனுதாபம் காரணமாக ஏற்பட்ட பரிதாபத்தால் "பெரிய பாக்கில நல்லாக் கட்டிக் குடு" என்று கூறுகிறான். அரியரெத்தினம் ஏற்கனவே வாங்கியிருந்த புரியாணிப் பார்சலைப் பெரிய பைக்குள் போட்டு மடித்துக் கொண்டு... தெருவை குறுக்கறுக்கிறான்.

நேரம் ஏழு முப்பத்தைந்து. எதிரே டபிள் டெக்கர் களுக்கும், கார்களுக்கும் குறைவேயில்லை. சாரி சாரியாக வந்து கொண்டிருக்கின்றன.

'கொஞ்சம் ஈவு கிடைக்கும் எண்டு பாத்துக் கொண்டு நிண்டா, இண்டைக்குப் போனப் போலத்தான்"... '.. அரிய ரெத்தினம்' "மஞ்சள் கோடு" எல்லைக்குள்ளால் நடக்கிறன், அவனோடு சேர்ந்து இன்னும் நாலைந்து ரயிலைப் பிடிப்ப வர்கள்.

'இந்தக் கோட்டுக்குள்ளால நடக்கேக்குள்ள கார்காரன் அடிச்சா, அவனுக்கு வழக்கல்லோ'

இந்த நம்பிக்கை அரியரெத்தினத்தின் கால்களை வேகத் துடன் இயக்கி, தெருவைக் கடக்க வைக்கிறது. மொணிக்கா தனியே காத்துக்கொண்டு நிற்கிறள் என்ற நினைப்பு. அவன் கால்களை ஓட வைக்கிறது. தான் ஏற்கனவே வாங்கி வைத் திருந்த செகண்ட் கிளாஸ் வாறண்ட் டிக்கட்களை, டிக்கட் கலெக்டரிடம் காண்பித்து விட்டு, நிலையத்திற்குள் அடி யெடுத்து வைக்கிறன் அரியம். பார்சலைத் தூக்கி உயர்த்திப் பிடித்தால்த்தான் சன நெரிசலில் தட்டுப் படாமல் அவன் செல்ல முடியும். நிலையத்தில் அமைந்திருக்கும் புத்தகக் கடை யில் வெற்றிலை பீடாக்கள் தம் தோற்றங்கள் காட்டி அவனை ஆகர்சிக்கின்றன.

'இரண்டை வாங்கி வைத்துக் கொண்டால், பேந்து சாப்பிட்டுப் போட்டுப் போடலாம், பைக்கற்றுக்குள்ள இருக்கிற சில்லறைப் பாரமும் குறையும்'...இருக்கும் சில்ல றைக்குள் இருபது சதத்தை எண்ணிக் கொடுத்து விட்டு இரண்டு பீடாக்களை வாங்கிக் கொண்டு நகர்கிறன். போர் ஏசஸ் பைக்கட் ஏற்கனவே வாங்கியாகிவிட்டது.

'பீடாவில கராம்பு குத்தின காலமெல்லாம் மலையேறிப் போச்சு. இப்பல்லாம் கம்புக் குச்சிதான் குத்துகிறன்கள்.'

மொணிக்கா,கராம்பு என நினைத்து குச்சியையும் விழுங்கி விடக் கூடாதேயென்ற ஜாக்கிரதை உணர்வோடு, பீடாவி லுள்ள குச்சிகளை அகற்றிவிட்டு நீண்ட பிளாட்போம் தரை யில் ஊர்கிருன் அரியரெத்தினம்.

'ஆ...அந்தா...மொணிக்கா, நீல நிற சூட்கேசிற்குப் பக்கத்தில .. ஓம்... ஓம் ... மொணிக்காதான். பாவம் கன நேரமாக் காத்துக் கொண்டு நிற்கிருள்'.

அரியம் அண்மிக்கிருன். எத்தனையாவது தடவையாக வோ தெரியவில்லை ..முகத்தைச் சின்ன லேஞ்சியால் துடைத் துக்கொண்டு நிற்கிருள் அவள்.

"ஏழே முக்காலாச்சு, என்ன இன்னும் மெயிலைக் காணேல்லே," என்று சிங்களத்தில் கேட்டுக் கொண்டே அவளருகில் வந்து பார்சல்களை சூட்கேசின் மேல் வைக்கிருன் அரியம். மொணிக்காவிற்கு தமிழ் டிக்கக் டிக்கக் தான் தெரி யும். அதனுலேயே முக்கியமான நேரங்களில் அரியம் சிங்களத் திலேயே கதைத்து விடுகிருன். அவன் கதைப்பதும் - தனக் குத் தெரியாததால் தன் பிடரிக்குச் சேதம் விளைவிக்கும் சிங்களந்தான் ... ஆனுல் மொணிக்காவினுல் அவன் பிடரிக் குச் சேதம் வரப் போவதில்லை ... ஏன்? .. அவள் அவனுடைய மனைவி. உண்மையைச் சொல்லப் போனுல் ... கொழும்பிற்கு வந்த ஆறுமாதத்திற்குள் தான் அவன் அவளிடமிருந்து டிக்கக் சிங்களத்தையும் அவள் அவனிடமிருந்து கொஞ்சம் தமிழையும் கற்றிருக்கிருர்கள். 'மட்'- சிகரட் எக்கத் தெண்ட' ...... 'கெசல் கெடி கியத' ...... என்ற தன்மை களிலமைந்த கொச்சைச் சிங்களம் அவனுக்குக் கை கூடி வந்திருக்கிறது இப்போது.

திருகோணமலைப் பெட்டிகளைத் தன் பின்னுல் பூட்டி யிழுத்துக் கொண்டு தடார், பிடாரென்று அதோ வந்து கொண்டிருக்கிறது மட்டக்களப்பு ரெயில். இன்னும் இரண்டு நிமிடங்களில் இந்த பிளாட்போமில் கொண்டு வந்து நிற்பாட்டி விடுவான். அவர்கள் நிற்கும் இடம் -

அரியம் ரயிலில் பிரயாணம் செய்யும் போது வழக்கமாக நிற்கும் இடம். அந்த இடத்தில் தான், சரியாக இரண்டாவது வகுப்புப் பெட்டிகள் வந்து நிற்கும். இது அவனுக்கு கைகூடி வந்துவிட்ட அனுபவ அறிவு. அந்த அனுபவ அறிவு இல்லாத, இருந்தாலும், அந்த இடத்தில்தான் நிற்க வேண்டும் என்ற சூட்சுமம் தெரியாத பலர் – தம் 'தொந்தரவுகளான' பொதிகளைத் தூக்கிக் கொண்டு, திகைத்து.. ... இங்கு ஓடுவோமா, அங்கு ஓடுவோமா என்ற திரிசங்கு சொர்க்கத்தில் ... எதிரே வருகின்ற லாரி வண்டியைக் கண்டு மிரளுகின்ற எருமைகளாகிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சுமக்க வேண்டிய பொதிகளும் பாரமானது. அப்படி என்னதான் கொழும்பிலிருந்து கட்டிக் கொண்டு போகிறார்களோ! ..

சூட்சுமம் தெரிந்து வைத்திருக்கும் புத்திசாலித்தன்மையைத் தனக்குள்ளேயே பாராட்டிக் கொண்ட அரியம் மொணிக்காவைப் பார்த்துச் சிரித்துக் கொள்கிறான். சொல்லி வைத்தாற் போல் அரியம் தம்பதிகளுக்குப் பக்கமாக வந்து – இழுபட்டு நிற்கின்றன திருகோணமலை இரண்டாவது வகுப்புப் பெட்டிகள். மற்றவர்கள் பாய்ந்து, விழுந்து, தொத்தி ஏறிக்கொள்கிறார்கள். ஜன்னலிற்கூடாக சூட்கேசையும் கடதாசிப் பையையும் சீற்றில் வைத்து விட்டு மொணிக்காவைக் கையைப் பிடித்து ஏற்றி விடுகிறான் அரியம்; ஜன்னலோரத்தோடு இருக்கும் இருக்கைகளில் எதிர் எதிராக அமர்ந்து கொள்கிறார்கள் அவர்கள். சூட்கேசை எடுத்து கால்களுக்கிடையில் வைத்து உள்ளே தள்ளி விட்டு – தாம் வீடு போய்ச் சேரும் வரை, அது அங்கு பத்திரமாக இருக்குமா என்று சோதித்துவிடும் நோக்கில் குனிந்து ஒரு முறை பார்த்துக் கொள்கிறான் மொணிக்கா ஜன்னல் கதவில் கையை ஊன்றி தன்னைச் சௌகரியப்படுத்திக் கொண்டு வெளியே நோக்குகிறாள்.

''இன்னும் பத்து நிமிசத்தில வெளிக்கிட்டுறும்''... மணியைப் பார்த்துக் கொண்டே தமிழில் கூறுகிறான். ரயிலுக்

குள்ளே சந்தையின் இரைச்சல். வெளியே அது குறைந்து விட்டது போலிருக்கிறது: வசதியான இடங்களைப் பிடித்துக் கொண்டவர்களின் வதனங்கள் - அந்த இரைச்சலின் கட்டுப் பாட்டை விட்டு விலகியிருக்கிறேம் என்ற நினைப்பில் மலர்ந் திருக்கின்றன. நாலைந்து குஞ்சு குறுமான்களோடு நேரந் தாழ்த்தி வந்து விட்ட ஒரு குடும்பம், ஏறிக்கொண்டிருக்கிற சப்தம் வெளியே கேட்கிறது. உள்ளே - இடம் இருந்தால் தானே, அப்படியே இருந்து விட்டாலும் இப்போது ஆக்கிர மித்துக் கொண்டிருப்பவர்கள் அதைக் கொடுத்தால் பெரிய காரியந்தான்.

"மெதுவா ஏறு பிள்ளை ..ஆ.. அங்கால எட்டிப் பார்க் காதே" ...கத்துகிறுர் குடும்பத் தலைவர். பிள்ளைகளையும் மனைவியையும் நல்ல இடத்தில் இருத்திவிட வேண்டும் என்பத தான உணர்வு தந்த பாரம் ஒரு புறம், கையில் ஏந்திக் கொண் டிருக்கும் பொதிகள் தந்த பாரம் மறு புறம், அவர் மனதில் சினம் தளிர்த்திருக்க வேண்டும் ஒரு இருக்கையின் மேலிருந்த சூட்கேசை இறக்கிக் கீழே வைத்து, மனைவியை இருக்கச் சொல்லி சைகை காட்டுகிறுர் அவர்.

"அதில ஆளிருக்கு" - அந்த இருக்கையின் ஜன்னலோரத் தோடு இருந்தவர் இவரைப் பார்த்துச் சொல்லி விட்டு - தான் சொல்லியதோடு அவர்கள் போய்விட வேண்டும், அல்லது போய் விடுவார்கள் என்று எதிர்பார்ப்பது போல முகத்தை வைத்துக் கொண்டு விழிகளை ரயிலுக்கு வெளியே எறிகிறுர். வந்த குடும்பஸ்தர் – பாவம் ... சங்கோசியாகத் தெரிகிறுர். இருக்கப்போன தன்மனைவியை எழுந்து வரும்படி கூறி விட்டு முன்னே நடக்கிறுர் அவர்.

'சீ...என்ன மனுசன் இவன், எனக்குத் தெரிய அதில ஒரு ஆளும் இருக்கேல்லை, அந்த மனிசி இருந்தா இவருக் கென்னவாம்' இந்த மனித மனங்களுக்கு—தனக்குத் தனக்குத் தான் எல்லாந் தேவை.'

அரியத்தின் மனம் ஆத்திரப்படுகிறது.

"நீங்க இதில இருங்கம்மா, ஆள் வந்தாப் பிறகு பாப்பம்.' எல்லாரும் எப்படியென்டாலும் போகத்தானே வேணும்."

அந்தப் பிள்ளைக்குட்டிக்காரி கைக் குழந்தையொன்ருேடு குந்திக் கொள்கிருள். ஆட்கள் ஒருவரும் வராதுவிட்டால், 'ருகமைக்குப்' பிறகு நீட்டி நிமிர்ந்து அழகாகப் படுக்கலாம். என்று நினைத்திருந்தார் போலும், அந்தப் பிரயாணி. அவர் முகத்தில் ஈக்கள் மொய்க்கின்றன. திருப்பிக் கதைத்தால் எடுபடாது என்பதால் --அவரில் மௌனத்தின் நிலைப்பு

'மனிதர்கள்தான் எத்தனை சுயநலமானவர்கள். சுய நலத்திலிருந்தும் பாவமான செயல்களிலிருந்தும் எவ்வளவு விலகியிருக்கிருேமோ அவ்வளவு சுவர்க்கத்தின் பக்கத்தி லிருக்கிருேம் என்ற உண்மை அந்த பிரயாணிக்கு தெரியமோ தெரியாது ..மனதிற்குள் புறுபுறுத்துக் கொண்டிருக்கிருர் அவர்.

சரியாக எட்டு மணியாக இருக்க வேண்டும். அந்த வண்டி தொடங்கி விட்டது தன் பிரயாணத்தை.

★

# இரண்டு

அரியத்திற்கெதிரே மொணிக்கா இருந்தாலும் — அவள் அவனுடைய மனைவியாக இருக்கும் என்று நினைக்கத் தோன்றவில்லை எவருக்கும். அவன் தமிழன் என்று அவனது நெற்றியில் எழுதி ஒட்டியிருக்கிறது. அவள் சிங்களத்தி. இந்த நிலையில், பார்ப்பவர்கள் எப்படி அவர்களை தம்பதிகள் என்று கருதுவார்கள்?

கடதாசிப் பையில் கையை விட்டு பீடாவை எடுத்து அவளிடம் நீட்டுகிறான் அரியம். தானும் மற்றதைக் கடித்துக் கொள்கிறான். புரியாணியைச் சாப்பிட்டுவிட்டு பீடாவைப் போடவே முதலில் நினைத்திருந்தான் திடீரென அந்த நினைவை அகற்றி விட்டு இப்போதே போட்டுக் கொள்ள ஆரம்பித்து விட்டான். மனித மனந்தான் எத்தனை பல வீனமானது. ஒருசிறிய செயலைத் தானும் திட்டமிட்டபடி செயற்படுத்த அதனால் முடியாது.

இப்படித்தான், ஆறு மாதங்களுக்கு முன்னால் தனக்குக் கிடைத்த எழுதுவினைஞர் வேலையைப் பாரமெடுக்க வந்த அரியத்தின் உள்ளத்தில் எத்தனை திட்டங்கள் இருந்தன. தன் தாய், தந்தை,சகோதரியின் நல் வாழ்வினைப் பின்னிப் பிணைந்தல்லவா, அவனது திட்டங்கள் எல்லாம் அமைந்திருந்தன. இன்று... என்ன நடந்து விட்டது.

அரியம் — கம்புக் குச்சி தெருவில் கிடக்கிறதேயென்பதற்காக, பிறேக் போட்டுக் கொண்ட லாரியின் நிலைமையையடைந்து விட்டான். ஒரு சிறு கம்புக் குச்சிற்கு பெரிய லாரியொன்றையே நிற்பாட்டி வைக்கக் கூடிய சக்தியிருக்குமானால் மொணிக்கா எனப்படும் சிங்களக் கன்னிக்கு — அரியத்தின் திட்டங்களை பிறேக்போட்டு 'நிற்பாட்ட வைக்கும் சாமர்த்தியம் இருப்பது சாத்தியந்தான்.

குளிர் காற்று குப்பென்று முகத்தில் அடிக்கின்றது. ஜன்னல் சட்டர்களை மேலே உயர்த்தி விடுகிறான். காற்றினால் அடிக்கப்பட்டுக் கலைந்து போயிருந்த ஐதான மயிரை வாரி விட்டுக் கொள்கிறான் அவன். இருபத்தேழு வயதே ஆகிவிட்டிருந்த போதும் — அவனது தலையில் மயிரின் அடர்த்தி குறைவு. இன்னும் இரண்டொரு வருடங்களில் முன்பக்கம் முற்றாக வழுக்கையானாலும் ஆகலாம்.

"யூ கொட் பொக்ஸ் ஒப் மச்சஸ்"... சேட் பொக்கற்றிலிருக்கும் போர் ஏசஸ் பைக்கற்றை வெளியில் எடுத்துக் கொண்டே தனக்குப் பக்கத்திலிருப்பவரிடம் தீப்பெட்டி கேட்கிறான் அரியம். பக்கத்திலிருந்தவர் ஒரு தமிழர் என்பது அவர் பார்த்துக் கொண்டிருந்த 'வீரகேசரி' எடுத்துக் காட்டியது. இருந்தும் சிறிது பழக்கமேற்படும் வரை ஆங்கிலத்தில் பேச வேண்டுமென்ற போலி கௌரவத்தின் பால் ஒட்டிப் பிறந்த உணர்வு அவனை 'இங்கிலிஸ்' பேச வைக்கிறது. தன் லைட்டரை எடுத்து நீட்டியபடியே அவரும் ஒரு சிறு புன்முறுவல் காட்டுகிறார். முன்பின் தெரியாத இருவர் தங்களுக்குள் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள அல்லது முதலில்

கதையைத் தொடங்கிக் கொள்ள — ''நெருப்பட்டி இருக்கா, இப்ப மணி எத்தனை'' போன்ற கேள்விகள் வாய்ப்பானது தான்.

சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டு பைக்கற்றை அவரிடமும் நீட்டுகிறான் அரியம். அவருடைய பைக்கற்றிலும் ஒரு போர் ஏசஸ் பெட்டி தூங்கிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், அன்பான ஒரு வேண்டுகோளை மறுப்பது அழ கில்லையென்ற இயல்பான உணர்வின் காரணமாக அதிலிருந்து ஒரு சிகரட்டை எடுத்து அவரும் பற்ற வைத்துக் கொள் கிறார்.

''நீங்கள் எங்க, மலேக்கோ'' ... ... ... பக்கத்திலிருந்தவர் கேட்கிறார். ''ஓம், நான் இஞ்ச எடுகேசன் மினிஸ்ரீல வேலே செய்யிறன், சொந்த ஊர் திருகோணமலே.''

''அப்ப, வருசத்துக்கு ஊருக்குப் போறீங்க போல,'' நாளைக்கும் அடுத்த நாளைக்கும் லீவு தானே.''

உண்மையில் அரியம் வருச லீவைக் கொண்டாடுவதற் காகவா போகிறான். ம் ... ... ... அது பெரிய கதை. அதை யெல்லாம் இவரிடத்தில் சொல்ல முடியுமா ... ... ...

ரயில் இன்னும் ருகமையை வந்து சேரவில்லை. அதற்குள் இரண்டொரு தலைகள் பக்கத்துத் தோள்களைத் தலையணைக ளாக்கத் தொடங்கிவிட்டன. முதலில் தலை தோளில் இடிக் கின்றபோது பாவமாக இருக்கின்றது. தொடர்ந்து இடிக் கின்றபோது சினமாக மாறிவிடுகின்றது.

''நித்திரை கொள்றதுக்கு என்ரை தோள்தானு கிடைச் சுது'' — ... என்று சத்தமிட்டார் ஒருவர், நித்திரை நிறுத் துக் கொண்டிருந்தவர் அசட்டுச் சிரிப்பொன்றைப் பதிலாக உதிர்த்து விட்டு மற்றப் பக்கமாகக் கவிழத் தொடங்கி விட் டார்.

"நான் தெஹிவலையில ரீச்சராயிருக்கிறன். இப்ப ரூன்ஸ் பேர்ஸ் எல்லாம் என்ன பாடாம்......இந்த வருசம் முடியுமட்டும் மாற்றம் ஒண்டும் இல்லையெண்டு சேக்குளர் விட்டிருக்காங்களாம் உங்கட அமைச்சால"

"ஓம், ஓம், ... ... வருசம் முத்திலா மாற்றமே செய்துகொண்டிருந்தா மற்ற வேலையளை எப்பிடிப் பாருங்க செய்யிறது. அதோட இப்ப எல்லாம் பொலிட்டிசன்ற இன்ரபியரன்ஸ் கூடிப்போச்சு."

அரியத்தோடு கதைத்துக்கொண்டிருப்பவர் ஒரு ஆசிரியர். அவருடைய 'அரியர்ஸ்' விடயமொன்று கல்வி அமைச்சு அலுவலகத்தில் கன நாட்களாகத் தேங்கி நிற்கிறது. இவரிடத்தில் சொல்லிப்பார்த்தால் ஒருவேளை சரியாக வந்தாலும் வரும் என்ற நப்பாசை மூளையில் தட்டுப்படுகிறது. ஆயினும் "இப்போதுதான் கதைக்கத் தொடங்கியிருக்கிறன், அதுக்குள்ள உதவி செய்யுங்க எண்டு கேக்கிறது அவ்வளவு மரியாதி இல்லை." என நினைத்துக்கொள்கிறார் ஆசிரியர்.

"உங்கட பெயர் என்ன சொன்னீங்க... ..."

"அரியரெத்தினம்"

"எந்த பிராஞ்சில வேலை பாக்கிறீங்க"

"பாடசாலைகள் நிர்வாகப் பகுதியில" ... பதில் சொல்கிறான் அரியம்.

"இவர் கேள்வியள் கேட்டுக் கொண்டு போற மாதிரியைப் பார்த்தா ஏதோ உதவி கேட்கப் போறார் போல கிடக்குது. தனக்குள் எண்ணிக்கொண்டான் அரியம்.

"ஒருக்கா வாருங்கோவன், கோப்பி ஒண்டு குடிச்சிற்று வருவம் புபேயில." பக்கத்தில் இருந்தவர் கேட்கிறார். ஒரு தரம் மௌனிக்காரவின் முகத்தைப் பார்த்துக் கொள்கிறான்

அரியம் அவள் முகத்தில் — அவன் புபேக்குப் போய் ரீ குடிப்பதில் ஆட்சேபனை எதுவுமில்லையென்பது போல் தோற்றம் தெரிகிறது."

"இல்லை சாப்பாடு கொண்டந்திருக்கிறம், சாப்பிட்டுட்டு குடிப்பம், தாங்ஸ்'' அதுக்கென்ன, இப்ப எட்டரை மணி தானே, வந்து சாப்பிடலாம், எழும்புங்க" —

அரைமணி நேரம் பழகிவிட்ட உரிமையில் கூப்பிடுகிருர் அவர். அவர் கூப்பிடுவதற்காக இல்லாவிட்டாலும், "ரீ ஒண்டு அடிச்சா கொஞ்சம் சுறுசுறுப்பாயிருக்கும் போலிருக்கிறது. இருவரும் எழுந்து போகிருர்கள். கூட்டிக்கொண்டு போகும் ஆசிரியர், தன் மனைவியிடம் ஏதோ சொல்லிவிட்டு வருகிருர். தான் வரும் வரை அரியத்தின் மனைவியோடு கதைத்துக்கொண்டிரு என்று அவர் சொல்லியிருக்கவேண்டும்.

ரெயிலின் ஆட்டத்தில் விழுந்து விடாமலிருப்பதற்காக தேவையான பலன்சைக் கடைப்பிடித்து, இருக்கை விளிம்புகளில் பிடித்துக்கொண்டே அவர்கள் செல்கிருர்கள்.

# மூன்று

**பு**பேக்குள் போவதென்றால் மூன்றும் வகுப்புப் பெட்டிகள் சிலவற்றைக் கடந்துதான் போக வேண்டும். ஒரு பெட்டியில் கும்பலாக இருந்து "சிங்கள பைலா" போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பலர், அதை ரசித்து மகிழ்பவர்கள் சிலர். இது ஏதடா, நித்திரைக்குப் பங்கம் என்று முக்கி முனகி ஓரத்தில் ஒதுங்கியவர்கள் சிலர். அந்தக் கும்பலைக் கடந்து செல்லும் போது சாராய நெடி அரியத்தின் மூக்கில் 'குப்பென்று' அடித்து, அவனில் உறங்கியிருந்த "வெறியேற்றும்" ஆசையை சிறிதே கிழப்பி விடுகிறது.

'நானும் குடிச்சுக் கன நாளாகுது, ரிஸீஸ்ரேசன் அண்டு கொஞ்சம் பியர் அடிச்சதுக்குப் பிறகு ஒண்டு மில்லாமத் தானே இருந்தனான் இண்டைக்கு புபேயில கொஞ்சம் அடிச்சுப் பாத்தா என்ன'' ......

மனம் பலவீன வலேயில் சிக்கி...கால்களைப் போட்டு இங்குமங்கும் அடித்து உழல்கிறது.

புபே புல்லாக இருக்கிறது. ஒருவரும் எழுந்து செல்லும் வகையாகக் காணும். இரண்டொருவர் தாம் கையோடு கொண்டுவந்த பார்சல்களை மேசையில் வைத்துப் பிரித்துக் கொண்டே - முட்டைப் பொரியல்களுக்கும், கட்லெட்டுகளுக்கும் ஓடர் செய்கிறார்கள், சாப்பிட்டு முடிந்து எழுந்துவிடும் நிலையிலிருந்த நால்வரின் மேசையைக் குறிவைத்து இருவரும் நடக்கிறார்கள்.

''லமயா ரெண்டு லயன் லாகர், ரெண்டு சீஸ் பிஸ்கட்'' — அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்த வெயிட்டரிடம் ஓடர் பண்ணி விட்டு அப்போதுதான் காலியாகிப்போன கதிரையில் குந்துகிறார் அரியத்தின் ரயில் நண்பர். அரியமும் அவருக்கெதிரே குந்திக் கொள்கிறான்.

என்ன...ரீ குடிப்பம் எண்டு போட்டு லயன்லாகருக்கு ஓடர் பண்ணுறீங்கள்...ஆ". ஏதோ தான் இதையெல்லாம் விரும்புகிறவனில்லை என்பது போல போக்குக் காட்டி சம்பிரதாயம் பேசுகிறான் அரியம்

''இல்லைப் பாருங்க, ரீ குடிப்பம் எண்டு தான் வெளிக்கிட்டன் ...தெரியாதே...இம்மதன்ன எந்த நாளுமோ... ஊருக்குப் போனாலும் நினைச்ச படி பாவிக்கேலாது...... அதுதான்''

பூசி மெழுகுகிறார் அவர்.

இரண்டு போத்தல்களும், ஒரு தட்டில் சீஸ் துண்டுகளும் ஏந்தி வந்து 'மாத்தையாக்களுக்கு முன்னால் வைத்து விட்டுப் போகிறான் வெயிட்டர். கிளாஸ்களில் நிறைய ஊற்றி விடுகிறார் நண்பர். அவர் ஊற்றிய விதம் அவரின் ''குடி'' அனுபவத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. அரியரெத்தினத்திற்கு நுரை கீழே சிந்தாமல் ஊத்தத் தெரியாது.

"நேற்றுப் பெய்த மழைக்கு முளைத்த காளான்கள் மாதிரி" சமீபத்தில் தான் குடி பழகியவன் அவன். அவனில் ஏற்பட்ட எல்லா மாற்றங்களும் கொழும்பு வாழ்க்கையின் பலாபலன்க ளாகத்தான் இருக்கின்றன. இல்லாவிட்டால், திருகோண மலையில் எங்கேயோ ஒரு மூலையில் இருந்த அவனுக்கும் கொழும்பில் எங்கேயோ ஒரு ஓரத்திலிருந்த பொணிக்காவிற் கும் தொடர்பு ஏற்பட்டதுதான் எப்படி......

"என்ன யோசிக்கிறியள், எடுங்கோவன்"...... அரியத் திடம் சிநேகபாவத்துடன் கூறுகிறார் அவர்.

"உங்கட பேரென்ன சொன்னீங்க மாஸ்ரர்"

"சித்திரவேலு", என்ர மிஸ்சிஸ்சும் ரீச்சர் தான்,...... கொட்டாஞ்சேனையில படிப்பிக்கிறா"...... இருவரும் ஒரே நேரத்தில் கிளாசுகளை எடுத்து பரஸ்பரம் சியேர்ஸ் சொல் லிக் கொள்கின்றனர். கைப்பான கூல் லயன்லாகர் இரு வரது தொண்டைகளையும் நனைத்து — குளிர்ச்சி காட்டுகிறது. வாயில் ஒட்டியிருந்த நுரையைத் துடைத்து விடுகிறான் அரியம்.

சில நிமிட நேரங்கள் நிசப்தத்தில் கழிகின்றன. போத் தல்கள் தம் பாரங்களை இழக்கின்றன.

"லமயா, இன்னம் ரெண்டு லயன் லாகர் தென்ன...... ஜின்னும் ரெண்டு பைன்ற் எடுப்பமா."

ஏற்கனவே ஒரு போத்தல் இறங்கி விட்டதால் சிறிது மயக்க நிலை. அரியத்திற்கு "அருக்காணி" காட்ட இஷ்ட மிருந்தாலும் "ஏன் விடுவான்" மனப்பான்மை சிறிய சிரிப் பாக உதிர்கிறது. லயன் லாகருக்கும் ஜின்னுக்கும் ஓடரை எழுதிக் கொண்டு வெயிட்டர் போகிறான்.

உங்கட மிஸ்சிஸ்சும் வேலையாவோ இருக்கிறா" ... சித்திரவேலு கேட்டு வைக்கிறார்.

"இல்லை சும்மா தான் இருக்கிறு"

"லவ் மரீச்சோ"

'உங்களுக்குச் சொன்ஞு என்ன மிஸ்டர் சித்திரவேலு, லவ் மரீச் தான் .. ஆஞ, அதுதான் பெரிய பிரட்சனையா யிருக்கு. இப்ப"

"நீங்க குறை விளங்கக் கூடாது ..... அப்பவே கேக் கோனுமெண்டு நினேச்சனுன். உங்கட அவவுக்கு முன்னுல கேக்கிறது அவ்வளவு சரியில்லை எண்டுதான் விட்டனுன்' அவ சிங்களம் போல தெரியுது"... கடந்த அரை மணி நேரமாக தன் மனதில் நடனமாடிக் கொண்டிருந்த கேள்வி "தண்ணி" பிறப்பித்து விட்ட வெட்கமற்ற தன்மையினுல் வெளியே வந்ததையெண்ணி வியந்து கொள்கிறுர் சித்திர வேலு.

அரியம் கதை ஒன்று சொல்ல தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறுன். ரயில் சிநேகிதம், அரை மணி நேர உறவு - அதுவும் "தண்ணி' யினுல் பலப்படுத்தப்பட்ட உறவு - உள்ளத்தே பதுங்கியிருந்த எத்தனை உண்மைகளை வெளியே கொண்டு வரப் பார்க்கிறது. மதுவிற்கு வேறு எந்த விதமான குணங்களிருந்தாலும் — முன்பின் தெரியாத புதிய வர்களை நண்பர்களாக்கி வைக்கும் நல்ல குணமும் இருக் கிறது. அதுதான் — இந்தச் சனங்களெல்லாம் இப்படி விழுந்து விழுந்து குடித்துத் தள்ளுகிறுர்களோ.

"என்ர ஐயா, ஒரு இளைப்பாறின இறிகேசன் ஓவசியர் ... சொந்த ஊர் கரவெட்டி. திருகோணமலையில் அம்மாவைக் கலியாணம் கட்டி செற்றில் பண்ணிற்றுர். அம்மா திருகோணமலைதான். எனக்கு ரெண்டு சகோதரிகள். மூத்தவ கட்டீற்று. மற்றவவுக்கும், எனக்கும் மாத்துச் சடங்குக்கு எங்கட சொந்தத்துக்குள்ளேயே பாத்து முடிவெல்லாம் எடுத்தவையள். இப்ப சரியா ஆறு மாதத்துக்கு முன்னுல தான் எனக்கு கொழும்பில வேலை கிடைச்சது. வேலைக்கு

இங்க வந்தாப் பிறகுதான் எல்லாத் தொந்தரவும் சந்தர்ப்ப வசத்தால — நான் இந்த அவசரக் கல்யாணம் செய்ய வேண்டியதாப் போச்சு ..... எனக்கு ரிசிஸ்ரேசன் முடிஞ்சு நாலு மாதமாகுது இன்னம் வீட்டுக்குத் தெரியாது. அது தான் இப்ப வீட்ட போறதுக்கு யோசனையாயிருக்கு".

சித்திரவேலு கிளாஸ்களுக்குள் பியரையும் ஜின்னையும் ஊற்றிக் கலந்து அரியத்தை எடுக்கச் சொல்கிறார். அரியத்தின் பிரச்னையை மிகுந்த அனுதாப உணர்ச்சியுடன் கூர்ந்து கவனிக்கிறார்.

''அதோட, ஊரிலயிருந்து தங்கச்சியிட அலுவலா அவசரமா வரச் சொல்லி தந்தியும் கடிதமும் வந்திருக்குது. என்ர விசயத்தையும் பயந்து பயந்து எத்தனை நாளைக்கு மறைக்கிறது அதுதான் மனிசியையும் கூட்டிக் கொண்டு போறன்.''

வெயிட்டர் வந்து "அத்தித" மாத்யா என்று கேட்கிறான். அவன் கேட்ட தோரணையில் அவர்கள் கூடியநேரம் எடுத்து விட்டதற்குக் கோபிப்பது போலிருந்தது.

''அத்தி, அத்தி''

பில் பதினெட்டு நாற்பத்தைந்துக்கு வந்தது. நான் குடுக்கிறேன், நான் குடுக்கிறேன் என்ற சம்பிரதாயங்களிலுல் இரண்டொரு நிமிடங்கள் கழிந்து போனாலும், சித்திரவேலுவே கடைசியில் பில்லுக்கு பணம் கொடுக்கிறார். இரண்டாவது வகுப்பை நோக்கி அவர்கள் நடக்கிறார்கள்.

நேரம் ஒன்பதரை மணி.

நடந்து செல்லும் அரியத்தின் மனதில் மொனிக்காவைப் பற்றிய எண்ண அலைகள் வந்து சூழ்கின்றன.

பாவம், நான் மடையன் மாதிரி தண்ணி யடிச்சுக் கொண்டு இருந்திற்றன், அவள் இன்னம் சாப்பிடேல்லை.

வழியை மறித்து, சில பேர் நித்திரைக் காண்டம் வாசிக்கிறார்கள். அவர்களில் பட்டும் படாமலும் நடக்க வேண்டியிருக்கிறது. கால் பட்டால் சண்டைக்கு வந்தாலும் வந்துவிடுவார்கள்.

"பத்து மணியாகவில்லை, அதுக்குள்ள எருமையள் மாதிரி வழியில கிடக்குதுகள்." சித்திரவேலுக்கு உள்ளே போன "தண்ணி" சிறிது வேலை செய்கிறது. வெளியில் கேட்கும் படியாகவே பிதற்றுகின்றார்.

எதிரெதிரே இருந்த மனைவியர்கள் இப்போது பக்கத்திலிருந்து ஏதோ சுவாரஷ்யமாகக் கதைக்கிறார்கள். முன்சீற் காலியாக இருக்கிறது. அதில் போய் இருவரும் குந்துகிறார்கள். ஏதோ ஒரு குற்ற உணர்ச்சி அவர்கள் இருவர் முகங்களிலும் பரவி நிற்கிறது. ரீ குடிக்கிறோம் என்று போனவர்கள் – ஒன்றரை மணி நேரமாக லயன்லாகர் குடித்தது குற்றமல்லாமல் வேறென்ன?

கேள்விக்கணை, பார்வைக்கணை தன்னை நோக்கிப் பாயு முன்னே தான் வென்றுவிடுவதுதான் புத்திசாலித்தனம்.

"அப்ப சாப்பிடுவமா"..... பிரியாணிப் பார்சலை எடுத்துக் கொண்டே மொணிக்காவிடம் கேட்கிறான் அரியம். "ஓவ்" என்பதாக தலையாட்டுகிறாள் மொணிக்கா.

"நீங்களும் கொஞ்சம் சாப்பிடுங்கோவன்"...... மரியாதைக்காக சித்திரவேலு தம்பதிகளிடம் கேட்டுக் கொண்டாலும், "சரி கொண்டாங்கோ சாப்பிடுவம்" என்று எடுத்துவிடுவார்களோ என்ற பயமும் இல்லாமலில்லை அரியத்திற்கு.

"நாங்க வெளிக்கிடேக்குள்ளயே, சாப்பிட்டுத்தான் வந்தனாங்கள்".. சித்திரவேலுவின் மனைவி சொன்னாள்.

பார்சல்களைப் பிரித்து இருவரும் உண்ணத் தொடங்கினர். தன் பார்சலில் இருந்த முட்டையில் அரைவாசியை அரியத்தின் பார்சலுக்குள் போடுகிறாள் மொணிக்கா.

''இல்லை நீ சாப்பிடு'' என்று போலியாகக் கூறிக் கொண்டாலும் அவனுக்கிருந்த டோப்பில் இதைப் போல ஐம்பது முட்டைகளென்றாலும் உள்ளே தள்ளக் கூடும். முறையான கிரியைகளுடன் புரியாணிப் பார்சல்கள் காலி யாக்கப்பட்டு... வெறும் பேப்பர்கள் வெளியே போய் விழு கின்றன. புபேக்குத் திரும்பிப் போய் போத்தலில் தண் ணீரும் எடுத்துக் கொண்டு சிகரட் ஒன்றையும் பற்றிய படியே வந்து சேர்கிறான் அரியம்.

ஏற்கனவே தூங்கி வழிந்து கொண்டிருந்தார் சித்திர வேலு. அவரது மனைவி இன்னொரு பக்கமாகத் தலை கவிண்டு கவிண்டு நிமிர்கிறாள்.

இரவு உணவு நிறைவு பெற்று விட்டது. நேரத்தைப் பார்த்துக் கொள்கிறான் அரியம்.

பத்தே கால்.

—●—

# நான்கு

ஜன்னலோரத்தோடு சாய்ந்து உடலை நிமிர்த்திக் கொள்கிறுன் அரியம். டீசல் எஞ்ஜினின் சப்த சுரங்கள்...... அவன் எண்ண அலைகளை முன் நோக்கி வீசுகின்றன. காலைப் பொழுதின் போது திருகோணமலையை அடைந்து விடுவோம், என்பதை நினைக்கும் போது எத்தனை நடுக்கமாயிருக்கிறது.

'அம்மாட்டை எப்படிச் சொல்லப்போறன், ஐயாட முகத்தை எப்படி நிமிந்து பாக்கப் போறன்... தங்கச்சியும் கேள்விப்பட்ட உடன அழுது கொண்டு நிக்கப் போறுள்'' எவ்வளவு மதிப்பும் மரியாதையுமா ஐயா என்னை வளர்த்தார். இப்ப நான் போய் விசயத்தைச் சொன்ன உடனே .. எப்படிக் கோவிக்கப் போறுரோ?

உண்மையில் அரியரெத்தினத்தின் தகப்பன் முத்துக் குமாரு கோபக்காரர்தான். இருபது வயதிலேயே வேலை தேடி தன் பிறந்தகமான கரவெட்டியை விட்டு திருகோண மலைக்கு பஸ் ஏறியவர் அவர் ஒரு குடி சிகரட், வெற்றிலை என்று எந்தப் பழக்கமுமே யில்லாதவர். அரியத்தின் தாயார் தெய்வானையைத்தான் கட்டப் போறன் எண்டு ஒற்றைக் காலில நாண்டு கொண்டு நின்றவரை - அவருடைய தகப்பன் வீட்டை விட்டு வெளியே போ என்று சொன்னதுதான் — அதன் பின்பு இன்று வரை கரவெட்டிக்குக் காலடியே எடுத்து வைக்கவில்லை.

அயலுக்குள் நல்ல மரியாதை மனுசனுக்கு. சந்திப் பிள்ளையார் கோவிலில் பூசையென்றால் - அது யாருடைய உபயமாக இருந்தாலும் - அவருக்கும் ஒரு காளாஞ்சி கிடைக் கும். டும்டும்மென்று மங்கல ஒலி கேட்டாலும், ஐயோ என அமங்கலச் சப்தம் வந்தாலும் முதலில் ஓடிப் போய் என்ன என்று கேட்பது அவராகத்தான் இருக்கும்'. அயலில் நடக்கின்ற கல்யாண எழுத்துகள் அவருடைய சாட்சிக் கையெழுத்துகள் இல்லாமல் - இன்று வரை நடை பெற வில்லையென்றே சொல்லலாம்.

''அண்ணே, நீங்களே நியாயத்தைக் கேளுங்கண்ணே'' என்று சத்தமிட்டுக் கொண்டே வரும் பிரட்னைக்குரியவர் கள் — பொதுவாகவே பிரட்சனைக்கு ஒரு முடிவு கண்டு கொண்டே திரும்பிப் போவது வழக்கம்.

சேவையிலிருந்து ரிட்டையர் பண்ணியவுடன் தன் மூத்த மகளுக்கு நல்ல இடமாகப் பார்த்து முடித்து விட் டார். பொடியனும் ரவுனில் பெரிய பலசரக்குக் கடை வைத்திருக்கிறான். எல்லோரையும் போல கவண்மேந்து மாப்பிள்ளை தேடவில்லை அவர். அதைத் தேடுவதில் உள்ள சிரமங்களும் அவருக்குத் தெரியாத விசயமில்லை. கடைக்கார னுக்குக் கொடுத்தால் - கண்ணியமாக குடும்பத்தை வைச் சிருப்பான் என்பது அவருக்குத் தெரியும்.

இப்ப — அவருடைய மருமகன் - பெட்டைக்கு இருபது பவுனில் தாலிக் கொடி செய்து போட்டிருக்கிறன்.

நயமில்லாமல் அவருடைய வாயிலிருந்து வார்த்தைகள் வருமே தவிர - பயனில்லாமல் வராது.

அப்படியான தந்தைக்குப் பிறந்த அரியம் எப்படி மாறி விட்டான் ''சுப்பிரமணியத்தின்ர'' மகளுக்கும் மகனுக்கும் அரியத்தையும் தங்கச்சியையும் மாத்துக் கல்யாணம் கேட்டு வந்தது. எல்லோருக்கும் புறியந்தான்''.

அரியத்திற்கோ புதிதாக அரசாங்க வேலை கிடைத்த உசார். மாத்துக் கல்யாணமென்டாலும் தான் உழைச்சு வீடொன்று கட்டித் தங்கச்சிக்குக் குடுத்துப் போட்டுத் தான் கட்டுவன் என்று சொல்லிவிட்டு கொழும்பிற்கு வந்துவிட்டான்.

கல்யாணப் பேச்சுப் பேச வந்த ''சுப்புறு'' தம்பதிகளுக்கு அரியத்தை நன்றாகப் பிடித்துப்போயிற்று. தங்கட பிள்ளைக்கு நல்ல புருஷன் கிடைக்கப் போகிறன் என்ற சந்தோசத்தில் அவர்கள் போய்விட்டார்கள். முத்தருக்குப் பெருமை பிடிபடவில்லை. அயலுக்குள்ளும் அரியத்தைப் பற்றி நல்லவிதமாகப் பேசிக் கொண்டார்கள்.

''சுப்புறு''விற்கும் முத்தருக்கும் கொஞ்சம் தூரத்து உறவு. உறவுகளை, தூரத்து உறவாகவே வைத்துக்கொள்ள வேண்டுமா? தூரத்து உறவுகள் அண்மிக்கும் நிலையில் கல்யாணப் பேச்சுகள் முற்றுப் பெற்றுவிட்டன.

கோணேஸ்வரத்தில் கொடியேற்றம்.. காளிக்குத் தேர்... இப்படியான உற்சவங்களில் அரியத்தின் தாயார் தெய்வானையையும் சகோதரி சீதாலட்சுமியையும் கோயில்களிலே கண்டு கொள்ளலாம். அவர்கள் தவறவிட்ட கோயில் விசேசங்கள் பொதுவா இருக்க முடியாது.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் - பணமில்லாவிட்டாலும் பண்பான குடும்பம் என்ற பெயர் அவர்களுக்குக் கிட்டியிருந்தது.

# ஐந்து

ரயில் பொல்காவலைச் சந்தியில் நின்றது. பீடி சிகரட் ரொபிப் பெட்டியுடன் ஒரு பையன் சத்த மிட்டுக்கொண்டே வருகிறான். மிஞ்சிப் போனால் வயது பதினைந்திற்குமேல் இரு காது.

" ரொபி... ரொபி ... ரொபி .ரொபி , போர் ஏசஸ், புலத்திட்ட "

பிரயாணிகளைக் கவரவேண்டும் என்பதில் தான் அவனுக்குக் கண். அவனது குரலில், ராகத்தில் இருக்கும் தொனிப்பு, கவர்ச்சி, தோற்றத்தில் இல்லை. தலைக்குள் சிப்பை வைத்து எத்தனையோ நாட்களாயிருக்க வேண்டும்.

'பாவம், இந்த ஐந்துசதத்து ரொபியையும், வெற்றிலைக் கூறையும் வித்து எப்படிச் சீவி யம் நடத்துகிறானோ.'

அரியத்தின் மனம் விசாரணை நடத்துகிறது.

'இந்தச் சின்ன வயதில் இவன் போன்ற எத்தனை பொடியன்கள், இருக்கப்பட்ட எல்லா ரயில்வே ஸ்டேசன்கள், பஸ் ஸ்டாண்டுகளில் ரொபிப் பெட்டி காவிக்கொண்டு திரிகிருன்கள். இந்தப் பாலர் கொடுமை நாட்டிலே, சமுதாயத்திலே நிலைந்திருப்பதற்குரிய உண்மையான காரணம் என்ன'.

எஸ்எஸ்ஸி சித்தியெய்திய பின்னர்—றேட்டுகள் அளந்து திரிந்த காலத்தில், முக்கால் வாசி நேரத்தை பொது வாசிக சாலையில் கழித்ததால், பல சமதர்மப் புத்தகங்கள் வாசிக்கும் சந்தர்ப்பம் அரியத்திற்குக் கிட்டியிருக்கிறது. அவைகள் அவனிலே வேரறுக்க முடியாமல் விளைவித்துவிட்ட சில சமதர்ம அருட்டுணர்வுகள் ரொபிப் பையனைக் கண்டதும் விழித்துக் கொள்கின்றன.

"பாவம்"

"லமயா, மென்ன, மட்ட ருப்பியலட்ட ரொபி தெண்ட."

மொணிக்கா இனிப்பு அவ்வளவு உண்பதில்லை. அரியத்திற்கும் உறைப்புத்தான் விருப்பமான சங்கதி பின் — ஏன் ஒரு ரூபாவிற்கு அந்த மட்டரகமான ரொபிகளை அவன் வாங்குகிருன் ?

பையன் இருபது ரொபிகளை பக்குவமாக எண்ணிக் கொடுத்து விட்டு நகர்கிருன். பொல்காவலைச் சந்தியைப் பின்ஞல் விட்டு ரயில் முன்னே நகர்கிறது.

அரியத்தின் மனம் சாந்தமாக இல்லை. எண்ணங்கள் கடந்த காலத்தை நோக்கிய வண்ணம் பின்னே நகர்கிறது.

"இருக்கிறதைக் கொண்டு வீட்டுக்கு அத்திவாரம் போடுங்கோ—மாசாமாசம் காசு அனுப்புவன், அதில சீட்டைக் கீட்டைப் போட்டு...வேலையை முடிப்பம்." இப்படி வீட்டிலே சொல்லிவிட்டு கொழும்பிற்கு வந்தான். முதல்

இரண்டு நாள் நண்பனொருவனோடு தற்காலிக ஜாகை மூன்றும் நாள் நண்பனின் சிபார்சோடு...... ஒரு சிங்கள வீட்டின் அனெக்ஸ் ஒன்று இருபத்தைந்து ரூபாவிற்குக்கைகூடி வந்தது. சாப்பாட்டையும் அங்கேயே வைத்துக் கொள்வதென்றால் மாசம் மொத்தமாக தொண்ணூறு ரூபாயாம். கொழும்புச் சீவியத்திற்கு இந்தத் தொகை பிழையில்லையென நண்பன் கூறினான். ஒரு மாத வாடகையை அட்வான்சாகக் கொடுத்த தோடு வாசத்தைத் தொடங்கி விட்டான் அரியம்.

சிலேவ் ஐலண்டில் வீடு இருந்ததால் கந்தோருக்குப் போய் வர வசதியாயிருந்தது. காலையில் பஸ் பிடித்து கந்தோருக்குப் போய் - பின் மாலை பஸ் எடுத்து வீடு திரும்பும் வரை - அனாவசியச் செலவுகளுக்கு அவன் இடம் கொடுக்கவில்லை.

அஸ்திவாரம் போட்டதோடு வீடு நிற்கிறது, அதற்கும் நின்று நின்று உழைவு எடுத்து விட்டது. கொஞ்சம், முசுப்பாத்தியைப் பார்க்காமல் மிச்சம் பிடிச்சுக் கிடிச்சு வீட்டிற்கு அனுப்பினால்தான் - வீட்டின் உழைவைக் குறைக்க முடியும்.

பின்னேரங்களில் செலவில்லாமல் கோல்பேஸ் திடலில் காற்று வாங்கல்...... சனி ஞாயிறுகளில் ரூமுக்குள்ளேயே படுத்திருந்து இரவல் வாங்கிய நாவல்கள், பேப்பர்கள்...... இப்படி ஓடிக் கொண்டிருந்தது இரண்டு வாரங்கள்.

முதல் இரண்டு வாரங்களுக்கு ஒரு அனெக்சிற்குரிய லட்சணங்களோடு ... போட்டது போட்ட படியும் கழட்டி எறிந்தது எறிந்த படியுமே காட்சியளித்தது அந்த அறை. சம்பள உயர்ச்சி தடைப்படாமல் வரவேண்டுமென்பதற்காக அப்போதுதான் சிங்கள அரிவரிப் புத்தகத்தைத் தட்டத் தொடங்கியிருந்த அரியம், தனது அயன்ன.. லயன்ன சிங்களத்தை வைத்துக் கொண்டு அந்த வீட்டுக்காரர்களோடு எப்படி சரளமாகக் கதைப்பது. ஆனால் அவனது சங்கோசமான போக்கை மேலும் நீடிக்க விடவில்லை அந்த வீட்டுக்காரி தயாவதி.

சிங்களவர்கள் என்றாலே காடையர்கள் ஆக உருவகப் படுத்தப்பட்டு அதே மனநிலையில் தமது சிந்தனைகளை வளர்த்துப் பழகியிருந்த ஒரு சூழலிலிருந்து வந்த அரியத்திற்கு சிங்களவரும் மனிதர்கள்தான் என்பதான உணர்வை ஏற்படுத்தி விட்டது, தயாவதியினதும் அவளது மகளினதும் அன்பான நடத்தை.

மொணிக்காவின் தாயார் தயாவதி 'மிச்சம்' நல்ல மாதிரி. மனிசிக்குக் கொஞ்சம் தமிழுந் தெரியும். கல்யாணம் ஆன புதிதில் கணவன் வவுனியாவில் வேலை செய்யும் போது மூன்று வருடங்கள் அங்கே அவனோடு கழித்திருக்கிறாள். அதுதான அவளுக்குக் கொஞ்சம் "தமில்" தெரிந்திருக்கிறது. கோப்பிறட்டி இன்ஸ்பெக்டராயிருந்த அவளது கணவன் வவுனியாவில் மூன்று வருடங்கள் சேவை செய்த பின்பு இரண்டு வருடங்கள் அனுராதபுரத்திலும் இன்னும் மூன்று வருடங்கள் பொலன்னறுவையிலும் டியூட்டி பார்த்துவிட்டு நிரந்தரமாக டியூட்டி பார்க்க - திடீரென்று ஒருநாள் மேலே போய்விட்டார். அப்போது மொணிக்காவிற்கு வாய்க்குள் விரலை விட்டு சூப்புகின்ற வயது. ஸ்லேவ் ஐலண்டில் சொந்த வீடு. இளமையிலேயே தனக்கு சாஸ்வதமாக்கப் பட்ட விதியை நொந்து கொண்டு தன் சொந்த வீட்டிற்கு வந்து விட்டாள் தயாவதி.

கணவன் மேலுலகம் போய் விட்டபோது - வந்து, அழுது, கட்டிப் புரண்டு "நம்பிக்கை" சொல்லி அவளைத் தேற்றியவர்கள் எல்லாம் - இரண்டொரு கிழமைகளுக்குப் பின்னர் அகன்று விட்டனர். இளவயதில் தன் தாய் அவதிப் படுத்தி "தையல்" பழக்கிக் கொடுத்ததின் நன்மை தாலியறுத்திருந்த அந்த நிலையில்தான் அவளுக்கு விளங்கத் தொடங்கியது. வீட்டின் அரைப் பகுதியை வாடகைக்கு விட்டதால் ஐம்பதோ அறுபதோ கிடைத்தது வீட்டின் அரைப் பகுதி வாடகை சோறு போட - தையலினால் வந்த ஊதியம் சோற்றுக்கு குளம்பும் சொதியும் போட்டு - அந்த இரண்டு வயிறுகளையும் காய விடாமல் காப்பாற்றியது. சின்ன வயதிலே

தாயியறுக்கப்பட்டு கைகுழந்தையுடன் தனித்து விடப்பட்ட துன்ப உணர்வினுல் இயல்பாகவே உருவாகக் கூடிய விரக்தி மனப்பான்மை, கடின உழைப்பாக மாறி ஆறு வயதாக இருந்த மொணிக்காவை பதினெட்டு வயதுக் கன்னியாக வளர்த்து விட்டது.

கடந்த பன்னிரண்டு வருடங்களும் அவளது உழைப்பை உறிஞ்சி, உடலைப் பூஞ்சையாக்கி - நாற்பது வயதிலேயே கிழவியாக்கி - தன் மகள் ஒருத்தியின் நல் வாழ்க்கையைக் காண்பதற்காகவே உயிர் வாழ்ந்திருக்கும் ஒருவளைப் போன்று மாற்றி வைத்திருந்தது.

தயாவதி... காலை ஐந்து மணிக்கே துயிலை முறித்து விட்டு தன்னையும் சேர்த்து ஆறு ஜீவன்களுக்கு சமைக்கத் தொடங்கி விடுவாள். வீட்டின் இன்னெரு பகுதியில் இன்னும் இரண்டு சிங்களப் பொடியன்களும் குடியிருந்தார்கள், அவர்களுக்கும் அங்கேயே சாப்பாடு.

கொழும்பு வாழ்க்கையில் முன் அனுபவமில்லாத அரிய ரெத்தினத்தின் சங்கோச நடத்தைகள், அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதற்காக சாப்பிட்ட கோப்பைகளைக் கழுவி வைத்து விட்டுப் போவது போன்ற இன்னேரன்ன பண்புகள், இனி தமிழனுக்கு உரித்தான பாரம் பரிய விரத அனுட்டானங்களினுல் விளைந்த துப்புரவுகள் .. எல்லாம் சேர்ந்து தயாவதிக்கு அவனில் மற்றவர்களைக் காட்டிலும் நம்பிக்கையையும் அன்பையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும்

தயாவதியின் வாழ்க்கைப் புத்தகத்தில் முடிந்து போயிருந்த பக்கங்களை அவளே படித்துக் காட்டி அவனுக்கு விளக்கமும் கூறியிருக்கிறுள். அதையெல்லாம் மிகுந்த அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டிருப்பான் அரியம்.

தாயும் அரியமும் கதைப்பார்கள்.

"ஒவ், நான் அவங்கிட்ட சொன்னதுதான்"

"மட்ட உதே காமட்ட இடியாப்பமும் ஹொதியும் தென்ட". அரைகுறைத் தமிழும் சிங்களமும் அறையெல் லாம் நிறைந்து இருக்கும். அந்நேரங்களில் கதவு ஓரத்தோடு நின்று கவனித்துக் கொண்டு நிற்பாள் மொனிக்கா.

அரியத்திற்கு நகைச்சுவையுணர்ச்சி அதிகம். அதுவும் அவனது கதைகளை பெண்கள் சிரித்துக் கொண்டே கேட் பார்களானால் - கற்பனை நன்றாக அவனுக்குக் கைகொடுக்கும். அவனது தலைமயிர்கள் அடர்த்தியில் குறைந்து கொண்டே போகிறது. அதையிட்டு - கண்ணாடியில் பார்க்கின்ற போதெல்லாம் வாய்விட்டும் மற்றும் வேளைகளில் உள்ளுக் குள்ளும் பெருமூச்சு விட்டுக் கொள்வான். கண்ணாடியைப் பார்ப்பதனால் பெருமூச்சு வருகிறதே யென்பதற்காக, கண் ணாடியைப் பார்க்காமலேயே கந்தோருக்குப் போன நாட் களுமுண்டு.

ஆயின் நகைச்சுவையுணர்ச்சி என்று வரும் போது தன் குறைபாட்டையே சிரிப்பிற்குக் கருவாக்கி, - "மாவகே தட்டயாட்ட கவுத பொண்ணு கொடுப்பான்" என்பதான வார்த்தைகளால் தயாவதியையும் மொனிக்காவையும சிரிக்க வைத்து விடுவான்.

முதல் இரண்டு கிழமைகள் - மொனிக்கா — அரியம் எதிர்ப்படுகிற போதெல்லாம் அவனைப் பார்த்து பற்களை வெளியே தெரிய விடாமல் புன் சிரிப்புக் காட்டி கதை பேச்சுக்களில் சிக்கனஞ் செய்து நகர்ந்து விடுவாள். நாள டைவில் வார்த்தைகளில் சிக்கனம் குறைந்து, புன்சிரிப்பு, பெரிய சிரிப்பாக மாறிக் கொண்டிருந்தது.

அவன் பெண்களென்று அன்னியோன்யமாகப் பழகிய வர்கள் அவனது தாயாரும், சகோதரிகளுந்தான். இப் போது... அவர்களுக்குக் கொடுத்திருந்த இடத்தை இவர் களுக்கும் கொடுப்பதில் தவறில்லை என்பதை உணரவாரம்

பித்து - அதன் பயனுக வெட்கம் நீங்கி நன்ருகப் பழக வாரம்பித்தான்.

இயல்பாகவே, ஆண் மகனொருவன் தனியறையிலிருந்தால் அந்த அறை என்ன மாதிரி இருக்கும், சேவ் எடுத்து விட்ட பின்னர் - றேசர் பிளேட் சில வேளைகளில் சுத்தப் படுத்தப்படாது. பல்லுத் தீட்டும் பிறஸ் அதற்குரிய இடத்தில் இருக்காது. படுக்கை தாறுமாருக, தலையணை காலடியிலும். பெட் சீற் நிலத்திலும் இருக்கும் சில தினசரிகள் விரித்துக் கசக்கியபடி மேசையில், பேனை திறந்தபடி, குறை சிகரட் துண்டுகள் அங்கொன்றும், இங்கொன்றும்... சீப்பு - தலையிலிருந்து கொண்டு வந்த மயிரோடு அப்படியே யிருக்கும். இரண்டொரு சோடி செருப்புகள். சோடி மாறி, கட்டிலுக்குக் கீழ், கொலரில் படிந்திருக்கும் கடின அழுக்குடன் சேட்டுகள் தொங்கும். பெனியன்கள்...._சஸ்பெண்டர்கள் .. அழுக்கு - தூசு.....

இப்படியான பிரமச்சாரிகளின் அறை விதிமுறைகளுக்கு அரியத்தின் அறையும் ஆட்பட்டுத்தானிருந்தது.

இப்போதெல்லாம் அந்த 'அசிங்க' நிலை மாறிவிட்டது. மொணிக்கா அவனில்லாத வேளைகளில் உட்புகுந்து— அலங்கோலமாக இருக்கும் அறையை கோலம் போட்ட அழகான நிலைக்குக் கொண்டு வந்து விட்டு, சுய விளம்பரத்திற்கான தடயங்கள் ஏதுமின்றி நழுவி விடுவாள். கொஞ்சம் கொஞ்சமாகத் நான் அவர்களுக்குக் கடமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதை அனுபவ பூர்வமாக உணர வாரம்பித்தான். அவன்

சாதி, சமயம், மொழி ... இந்த வித்தியாசங்கள் மக்களை வேறுபடுத்துகிறது. ஆனல், அவர்களது உணர்வுகளை அவை கட்டுப்படுத்த முடியாது. உள்ள உணர்ச்சிகள், அன்பு ..... இவைகளுக்கு முன்னுல் இந்த வித்தியாசங்கள் எதைத்தான் சாதித்து விட முடியும். அன்பு அகத்திலில்லாத உயிர்

வாழ்க்கை வாழ்கின்றவர்களே இவ் வித்தியாசங்களை உயர்த்திப் பிடித்து பிரச்சனைகளாக்கிக் கொண்டிருக்க முடியும்.

ஐம்பத்தெட்டு கலவரத்தின் போது..... அரியத்திற்கு பதினறு வயது. காரணகாரியங்கள், நன்மை தீமைகள், பலாபலன்களை பகுத்துணர முடியாத அந்த வயதில்— தெருவில் போகும் சிங்களவர்களுக்குக் குறி வைத்து எறிய போத்தல்களுக்குள் அயல் பொடியன்களோடு சேர்ந்து மண் அடைத்து வைத்த அனுபவங்கள் எல்லாம் இப்போது எவ்வளவு பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது.

அரியரெத்தினத்தில் தனிநபர்க் குறைபாடுகள் உண்டு ஆனல்—அவன் பரந்த நோக்கமுள்ளவன். அவனை இப்போதெல்லாம் சாதி, மத, மொழி வேறுபாடுகள்—அவ்வளவாக தொந்தரவு படுத்துவதில்லை மோணிக்கா குடும்பத்தினரின் பழக்கம் அவனது நோக்கங்களை இன்னும் பரந்ததாக்குவதில் வெற்றி கண்டிருக்கிறது.

ஆனல் அந்த வெற்றி திருகோணமலையில் வாழ்ந்து கொண்டு ஐம்பது வீதமாவது அவன் கையை எதிர்பார்த்திருக்கும் தாய் தந்தை சகோதரியின் வாழ்க்கை நலன்களை பாதிக்கலாமா? கூடாதுதான்.

மொணிக்காவும், தாயும் போயா நாட்களில் விகாரைக்குச் செல்வார்கள். அரியமும் வழித்துணையாகச் செல்வான். கொழும்பில் - வழித்துணைகள் சந்தேகிக்கப்படுவதில்லை.

உள்ளத்தின் அடிமட்டத்தே பதுங்கியிருக்கும் மனித ஆசைகள் மொட்டு விரிக்காமல் இருப்பதற்காக தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் அரியம் ஜாக்கிரதை காட்டினன். அதற்கு அவனது வீட்டு நிலையே காரணமாக இருந்திருக்க வேண்டும். ஆனல்..... இந்த வித ஆசைகள் அவனைக் கேட்டுக் கொண்டா - தலைதூக்குகின்றன. மனித பலவீனம் என்ற எருவை ஆதாரமாக வைத்துத்தானே அவை தளிர்க்கின்றன.

ஒருநாள் பின்னேரம், கந்தோரிலிருந்து வந்ததும், அது வரை பாரமாயிருந்த உடுப்புகளைக் கழட்டி எறிந்து விட்டு பாத்ரூமை நோக்கிப் போஞன். அங்கே அவன் எதிர் பார்க்கவில்லை. மொணிக்கா மார்பிற்குக் கீழ் துண்டு ஒன்ருேடு குளித்துக் கொண்டிருக்கிருள். இத்தனை நாளும் அவளிடத்தில் கண்டிருக்காத மர்ம அழகெல்லாம் இந்த நேரத்தில் அவன் கண்களுக்கு விருந்தாக அமைகிறது. அவள் அவனைக் காண மாட்டாள் என்ற தெம்பில் சிறிது நேரம் அவளது அழகான அங்கங்களை ரசித்துக் கொண்டிருந்தான். அவள் கண்ட போது - ''மாவ சமாவெண்ட'' என்பதான மன்னிப்புக் கோரும் வார்த்தைகளால் தன்னைச் சமாளித்துக் கொண்டு வெளியேறுகிருன்.

அன்றைய நாள் தொட்டல்லவா......அவனது மனம் அலைக்கழிய ஆரம்பித்துவிட்டது.

அவளோடு கூட ஹாலில் விசயங்கள் ஒன்றுமில்லாமல் கதைத்துக் கொண்டிருப்பதே ஒரு ஆறுதலாக, அந்த ஆறு தலே ஒரு புல்லரிப்பாக அவளுக்கும், மேற்கூறிய அதே உணர்வுகள் அவனுக்கும் உண்டாகி எத்தனை இன்ப மய மாக நாட்களைக் கடத்தியிருக்கிருர்கள். ஆனல் - அவளைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும், செய்து கொள்வேன் என பகலில் கூட அவன் கனவு கண்டிருக்கவில்லை. கனவு காணுத விடயங்கள் வாழ்க்கையில் உண்மையாக நடந்து விடக் கூடாதா என்ன.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. அந்த நாள் வராமலே யிருந்திருந்தால் இன்று அவன் இவ்வளவு பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. விஞடி என்று இருந்தால் நிமிடமும், நிமிடமென்றிருந்தால் மணி யும், நாளும் வந்து தானேயாக வேண்டும்.

★

# ஆறு

ரயில் — தடதடவென்று காற்று இறங்கிய சைக்கிள் வண்டியாக 'மாகோ' சந்தியில் அரக்கி நிற்கிறது. மொணிக்கா ஜன்னல் சட்டரை மேலேயுயர்த்தி மாகோவின் இருள் வெளியை ஊடுருவுகிருள்,

"கோப்பி கெனத் தெண்டத" என்று மொணிக்காவிடம் கேட்டுக் கொண்டிருக்கும் போதே - கோப்பிப் பையனெருவன் கோப்பி கோப்பி என கத்திக் கொண்டு வருகிருன். சித்திரவேலுவும் மனைவியும் எதிரெதிரேயிருந்து தலைக்குத் தலை முட்டுக் கொடுப்பது போல் நித்திரை செய்கிருர்கள்.

சித்திரவேலுவின் மனைவி கொஞ்சம் ஸ்டைல்காரி போலத் தெரிகிறது. நித்திரையாக இருக்கும் போது வாய் அகலத் திறந்திருக்கிறது. அது அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

இவையெல்லாம் 'உடற்பலவீனங்கள்'. தவிர்க்கமுடி யாதவை. இவைகளை மேலும் பார்த்துக் கொண்டிருப்பது வடிவாயிருக்காது என்கிறது அரியத்தின் உள்ளுணர்வு.

அரியம் இரண்டு கோப்பிகளை வாங்கி ஒன்றை மொணிக்காவின் கையில் கொடுக்கிறான். அவனுக்கும் நித் திரை வருகுதில்லை. மொணிக்காவும் இன்னும் துயிலவில்லை. கோப்பி குடித்தாலாவது அது வருகிறதா பார்ப்போம் என்ற நினைப்பில் - கோப்பியை தொண்டைக்குள் ஊற்றி அதற்குரிய சில்லறைக் காசுகளைக் கொடுத்து பையனை அனுப்பி வைக்கிறான்.

பக்கத்தேயிருந்த சீற்றின் விளிம்பில் - ஒரு பையன், பதினேழு வயதிற்கு மேலிருக்காது. சைட் பேண்ஸ் வைத் திருக்கிறான். கூடை போன்ற தலை பெண்களுக்கு இருப்பது போலத் தொங்குகிறது. அருவசியமான - ஆனால் சற்றே கவர்ச்சி தருகின்ற தலையாட்டங்களினால் முன் கற்றை மயிரை நெற்றியில் விழச் செய்து - விழுந்த மயிரை கோதி படிய வைத்து திரும்பவும் விழச்செய்துகொண்டு நிற்கிறான். புபேக்குப் போய் வந்திருக்கிறான் போலிருக்கிறது. அந்த சீற்றிலிருந்த சிங்களப் பெட்டைகளோடு 'சேட்டை' பண்ணிக் கொண்டிருக்கிறான். அதுகளும் அவன் சொன்ன தற்கெல்லாம் பெரிய சப்தத்தில் சிரித்துக் கொள்கிறார்கள்.

'இதுகளுக்கும் நித்திரையில்லை, எனக்கு வாற நித்திரை யையுமல்லவோ குழப்புதுகள்'

மனதில் சினத்தின் உள்ளீடு.

'இவன் இந்தப் பதினேழு வயதிலேயே சைட் பேண்ஸ் வைத்து குடித்துக் கும்மாளமிட்டுத் திரிவது எங்ஙனம்? பெரிய இடத்துப் பையனாக இருக்க வேண்டும், அவர்களுக்குத் தான் சைட் பேண்ஸ் வைத்து அதை அடிக்கடி வருடிக் கொடுத்து கண்ணாடியில் அழகு பார்ப்பதற்கு நேரம் இருக்

கிறது. இந்த சமுதாயத்தைத் திருத்துவதற்கு எத்தனையோ வெட்டுக் கொத்துகள், திருத்த வேலைகள் செய்ய வேண்டி யிருக்கிறது. அவைகளைச் செய்ய வேண்டிய கடமைகள் இவன் போன்ற இளைஞர்களின் கைகளிலேயே இருக்கிறது. ஆனால், இவன் சமுதாயத்தைத் திருத்தக் கூடிய நிலையிலா இருக்கிறான். சமுதாயத்திற்கும் சைட்பேண்ஸ் போன்ற அலங் கோலங்களை வளர்த்து விட்டல்லவா மறுவேலை பார் பான். ம் என்னவோ செய்துகொண்டு போகட்டும் தகப்பன் தாயிட்டை காசிருக்கும்மட்டும் தான் இவயளின்ர ஆட்டம்'.

அந்தப் பையன் இளைஞன். தானும் இளைஞன்; தான் பெரிதாக அப்படி என்ன செய்து விட்டான் இந்த சமுதா யத்திற்காக. ஏன் செய்யவில்லை? புரட்சி மணம் புரிந்திருக் கிறான். அது ஒன்றே காணுதா. இரண்டு தேசிய இனங்கள் ஒன்று சேர்வதற்கான வழிமுறையையல்லவா காட்டிக் கொடுத்திருக்கிறான். புரட்சி மணம் புரிந்தவனுக்கு அதனால் வரக்கூடிய பலாபலன்களை சமாளிப்பதற்குரிய பலம் இருக்கத் தான் வேண்டும்.

அது அவனிடம் இருக்கிறதா?

# ஏழு

மாகோ ஸ்டேசனிலிருந்து ரயில் புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனம் இடையிலே மூடி வைத்திருந்த 'கடந்த காலப் புத்தகத்தின்' ஒற்றைகளைத் தட்டத் தொடங்குகிறது.

ரயிலின் தட தட, பட பட சப்தம் அரியத்தின் எண்ண அலைகளை பலவந்தமாகப் பின்னோக்கி இழுத்துக்கொண்டு போவது ஏன்?

அந்த நாள்............ ஒரு போயா நாள். இரவு ஏழு மணியிருக்கும். அன்று தயாவதி மட்டும் தனியே விகாரைக்குப் போய் விட்டிருந்தாள். வெளியில் உலவச் சென்று திரும்பிய அரியத்திற்கு - பக்கத்திலிருந்த அறையில் உள்ள கட்டிலில் படுத்துக் கொண்டு மொணிக்கா ஏதோ வாசித்துக் கொண்டு இருப்பது தெரிகிறது. வெளியே மழை. தொப்பலாகிவிட்ட உடுப்புகளை பாத்

ரூமிற்குள் உள்ள வாத்துவாளிக்குள் போட்டுவிட்டு சாரனை உடுத்திக் கொண்டே அறைக்குள் நுழைகிறான்.

"நல்லா நனைஞ்சிற்றிங்க போல"......என்று சிங்களத்தில் கேட்டுக் கொண்டே கோப்பி வைக்கப் போய் விட்டாள் மொணிக்கா. வீட்டில் வேறு எவருமில்லை. தயாவதிக் கிழவி திரும்பி வர இரவு ஒன்பது மணியாகும். வெளியிலோ இடிமுழக்கத்துடன் மழை. மனதில் எங்கேயோ ஒரு இடத்தில் பதுங்கியிருந்த நெடுநாளைய ஆசை சூழல்களின் அரவணைப்போடு தலை காட்டுகிறது.

'கோப்பி கொண்டு வரேக்குள்ள ஒருக்காப் பிடிச்சுக் கொஞ்சிவிடவேணும். என்னோட பழகிற மாதிரியைப் பார்த்தா வெளியில சொல்லமாட்டாள் என்றுதான் நினைக்கிறன்'.

இதயம் மேளம் அடித்துக் கொள்ளத் தொடங்குகிறது. கால்களில் இளம் நடுக்கத்தின் பிறப்பு! சிறிய ஒரு பிழை விடுவதனால் செனிக்கப் போகின்ற நடைமுறைக் கஷ்டங்களின் நினைவுப் படமொன்று தன் தோற்றம் காட்டி, உள்ளத்தை ஒரு தரம் உலுக்கி, அவதிப்படுத்துகிறது.

'சிங்களப் பெட்டையள் இதையெல்லாம் பெரிசாக எடுக்க மாட்டுதுகள். எங்கட தமிழ்ப் பெட்டையள்தான் கொஞ்சமெண்டோனை ஊரைக் கூட்டிறதுகள். மொணிக்கா என்னோட நல்லாக் கதைச்சுச் சிரிக்கிறவள்தானே...... அண்டைக்குச் சாப்பிடேக்குள்ள மேசைக்குக் கீழ என்ர கால் அவளின்ர காலில தற்செயலாகத் தட்டுப்படேக்குள்ள - ஒரு சிரிப்புச் சிரித்து என்ர முகத்தைப் பார்த்ததிலேயே தெரியுது..... அவள் அதை கோவமா எடுக்கேல்லை யெண்டு......'

மனம் பாவகாரியத்திற்குப் பக்க பலமாக சாட்சிகளைச் சேர்த்துக் கொள்கிறது. ஜன்னலினூடே இருண்டு கிடக்கும் வானமும், மந்தமான சூழலுந் தெரிகிறது. உடலின் உணர்ச்சிப் பொறிகள் சுற்றுடல் என்னும் வலைக்குள் சிக்கி...—

தேகம் சூடாகி முகமெல்லாம் வியர்த்து வளிகிறது. சர்... சர் என்று முற்றத்தை அறைந்து தாக்கும் மழைத் தடி களின் ஒலி . காதைத் தொட்டு, மனதைத் தொட்டு, இதை விட வேறு சந்தர்ப்பம் எங்கே வரப் போகிறது என்பதாக - செய்ய நினைக்கும் குற்றத்திற்குச் சார்பான சாட்சியாக நின்று சத்தம் போட்டது.

அரைவாசி நிலையில் மூடப் பெற்றிருந்த கதவு திறக்கப் ப ம் ஓசை கேட்கிறது. இப்போது காதிற்குக் கேட்கும் வண்ணமாக அடித்துக் கொள்கிறது இதயம்.

'சே, இது வேற இந்த நேரத்தில டக்கு டக்கெண்டு அடிக்குது'. கோப்பியைக் கொடுத்து விட்டு போகத் திரும்பு கிறாள் மொணிகா. கோப்பியை வாங்குகிற போது அவ ளுடைய கையைப் பிடித்து விட வேண்டுமென்று தான் முதலில் நினைத்திருந்தான். அந்த நினைப்புத் தோல்வி கண்டது.

மனம் ஒவ்வொன்றையும் எவ்வளவு இலகுவாக நினைத்து விடுகிறது நினைத்தவற்றைச் செய்வதென்றாலோ ..

'ஆளைப்போக விட்டால், பேந்து உள்ள வரப் பண்ண சாட்டொண்டுமில்லை'. "மொணிக்கா, இருங்கவன் சும்மா கதைப்பம் ..... அம்மா என்ன இண்டைக்குத் தனியப் போயிற்று" கேட்டான் அரியம்.

"எனக்கு கொஞ்சம் தலையிடி, அதிதான் அவ தனியப் போனது" என்று தமிழில் சொல்லிக்கொண்டே கட்டிலின் ஒரு விளிம்பில் குந்துகிறாள் 'அவள்.

மொணிக்காவிற்கு ஆண் சகோதரர்கள் இல்லை. அது ஒரு பரிதாபகரமான நிலைதான். வேறு நேரங்களில் நினைத் துப் பார்த்து அதையிட்டு துக்கப்பட்டிருக்கிறான் அரியம். ஆனால் இன்று, அதுவும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதை யிட்டு அவனது கள்ள மனம், "அப்பாடி பயமில்லை அண்ணன்

தம்பியெண்டு இருந்திருந்தா, சிங்களக் காஸ்டையள் வெளுத்துப் போடுவாங்கள்'', என்று தன் பாதுகாப்பான நிலையை எண்ணி சந்தோசிக்கிருன்.

அவளையும் தன்னுடைய நிலைமைக்குக் கொண்டுவரவேண்டிய தேவையிருக்கிறது என்பதை உணர்கிருன் அவன். தன்னுடைய காமத்தின் பாற்பட்ட உணர்ச்சி நிலைக்கு அவளையும் கொண்டுவர வேண்டுமாஞல் — கொஞ்சம் வெட்கத்தை விட்டு பச்சையாகக் கதைத்தால் தான் முடியும்.

''உங்க—, அந்த போர்ட்டே போட்டோ நல்ல வடிவாயிருக்கு மொணிக்கா, ஒருக்கா எடுத்திற்று வாறீங்களா, இன்னொருக்கா பாக்கோனும் போல இருக்கு'' கேட்டான் அரியம்.

நீ அழகாக இருக்கிருய், ஒரு பாட்டுப் பாடு என்று காகத்தைப் பார்த்து நரி கேட்ட கதைதான். அரியத்தின் ''போட்டோ நல்லாயிருக்கு'' என்ற புகழ்ப் பேச்சுக்கு இலக்காகி தன் அறைக்குச் சென்று அல்பத்தை எடுத்து வந்து கையில் கொடுத்துவிட்டு பக்கத்தில் அமர்கிருள் மொணிக்கா. இருவருக்கும் இடைவெளி அவ்வளவில்லை.

''இது எப்ப எடுத்தது, ஒன்பது வயசிலயா .... அப்பவே குமர்ப்பெட்டை மாதிரித்தான் இருக்கிறீங்க ... ஆ — இது நல்லாயிருக்குது ... ... பக்கத்தில நிக்கிறது ஆர்... ஆ — என்ன சொன்னீங்க ... ... ... கருணவதியா ... அவ என்ன உம் மெண்டு முகத்தை வைச்சுக்கொண்டு இருக்கிரு. இதார், இதில சீலையுடுத்திக் கொண்டு நிக்கிறது.''

போட்டோ அல்பத்தை தன் மடியில் வைத்துக் கொண்டே 'அதார், இதார்' கேட்டுக்கொண்டு இருக்கிருன் அரியம். இதார், அதார் என்று சொல்லவேண்டுமாஞல் அவள் அவன் பக்கத்தில் வந்துதானேயாக வேண்டும்.

கதிரையை இழுத்து விட்டுக் கொண்டே கிட்டவந்து குந்தி அல்பத்தைப் பற்றிய அனுவசியமான, ஆனல் அவனுக்கு

அவசியத் தேவையாகிவிட்ட கேள்விகளுக்கு பதில் சொல்வதற்காக குனிந்து அல்பத்தைப் பார்க்கிறாள் மொனிக்கா.

நடுங்கும் உதடுகள் தம் வசமிழந்து .. ... ... அவளது தோளை கொஞ்சப் பார்க்கின்றன.

“என்ன இது, யாரும் பாக்கப் போறாங்க” ... அவள் வெளியில் நடுங்காமல் சொன்னாள். அவளுக்கு உள்ளுக்குள் நடுக்கம்.

இந்தப் பதிலொன்றே போதாதா ... .. அவனுக்கு

அதன் பிறகு  தசைகளின் சேர்க்கை . மனதில் கற்பனை உருவம் பெற்றிருந்த எத்தனையோ காமச் செயல்களுக்கு அனுபவபூர்வமான உருவங்கள், அசைவுகள் கொடுக்கப்படுகின்றன. புடைத்து உரமேறிய உறுப்புகளின் துரித கதிச் சேர்க்கை அண்மித்துக் கொண்டிருந்தது.

“என்னைக் கல்யாணம் செய்வீங்களா”? தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்த அவள் அவனிடம் மெதுவாகக் கேட்டாள்.

அந்த நேரத்தில் இல்லையென்று சொல்ல அவனென்ன மடையனா. திருமணம் செய்துகொள்ளாத இருவர்களுக்கிடையில் எந்த ஒரு விடயம் நடக்கக் கூடாதோ அது ... ... நடந்து முடிந்துவிட்டது.

ஆனால் ... ... ...

அதை நடத்தி முடித்துவிட்டவனின் மனம் ... ... ?

# எட்டு

வெறி தணிந்த நிலை. வெளியே உலவப் போயிருந்த மதி...... உலவிக் களைத்துவிட்டு உள்ளே வந்தது. மதியோடு...நீதி நெறி முறைகளும், பயமும் அழையா விருந்தாளிகளாக நுழைந்து ... ... நிரந்தர வாடி போடத் தொடங்கின.

தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் அவன் அவளது முகத்தை நிமிர்ந்து பார்க்கவில்லை. அவள் வழக்கம் போலவே சிரித்துப் பழகினாள்.

'சிங்களப் பெட்டையெண்ட படியாத்தான் சும்மா இருக்கு: ஏதோ தப்பிப் பிழைச்சன், இல்லாட்டி ஊரைக் கூட்டி ...'

நினைக்கப் பயமாயிருந்தது அவனுக்கு.

எதையெதையெல்லாமோ மனதில் போட்டுச் சிந்தித்த தால், அவைகள் உண்டாக்கிய ரணத்தின் வருத்தங்கள் குறைய ஐந்தாறு நாட்களாகி விட்டன.

ஒன்றுமே நடக்கவில்லை.

'அட, ஒன்றுமே நடக்கவில்லைதான்' எதுவோ ஒன்று நடக்கப் போகிறது என எதிர்பார்த்து அதனால் உண்டாகும் பயத்தினால் அதுபோன்ற எளிய செயலை இனி உயிர் போன லும் செய்வதில்லை என்று மனதிற்குள் சத்தியம் செய்து கொண்டு இருக்கும்போது, எதிர்பார்த்த அந்த ஒன்று நடக் காமலே போய்விட்டால் பயத்தின் தாக்கங்கள் குறைந்து திரும்பவும் அந்த செயலைச் செய்வதால், இனி ஒன்றும் பய மில்லையெனத் தெளிந்து ... ... அவன் சிறிது சிறிதாக சகஜ நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான்.

பாம்பின் காலைப் பாம்பு அறிந்து கொள்கிறதோ . இல்லை யோ ... மகளில் இரண்டொரு மாற்றங்களை அந்தத் தாய அறிந்துகொண்டாள். அரியத்தோடு அதைப் பற்றிக் கதைத்து, தெளிந்து கொள்வதற்குத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவன் வழக்கத்திற்கு மாறாக, வீட்டிற்கு நேரஞ் சென்று வரத் தொடங்கினன். அன்றும் அப்படித்தான், பின்னேரம் ஆறரை மணிபோல் அறைக்குள் வந்து புகுந்து உடுப்புகளைக் கூடக் கழட்டாமல் கட்டிலில் சாய்ந்து விட்டான்.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

மொனிக்கா தேத்தண்ணி தருவதற்காக தட்டுகிருள்... அவளிடம் என் செயல் என்ன மாற்றங்களைத் தோற்றுவித் திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்" என நினைத்துக் கொண்டான் அரியம்.

"கதவு பூட்டாமதத்தான் இருக்கு, தள்ளிக்கொண்டு வாங்க" மெதுவாகக் கூறினன் அரியம். தயாவதி கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தாள்.

"மல்லி, நான் ஒங்களோட கொஞ்சங் கதைக்க வேணும், நீங்க எங்காச்சும் போகேல்லேத் தானே" அவன் அவளது கேள்விக்குப் பதில் சொல்லும் முன்னரே பக்கத்திலிருந்த கதிரையில் குந்திவிட்டாள் அவள். பதில் சொல்வதற்கு குரல் வரமாட்டேன் என்கிறது. வெளியே போகவில்லை என்ற கருத்துப்பட தலையை ஆட்டுகிறுன். ஒரு சிறிதளவு நேரம் அமைதியாகக் கழிகிறது எதில் தொடங்குவது என்ற கலவர நிலைமை அவளையும், எதைக் கேட்பாளோ, என்னத்தைச் சொல்லப் போகிறேனே என்ற மயக்க நிலை அவனையும் ஆட்கொண்டு.. அங்கே நிலவிய அமைதியின் வயதைக் கூட்டியது. புயலொன்று வருவதற்கான முன்னெச்சரிக்கையாகத்தான் அந்த அமைதி நிலவுகிறது, என நினைத்து மனதிற்குள்ளே அவர்கள் குமைந்து கொண்டிருந்தார்கள்.

"தம்பி, நான் உங்கள எண்டே சொந்த மவன் எண்டு தான் நெனச்சிருந்தது. நீங்க வந்த அண்டைக்கு, உங்கட முகத்தைப் பாத்து நீங்க நல்ல பிள்ளையெண்டு முடிவு செஞ்சேன்." ...என்றவள், சற்றே இடைவெளி விட்டு "தம்பி நான் சிங்களத்தில் கதைச்சா ஒங்களுக்கு விளங்குந்தானே" என்று கேட்டாள். "ஓம்" என்பதாகத் தலையை ஆட்டுகிறுன். அவள் சிங்களத்தில் தொடர்ந்தாள்.

"தம்பி இங்க இருக்கிற சிங்களப் பொடியங்களுக்குக்கூட உங்களுக்குத் தந்த மரியாதை தரவில்லை. என்னவோ முதன் முதலில் உங்களைக் கண்ட உடனேயே எனக்கு ஒரு அன்பு வந்துவிட்டது. அதனுல்தான் என் மகளோடு எந்தவித வித்தியாசமுமில்லாமல் உங்களைப் பழக விட்டனுன். மொணிக்கா தப்பனில்லாத பிள்ளை. உங்களுக்கு முன்னரே என்னுடைய கஷ்ட வரலாற்றைச் சொல்லியிருக்கிறேன். மொணிக்காவினுடைய தகப்பன் வழியிலும் சரி, என்னுடைய சொந்தக்கா

நர் வழியிலும் சரி எங்களுக்கு ஐந்து சதத்திற்கு உதவியில்லை. என்னுடைய பிள்ளையை ஒரு நல்லவனுடைய கையில் கொடுத்து விட்டேனானல் பெரிய பொறுப்புத் தீர்ந்து - நாளைக்கோ அல்லது அடுத்த நாளைக்கோ போய்ச் சேர்ந்து விடுவேன்.

''இப்படியான ஒரு நிலைமை வந்ததற்கு நான் உங்களை மாத்திரம் பிழை சொல்லவில்லை. அதில் என்னுடைய மகளுக்கும், ஏன், எனக்குமே பங்கிருக்கிறது. அந்தப் பங்கு தந்த சுமையைத்தான் இப்ப நான் அனுபவிச்சுக் கொண்டிருக்கிறேன்.

தம்பி நான் வவுனியாவில் அவரோடு வாழ்ந்த காலத்தில் எத்தனையோ தமிழ்க் குடும்பங்களோடு பழகியிருக்கிறேன். அதனாலே தமிழர்கள் என்றாலே எனக்கு ஒரு விருப்பம். அந்த விருப்பத்தினால்த்தான் நீங்க இந்த வீடு கேட்டு வந்தபோது நான் ஒரு மறுப்பும் சொல்லாமல் திறப்பைத் தந்தனான். உங்களுடைய குடும்ப கஷ்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறீங்க. உங்கட தங்கச்சிக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டியிருக்கிறதைப் பற்றியும் எனக்குத் தெரியும். இந்த நிலைமையில் நீங்க என்ன செய்வீங்க.

மொணிக்காவை கள்ளமில்லாத பிள்ளையாக வளர்த்துப் போட்டேன். தான் கற்பிழந்த விடயம் தன் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய அளவிற்குப் பெரிதானது என்பது அவளுக்குத் தெரியாது. அந்த அளவிற்கு அவள் பெரிய விசயங்களைத் தெரிந்து வைத்திருக்க வில்லை. தன் இளமை ஆசைக்குத் தீனி போட அவள் ஆசைப்பட்டிருந்தாலும், உங்களுக்கும் உதவ வேண்டும் என்ற அனுதாப உணர்ச்சி காரணமாகவே-இந்தக் குற்றச்செயலுக்கு அவள் மறுப்புத் தெரிவிக்கவில்லை போலும்.

உங்களுடைய குடும்பக் கஷ்டங்களைக் காட்டி என்னை விட்டுவிடுங்கள் என்று என்னிடம் மன்றாடிக்கேட்டு நானும் அதற்கு ''ஓம்'' எனச் சொன்னால் நீங்கள் வேறு இடம் பார்த்

துக் கொள்ளலாம். அவளுக்கு வேறு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து கட்டியும் வைக்கலாம். அது ஒன்றும் பெரிய விசயங்கள் இல்லை.

ஆனால், அவள் இன்னொருவனின் உடமையாகி, அவனோடு வாழும்போது கட்டாயம் ஒரு நாளைக்கு தன் கணவனிடம் தான் முன்னர் ஒருவரோடு இது போலப் பழகியிருக்கிறேன், என்று கூறி மன்னிப்புக் கேட்பாள். ஏன் தெரியுமா நான் அவளைப் பொய் சொல்லத் தெரியாத பிள்ளையாக வளர்த்து விட்டிருக்கிறேன். உங்களோடு நடந்து கொண்ட விதத்தை சிறுபிள்ளைத் தனமாக என்னிடமே வந்து கூறிக்கொண்டிருந்தாள்.

ஆக, அவளது பிற்கால வாழ்க்கை எப்படிப் போகப் போகிறது... என்று அவளுக்கே தெரியாது. இந்த நிலையில் அவளது ஒரே உறவான என்னுடைய நிலை என்ன. அந்தக் கடமைதான் இப்படி என்னை மண்டியிட வைக்கிறது.

வாழ்க்கையில், இந்த நாற்பது வருட காலத்திற்குள் துன்பப் பகுதிகளையே மிகுதியாகப் பார்த்துப் பார்த்து பழகி விட்ட எனக்கு - என் மகள் தான் உணர்ந்து, தெரிந்து செய்யாத பெரிய தவறுக்காக வாழ்க்கையின் இன்பமாகக் கழிக்க வேண்டிய காலப்பகுதியின் முதல் அத்தியாயத்தையே வீணாக்கிக் கொண்டிருக்கும் அநாதரவான நிலைமையை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியில்லை.

உங்களது தங்கை ஆடவனொருவனோடு இதே மாதிரி தவறிழைத்து அவர்கள் இப்போது நீங்கள் என் முன்னால் நிற்பது போல்... உங்கள் முன்னால் நிற்கவேண்டி ஏற்பட்டு. அதற்குப் பரிகாரமோ, தீர்ப்போ அல்லது பழிக்குப்பழியோ என்று முடிவு செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு உங்களுக்கு இருந்தால் அந்த நிலையில் நீங்கள் என்னசெய்ய முடியும்.

அதற்கு இதய பூர்வமாக, உங்களிடமிருந்து வரும் பதில் எப்படி அமைந்திருக்கப் போகிறது. உங்களிடமிருந்து வரும் இதய பூர்வமான அந்தப் பதில் - கட்டாயமாக சமூக, மொழி, இன, வேறுபாடுகளை காரணமாகக் காட்டி எழக்கூடிய எதிர்காலத் துன்பங்களை உள்ளடக்கி, அதன்மேல் கட்டப்பட்ட கோபுரம் போலிருக்கக் கூடாது.

சமூக, இன மொழி வேறுபாடுகள் உண்மையான அன்பையோ அல்லது திருமண வாழ்க்கையின் தாத்பரியங்களையோ அழித்து விடும் என்பதை நான் நம்பியிருக்கவில்லை.

"சிங்களப் பெட்டையைக் கல்யாணம் செய்துகொண்டு எப்படி என் சமூகத்தை எதிர்நோக்கப் போகிறேன் என்று நீங்களும், அதேவிதமாக மொணிக்காவும் யோசித்துக் கலங்கி அந்த யோசனையைக் கைவிடுவீர்களானால்-அதை நான் என்னளவில் ஒப்புக்கொள்ள முடியாது.

நான் தாலி போட்டிருந்து, அந்தத் தாலியைப் போட்டுக் கொண்டதனால் ஒருத்திக்கு வந்து போகின்ற இன்ப துன்பங்களை – வாழ்க்கைக்குத் துணையொன்று இருக்கிறதேயென்ற நம்பிக்கையில் அனுபவித்து - பின் ஒருநாள் தாலியறுத்து, அதை அறுத்துக் கொண்டதனால் வந்து போகின்ற அத்தனை, துன்பங்களையும் கண்டு களைத்துப்போயிருக்கிறேன்.

என் மகள் தாலிபோடாமலே - தாலியறுத்தவனின் துன்பங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா. அவளது மிகுதிப் பகுதி வாழ்க்கையெல்லாம் அர்த்தமொன்றுமில்லாமலே கழிந்து விட வேண்டுமென்று விரும்புகிறீர்களா.

தம்பி, நான் இப்படியெல்லாம் ஆழமாகக் கேட்பது - உங்களது மனதை இளக்கி அதன் மூலம் உருவாகின்ற அனுதாபம் என்னும் உணர்ச்சியை அத்திவாரமாக வைத்து - என் மகள் சார்பாக ஒரு தலை பட்சமான முடிவை உங்கள் இதயத்திலிருந்து பலாத்காரமாகப் பிடுங்கி எடுப்பதற்காகத்தான் என்று தயவுசெய்து எண்ணவேண்டாம்

என் மகளது எதிர்காலம் பலாத்காரத்தினல், அதாவது உங்களது மனது விரும்பாமலே உருவாக்கப்பட்ட ஒரு முடிவில் அமையவேண்டும் என்று நான் நம்பியிருக்கவில்லை. அவளுடைய எதிர்காலம் இதயபூர்வமாக, நன்ருகச் சிந்தித்து, எடுக்கப்பட்ட ஒரு முடிவின்மேலே அமைக்கப்படுவதையே நான் விரும்பியிருக்கிறேன்.

கடைசியாக ஒன்று - அவள் உங்களிடம் தன் வசமிழந்ததற்கு, அவளுடைய எதிர்காலம் உங்களால் அர்த்தமுள்ளதாக்கப்படும் என்ற அசையாத நம்பிக்கை தான் காரணமாயிருந்திருக்கிறது. அந்த நம்பிக்கையில் நம்பிக்கை வைத்துத் தான் அவளும் நானும், சாதகமாக முடியாவிட்டால் எம் போன்ற அனுதைகள் எடுக்கவேண்டிய ஒரு இறுதி முடிவை இந்த நிமிடம் வரை எடுக்காமல் இருக்கிருேம்.

அந்த முடிவை நாங்கள் எடுபபதோ அல்லது எடுக்காமலிருப்பதோ - நீங்கள் சொல்லப்போகும் முடிவில்தான் தங்கியிருக்கிறது.''

தயாவதி சொல்லி முடித்துவிட்டு, கண்களைத் துடைத்துக்கொண்டே அறையை விட்டு வெளியேறினுள் அரியம் குனிந்த தலை நிமிராமலே - நிலத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நிமிடத்தில் ஏற்பட்டுவிட்ட வெறியினுல் உண்டாகிவிட்ட அசம்பாவிதத்தின் கோரப் பிடிக்குள் சிக்கித் தவித்தான் அவன். அவள் பேசிய ஆவேசச் சிங்களத்தின் அர்த்தம் நூற்றுக்கு நூறு அவனுக்கு விளங்கியிருக்கா

விட்டாலும், அங்கே வலியுறுத்தப்பட்ட சில உண்மைகளின் தன்மைகளை, அதன் அர்த்தங்களை அவனால் ஊகிக்க முடிந்தது.

வீட்டு ஞாபகங்கள் 'டிரபிக்' நிறைந்திருக்கும் தெருவில் போய்க்கொண்டிருக்கும் வாகனங்களுக்கொப்பாக நெருக்கியடித்து வந்துகொண்டிருந்தன. அவற்றின் பின்னணியில்... பெற்ருேரின் முகங்கள், சகோதரியின் முகம் ... பயம் காட்டி மறைந்தன.

இடது பக்க நெற்றியில் விட்டு விட்டு இடித்தது இதைப்பற்றித்தான் சிந்திக்கிறேன் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு.. பலவிதமான சிந்தனைகளினூல் உருமான குழப்பம் நிறைந்து... தலை கனத்தது.

# ஒன்பது

சிகரட் குடியை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க வேண்டுமென எண்ணியிருந்தவன் கடந்த இரண்டு மூன்று தினங்களாக கணக்கில்லாமல் குடித்து விட்டிருந்தான். சேட் பொக்கற்றில் ஒரு சிகரட் பைக்கட் இருந்தது. ஒன்றை எடுத்துப் பற்றிக் கொண்டே சட்டையை மாட்டி வெளியே நடந்தான் அரியம். மனம் ஒருநிலைப்படாது அலைக்கலைந்தது. வால் அறுந்து சமநிலை தவறி தாறுமாறாக ஆடிக் கொண்டிருக்கும் பட்டமொன்றிற்கு அவனது மனத்தை உவமையாகச் சொல்லலாமா?

வால் அறுந்தது அறுந்ததுதான். அந்தப் பட்டம் இனி அடிக்கப் போகும் காற்றினால் அலங்கோலமாக அலைக்கலைய வேண்டியதுதான். ஆட்டம் நிற்க வேண்டுமானால்—காற்றுக் குறைய வேண்டும். இப்போதுள்ள சூழலைப் பார்க்குமிடத்து — காற்று குறையப் போவதில்லை. அப்படியானால், ஆட்டத்தைக் குறைக்கும் வழியென்ன? பட்டத்தை கீழே இறக்கி இன்னொரு புது வாலை அதில் கட்டிக் கொள்ள வேண்டும்.

அதில் தானே பிரச்சினையே இருக்கிறது. வால் கட்டாது விட்டாலும் பிரச்சினை. கட்டினாலும் பிரச்சினை. அவன் என்ன செய்வான்.

செல்லமஹால் தியேட்டருக்குப் போய், அங்கே இரவுக் காட்சிக்கு உள்ளே செல்வதற்காக நெரித்துக் கொண்டு நிற்கும் சனக்கூட்டத்தைப் பார்த்து ...... களைத்து ...... அப்படியே கிங்ஸ்லி தியேட்டரடியால் வந்து...... திரும்பவும் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் அவன் — அதற்குள் எட்டு சிகரட்டுகள் புகைத்து விட்டான்.

அவனது மன அடுப்பில் புகைந்து கொண்டிருக்கும் புகைச்சல் ஒரு சிறிதென்றாலும் குறைந்தபாடில்லை. அது குறையவே குறையாதா?

அறைக்குள் வந்து கட்டிலில் தன்னை எறிந்து கொண்டான். உடலை எறிந்து கொள்வது இலகுவாகத்தான் இருக்கிறது. மனத்திலுள்ள சஞ்சலங்களை எறிந்து கொள்வது...... அது போன்று இலகுவான செயலாகிவிட்டால் எவ்வளவு நன்றாகவிருக்கும்.

கண்களில் ஊறிக்கொண்டிருக்கும் கண்ணீரைத் துடைத்து விடத் தெரியாமல் ...... தெரிந்திருந்தாலும் துடைத்து விடாமல் விட்டதனால் ... யாருடைய குடி முழுகிவிட்டது என்கின்ற ஒரு பற்றற்ற அலட்சிய நினைப்பில் — இரவு இரண்டோ அல்லது மூன்று மணியளவில் அவன் தூக்கத்தின் வலுக்கட்டாயமான பிடிக்கு ஆளாகி விட்டிருந்தான்.

அடுத்தநாட் காலை எட்டு மணிக்குக் கட்டிலை விட்டு எழுந்தான். எப்பொழுதோ மேசையில் வைக்கப்பட்ட கோப்பி ஆறிப்போய்க் கிடந்தது. எட்டு மணிக்கு அலுவல

கத்தில் இருக்க வேண்டியவன் — ஒன்பது மணிக்குப் போறான்.

மாலை நாலு மணியாகியது. பஸ்ஸில் ஏறிப்போக வேண்டும் என்று எண்ணம் கிஞ்சித்தும் இல்லாமல் நடந்தே போய்க் கொண்டிருந்தான் அவன்.

''துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா'', சரஸ்வதி ஹோட்டல் றேடியோ அலறிக் கொண்டிருந்தது அவன் காதில் படுகிறது.

''மொணிக்காவைக் கல்யாணம் கட்டினால் என்ன நேர்ந்து விடப் போகிறது. அவள் அவ்வளவு பெரிய வடிவான பெட்டையில்லை. வடிவில்லையெண்டும் சொல்லேலாது. பெரிய பொம்பிளையள் மாதிரி சீலையுடுத்திக் கொண்டு நிண்டால் வடிவாகத்தான் இருப்பாள். அந்த வீடு அவளுக்குத்தான் சீதனமாகக் கிடைக்கும். கொழும்பில அப்பிடி ஒரு வீடு எடுக்கிறதும் கஷ்டந்தான். மகள்ர கல்யாணத்துக்கெண்டு மனிசி ஏதும் சேத்துக் கீத்து வைச்சிருக்கும் ஆருக்குத் தெரியும்......

இண்டைக்கே வேறு வீடு பார்த்துக் கொண்டு போயிற்றால் என்ன? சீ சீ ..அப்படிச் செய்யிறது எவ்வளவு பெரிய துரோகம்... ஆ இனியில்லையெண்டு கல்யாணம் செய்தாலும் மொனிக்காவிட சொந்தம் கிந்தம் எண்டு சொல்லிக் கொண்டு இந்தச் சிங்களக் காடையள் வந்து கந்தறைச் சிங்களம் பேசிக் கொண்டு நிற்கும். கந்தறைச் சிங்களம் பேசுவாங்கள் எண்டதுக்காக அவளை கை விட்டிறதா? ?

அவனது தலைக்குள் பலரகமான சிந்தனைப் புழுக்கள் நெளிந்து குடைவை ஏற்படுத்தின. துப்பார்க்குத் துப்பாய தூவும் மழை ... மெதுவாகத் தூறத் தொடங்கியது. தூறலில் நனைகிறேன் என்ற நினைப்பேயில்லாமல் நடந்து கொண்டிருந்தான் அவன்.

அதன் பின்னர்......இரண்டொரு நாட்கள் அமைதியாக—ஆனால் பல கொந்தளிப்புகளை உள்ளடக்கிய அமைதியாக—கழிந்து விட்டன.

அந்தக் கொந்தளிப்புகள் ஏற்படுத்திய கலக்கங்கள்—சமன் செய்து சீர் தூக்கும் இதயத் தராசுகளின் நீதியின் பாற்பட்ட நிறுவையினால் — கல்லெறிந்து குழப்பப்பட்ட குட்டை திரும்பவும் தன் முன்னைய நிலையை அடைவது போல—பொய்ம்மையான ஒரு தோற்ற அளவில் மறைந்து விட்டிருந்தது.

பின்பு ...மொனிக்காவை ஒரு வெள்ளிக்கிழமை பதிவுத் திருமணம் செய்ததும், அதுபற்றித் தம் வீட்டாருக்கு ஒரு போஸ்ட்காட் தன்னும் போடாமல் விட்டதும், அதன் பயனாக என்ன விளைவுகள் வந்துவிடப் போகிறது என்பதை நினைந்து நினைத்து இத்தனை நாட்களாக மயங்கிப் போனதும், பழங்கதைகளாகி விட்டன.

பழையனவாகிவிட்ட கதைகள்...நாளைக் காலையில் திருகோணமலை மண்ணை மிரித்ததும், புதுப் பிரச்சினைகளாக உருவெடுக்கப் போகின்ற மாயத்தை எண்ணி எண்ணி எண்ணம் மாளாது களைப்பினால் சிறிது தூங்கி விட்டிருந்தான் அரியம்.

நேரம், இரவு மூன்றுக்கு பத்து நிமிடங்கள் இருக்கின்றன. ரயில் பிளந்து முன்னேறியவண்ணம் செல்கிறது. திடீரென்று கண் விழித்தான் அரியம்.

அவன் கண்மூடி நித்திரை செய்திருந்த அந்தச் சிறிது நேரத்திற்குள் ரயில்—தான் நின்று களைப்பாறி வந்த குட்டி ஸ்டேசன்களிலிருந்து பல புதிய முகங்களை ஏற்றி வந்திருக்கும் விந்தையை அரைகுறை நித்திரைக் கண்ணால் பார்த்தான் அரியம். அவன் உட்கார்ந்திருந்த இருக்கைக்குப் பின்பக்கமாக பல ரகப்பட்ட குறட்டை ஒலிகள்......

# பத்து

கால்களில் குளிர் பரவுவது போன்ற ஓர் உணர்ச்சி. மொணிக்காவின் சீலை அவனது கால்களை மறைத்துக் கொண்டு கிடக்கிறது. மொணிக்காவின் நித்திரை முகத்தைப் பார்க்கிறான் அரியம்.

'சிங்களத்தி என்றாலும் எவ்வளவு நல்லவள். பாவம் இவளைக் கெடுத்துப்போட்டு, அப்படியே கைவிட்டிருந்தா, அந்தத் துரோகத்தை நான் எங்க போய்த் துலைக்கிறது.'

சுற்றியிருந்தவர்கள் எல்லாம் நன்றாகக் குறட்டை விடுகிறார்கள். அரைகுறையில் அறுந்துபோன அவனது நித்திரை திரும்பவும் ஒட்டமாட்டேன் என்கிறதே. நித்திரை கொள்ளாவிட்டால் நாளைப் பகல் முழுக்க ஒரே தூங்கி வழிய வேண்டும் ... என்ற பயம் அவனைப் பிடித்துக்கொள்ள, கண்களை எப்படி மூடிக் கொண்டால் துயில முடியும் என்ற பரிசோதனையைச் செயலாக்கி பலவிதங்களில் முயன்று கொண்டிருந்தான்.

அவ்வளவு பேர்கள் சுற்றிவர இருந்தும், எல்லோரும் நித்திரையின் பிடிக்குள்ளிருப்பதால், இருளில் தனித்து விடப்பட்ட உணர்ச்சி மேலோங்கி— தலையைப் பிய்த்து எறிந்துவிடவேண்டும் போலிருந்தது அவனுக்கு.

'இவளாவது முழிப்பாயிருந்தா, கொஞ்சம் ஆறுதலாயிருக்கும்!... நினைவு மின்னல் பளிச்சிடுகின்றது.

''இஞ்சர், மொணிக்கா, என்ன நித்திரை நல்லா அமத்திப் போட்டுது போல''... சரியாகக் குளிரடிக்குது என்ன''......என்றான் அரியம். அவள் நித்திரை குழம்பி தொய்ந்த கண்களால் அவனைப் பார்க்கிறாள்.

குளிர் அடிக்கிறது என்பதைக் காட்ட உடலை ஒரு தரம் குலுக்கி ஒடுக்கி விட்டுக் கொள்கிறான். நல்ல நித்திரையிலிருந்து அவளை குழப்பி விட்ட குற்ற உணர்வு குளிரின்மேல் பாரத்தைப் போட்டுத் தன் சுயநலத்தைத் மறைக்கப் பார்க்கிறான் அரியம்.

சிறிது நேரம் இருவரும் ரயிலுக்கு வெளியே தெரியும் காரிருளை வெறித்துப் பார்த்தனர்.

''ரெயில்வே ஸ்டேசனில இருந்து எவ்வளவு தூரம் உங்கட வீடு'' ..... கேட்டாள் மொனிக்கா ''ஒண்டரைக் கட்டை ரெண்டு கட்டைக்குக் கிட்ட வரும்''

''எத்தினை மணிக்குப் போய்ச் சேரும், ரெயின்'' ''செடுல்ட் ரைம் ஐஞ்சு ஐம்பது. எத்தினைக்குப் போகுதோ தெரியேல்லை.''

''உங்களை ஒண்டு கேப்பன் கோவிக்க மாட்டீங்களே''... குழந்தை மனத்துடன் கேட்டாள் மொனிக்கா.

''இல்லை சொல்லன்''

'இல்லே ...நான் சிங்களம் எண்டதால உங்கட ஆக்கள் என்னை ஏற்பாங்களா ... நாளைக்கு என்ன நடக்கப்போகுது எண்டு நினைச்சாத்தான் பயமாயிருக்கு'' நான் உங்களை மயக்கிக் கலியாணம் செய்து போட்டன் எண்டு என்னை தூற்றுவார்களோ எண்டு பயப்பிடுறன்..... என்று சிங்களத்தில் சொன்னாள் மொணிக்கா.

''அம்மா, ஐயா, தங்கச்சி எல்லாம் நல்ல குணமானதுகள், ஆனா ஐயாதான் கொஞ்சம் முன்கோபக்காரர். எது எப்படியிருந்தாலும் நான் சொல்கிறபடி நடந்து விட்டாயானால் — பயமில்லை. உன்னுடைய பழக்க வழக்கங்களுக்கு அவைகள் எதிரானதாக இருந்தாலும் எனக்காக அந்த மாற்றங்களைச் செய்துதான் ஆக வேண்டும். காலப் போக்கில் அந்த மாற்றங்கள் உனக்குப் பிடித்துப் போனாலும் போகலாம். அதற்காக, நீ உனது இயல்பான பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் கட்டாயப் படுத்த மாட்டேன். நீ, எப்படி என் இயல்பான குணங்களை, பழக்க வழக்கங்களை உனக்கும் உன் சமூகத்திற்கும் ஏற்ற மாதிரி மாற்றிக் கொள்ளுங்கள் என்று கேட்கவில்லையோ — அதே பெருந்தன்மையான செயலை நானும் கடைப்பிடிப்பேன் என்று நீ உறுதியாக நம்பலாம்.

நீ பொட்டு இட்டுக் கொள்ள வேண்டும், கையுள்ள சட்டைகள் அணிந்து கொள்ள வேண்டும் என்னோடு கோயிலுக்கு வர வேண்டும் — என்றெல்லாம் நான் விரும்புவது உண்மைதான். ஆனால் அந்த என் விருப்பத்தை நிர்ப்பந்தம் என நீ நினைத்து விடக் கூடாது. நிர்ப்பந்தங்களினால் உருவாக்கப்படும் மாற்றங்கள் — பந்தங்களை மேலும் இறுகச் செய்வதற்கு உதவி செய்யாது. அவை பாசங்களில் இடைவெளியை உண்டாக்கி விடும் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

என் தாய், தந்தை, சகோதரிகள் தான் எனக்குள்ள சொந்தங்கள். அவர்களை முற்றாகப் பகைத்துக் கொண்டு

என்றால் நிம்மதியாக வாழ முடியாது. என் பக்கமாக இருக்கும் நியாயங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி — என்னை ஒதுக்கி விடாமல் இருப்பதற்கான நிலைமையை உருவாக்குவதுதான் என்னுடைய இந்தப் பிரயாணத்தின் நோக்கம். அந்த நோக்கப் — சில வேளைகளில் கைகூடி வராத நோக்கமாகவும் போய் விடலாம். ஆனால் அவற்றையெல்லாம் நாம் ஏன் வீணாகச் சிந்தித்து, மனதை யுடைத்துக் கொள்ள வேண்டும்.

நான் இவ்வளவு தூரம் உனக்குச் சொல்வதெல்லாம் இதுதான்...... ஒருவேளை எங்கள் இருவரையும் என் குடும்பமும், என் சமூகமும் ஒதுக்கித் தள்ளி விடலாம். அப்படி அவர்கள் ஒதுக்கித் தள்ளுவதற்கு அவர்களுடைய குடும்பப்பற்று, சமூகப் பற்று, சிங்களவர்களை மனத்தினடியில் எதிரிகளாகக் கருதிக் கொண்டிருக்கும் அறியாமை, — ஆகியவைகள் உறுதுணையாக நின்று அவர்களை வழிவகுக்கலாம். என் பயமெல்லாம் — உன் நிமித்தமாக அவர்கள் எங்களை ஒதுக்கி விடக்கூடாதே என்பதுதான்.

அதனால் நீ — நாங்கள் திருகோணமலையில் நிற்கப் போகும் இரண்டொரு நாட்களுக்காவது நான் சொல்லப் போகும் மாற்றங்களைச் செய்யத்தான் வேண்டும். அவற்றால் நீ இழக்கப்போவது ஒன்றுமில்லை ........

............செய்வாயா''

இதுவரை அரியம் சொன்னவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மொனிக்கா ஆறுதலாகப் பேசத் தொடங்கினாள்.

''நாங்கள் திருமணஞ் செய்த இந்த நான்கு மாதத்திற்குள் நான் உங்களை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். என்னையும் கைவிடாமல், உங்கள் குடும்பத்தாரையும் பகைத்துக் கொள்ளாமல் எங்கள் வாழ்க்கை ஓடம்

ஓட வேண்டும் என விரும்புகிறீர்களே — அதிலிருந்தே — உங்கள் இதயம் எனக்குப் புரிகிறது. நீங்கள் எதைச் சொல்லி நான் கேட்காமல் விடப்போகிறேன். அப்படியே எனது அறிவு, ஆற்றல், அனுபவக் குறைவுகளினால், நான் உங்கள் சொற்களை மதிக்காமல் தவறிழைக்க முற்பட்டால் — என் தாயின் புத்திமதிகள் என்னை அத்தவறுகளைச் செய்வதினின்றும் காத்து விடும். என் தாய் கஷ்டங்களை மட்டுமே அனுபவித்து ..... அவற்றில் பல உண்மைகளைக் கண்டறிந்தவள். கீழான, சின்னத்தனமான உணர்ச்சியான வகுப்புவாதம் எங்களுடைய ஆழ்ந்த அன்பின் தாற்பரியங்களை அழித்து விடக் கூடாதென்றும், அன்பென்னும் உயரிய உணர்ச்சிக்கு முன்னால் — ஏளனமான குற்றச்சாட்டுகள், வகுப்புவாதக் கூச்சல்கள், எல்லாம் நிற்க முடியாது விழுந்து விடும் என்றும் என்னிடம் சொல்லியிருக்கிறாள்.

நான் திருமணம் செய்த அன்றிலிருந்து, என்னில் என்னென்ன மாற்றங்கள் அத்தியாவசியம் என்றெல்லாம் ஓரளவிற்கு ஊகித்து வைத்திருக்கிறேன்.

நீங்கள் சொல்லுங்கள்........... நான் அவற்றையெல்லாம் திருகோணமலையில் தங்கப்போகும் இரண்டொரு நாட்களுக்கென்றல்ல — வாழ்க்கையின் முழு நாட்களுக்குமே கடைப்பிடிக்கப் போகிறேன்..............

தான் சிங்களத்தில் சொன்னதெல்லாம் அவனுக்கு நன்றாக விளங்க வேண்டுமென்பதற்காக, ஆறுதலாக, நிறுத்தி நிறுத்தி சொன்னாள் மொனிக்கா. அவளுடைய சிங்கள அறிவு அவளுக்குத் தெரிந்தது தானே.

அவளால் தனக்கு பிரச்சனை வரப் போவதில்லையென உறுதியாக நம்பினான் அரியம். பின் யாரால் அது வரப் போகிறது?

ரயில் கல்லோயா ஸ்டேசனை நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் கூறிய ஆறுதல் வார்த்தைகள், அந்தத் திருமணத்தை ஒரு சாதனையாக, வகுப்புவாதம் என்ற கீழ்த்தரமான உணர்ச்சியை குழி தோண்டிப் புதைத்துவிட்ட ஒரு செயலாக அவனை நினைக்கும் படி வைத்தது. மக்களுக்குள் வகுப்புகள் ஏன்? ஒன்றையொன்று வளரவிடாமல் செய்வதற்கு வாதங்கள் தான் ஏன்? ஏன்? ஏன்? என்ற கேள்விகள் அவன் மனதில் மூட்டம் போட்டன.

திருகோணமலையில் போன வருடம் — இந்த வேலைக்கு வருவதற்கு முன்னர் — ஒரு நாள், முற்றவெளிச் சந்தியில் ஒரு கார் ஆக்சிடென்ட் நடந்துவிட்டது. அடிபட்ட மனிதன் ரத்தத்தில் மிதக்கிறான். அந்தப் பக்கமாக வந்த அரியம் ரத்தத்தைக் கண்டவுடன் அதை மேலும் காணச் சகியாது ...... இடத்தை விட்டு நகர்கிறான். அடுத்த சந்திக்கு வந்த பின்னர் — தூரத்தில் தெரியும் இழவுக் காட்சியை கண்டு உள்ளம் நோகிறான். அரியத்தின் பக்கத்து வீட்டில் இருக்கும் ராசதுரை சைக்கிளில் வருகிறார். என்ன நடந்தது என்ற புதினம் முழுமையாகத் தெரியாதவர் அவர்.

''ஆராந் தம்பி அங்க அடிபட்டது, சிங்கள ஆளோ, தமிழ் ஆளோ'' ...... ''சிங்களால் போலத்தான் கிடக்குது, பாவம் அந்த இடத்திலேயே உயிர் போயிற்றுது'' ............ என்று சொன்னான் அரியம்.

''சிங்களவனே ...... அவங்களுக்கு வேணும்......'' ... என்று சொல்லிவிட்டு சைக்கிளை மிரித்துவிட்டார் ராசதுரை.

அந்த நிகழ்ச்சி அரியத்தின் மனத்திரையில் படமாக ஓடிக் கொண்டிருக்கிறது. 'எப்படியான ஓர் கீழ்த்தரமான உணர்ச்சியிருந்தால் — இப்படி ரத்தவெள்ளத்திலிருக்கும் ஒரு ஜீவனை உதாசீனமாகக் கடந்து விட்டுச் செல்லமுடி

யும். ராசதுரையிடம் மட்டுந்தானு இந்த மனநிலை. பொது வாக எல்லோரிடமுந்தான்.'

'அப்படியான ஒரு சூழலுக்குள் அல்லவா இன்று நான் ஒரு பிரச்சினைப் பொருளாகி விட்டேன். என் பெற்றோ ரைச் சமாளித்து விட்டாலும் இந்தச் சமூகத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்.'

கல்லோயா ஸ்டேசன் வந்ததும் ஒரு கோப்பி அடிக்க வேணும் என்று நினைத்துக் கொண்டு, கால்களை நீட்டி நெட்டி முறித்துக் கொண்டான்.

# பதினொன்று

திடீரென்று கற்கள் வந்து ஜன்னல் பலகைகளைத் தாக்கும் சத்தம் கேட்கிறது. பக்கத்து கொம்பாட்மெண்டுக்குள் அமைதியின்மை உருவாகிறது. அதிர்ச்சியடைந்த சிலரின் அறம்புறமான ஓட்டம். என்ன நடந்தது ....... என்பதை அறியத் துடிக்கும் ஏக்கம்......... குறட்டை விட்டவர்கள் அதை நிறுத்திவிட்டு இருக்கைகளில் சரியாக குந்திக்கொள்கிறார்கள்.

சில நாட்களாக நாடு முழுவதையும் ஒரு கலக்குக் கலக்கி......... சிறிது சிறிதாக ஓய்ந்துவிட்டிருந்த ஒரு நிகழ்ச்சியின் ஞாபகம்! ... அங்கிருந்த எல்லோரினதும் மனங்களிலும் ஏதோ சீர்கேடான ஒன்று நடக்கப் போகிறது என்ற பயத்தை உண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

பத்துப் பன்னிரண்டு கற்கள் இருளிலிருந்து வந்து ரயில் ஜன்னல்களைத் தாக்கியது உண்மைதான். அதனால் உண்டான கலவரந்தான் இவ்வளவும். பக்கத்திலிருந்த சித்திரவேலு மாஸ்ரர் தன் மனைவியிடம் ஏதோ கூறிவிட்டு அரியத்தின் பக்கமாகத் திரும்புகிறார்.

''கையில கழுத்தில போட்டிருக்கிறதையெல்லாம் கழட்டி பைக்கற்றுக்குள்ள வையுங்கோ, ஏதும் நடந்தா லும் வீண் நஷ்டம்''.........

சித்திரவேலுவின் மனைவி தன் கழுத்திலிருந்த அட்டியலைக் கழட்டி இடுப்புச் சேலைக்குள் சொருகிக் கொள்கிறாள். மொனிக்காவும் தான் போட்டிருந்த சங்கிலியை தலைக்கு மேலால் கழற்றி கையில் வைத்துக்கொண்டிருந்தாள். அரியத்திற்கு எல்லாம் புதினமாகவே இருக்கிறது. ஆனால் இவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது என்பதை அடுத்த நிமிடத்தில் புரிந்துகொண்டு மனந் தெளிகிறான் அவன். ஐந்து நிமிடங்களாக உருப்பெற்றிருந்த கலவர நிலை இப்போது சற்று ஓய்ந்தது போலிருந்தது. நடந்தது என்ன, இனி நடக்கப் போவது என்ன......... என்பதை அறிந்து கொள்ளும் நோக்குடன் சித்திரவேலு மாஸ்டர் எழுந்து செல்கிறார். அரியமும் அவரைப் பின் தொடர்கிறான்.

''என்ன நடந்தது.''

''ஆ......... ஆரோ ரெயிலுக்கு கல் எறிஞ்சவங்கள். ஜன்னலோரத்தோடை இருந்த ஒரு பொடியனுக்கு நெற்றியில் காயம் பட்டுட்டுது. சேகுவாராவாத்தான் இருக்க வேனும் எண்டு கதைக்கிறாங்கள். எதுக்கும் கல்லோயாவுக்கு போகுமட்டும் கதவை மூடிக்கொண்டு இருங்கோ.'

''ஆரையும் பிடிச்சதாமே''

''றெயினே நிக்கேல்லை, பேந்தெங்க ஆக்களை பிடிக்கிறது......... அதுவும் காட்டுக்குள்ள நிண்டு கல்லெறியிறவங்களை எப்பிடிப் பிடிக்கிறது.

அதுவரை கிடைத்த விசயதானம் போதாது என்பதற்கு சித்திரவேலுவின் முகத்தில் படர்ந்திருந்த திருப்தி

யின்மை சாட்சி கூறியது. அங்கிருந்தவரிடம் ''என்ன நடந்தது'' ''என்ன நடந்தது'' என்று கேட்டுக் கொண்டே வந்தார். அவர்களும் அவரது திருப்திக்காகவும், தங்களுடைய திருப்திக்காகவும்—கல் எறியப்பட்ட சம்பவத்திற்கு கால், கை தலையெல்லாம் ஒட்ட வைத்துக் கூறினார்கள்.

''சரி சரி, வாங்க போவம்''...வெறுப்பின் சாயலோடு அரியம் கூறிவிட்டு முன்னே நடந்தான். இருவரும் வந்து தத்தம் இருக்கைகளில் அமர்கிறார்கள். அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்பதை அறியும் ஆவலோடு அவர்களைப் பார்த்தனர் மனைவியர்கள்.

''சீ...சீ முந்தியப் போல் பயமில்லாமப் பிரயாணம் செய்யேலாது போல இருக்கு, போற போக்கைப் பார்த்தா எந்த நேரத்தில என்ன நடக்கும் எண்டு சொல்லேலாம அல்லோ இருக்குது''... சலித்துக் கொண்டார், சித்திரவேலு.

''மாஸ்டர், என்ன நடக்கும் எண்டதைப் பற்றி சிந்திக்காம—இதெல்லாம் ஏன் நடக்குது, அதை நடக்காமச் செய்யிறதுக்கு என்ன செய்ய வேணும் எண்டு சிந்திக்கிறது தான் நல்லதெண்டு எனக்குப் படுகுது''.. என்று சொல்லிக் கொண்டே மேலும் தொடர்ந்தான் அரியம். ''நான் நினைக்கிறன் இதெல்லாம் படிச்சுப் போட்டு வேலையில்லாமல் திரியிற பொடியளின்ர – எதிர்காலம் என்ன மாதிரி அமையப் போகிறதோ எண்ட பயத்தால உண்டானது தான் எண்டு... ஒரு வேளை இளம் பிராயத்தினருடைய அனுபவமின்மையை மூலாதாரமாக வைத்துக் கொண்டு அவர்களைப் பகடைக் காய்களாக்கி அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் சில அரசியல்வாதிகளுடைய ராஜதந்திரமாகவுமிருக்கலாம். அல்லது—மற்றைய நாடுகளில் நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கிற ஆயுதப் புரட்சிகளைக் கேட்டு, அறிந்து, வாசித்து — அதனால் உருப் பெறுகிற சித்தாந்த அறிவின் பாற்பட்டு செய்யப்படுகிற

செயல்களாகவும் இருக்கலாம். எது எப்படியிருந்தாலும், இவர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுத்திருக்கும் முன் னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எதிர்த்துப் போரா டும் பலம் இவர்களுக்கில்லையென்றே தெரிகிறது. ஆனால், ஒன்று மட்டும் தெரியும்—ஒரு சிலருடைய கையில் மாத்தி ரமே இருக்கும் ஒரு நாட்டின் பொருளாதாரம், அரசியல் ஆதிக்கம், ஆகியவைகள் சகல தரங்களிலும் உள்ள மக்களி டம் பரவலாக்கப்படும் வரை........... இது போன்ற உணர்ச்சிகரமான செயல்கள் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கும். ஆனால், இது இவ்வளவு கெதியில் உதய மாக ஆரம்பிக்கும் என்று நான் நினைத்திருக்கவில்லை. இன் னொன்று........... எங்கட நாட்டில—பிரிஎடுகேசன், பிரி ரைஸ், பிரி மெடிசின்......... இப்படி மனித வாழ்க்கையின் முக்கிய தேவைகள் எல்லாம் அரசாங்கத்தால இலவச மாகத்தான் கிடைக்குது. இந்தச் சலுகைகளெல்லாம் பொதுவாக மற்றைய நாடுகளில் காணமுடியாது. ஆனா, எங்களுக்கு இதெல்லாம் விளங்குதில்லை. நாங்கள் இன்னும் மற்ற நாடுகளைப் பாத்து பெருமையாக் கதைப்பதில்த் தான் இருக்கிறம். மக்களுக்கு முக்கியமாத் தேவைப்படு கிற உணவு, மருந்து கல்வி ஆகியவற்றை இலவசமாகக் குடுக்கிறதென்டால் — ஒரு அரசாங்கம் எவ்வளவு கஷ்டம் படவேண்டும் என்டு உங்களுக்குத் தெரியுமா.

இப்ப இருக்கிற அரசாங்கம்...... ஏதோ தன்னால முடிஞ்சதெல்லாம் செய்து கொண்டிருக்கு. மக்களிடையே இருக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து சமதர்மத்தை ஓங்கச் செய்வதற்கு அது முயற்சி செய்து கொண்டிருக்கிறது. சமதர்மம் இதுவரை நிலவியிருக்காத நாட்டில் — அதை உருவாக்குவதென்றால், முதலில் எவ் வளவு கஷ்டம் இருக்கும் என்பதை நாமெல்லோரும் உணர வேண்டும்''.........

இதுவரை நேரமும் பேசிக் கொண்டிருந்த அரியத்தை இடைமறித்தார் சித்திரவேலு மாஸ்ரர்.

''நீங்க சொல்றது சரிதான் ...... ஆனா, நீங்க ஒன்றைக் கவனிக்கேல்லே, நாட்டின் பொருளாதாரம் சகல தரமான மக்களிடையேயும் பரவலாக்கப்பட வேண்டும் என்று கருதி — அதை நடைமுறைக்கு கொண்டு வரப்பாடுபடும் இந்த அரசாங்கத்தின் நல்ல நோக்கம் — அதன் அச்சாணிகளாகக் கருதப்படும் நிர்வாகிகளாலேயே சீர்குலைக்கப்படுவதை நீங்கள் கவனிக்கவில்லையா? உதாரணத்திற்கு வேலை இல்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கு முகமாக அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் வழிமுறையைப் பாருங்க...... நூறு ஆசிரியர்களை எடுக்கப் போவதாகச் சொல்லி விளம்பரப்படுத்துகிறார்கள். பத்தாயிரம் பேர் அவ் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். அந்தப் பத்தாயிரம் பேரில் நூறு பேர் தெரிவு செய்யப்படுகின்றார்கள். ஆனால் அந்தத் தெரிவு திறமையின் அடிப்படையில் நடைபெறுகிறதா? ஏழு கிறடிற்றும், ஒருடிஸ்ரிஸ்சனும் வைத்திருக்கும் ஒரு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படாமல் — ஒரு கிறடிற்றோ அல்லது அது ஒன்றுமில்லாமலோ இருக்கும் ஒருவர் தெரிவு செய்யப்படுகின்றார். இது எந்த அடிப்படையில் நடைபெறுகிறது. அரசியல் செல்வாக்கு, பணபலம், ஆகியவைதான் தகுதியில்லாத ஒருவர் எடுபட வழிசெய்கிறது இந்நிலை தொடர்ந்து நீடிப்பதால் — பிள்ளைகள் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் எதை நம்பித் தம் கல்வியைக் கற்க முனைவது. பிள்ளைகளுக்குத் தம் எதிர்காலத்தை எண்ணிப் பார்ப்பதற்கே பயமாகவிருக்கிறது. இவ்வகையான ஊழல்கள் மலிந்திருக்கும் வரை—ஒரு அரசாங்கம் எவ்வளவுதான் சமதர்மக் கொள்கைகள் பேசினாலும் சரி......... அது வெறும் பேச்சாகத்தான் இருக்கும்.''

''இதுபோன்ற விடயங்கள் அதில் சம்பந்தப்படாதவருக்கு சிறிய விடயமாகத் தோன்றலாம். சம்பந்தப்பட்டவர்களுக்கு எவ்வளவு மனவுளைச்சலைத் தோற்றுவிக்கும். சத்தியம் பேசுகிறவன் — சத்தியவந்தனாக இருக்க வேண்

டும். அவனே பொய் பேசி களவெடுத்துக் கொண்டு, அதே நேரத்தில் சத்தியம் பற்றி உரக்கச் சப்தம் போடுவது எப்படியிருக்குமோ அது போலத்தான் இருக்கிறது இன்றைய நிலைமை......... அது மாறும் வரை இது போன்ற கல்வெறிகள் ......... நிற்கும் என நான் நம்பவில்லை.''

பேசி முடித்த மாஸ்டர் களைத்தவர் போலவும் உணர்ச்சிவசப்பட்டவர் போலவும் காணப்பட்டார். அவருடைய கூற்றுக்கு ஏதாவது பதிலாகச் சொல்லி விட வேண்டுமென்று மனம் விரும்பிக்கொண்டாலும், எதைச் சொல்லவேண்டுமெனத் தோன்றவில்லை அரியத்திற்கு.

''ஏன் மாஸ்டர் உங்கட ஆருக்கும் வேலை கிடைக்காமப் போனதோ'' ''ஓம் பாருங்கோ, என்ர சிஸ்ரர்......... ஆறு கிறடிற்றோட ஜீ சீ ஈ பாஸ் பண்ணியது. அட்வான்ஸ் லெவலிலயும் மூண்டு பார்டம் பாஸ்''

''ஏன் ஆரையும் எம்பீ மாரைப் பிடிச்சுப் பாக்கிறது தானே''. ''ஆ......... இந்தா இப்பதான் வழிக்கு வந்திங்க......... எம்பீமாரைப் பிடிச்சாத்தான் இப்ப வேலை கிடைக்கும் என்ன? நான் ஒருவரையும் பிடிக்கேல்லை, பிடிக்கவும் விரும்பேல்லை......... அப்பிடியே பிடிச்சாலும், அவனும் என்ன செய்யிறது ......... ஒரு காலியிடம் இருக்கேக்குள்ள ஒன்பது பேர் போய் அவனைப் பிடிச்சா......... அவனும் ஆருக்கெண்டு எடுத்துக் குடுக்கிறது.''

வெளியே மழை சிறிது சிறிதாக தூற ஆரம்பித்திருக்க வேண்டும். துளிகள்—கண்ணாடி ஜன்னலில் ஒட்டிப் படிந்து வழிகிறது. அரியம் கண்ணாடித் தரையில் நெற்றியை அழுத்தி வெளியே ஊடுருவிப் பார்க்கிறான். ஒன்றுமே தெரியவில்லை, ஒரே இருட்டு.

நித்திரையும் குழம்பிப் போன நிலை. ஏதாவது கதைத்துக் கொண்டிருந்தால் தான் நேரம் போகும் போலிருக்கிறது. மூக்கை உறிஞ்சிக் கொண்ட மாஸ்ரர் திரும்பவும்

தொடங்குகிறார். அவருக்கும் வாயைக் கிண்டி ஏதாவது கதைப்பது சுவாரஷ்யமான விசயமாகத்தான் தெரிகிறது.

''இப்ப கவுண்மெண்ட் ஜொப்ஸ்செல்லாம் முதலில சிங்கள ஆக்களுக்கு......... அடுத்தது முஸ்லிம்களுக்கு...... பேந்துதான் மிச்சமிருக்கிறது எங்களுக்கு......... இப்பிடியே போனா எங்கட ஆக்கள் கவண்மேண்ட் சேவிசில இல்லாமப் போயிருவினம்.'' ''இல்லை மாஸ்ரர், இது பிழையான கதை''. முந்தி எங்கட ஆக்கள் தான் அரசாங்க உத்தி யோகத்தில எங்க பாத்தாலும் இருந்தவையள். வெளி நாட்டுக் காரன்களின்ரை கையில எங்கட நாடு அடிமைப் பட்டுக் கிடக்கேக்குள்ள — எங்கட ஆக்கள் தான் தங்கட சொந்த நலன்களைக் கருதி அவங்களோட அனுசரிச்சுப் போகக் கூடிய நிலையில இருந்தினம். அதன பலனாக எல்லா அரசாங்க உத்தியோகத்தையும் எங்கட ஆக்கள் தான் அந்த நேரத்தில பெறக்கூடியதாயிருந்தது. அரசாங்க உத் தியோகத்தில எங்க பாத்தாலும் எங்கட ஆக்கள் இருந்த தால மற்றைய சமூகத்தார் முன்னுக்கு வரமுடியாமப் போச்சு.

''ஆ ....... அப்படிச் சொல்லப்படாது. எங்கட ஆக் கள் கஷ்டப்பட்டுப் படிச்சு முன்னுக்கு வந்தவங்கள். அவங் கட முயற்சிதான் அப்பிடி வாறதுக்கு காரணமாயிருந்தது. மற்றவையள் முயற்சியில்லாம இருந்தினம். அதால முன் னுக்கு வரேல்லை. அதை வைச்சுக்கொண்டு, எங்கட ஆக் கள் தான் அவையளுக்கு முட்டுக்கட்டை போட்டினம் எண்டு சொல்லேலாது.''

''முட்டுக்கட்டை போட்டினம் எண்டு நான் சொல்ற துக்குக் காரணம் என்னண்டா, அந்தக் காலத்தில வெளி நாட்டிலயிருந்து வந்த பாதர்மார் எல்லாம் தமிழ் பகுதி களிலதான் பழந்திண்டு கொட்டை போடக் கூடிய மாதிரி இருந்திருக்கிறது. அவங்களும் — கோயிலையும் கட்டி அந் தப் போர்வையளுக்குக் கீழ அரசியல் அதிகாரம், பொரு

ளாதாரச் சுரண்டல் போன்ற தம் சுயநலக் கொள்கையினை செயலாக்கிச்சினம். அவங்கட சுரண்டல் கொள்கைகளுக்கு தமிழ் மக்களிடமிருந்து பெரிய அளவில் எதிர்ப்பு இருக்க வில்லை. அதால, தங்களுக்கு அனுகூலமாயிருந்த தமிழர் களுக்கு நல்லா உத்தியோகம் குடுத்து வைச்சிருந்தாங்கள். இண்டைக்கு நாடு சுதந்திரமடைஞ்சு போச்சு. கல்வி எல்லா மக்களிடையேயும் பரவலாக்கப்பட்டு விட்டது. அவங்களும் முன்னுக்கு வரத் துவங்கிற்றுங்க. அதை நாங்க வரவேற்கத்தான் வேணும். ஆனா, திறமையான ஒருவன் இருக்கும்போது, திறமையில்லாத இன்னொருவன் தெரிவு செய்யப்படுவது துக்கமான விசயந்தான். அந்த ஊழல் ஒழிக்கப்படத்தான் வேணும்.

அரியம் நிறுத்தினன்.

சித்திரவேலு மாஸ்ரருக்கு அரியம் பேசிய எத்தனையோ விசயங்களில் உடன்பாடில்லை. அது அவருடைய முகத்தி லேயே எழுதி ஒட்டியிருந்தது.

தூரத்திலே, ஜன்னலினூடே, அங்கொன்றும் இங் கொன்றுமாக வெளிச்சம் தெரிகிறது. கல்லோயா அண் மித்துவிட்டதென்பதை ரயிலின் வேகம் குறைந்து விட்ட நிலை எடுத்துக் காட்டியது. ஜன்னல் சட்டர்ஸ்சை மேலே இழுத்து விட்டு வெளியே எட்டிப் பார்க்கிறான் அரியம்.

'கல்லோயாவில ஒரு கோப்பி குடிச்சுப் போட்டு சிக ரட் ஒண்டும் பத்த வைக்க வேணும்'........ சில மணி நேர மாக மறைந்து விட்டிருந்த சிகரட் பிடிக்கும் ஆசை கல் லோயா ஸ்டேசன் கண்மணைக் கண்டதும் திரும்ப உருவா கிக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் சற்று அதிகமா கவே சிகரட்டுகளை ஊதியிருந்தான் அரியம். தொண்டை எல்லாம் கரகரவென ஒரு மந்த நிலை. உண்மையில் சிகரட் பிடிக்க வேண்டுமென்று ஆசை எழவில்லை. ஆசையில்லா விட்டால் அது வேறென்ன? அதை அடிமைப்புத்தி அல்லது

பலவீனம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் கெட்ட பழக்கத்தைப் பழகிக் கொண்டதே கொழும்பிற்கு வந்த பின்னர்தான்.

தந்தை முத்தரிடம் இல்லாத எல்லாப் பழக்கங்களுமே அரியத்தை இப்போது கெட்டியாகப் பிடித்துக் கொண்டி ருக்கின்றன. திருகோணமலையில் இருந்த போது சிகரட் டின் மீதோ, குடியின் மீதோ அவனுக்குக் கவர்ச்சியிருந்த தில்லையென்று சொல்ல முடியாது. கவர்ச்சியிருக்கிறது என்று வெளியில் தெரிந்து விட்டால் — தகப்பனிடத்தில் கன்னத்தில் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும். கொழும் பில் யார் இருக்கிறார்கள் கன்னத்தில் கொடுக்க. சும்மா படத்துக்குப் போகேக்குள்ள மட்டும்' என்று ஒன்றிரண்டு போர்ஏசஸ் பற்றத் தொடங்கியவன் — இன்றைக்குப் பிழையில்லை நல்ல முன்னேற்றம். படத்திற்குப் போனால் மட்டும் சிகரட் புகைக்கிறது என்ற பழக்கம், சாப்பிட்ட பின்னர் ஒன்றெனவும், ரீ குடித்த பின்னர் ஒன்றெனவும், படுக்கப் போகுமுன்னர் ஒன்றெனவுமாக எண்ணிக்கையில் கூடி — சடைத்து வளர்ந்திருந்தது. அரியத்திற்கு சிகரட் டைப்பற்றி நல்ல அபிப்பிராயமேயில்லை. நல்ல அபிப்பிரா யம் இல்லாவிட்டால் ஏன் புகைக்கிறான்? சிகரட் குடி— மனிதனுக்கு நிரம்பத் தொல்லைகளைக் கூட்டி, தேக ஆற் றலைக் குறைத்துக் கழித்து, நோயைப் பெருக்கி மன ஆற் றலை வருத்துச் சிதைத்துக் குறைத்து விடும் என்பதை அறிந்திருக்கிறான் அவன். இருந்தாலும் அதிலே ஒரு போலிக் கவர்ச்சி.

'சீ இந்தச் சனியனைக் கெதில விட்டிறவேணும். இடைக் கிடை இருமலையும் கொண்டு வந்திருது. பாப்பம் கல் லோயா கண்ரீனில சிகரட் வாங்காம விடுவம். வாங்கி னாத்தானே பத்தவேணும், பத்தினாத்தானே இருமல் வரும். பாப்பம்...... இண்டைக்குப் பத்திறேல்லை'......

தொண்டைக் கறேலை இருமித் துப்பி விடுகிருன் அரியம். கல்லோயா கன்ரீனுக்கு முன்ஞல் அந்தப் பெட்டி வந்து நிற்கிறது. மாஸ்ரரும் இறங்கிப் போகிருர். அவருக்குப் பின்ஞல் அரியம் இறங்கி பிளாட்போமில் நின்று கொண்டே மொனிக்காவிடம் 'கோப்பி வேணுமா' என்று கேட்கிருன்.

''இல்லே எனக்கு நித்திரை வர்ற மாதிரியிருக்கு. கோப்பி குடிச்சா அது முறிஞ்சிடும்''... ........ என்ருள் மொனிக்கா.

''எனக்கு முறிஞ்ச நித்திரை கோப்பி ஒண்டு அடிச்சாத்தான் திரும்பி வரும் போல கிடக்கு'' என்று சொல்லிக் கொண்டே கன்ரீன் பக்கம் திரும்பி நடக்கிருன் அரியம். சித்திரவேலு மாஸ்ரர் இரண்டு மட்டன் ரோல்கள் எடுத்து ஒன்றைக் கடித்துக் கொண்டு மற்றதை அரியத்திடம் நீட்டுகிருர்.

''கோப்பி தெக்கத் தாண்ட''

கல்லோயா கன்ரீன் கணக்கு வழக்குப் பார்ப்பதில் பெயர்போன கன்ரீஞகத்தான் இருக்க வேண்டும். அங்கு நிறைந்திருந்த பிரயாணிகள்—இரண்டு மட்டன் ரோல்கள் ஒரு வாழைப்பழம், ஒரு ரீ ஒரு வடை என்று பலரகமான வைகளே உள்ளுக்குள் அடைத்து விட்டு ஒரு ரீக்கும் வடைக்கும் மட்டும் காசு கொடுத்துவிட்டு நழுவிக் கொண்டிருந்தனர். அரியத்தின் மனம் சலனத்தின் வழியில் சிந்திக்கிறது. நாமும் இரண்டு மூன்று மட்டன் ரோலே, வாழைப்பழத்தை அடிச்சுப் போட்டு — ஒரு ரீக்குக் காசைக் குடுத்துப் போட்டுப் போஞ என்ன ... .... சீ..... சீ .... இண்ட காசு குடுக்காம விடுகிறதா.. ..... பேந்து வயித்துக்குள்ள குத்தும்!.......பயம் சலனத்தை வென்று வீழ்த்திவிடுகிறது.

''அப்பிட்ட போர் ஏசஸ் தெக்கத் தெண்ட''... ... இரண்டு சிகரட்டுகளை வாங்கி கணக்கை முடித்துக் கொண்டு வெளியே வருகிறார்கள். சித்திரவேலு மாஸ்ரரின் நெருப்பில் சிகரெட் பற்றிக் கொள்கிறான் அரியம்.

எவ்வளவு உறுதியில்லாத மனம். இன்றைக்கு சிகரட் வாங்க மாடடேன் என்று நினைத்திருந்த அரியம்—சிகரட்டை இழுத்து ஊதிக்கொண்டிருந்தான். அவன் எதில் தான் நினைத்த மாதிரிச் செய்திருக்கிறான். சரி ..... சிகரட் குடிதான் சின்ன விசயம் என்று விட்டுவிடலாம். கல்யாணம்? வாழ்க்கையின் முக்காற் பகுதியை நிர்ணயிக்கின்ற முக்கிய நிகழ்ச்சியல்லவா அது. அதைக் கூட ..... முன்னர் நினைத்து வைத்தது போலவா செய்திருக்கிறான்.........ம் ......ம்... ..

# பதின்மூன்று

கல்லோயா ஸ்டேசனில் திருகோணமலைப் பெட்டிகள் கழட்டப்பட்டு விட்டன. மட்டக்களப்பு ரயில் புறப்பட்டுப்போய் நாற்பத்தைந்து நிமிடங்களாகிவிட்டன. இன்னும்—திருகோணமலை ரயில் புறப்படவில்லை. திருகோணமலைப் பிரயாணிகளுக்கு கல்லோயா ஸ்டேசனில் காத்து நிற்க வேண்டுமென்ற சாபக்கேடு இருக்கிறது போலிருக்கிறது. சன்டிங் எல்லாம் முற்றுப் பெற்று எஞ்சின் வந்து கொழுவி — பத்து நிமிடங்களாகி விட்டன. இன்னும் என்ன தாமதம்.

''எத்தினை மணிக்காம் வெளிக்கிடும்.''.... அரியம் கேட்டான். ''செடூல்ட் டைம் மூன்று இருபது .... வேணுமெண்டா பீத்தி வெளிக்கிடுமேயொழிய மூந்தி வெளிக்கிடாது. இஞ்ச பாரும் மட்டக்கிளப்பிலயிருந்து வாற திருகோணமலைப் பெட்டியை...... அந்தா கடைசியில கொழுவியிருக்கிறான்...... சரியா புறுக் கூடு கணக்காயிக்கு.'' இந்த எம்பீமார் என்ன செய்து முறிக்கினம், எவ்வளவு நாளெண்டு இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கிறது.

''அவையள் ஏனப்பா அதைக் கவனிக்கப் போருங்கள். பெஸ்ட் கிளாஸ் பேத்தில போருங்கள், அவையளுக்கு இந்தக் கஷ்டம் எங்க விளக்கப் போகுது......ரீச்சர் மாரர ருன்ஸ்பர் செய்யத்தான் ஆக்கள்.''

சினத்தைக் கொட்டிக் கொள்கிருர்கள் அரியமும், சித்திரவேலுவும்.

அப்பாடி..................ரயில் ஒரு விதமாக மூன்றரை மணிக்கு புறப்படத் தொடங்கியது.

இப்போது நெரிசல் சற்றே கூடிவிட்டது. மட்டக்களப்பு புருப்பெட்டியில் வந்த சிலரும் அதற்குள் ஏறிக்கொண்டதன் விளைவாகத்தான் இருக்க வேண்டும் அந்த நெரிசல்.

அரியம், ஜன்னலோரமாய் அமர்ந்திருக்கிருன். மொனிக்கா ஒரு தரம் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொள்கிருள். அரியம் தன் முன்னேயிருக்கும் சித்திரவேலு மாஸ்டரின் மனைவியையும் மொனிக்காவையும் ஒரு தரம் பார்த்து அவர்களுடைய உடையில் உள்ள வித்தியாசங்களை மனதில் எடை போட்டுக் கொள்கிருன்.

'என்ன இருந்தாலும், மொனிக்கா என்னோட சமாளிச்சு வாழக் கூடியவள். கொழும்பில இருந்ததால, தெரியாத...... உடுப்பெல்லாம் கொஞ்சம் இப்படித்தான் இருக்கும் ... போகப் போகச் சரியாப் போகும்.'

''ம்.... ஆவ்.....ஆவ்......ஆ ...... .''பெரிய கொட்டாவியொன்று உருவாகி அவனது வாயைப் பிளக்க வைத்த பெருமையோடு மெதுவாக ஓய்கிறது.

ம்.....இண்டைக்கு திங்கட்கிழமை.....பத்தாந் திகதி ......இல்லை இல்லை பதினோராந் திகதி..... இப்பவே மூண்டரை மணியாப் போச்சு. பதின்மூன்றாந் திகதி ....சித்திரை வருசம் .....அண்டைக்கு ராவைக்கே கொழும்புக்கு வெளிக்கிட்டிர வேணும். வேலைக்கு வந்து ஆறு மாசந் தானே ஆகுது. அதுக்குள்ள லீவு எப்பிடி எடுக்கிறது. பெஸ்ரிவல் அட்வான்ஸ் எடுத்து ஐயா அம்மா தங்கச்சிக்கு உடுப்பு எடுத்து வைச்சது எவ்வளவு நல்லதாப் போச்சு. வருசப் பிறப்புக்கு வெறுங் கையோட போகேலுமா''

நாளைக்கு ராவைக்கு, இவன் சிவபாதத்தின்ர கலியாணத்துக்கும் போக வேணும். ஏழு மணிக்குத்தான் தாலி கட்டு எண்டு எழுதினவன். போகாட்டி .....சா ....அவன்ர கல்யாணத்துக்குப் போகாம விடுறதா, அதுவும் எனக்கு சிநேகிதன் எண்டா அவன் ஒருவன் தானே.

பேந்து அக்காவிட வீட்டையும் ஒருக்காப் போக வேணும். அவன் மருமகனுக்கு ஒரு சட்டையும் கால்ச்சட்டையும் வாங்கிக் கொண்டு போக வேணும். அங்க வாங்கலாந் தானே.

கோணேச கோயில், கன்னியா, ஹாபர், டொக்யாட், பீச்... எல்லாம் கொண்டு போய்க் காட்ட வேணும் மொனிக்காவுக்கு.

போகேக்குள்ள தங்கச்சியையும் கூட்டிக் கொண்டு போகலாம்' ... ஒரு தயிர் முட்டி வாங்கினா நல்லம் போல கிடக்கு. கந்தளாய் ஸ்டேசனில வாங்குவம்...... ரெண்டு முட்டி வாங்கினா வருசப் பிறப்பு நேரத்தில உதவும்'

அரியத்திற்கு—திருகோணமலை கிட்டி வர வர வீட்டு எண்ணம் அதிகரிக்கிறது. ஆறு மாதத்திற்குப் பின்னர் ஊருக்குப் போவதால் சின்னக் கிளுகிளுப்பு! அடுத்த நிமிடமே பெரிய ஒரு பிரச்சினையை எப்படிச் சமாளிக்கப்

போகிறேன் என்ற நினைப்பு வந்து கிளுகிளுப்பைப அடித்து ஒடுக்கி விடுகிறது. இதயத்தின் அடித்தளத்தில் இனம்புரியாத ஒரு தயக்கம். கொழும்பிற்கே திரும்பிப் போய் விடுவதே பெட்டர் போல இருக்கிறது. தந்தையின் கண்ணியம் மிகுந்த முகத்தை, தாயின் அன்பு நிறைந்த பார்வையை, தங்கையின், எதிர்காலத்தை எண்ணியெண்ணி ஏங்கிக்கொண்டிருக்கும் இதயத்தை எப்படி முகம் கொடுத்துப் பார்ப்பது.

கொழும்பிலிருந்து யோசித்துப் பார்க்கும்பொழுது 'ஒரு மாதிரி சமாளிச்சுப் போடலாம்' என்று தோன்றிய அது...... திருகோணமலை நெருங்க நெருங்க.... பெருத்து வளர்ந்து சமாளிப்பது அவ்வளவு சுலபமல்ல என்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தது.

ரயில் கந்தளாயை நெருங்கிக் கொண்டிருந்தது. தயிர் முட்டி கொண்டு திரிபவர்கள் பிளாட்போமில் நிற்கிறார்களா என எட்டிப் பார்க்கிறான் அரியம். தூரத்தில் ஒருவன் நிற்பது போலத் தெரிகிறது. ரயில் நின்றவுடன் "முதவாப்பு கிரி, முதவாப்பு கிரி" என்று அந்த மாதிரி வியாபாரிகளுக்கென்றேயுள்ள இயல்பான சத்தத்தில் கத்திக் கொண்டு வருகிறான்.

"கேயத எக்கக்"

"துனயி பனகக் மாத்தையா"

"ஒரு முட்டி எவ்வளவாம்"..........சித்திரவேலு அரியத்திடம் கேட்கிறான்.

"மூண்டு அம்பதாம்"

"என்ன இந்த விலை சொல்றான்" நான் போன முறை வரேக்குள்ள இரண்டரைக்கல்லோ வாங்கினனான். அது தயிரும் நல்லது. "இது எப்பிடியிருக்கோ தெரியேல்லை, குறைச்சுக் கேட்டுப் பாருங்கோவன்."

''மல்லி அடு நத்த''

''உறரி ... உறரி ..... துனட கண்ட.''

''மூன்று ரூபாவுக்குத் தாருனும். ரெண்டு வாங்கட்டா'' எனக் கேட்கிருன் அரியம். மொனிக்கா தலையை ஆட்டுகிருள். பத்து ரூபாய்த் தாளை அவனிடம் கொடுத்து விட்டு தயிர் முட்டிகளை வாங்கிக் கொள்கிருன் அரியம்.

''பொடி சல்லி நத்த மாத்தயா ........ மாறு கரல என்னங் ..... உறரியே ..'' என்று சொல்லிவிட்டு நகர்கிருன் தயிர் வியாபாரி.

''என்ன மிச்சக் காசு வாங்கினீங்களா''

''மாத்திக் கொண்டு வாறன் எண்டு போயிருக்கிருன்.''

''இதேன் விட்டனீங்க, மிச்சக் காசை எடுத்துக் கொண்டு ஓடினு அவனை எப்படிப் பிடிக்கிறது. இவங்களை ஒரு சதத்துக்கும் நம்பேலாது.

தயிரை மூடியிருந்த ஓலையை விலக்கி முகர்ந்து பார்க்கிருர் சித்திரவேலு. ''ம் .....பிழையில்லை போலதான் கிடக்கு'' ...... எங்க பொடியனைக் காணேல்லை. ரெயிலும் வெளிக்கிடப்போகுது.'' மிச்சக் காசை பொடியன் கொண்டு போய் விடுவானே என்ற பயம் அரியத்திடமும் வரத் தொடங்கியது. வெளியே இறங்கி பிளாற்போமில் நின்று தயிர் வியாபாரியைத் தேடுகிருன். ஸ்டேசன் மாஸ்டர் ஊதி விட்டார் விசிலை. ''நாலு ரூபாய் துலைஞ்சு போச்சு, பன்றி, நம்பினதுக்கு துரோகஞ் செய்து போட்டான்''.

மனத்திற்குள் சினந்து வைது கொண்டே அவதி அவதியாக ஏறிக் கொள்கிருன் அரியம். ரயில் நகரத் தொடங்கியது.

''பாத்தீங்களா, நான் சொன்னன், இவங்களை ஒரு ஐஞ்சு சதத்திற்கும் நம்பேலாது சிங்களக் காடையள்''... என்ற சித்திரவேலு திடீரென நாக்கைக் கடித்துக் கொண்டார். அரியத்தின் மனைவி சிங்களத்தி என்ற ஞாபகம் ஊடுருவியது.

ஜன்னலுக்கு வெளியால் ஒரு கை நீண்டு வருகிறது.

''ஆ, மென்ன மாத்தயா, இத்துறு சல்லி ...உறரிக மாத்தயா.''... மிச்சக் காசைத் தந்து விட்டுத் தன் வழியே போகிறான் அந்தத் தயிர்ப்பையன்.

ஏழைகள் என்றாலே ஏளனமாக நினைக்கத் தோன்றியதை எண்ணி வெட்கப்பட்டுக் கொள்கிறது அரியத்தின் மனம். தயிர் முட்டிகளை இருக்கைக்கடியில் தள்ளிவிட்டு கொண்டு சூட்கேசும் பத்திரமாக இருக்கிறதா எனப் பார்த்துக் கொள்கிறான்.

''இன்னும் ஒரு மணித்தியால ஓட்டம், என்ன......''

''ஓம், ஓம்......சீனன்வாடியில அரைவாசிச் சனம் இறங்கிடுவினம்''

# பதினைந்து

சீனன்வாடி நெருங்கிக் கொண்டிருந்தது. சிலர் நித்திரையால் எழுந்து — இனி வாறது எந்த ஸ்டேசன் என்று கேட்டு, சீனன்வாடி என்றதும் — முகத்தைத் துடைத்து, முகம் கழுவாமலே பவுடர் போட்டுக் கொண்டனர். சிலர் எழுந்து சென்று ஒன்றுக்கு இருந்து, முகம் கழுவிக்கொண்டு வந்தார்கள். நித்திரை செய்யும் வசதிக்காக சாரத்துக்குள் பூந்து கொண்டவர்கள்—திரும்பவும் காற்சட்டைக்குள் பூந்து கொண்டார்கள். வீட்டுக்குத்தானே போகப் போறம், அதுக்குள்ள ஒரு ஸ்டைல் எதுக்கு என நினைத்தவர்கள் — கோழித்தூக்கம் போட்டுக் கொண்டிருந்தார்கள், சித்திரவேலு மாஸ்ரர் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தார். அவரது மனைவி பெரிய பேஞ்சீப்பால் தலையிழுத்துக் கொண்டிருக்கிறாள்.

அரியம் பாத்ரூமிற்குள் போனான். காற்சட்டைப் பைக்கற்றுக்குள் சீப்பு இருக்கிறதா எனத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வீட்டுக்குள்ளிருந்தாலும், அரை மணி நேரத்திற்கொரு முறை தலையை வாரிக் கொள்ளும் அரிகண்டப் பழக்கம் அவனுக்கு. அடர்த்தியில்லாத மயிர். சின்னக்காற்று அடித்தாற்கூட கலைந்து விடுகிறது. கலைந்து விட்டால் கஷ்டப்பட்டு மறைக்கப்பட்ட இள வழுக்கை வெளியே தெரியத் தொடங்கி விடும். அதற்காகத்தான் இந்த இடைவிடாத தலையிழுப்பு.

முகத்தைக் கழுவிக் கொண்டு கைலேஞ்சியையும் ஈரமாக்கிக் கொண்டு வந்தான் அரியம். மொனிக்கா அதை வாங்கி முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

அரியம் — வாயால் ஆவியை ஒரு தரம் ஊதிப் பார்த்துக் கொண்டான். இரவு மாஸ்ரரோடு தண்ணி அடிச்சது. அதோடு சிகரட் வேறு.......எல்லாமாச் சேர்ந்து ஐயாவுக்கு முன்னால போகேக்குள்ள மணந்து தள்ளப் போகுது.'

ஐயா, இன்னும் நான் கெட்ட பழக்கங்களில்லாத அரிய ரெத்தினம் எண்டுதான் நம்பிக் கொண்டிருப்பார். அவர்ர நம்பிக்கையை ஏன் குலைப்பான்.

உதட்டைத் துடைத்து விட்டுக் கொள்கிறான்.

ரயில் சீனன்வாடியில் நின்று, கொஞ்சம் பாரத்தை இறக்கி விட்டுத் தன் இறுதி நேரப் பயணத்தைத் தொடங்கி விட்டது. நேரம்... ... ஐந்து ஐந்து.

'ரயில் இன்னும் பதினைஞ்சு நிமிசத்திலே திருகோண மலையை அடைந்து விடும். அதுக்குப் பிறகுதானேயிருக்குது எல்லாக் கரைச்சலும்.'

கால்கள் நிலத்தில் இருப்புக் கொள்ளாமல் தவிக்கின்றன. சல உபாதை உண்டாவது போன்ற பிரமை. மனம் பயம்படுகிறது.

,வீட்டை போன உடன எப்பிடி விசயத்தைத் துவக்கிறது. ஏதோ ஒரு இளமை வெறியில பிழை செய்து போட்டன். அதுக்குப் பரிகாரமாகத்தான் கல்யாணத்தையும் பண்ணிக் கொண்டன். கல்யாணத்தைச் செய்யாம விட்டா—என்ர மனச்சாட்சி என்னை சும்மா விட்டிருக்காது. அதெல்லாம் சரிதான்......இப்ப எப்படிச் சமாளிக்கிறது. நாளைக்கு வருசம். இப்ப போய் இந்த விசயத்தைச் சொன்னு—வருசப் பிறப்பு எங்க கொண்டாடப் போகுதுகள். செத்த வீடுதான் கொண்டாடுங்கள்..... ம்......என்ன தர்மசங்கடமப்பா'

தங்கச்சியிட விசயமா உடன் வரச் சொன்னதும் என்னத்துக்கெண்டு தெரியேல்லே..... என்ன நடந்ததோ தெரியேல்லே. பாரதூரமாய் ஏதும் நடந்திருக்குமோ. சாதாரணமா எண்டா ஐயா தந்தி அடிக்க மாட்டார். ஏதும் கரைச்சல் எண்டு இருந்தா... என்ர விசயத்தை எப்பிடிச் சொல்றது. அதுகள் எப்பிடித் தாங்கும். கடவுளே எல்லாம் பெரிய கரச்சலாக் கிடக்கு.'

ரயில் ஊரை நெருங்க நெருங்க பயம் இதயத்தை நெருக்குகிறது.

'சின்னப் பிள்ளையாக இருந்தபோது — தம்பிமுத்து வைத்தியரிடம் வயித்தால போகக் குடிக்கிற எண்ணெயை ஐயா வாங்கித் தருவார். அது மணந்தாலே உயிர் போகும். குடிக்கிறதெண்டா கொல்லக் கொண்டு போற மாதிரி இருக்கும். குடிக்காமல், ஐயா விடமாட்டார். ''ஆ'' எண்டு வாயை நீட்டு, நான் நாக்கில படாம ஊத்தி விடுறன்'' என்று கேட்பார். நான் சொல்லுவன் ...... வேணும் என்ர கையில தாங்க நான் குடிப்பன் என்று. கரண்டியோடு மருந்தை என் கையில தருவார். நான் அதை நிமிடக் கணக்கில் வைத்துக் கொண்டு எச்சிலை விழுங்கி விழுங்கி.........பயந்து கொண்டு நிற்பேன். ''இவனுக்குப் பாக்குவெட்டி போட்டுத்தான் எண்ணெயைப் பருக்க வேணும்'' என்று பயமுறுத்துவார், ஐயா.'

''இல்லை நான் குடிக்கிறன் எண்டுதானே சொல்லுறன்'' என்று சத்தம் போட்டுக் கொண்டு நிற்பேன். கடைசியில்......... ஒரு மாதிரிக் குடித்து, ஓங்காளித்து, சத்தி எடுத்து வயிற்றுல் போகும் படலம் முற்றுப் பெறும். அந்தப் பழைய கதை போலத்தான் இருக்கு இப்ப, இந்தக் கதையும்.'

'மருந்து கைத்தாலும், அதைப் பார்த்துத் தயங்கிக் கொண்டு நிற்காமல் ஒரேயடியாகக் குடித்து விட்டால் விசயம் முடிந்து போய்விடும். தயங்கித் தயங்கி வைத்துக் கொண்டு நின்றேமோ — பின்னர் குடிப்பதென்றால் கரச்சல்தான்.'

'மொனிக்காவைத் திருமணம் செய்து கொண்ட விசயத்தை சொல்வதென்றால்........ ஒரேயடியாக பயப்படா

மல் சொல்லிவிட வேண்டும்; மசுகிக் கொண்டு நின்ருல்... ...வயிற்ருல போக மருந்து குடித்த கதை மாதிரித்தான் போகும். தயக்கம் என்பது எப்பவும் கொஞ்சமாயிருக்க வேண்டும். அது சில வேளைகளில் நன்மையாகவும் இருக்கும். அது கூடிப் போனுல்—பொல்லாப்புத்தான்.'

அரியத்தின் இதயத்திற்குள்ளே பயமும், துணிவும் சண்டையிட்டு—முன்னது பின்னதை மண்டியிட வைத்துக் கொண்டிருந்தது.

''நீங்க எங்க போறியன்''......சித்திரவேலு கேட்டார்.

''ஆர் நாங்களோ......பெருந்தெருவில......அந்த சப் போஸ்ட் ஒப்பீசுக்குப் பக்கத்தில இருக்கிற ஒழுங்கைக்குள்ள''

''நாங்க பெரிய கடைக்குப் போக வேணும்'',ஒரு ரக்சியைப் பிடிச்சிக் கொண்டு போவம், உங்களை இறக்கிப் போட்டு நாங்க அங்கால போறம்.''

மணி சரியாக ஐந்து ஐம்பத்தெட்டு......... ''ஆ........ அந்தா தெரியுது ஸ்டேசன்.'' ரயில் அலுத்துக் களைத்து நிற்கிறது. சனங்கள் உடைமைகளைத் தூக்கிக் கொண்டு அந்தரப்பட்டு, இடிபட்டு, இறங்கிக் கொள்கின்றனர். அது தான் ஊர் வந்து விட்டதே..... ஏன் இத்தனை அவசரம்.

அரியரெத்தினம், சித்திரவேலு தம்பதிகள் திருகோணமலை மண்ணில் காலை வைக்கின்றனர்.

# பதினைந்து

12. 4. 72. — காலை

சூட்கேசுகளை டிக்கியில் வைத்து விட்டு ரக்சியில் ஏறிக் கொள்கின்றனர் அவர்கள். டிரைவர் ஸ்ராட் பண்ணி விட்டார். மீட்டரை உடைக்கவில்லை. இருட்டுப் பிரயாணங்களின் போது அவர்கள் மீட்டரை உடைப்பதில்லை. மீட்டர் போட்டால், கூலி சதக் கணக்கில்தான் வாங்கலாம். மீட்டர் போடாவிட்டால் ரூபாய்க் கணக்கில் வாங்கலாம்.

மடத்தடிச் சந்தியில் ரக்சி திரும்பும்போது, தூரத்தில் ஈஸ்ட் லங்கா ஜெனறல் ஸ்ரோர்ஸ்—அதுதான் துரைசிங்கத்தின்ர கடைச் சுவரில—யாரோ ஏழெட்டுப் பேர் ஏதோ ஒட்டிக் கொண்டிருப்பது தெரிகிறது. 'இங்கயும், சேகுவாராக் குளப்பம் இருக்கோ, அதுதான் நோட்டீஸ் ஒட்டிறுங்கள் போல இடக்குது.'

'எங்கட ஊர்ப் பொடியளும் துவங்கீற்றுங்க போல. நல்ல வழியோ இல்லையோ, நாட்டினுடைய நன்மைக்காகச் செய்யிறம் எண்டுதான் சேகுவாரப் பொடியங்கள் சொல்லுறுங்கள்.'

டிரைவரின் பக்கம் திரும்பிய அரியம் கேட்கிறுன்.

''இதார் பொடியங்கள், என்னவோ நோட்டீஸ் ஒட்டிறுங்கள், இஞ்சையும் ஏதும் குழப்பமோ ....

''சீ .... சீ ... இஞ்ச என்ன குழப்பம், எண்டாலும் ... பொலீஸ் இந்த முறை எது வந்தாலும் சமாளிக்கிறது எண்டு உசாராத்தான் இருக்கு...... இது ......இவங்கள் பொடியளுக்கு வேற வேலையில்லை ... நாளைக்கு ஸ்ரீ கிருஷ்ணில ரிக்ஷாக்காரன் படம். அதுக்கு எம்ஜீஆர் சங்கம் எண்டு சொல்லி இந்தப் பொடியன்கள் டவுண் முழுக்க, நித்திரை முழிச்சு நோட்டீஸ் ஒட்டிறுங்க'' ..... பதிலைச் சொல்லிவிட்டு ஏளனமாகச் சிரித்துக் கொள்கிறுன் டிரைவர்.

யானைக்குப் பதிலாக பூனை வந்தது போலிருந்தது டிரைவரின் பதில்.

'எம்ஜீஆர் பைட், சிவாஜியார் அக்ட் ஆகியவற்றைப் பற்றிக் கதைத்துக் கதைத்தே காலத்தைப் போக்கிக் கொண்டிருந்த திருகோணமலை இளைஞர்கள்தானு இவர்கள். கல்வியில், தொழிலில் இவர்கள் பின் தங்கியிருப்பதற்கு—எம்ஜீ–சிவாஜி சண்டையும் ஒரு காரணமாயிருக்க வேண்டும்.'

''ஆ, இதில நிப்பாட்டுங்க'', ஓ இதிலதான் ...''

அரியமும், மொனிக்காவும் சூட்கேஸ், தயிர்முட்டி சகிதம் கீழே இறங்குகின்றனர். அரியம் பைக்கற்றிலிருந்து சில்லறை எடுக்கிருன். சித்திரவேலு தடுக்கிருர். ''... அதை வையுங்க, நான் குடுக்கிறன்..........நீங்க எப்ப திரும்புறீங்க'' .......

''நாங்கள் நாளைக்கு இரவைக்கு''

''வருசத்துக்கு எங்கட வீட்டுப் பக்கம் ஒருக்கா வந்திற்றுப் போங்கவன், ரெண்டு பேருமா வாங்க......என்ன வீடோ வீடு... பெரிய கடையில டைக் ஸ்ரீட்......நம்பர் இருநூற்றி இருபத்தெட்டு''

''ஓம் வாறம்'' .....அரியமும் மொனிக்காவும் சிரித்துக் கொண்டே நன்றி பாவத்துடன் சித்திரவேலு தம்பதியினரின் அழைப்பை ஏற்றுக் கொள்கின்றனர்.

''அப்ப நாங்கள் வாறம்''

''ஓம் வாருங்ககோ, தாங்ஸ்''

நேற்று இரவு ஆரம்பிக்கப்பட்டிருந்த ரயில் சிநேகிதம் காரில் பெரியகடையை நோக்கிக் கிளம்பியது. ரயில் சிநேகிதங்கள் பிரயாணங்களின் போது புதுப்பிக்கப்படுகிற உறவுகள்தானே.

இன்னும் விடியவில்லை.

ஒழுங்கையால் திரும்பி வீட்டை நோக்கி நடந்தனர் இருவரும்.

''அந்தா தெரியுது, அந்தத் தொங்கல் ஓட்டு வீடு தான், மொனிக்கா.''

அவள் காண்ட் பாக்கிலிருந்து துண்டை எடுத்து முகத்தை துடைத்து விட்டுக் கொள்கிறாள். விண் சத்தம் விண்ணில் கேட்கிறது. அரியம் நிமிர்ந்து வானத்தைப் பார்க்கிறான். விட் பூட்டிய படலப் பட்டம் ஒன்று ஆடி அசைந்து ... குவைங் ... குவைங் ... என்று நாதமெழுப் பிக் கொண்டிருந்தது.

'வருசப் பிறப்பு மூட்டமல்லவோ ....... அதுதான் இராப்பட்டம் ஏத்திருங்கள்'

ஒழுங்கை நெடுக, இரு மருங்கிலும், சில கிடுகு வேலி கள் தகர வேலிகளாக மாறியிருக்கின்றன. வேறு எந்தவித மாற்றமுந் தெரியவில்லை. ஒரு வேளை பகலில் தெரியுமோ.

பால்காரச் சின்னத்தம்பி கொக்கைத் தடியுடன் வேலிக்கருகில் நிற்கிறார். சும்மா, விசயமிலலாமல் இவ் வளவு வெள்ளணையோடு நிற்பாரா.

''என்ன செட்டியார், முருங்கைக் குளை ஆயிறீங் களோ?''

''ஆரது, ஆர், ......அரியமோ......எங்க கொழும்பா லையோ.....வருசப் பிறப்புக்குப் போல... இதார் கூட வந்த பிள்ளை''

''என்னோட கூட வேலை செய்யிறவ''...... பதில் சொல்லிக் கொண்டே நடக்கிறான். 'இவருக்கெல்லாம் இப்ப உண்மையைச் சொல்லிக்கொண்டுதான் நிற்க வேண்

டும். ஞானி ஆயிரிங்களோ என்று கேட்டால், அதுக்கு மறு மொழி சொல்லாம வேறு எதையோ கேக்கிறார். ஆளைப் பார். விடிஞ்சாப் பிறகு ஞானி ஆய வளவுச் சொந்தக்காரர்கள் விடமாட்டார்கள். அதுதான் இருட்டின் போதே தன்ர திருட்டைச் செய்கிறார்.'

வளவின் தகரக் கதவு பூட்டிக் கிடக்கிறது.

தகரக் கதவில் ஒரு தட்டுத் தட்டினால் போதும் ஐயா எழும்பி விடுவார். சிறிய ஒரு சத்தத்திற்கும் திடுக்கிட்டு எழுந்து கொள்ளும் கோழித் தூக்கம் கொள்பவர் அவர்.

அரியத்தின் மன விசிறி திரும்பவும் சுளர ஆரம்பிக்கிறது.

'இப்ப என்னெண்டு சமாளிக்கிறது. தற்சமயத்துக்கு ஒரு புலுடாவைச் சொல்லிப்போட்டு பேந்து அம்மா விட்டை ஆறுதலா உண்மையைச் சொல்லுவம்...... அவள் என்னோட வேலை செய்யிறவள், சும்மா ஊர் பாக்க வந்திருக்கிறாள், எண்டு சொன்னால்—நம்பக்கூடிய மாதிரி இருக்குமா எண்டதுதான் ஐமிச்சம். சூட்கேசும் ஒண்டுதான் கொண்டு வந்திருக்கிறம், புருசன் பெண்டாட்டி மாதிரி.. ...ம்...... பாப்பம்.'

'உண்மையைச் சொன்னா—அப்படி என்ன வெட்டி முறிக்கப் போறார். முந்தி கோபம் வந்ததெண்டால் தோளில போட்டிருக்கிற துவாயால தூக்கி அடிக்கிறவர்—இப்ப அப்படி அடிக்கேலுமா......நானும் வளர்ந்திற்றன் அல்லவோ'

சுழன்ற விசிறி நின்று விட்டது.

தகரக் கதவில் தட்டுகிறான் அரியம்.

''அம்மா, அம்மா, ஐயா..........பலமாகத் தட்ட முடியவில்லை. பலமாகக் கூப்பிட முடியவில்லை. தொண்டையை ஏதோ ஒன்று அடைத்துக் கொண்டிருக்கிறது. இரவு முழுவதும் புகைத்து விட்டிருந்த சிகரெட்டுகளின் கறல்தானே தொண்டையை அடைக்கிறது..... இல்லை..... இல்லை......... இது வேறு.

முன் விறாந்தை லைட் எரிகிறது.

'ஐயா தான் எழும்பியிருக்க வேணும். அவர்தான் விறாந்தையில படுக்கிறவர்.'

''ஆரது தம்பியனோ''

''ஓமய்யா, நான்தான்''

வந்திருக்கிறது அரியந்தான் என்று தெளிவு பெற்றதும், தகரக் கதவோடு முட்டுக் கொடுத்திருந்த உரலை அரக்கி பக்கத்தில் வீழ்த்திவிட்டு, கதவைத் திறக்கிறார். அடுப்படி வாசலோடு கட்டப்பட்டிருந்த நாய் (அதற்கு பேரே இல்லை .... உஞ்சு..... என்றுதான் கூப்பிடுவது வழக்கம்) பெரிய சத்தத்தோடு குரைக்கத் தொடங்கியது.

ஐயா சத்தம் போடுகிறார். ''ஆர் வந்திருக்கு எண்டு தெரியேல்லைப் போலை..... உஞ்சு ..... சும்மாயிரு......... அடி........''

அரியமும், மொனிக்காவும் வளவுக்குள்ளே நடக்கிறார்கள். மொனிக்காவைக் கண்டதும் ஏதோ கேட்க வேண்டும் என்று நினைத்தவர் — அது அந்த நேரத்திற்குப் பொருந்தி வரக்கூடியதல்ல என்ற விருந்தோம்பல் பண்பில்—பின்னர் கேட்டுக் கொள்வோம் என எண்ணிக் கொள்கிறார். இருந்தாலும், அவரது இதயத்துக்குள் ஒரு சின்ன நெருடல்.

''ஏன் தம்பி இவ்வளவு நாளா காயிதம் ஒண்டும் போடேல்லே. நான் நினைச்சன் வேலையில சேந்த புதுசு அதாலதான் லீவு எடுக்கேலாது எண்டு''

''ஓமய்யா வேலை கூடத்தான்.''

கொண்டு வந்த சூட்கேசை விறாந்தையிலிருந்த மேசையின் மேல் வைத்து விட்டு வீட்டிற்குள் துயிலில் ஆழ்ந்திருக்கும் அம்மா தங்கையைப் பற்றிக் கேட்போமா அல்லது தான் கூட்டி வந்திருந்த 'தன்னோடு வேலை செய்யும் பெண்ணைப் பற்றி' முதலில் சொல்வோமா ... என மயங்கி— எதைச் சொன்னாலும், கேட்டாலும், அந்தச் சொல்லில், கேள்வியில் போலியும், பொய்யும் கலந்திருப்பது தவிர்க்க முடியாதது என்ற உண்மையின் தாக்கத்தால் தயங்கி ... கடைசியில், சொல்ல வந்ததையும், கேட்க நினைத்ததையும் சொல்லாமலே கேட்காமலே நின்று கொண்டிருந்தான் அவன்.

''அம்மா, அம்மா...... இஞ்ச எழும்பிப் பாரணை ஆரெண்டு, தம்பியன் வந்திருக்கிறான்'' ......வீட்டுக்குள் படுத்திருக்கும் அம்மாவை ஐயா கூப்பிடுகிறார். அவர் அம்மாவை அம்மாவென்றுதான் கூப்பிட்டுப் பழகி விட்டது. அப்படிக் கூப்பிடுவதில் அவருக்கு ஒரு ஆத்ம திருப்தி. அம்மா எழுந்து வந்தாள். மொனிக்கா இன்னமும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு இருக்கச் சொல்கிறார் முத்தர். அம்மாவின் முகத்தில் — மகனைப் பல நாட்களுக்குப் பின்னர் காணும் மகிழ்ச்சியில்லை. வேற்று மனிசி— அது தான் மொனிக்கா— அங்கிருப்பதால் உண்டான சங்கோசமோ.

''அம்மா, என்ன தங்கச்சி இன்னும் எழும்பேல்லைப் போல''......கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் போகிறான் அரியம். அம்மாவும் அறைக்குள் வருகிறாள்.

''என்னம்மா, ஒரு மாதிரி இருக்கிறாய், முகமெல்லாம் வீங்கிக் கிடக்கு''. ''அதையேன் தம்பி கேட்கிறாய், அதைப் பற்றிக் கதைக்கத் தானே ஐயா உன்னை உடன வரச் சொல்லி தந்தியடிச்சவர்.'', பேந்து ஆறுதலா எல்லாம் சொல்றன் ....... இதார் இந்தப் பிள்ளை .... சிங்களப் பிள்ளை போலக் கிடக்குது.''

''நீ... இதைச் சொல்லனம்மா, தங்கச்சிக்கு என்ன நடந்தது.'' ''அவள் தம்பி ..... என்னன்டு அந்த வயித் தெரிச்சலைச் சொல்லச் சொல்றாய், அவன் பக்கத்து வீட்டு ராசதுரையின்ர மகன் மாணிக்கராசா ஒரு கடிதம் எழுதி யிருக்கிறான். அது எங்கட கையில அம்பிட்டுப் போச்சு, ஐயா ராசதுரையோட சண்டைக்குப் போனவர்... ... பேந்து என்னடாண்டு பாத்தா — இவளுக்கும் அவனில விருப்பமாம். அதுதான் நாங்கள் வெளில தெருவில நடக் கேலாமக் கிடக்குது ...... ம் ... எல்லாம் எங்கட கஷ்ட காலம்;..........ம்... அதை ஆறுதலாக் கதைப்பம், இதார் தம்பி பெட்டை, உன்ரோட வேலை செய்யிற பிள் ளையோ''

''ஓமனை, எங்கட ஒப்பீசில தான் வேலை செய்யிறது ... வருச லீவுக்கு சும்மா ஊர் பாக்க வந்திருக்குது.

எந்த ஒரு உண்மையைச் சொல்லி – தன் நிலைமையை விளங்க வைத்து, தான் செய்தது வாலிப வயதிற்குரிய வெறியில் இழைத்த தவறாக இருந்தாலும், அதை மறந்து, மன்னித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு—தன் பிரச் சனைக்கு முற்றுப் புள்ளி வைக்க வந்தானோ — அந்த உண் மையை, இந்த நேரத்தில் சொல்வதால் — ஏற்கனவே அங்கு உருவாகியிருக்கும் சங்கடநிலையை இன்னும் சங்கட மாக்கிவிடும் என சட்டென உணர்ந்ததால் — பொய்யென் னும் வலைக்குள் வீழ்ந்து — அப்போதைக்குத் தப்பிக் கொண்டதுபோல் பொய்மையான ஒரு திரைக்குள் தன் னைப் போர்த்துக் கொண்டான், அவன்.

அந்த உண்மையைச் சொல்லி விடுவதால் இப்போது என்ன நேர்ந்து விடப் போகிறது. அவ்வளவாக ஒன்றும் நேர்ந்து விடாது. ஊரெல்லாம், சும்மா கதை பேசும். பேசுவதற்கு உவப்பான சங்கதிகள் இல்லையே என ஏங்கிய வர்கள் — இனிப்பான விடயங்கள் கிடைத்துவிட்டால் ஒரு கை பார்த்து விடமாட்டார்களா என்ன.

'தங்கச்சி கள்ளமாகக் காயிதம் அனுப்புகிருள், தமை யன் என்னடாவென்ருல் எங்கேயோயிருந்த சிங்களக் குட் டியைத் தூக்கிற்று வந்திருக்கிருன், 'ஒரு பூனைக் குட்டி, அல்லது நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்திருந்தா லும் பரவாயில்லை பொறுத்திருப்போம்........... இது சிங் களக்குட்டியல்லவா... ... .. என்றெல்லாம் ஊர் பேசத் தொடங்கிவிடும். அதற்குப் பின்னர் நடக்கப் போவ தென்ன ... அயலட்டைச் சனத்தின்ர முகத்தில் விழிக்க முடியாத. (அப்படி நினைத்துக் கொள்கின்ற) ஐயாவும் அம் மாவும், தமக்குள்ளேயே அவமானத்தால் குறுகிக் கூனி... அதன் தாக்கத்தால் குற்றுயிராகி — இருக்கின்ற குற்றுயி ரையும் ஏன் வைத்திருப்பான் என்ற தாராள மனப்பான் மையில் — அதை இழந்துவிட கிணற்று வாளிக்குக் கட்டி யிருக்கும் கயிறையே துணையாகக் கொள்ள முனைந்து......... எல்லாம் பாரதூரமாகிவிடும்.

தான் சொல்லிவிட்ட அந்தப் பொய் — அப்போதைக் குத் தன் தாய் தந்தையரைக் காக்கக்கூடிய கவசமாக இருப்பதால், உண்மையிலும் பார்க்க அந்தப் பொய்க்கு தேவை அதிகம் என்பதை உணர்ந்து சமாதானமடைந் தான் அரியம்.

சமாதானத்திற்குள்ளும், சினம் அழையாவிருந்தாளி யாய் நுழைந்து கொண்டது. 'இது என்னடா பெரியகரைச் சலாய்ப் போச்சுது நான் அங்கால அப்பிடி. இவளும் இஞ் சால இப்படி. இவளுக்கேன் இந்த அமர். ஆம்பிளையள் எதைச் செய்தாலும் அவ்வளவு கதை வராது. பொம்பிளை

ஒண்டு செய்தாப் போதும். பேந்தேன் கேட்பான். அம்மா ஐயாவோட இருந்து மரியாதையாய்க் கல்யாணம் செய்ய வேண்டிய வயசில பன்றி, இப்படி ஒரு காரியம் செய்து போட்டுது!

தன் குற்றம் தனக்குப் பழையதான, பழகிப் போன ஒன்றாகப் போய்விட்டதால், புதியதாக தங்கையின் குற்றம் ......... இல்லை ...... இல்லை ........ தவறு, பெரிதாகத் தெரிந்து சினங் கொண்டான் அரியம்.

''அம்மாச்சி, ஆறுதலாப் பேந்து கதைக்கலாம், அதுகளுக்கு கோப்பியை வைச்சுக் குடு.........ஏன் தம்பியா...... றெயினில கிறவுட்டோ'' ...... முத்தர் கேட்டார்.

''ஓமய்யா, சரியான சனம், செகண்ட் கிளாசிலயும் சனம் நிண்டுகொண்டுதான் வந்தது.''

''பிள்ளையை அறைக்குள்ள போய் உடுப்புக் கிடுப்பை மாத்தச் சொல்லன். சூட்கேசொண்டும் கொண்டு வரேல்லையோ இவ''

''இல்லை ஐயா, அவவிட சூட்கேஸ் தான் இது ......... என்ர ஒரு சேட்டும் சாரனுந்தானே ...... அதுக்கெண்டு இன்னொரு சூட்கேஸ் வீணா ஏன் காவுவான் எண்டுதான்''

இழுத்து இழுத்துச் சமாளித்தான் அரியம். அந்தப் பதில் அவ்வளவு திருப்தியைத் தரவில்லை முத்தருக்கு. சந்தேகக் கண்கள் நோட்டம் பார்த்தன.

''மொனிக்கா அதுக்குள்ள போய் உடுப்பை மாத்துங்க''......... சொன்னான் அரியம். கிணற்றடியில் அம்மா அலுமினியச்சட்டி கழுவும்சத்தம் கேட்கிறது. மொனிக்கா உடுப்பைக் களைந்து ரெசிங் கவுணைப் போட்டுக் கொண்டு வந்து விருந்தைக் கதிரையில் குந்துகிறாள். அரியம் தனது உடுப்புகளை எடுத்துக் கொண்டு அறைக்குள் போகிறான்.

பிரயாண அழுக்குப்பட்ட லோங்ஸ், சேட், சஸ்பெண்டர் கொடியில் போய் விழுகின்றன. சாரனுக்குள் புகுந்து கொண்ட அரியம் முற்றத்தில் வந்து நின்று கிணற்றடியை அண்டியிருக்கும் சிறிய பூந்தோட்டத்தைப் பார்க்கிறான். குட்டியாக இருந்த கப்பல் வாழை இப்போது குட்டிகளைப் போட்டு இனத்தைப் பெருக்கியிருந்தது.

கனகாம்பரப் பூக்கள் உதய நேரப் பனியில் குளித்து மலர்ந்து நிற்கின்றன. வீட்டின் பின்புறத்தில் தான் நாட்டி விட்டுப் போன மரவெள்ளித் தடிகள் என்ன நிலையிலிருக்கிறது என்று பார்க்க வேண்டும். நூறு தடிகளில் கிட்டத் தட்ட தொண்ணூறு தடிகள் சடைத்து வளர்ந்து பின் பக்கத்திலிருக்கும் காளிக்குட்டியின் வளவை மறைத்துக் கொண்டிருந்தன.

முத்தர் ஒரு வாளித் தண்ணீர் அள்ளி — அதில் நெருப்புத் தண்ணீர் கலந்து — மலகூடத்தின் உட்பக்கமாக ஊற்றிக் கொண்டிருக்கிறார். மகனோடு இன்னொரு விருந்தாளி வந்திருப்பதால் முக்கிய தேவைகளில் ஒன்றான மலகூடம் சுத்தமாக இருக்கவேண்டுமென்பதில் ஆர்வமும், அவசரமும் அவரில் குடிகொண்டிருந்தன.

''ஐயா, மரவெள்ளித்தடிக்கு இப்ப தண்ணீர் ஊத்திறனீங்களோ''? ''ஓம், வெய்யிலண்டா நெருப்பு வெய்யில் எறிக்குது. ரெண்டு நாள் தண்ணி ஊத்தாம விட்டஇல இலையெல்லாம் கருகிப் போச்சு. சித்திரா பருவத்தோடை, மழை பெய்யும் எண்டுதான் பாக்கிறன், பாப்பம்.''

அரியம் கிணற்றடிக்குப் போய் வாளிகளில் தண்ணீர் இறைத்துக் காவி வந்து மரவெள்ளித் தடிகளுக்குப் பாய்ச்சுகிறான். திரும்பவும் அள்ள வரும்போது, முத்தர் ரம்மில் இறைத்துக் கொண்டிருக்கிறார். இரண்டு வாளிகளையும் கிணற்றுக் கட்டில் வைத்து விட்டு ஐயா தண்ணீர் இறைக்கும் வரை உடுப்புத் தோய்க்கும் கல்லில் குந்துகிறான் அரியம்.

''எத்தனை நாள் லீவில வந்தனி''......... கேட்டார் முத்தர். ''வருசப்பிறப்பு ராவைக்கு வெளிக்கிட வேணும், லீவு எடுக்கிறது கரைச்சலாக் கிடக்கு''

''அந்தப்பிள்ளை என்ன வேலை செய்யிறு.'' அவவும் என்னைப் போல கிளார்க்தான் அவங்கட வீட்டிலதான் ஒரு போசனில இருக்கிறன். எங்கட ஊர் பார்க்க வேனும் எண்டு சொன்னவ ...... என்ன செய்யிறது எண்டு கூட்டி வந்தனான்.

''அம்மாச்சி கோப்பி வைச்சிற்றியோ''......... முட்டையடிச்சுக் குடன் பிள்ளையளுக்கு'' ஐயா கிணற்றடியில் தண்ணீர் இறைத்த படியே கத்துகிருர்.

அம்மா மொனிக்காவிடம் கோப்பிக் கோப்பையை கொடுத்து விட்டு ஏதோ கதைத்துக் கொண்டிருப்பது, ஜன்னலுக்குள்ளால்' தெரிகிறது. தந்தை இறைத்த தண்ணீரை மரவெள்ளித் தடிகளுக்குப் பாய்ச்சிவிட்டு விருந்தைத் தாழ்வாரத்தின் கீழ் குந்துகிருன் அரியம். அம்மா — குண்டாளக் கோப்பையில் கோப்பி தருகிருள் மகனுக்கு.

''அம்மா, அந்த ரோசாத் தடியள் நல்லா வரேல்லைப் போலை, கிரவல் போட்டனீங்களோ''

''கிரவல், சாணமெல்லாம் போட்டதுதான். இந்தக் கோழிக் கிளைகள் தடியளை கிண்டிக் இண்டி விடுகுதுகள்.''

கோப்பியைக் குடித்துவிட்டு அடிமண்டியை வாழைப் பாத்திக்குள் ஊற்றிவிடுகிருன் அரியம். வாழைப் பாத்திகள் தூர்ந்து இடிந்து போய்க்கிடக்கின்றன.

''இந்த மண்வெட்டி எங்கயணை அம்மா''. ''கோழிக் கூட்டுக்குப் பக்கத்தில பார்''

அம்மா அவனுக்குப் பதில் கூறிவிட்டு........ காலிக் கோப்பைகளை எடுத்துக் கொண்டு அடுக்களைப் பக்கம் செல்கிறான். வாழைப் பாத்திகளை வெட்டி சீர் செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறான் அரியம்.

கோழிக்கூட்டிலிருந்து சேவலொன்று கூவும் சத்தம் கேட்கிறது. அதைத் தொடர்ந்து எல்லாக் கோழிகளும் செட்டைகளைச் சிலுப்பி ''கொக்கரக்கோ'' கீதமெழுப்புகின்றன. அந்த வீட்டில் எல்லோருக்கும் விடிந்து விட்டது. சீதாலட்சுமிக்கு மட்டும் இன்னும் விடியவில்லை. வழக்கத்தில் — விடியற்காலையில் எழுந்து கோப்பி வைத்து எல்லோருக்கும் கொடுத்து பகல் பொழுதினை விடிய வைப்பதே அவள் தான்.

அந்த அவள் ........ இன்னும் எழுந்திருக்கவில்லை.

* * * *

# பதினாறு

வருசப்பிறப்பிற்காக அண்ணன் வந்திருக்கிறானென்றும், அவனோடு சிங்களப் பெண்ணொருத்தி ஊர் பார்க்க வந்திருக்கிறாளென்றும், படுக்கையிலிருந்து கொண்டே, மற்றவர்களுக்குத் தான் இன்னும் நித்திரைதான் என்று நம்ப வைத்துக் கொண்டே — அறிந்து கொண்டாள். உண்மையில் நித்திரை செய்பவளை எழுப்பி விடலாம். சீதாலட்சுமியை எழுப்ப முடியாதுதான். நித்திரையிலிருந்து விழித்துக் கொண்டாள் — அம்மாவோடும் ஐயாவோடும் கடந்த இரண்டு நாட்களாக சண்டை போட்டுக் கொண்ட மாதிரி அண்ணனோடும் போட வேண்டி வந்து விடும் என்பதான

பயத்தின் அடியொட்டிப் பிறந்த தயக்கம்... சீதாலட்சுமியா காதற் கடிதப் போக்குவரத்து நடத்தியிருக்கிருள் என்று மூக்கின் மேல் விரலை வைக்கப் போகும் அண்ணனின் துன்பப் பார்வையை சந்திக்கப் பயந்த ஏக்கம்... பிறத்தியாள் ஒருத்தி, கூட வந்திருப்பதால், அரியத்தின் தங்கையின் நடத்தை இவ்வளவுதானு என அவள் கூட்டிக் கழித்துப் பார்க்கப் போகும் ஏளன மனப்பான்மையின் தோற்றம்...எல்லாமாகச் சேர்ந்து — சீதாவை பாயிலிருந்து எழ விடாமல் கட்டிப் போட்டிருந்தன.

முன்னர் வயது வராத காலத்தில் — பள்ளிக்குச் செல்லும் போதும், இப்போது வயது வந்த பின்பு கோயிலுக்குச் செல்கின்ற போதும்தான் சீதாலட்சுமியை தெருவில் காணலாம். அக்கா, அம்மா, ஐயா, அண்ணன் ஆகியோரின் சூழலைத் தவிர அவளுக்குப் பழக்கமான சூழல் வேறெதுவுமில்லை. அப்படியானவளின் அமைதியான நீரோடைச் சூழலில் மாணிக்கராசா என்னும் கல் வந்து விழுந்தது துர்லபந்தான்.

காளி கோவில் தேர் வெள்ளோட்டத்தோடுதான் பிரச்சனையே எழுந்திருக்கிறது. தேர்த்திருவிழாவையொட்டி வந்த பத்து நாள் பூசைகளுக்குப் போக தெய்வானையும் சீதாவும் ஒரு நாள் கூடத் தவறவில்லை. பக்கத்து வீட்டு ராஜதுரையின் ஒரே சற் புத்திரன் மாணிக்கராசாவும் பத்து நாள் பூசைகளைத் தவற விடவில்லை. இப்போதெல்லாம். இளம் பையன்களுக்கும் பக்தி கூடிவிட்டது.

காளி கோயிலுக்கு வெள்ளை வேட்டி சகிதம் வந்தவன் — மரியாதையான பாவனையோடு நடந்து கொண்டது...... பூசை முடிந்து சீதாவும் தாயும், திருநீறு, சந்தனம் வாங்கிக் கொண்டு திரும்பும் போது நெடுங்கிடையாய் வீதியில் விழ்ந்து வணங்கியெழும் வயதிற்கு மீறிய பக்திப் பரவச நிலை...வழியில் வரும் பெண்களுக்கு வழிவிட்டுக் கொடுத்து

ஒதுங்கிச் செல்லும் அமைதியான மரியாதை நிறைந்த ஆண்மை . ஆகிய வெளித் தோற்றப் பாவனைகளை மூலதன மாக வைத்து மாணிக்கராசா தன் வலையை விரிக்கத் தொடங்கியிருந்தான். அமைதியான பக்திநிலைப்பாவனைகள் முதலிரண்டு திருவிழாக்களோடு முற்றுப் பெற்று சீதாவை வெறித்துப் பார்க்கும் காதலின் ஆரம்பநிலை மூன்றும் நாள் திருவிழாவோடு தொடங்கி, இதழ்க்கடையில் இழையோடும் இளஞ்சிரிப்போடு தொடர்ந்து—தேர்த் திருவிழாவன்று கடிதம் கொடுக்கும் முற்றிய நிலைக்கு மாறிவிட்டிருந்தது. அவள் என்ன செய்வாள், பாவம். வாலிப மனதின் ஆசைகளை மனதிற்குள் புதைத்து வைத்திருந்தவளுக்கு—அதைத் தோண்டி எடுத்து அழகு பார்க்க வந்த மாணிக்கராசா என்னும் மண்வெட்டியின் அமைதியான வருகை மனதில் சபலத்தை ஏற்படுத்திவிட்டது.

மனதில் உண்டாகும் சபலங்கள் தானே வாழ்க்கையின் மாற்றங்களுக்கு காரணமாக விருக்கின்றன.

சீதா கோயிலைச் சுற்றிவரும் போது—கசக்கிச் சுருட்டிய கடிதமொன்றை அவள் முன்னால் போட்டுவிட்டுப் போனான் மனிதர்களுள் மாணிக்கமான மாணிக்கராசா. பின்னால் கும்பிட்டுக் கொண்டு வந்தாள் அம்மா. அவளுக்கு முன்னே கடிதத்தைக் குனிந்து எடுக்க துணிவு வரவில்லை சீதாவிற்கு. கடிதத்தைப் போட்ட மாணிக்கம் தேர்கள் இளைப்பாறுவதற்காகக் கட்டியிருந்த தகரக் கொட்டகையின் கீழ்—நிழலுக்காக நிற்பவனைப் போல நின்று கொண்டு, சீதா கடிதத்தை எடுக்கிறாளா என்று கவனித்துக் கொண்டு நின்றான்.

வெய்யில் சற்று கோரமாகத்தான் இருந்தது. கோயிலை ஒருதடவை சுற்றி வந்த தெய்வானை கோயில் வாசலுக்குள் ஏறிவிட்டாள். சீதா—இன்னொரு முறை கோயிலைச் சுற்றி வந்தாள். பக்தியோடு இன்னொரு முறை

சுற்றச் செல்கிறான் என நினைத்துக் கொண்டாள் தாய். கோயிலைச் சுற்றிவிட்டு கடிதத்தோடு வந்தாள் மகள்.

கடிதத்தை எடுத்தால் தன்னை விரும்புகிறாளென்றும், எடுக்காதுவிட்டால் விரும்பவில்லையென்றும் மனதிற்குள்ளேயே கணக்குப் போட்டு வைத்திருந்த மாணிக்கம்—இப்போது அவள் தன்னை விரும்ப ஆரம்பித்திருக்கிறாள் என்பதை உணர்ந்தான். சும்மாவா எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறான். ஒவ்வொரு நாளும் குளித்துவிட்டு கோயிலுக்கு வருவதென்றால்—சும்மா விளையாட்டா. சாதாரணமாக மூன்று நாட்களுக்கு ஒரு தடவை உடலில் தண்ணீர் காட்டுகிறவன்—தினசரி குளிக்க வேண்டுமென்றால் சாதாரண விசயமாகிவிடாதுதான் அது.

மனம், மேற்கொண்டு செய்ய வேண்டிய கருமங்களை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்க வெய்யில் பட்டுச் சூடாகியிருந்த கோயில் வீதி மண் கால்களைச் சுட்ட போதும் அந்த சூட்டை உணராதவனாய் வீட்டை நோக்கி நடந்தான் மாணிக்கம்.

மாணிக்கம் பக்கத்து வீட்டு ராசதுரையின் மகன். அவனது பக்கத்து வீடாக இருக்கும் அதிஷ்டத்தை அவளும், அவனது பக்கத்து வீடாக இருக்கும் அதிஷ்டத்தை அவனும் வாழ்த்திக் கொண்டிருக்க—இரண்டொரு கடிதப் பரிமாற்றங்கள் கிடுகு வேலிக்கு மேலாலும் கிடுகு வேலியின் உக்கிப் போன பகுதிகளின் ஓட்டைகளுக்குள்ளாலும் நடந்து முடிந்து விட்டிருந்தன. அப்படிப் பரிமாறப்பட்டவைகளில் ஒன்றுதான் தெய்வானையின் கையில் அகப்பட்டு—பேச்சுகள் வாங்கிக் கொடுத்து, மூத்தரின் கையில் கொடுக்கப்பட்டு அடிகள் வாங்கிக் கொடுத்து—அதையொட்டி எழுந்த ஆத்திரத்தின் விளைவாக ராசதுரையோடு வாய்ச்சண்டை வலுச்சண்டையாக மாறி—அந்த

வீட்டின் அமைதியை, நிம்மதியை இழக்க வைத்து கடந்த இரண்டு நாட்களாகத்தான் சற்று ஓய்ந்திருக்கிறது.

இவ்வளவும் நடப்பதற்கு முக்கிய காரணியாகிவிட்ட சீதா—எப்படி அண்ணனின் கண்ணில் விழிப்பாள். கண்களை விழிக்காத நிலையில் சுருண்டு ஒடுங்கிப் படுத்திருந்தாள் அவள்.

* * *

## பதினேழு

தங்கையின் நடத்தை—அரியத்தின் மனதை வெகுவாகப் பாதித்திருந்தது. தன்னுடைய அவசர காரியத்தினால் இழக்கப்படப் போகும் குடும்ப கௌரவம், தங்கையினுடைய நன் நடத்தையினாலாவது நிவர்த்தி செய்யப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில் வந்த அவனுக்கு—தங்கையின் கடித காரியம்—பெற்றோரின் மேல் மிகுந்த அனுதாபத்தை உண்டாக்கியிருந்தது. எவ்வளவு மரியாதையான முறையில் பிள்ளைகளை வளர்த்திருந்த போதிலும், ஒரு நிமிட நேரத்தில் உருப்பெற்றிருந்த வெறியில் அல்லது சபலத்தில்—குடும்ப கௌரவத்தையே மறந்து விடக் கூடிய மாதிரியாக அல்லவா தங்களை மறந்து விடுகிறார்கள். அரியத்தை, சீதாவை நல்ல பிள்ளைகளாக்க முனைந்தவர்களுக்கு கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு பிடித்திருக்கிறது. கெட்ட பிள்ளைகளாக முனைந்தவர்களுக்கு கால் நிமிடம் கூடப் பிடிக்கவில்லையே.

தன் குடும்பம் அயலிலேயே பண்பு நிறைந்த குடும்பம். பிள்ளைகள் எல்லாம் தங்கக் கட்டிகள், என்பதான நல்ல விசயங்களையே கேட்டுக் கேட்டுப் பழகியவர் முத்தர். வயதின் முதிர்ச்சியினால் இயல்பாகவே கூனலாகப் போகவேண

டிய முதுகு...இதுவரை நிமிர்ந்தே இருந்திருக்கிறது. இனி எப்படிப் போகிறதோ?

தங்கச்சியினுடைய விசயத்தை வந்த உடனே கதைத்து, விவாதித்து, முடிவு காண அவன் மனம் விழைய வில்லை. அவ்விவாதம் முடிவிற்கு வருமுன் புயலொன்றை அடித்து விட்டுத்தான் ஓயும் என்று அவன் நம்பினுன். கீதா வினது விசயம்—புயலை உருவாக்கினுல், தனது விசயம்—சூறுவளியையே கொண்டு வந்து விடும் என்றும் பயந்தான் அவன். புயலும், சூறுவளியும் ஒரேடியாக வந்து ஓய்ந்து விட வேண்டும்!—ஒரேடியாக—ஒரே மனவருத்தங்களோடு இப் புயல்கள் ஓய்ந்து விடவேண்டும். ஒரு புயல் அடித்து ஓய்ந்து பின்பு அமைதி ஏற்படும். அமைதி ஏற்பட்டிருக்கும் போது—அப்பாடா என்று நிம்மதியாகவிருக்கும் அந்த நிலையில் இன்ெனுரு புயல் வந்து இருக்கின்ற நிம்மதியையும் குலைக்கக் கூடாது. வீட்டிற்கு வந்த பின்னர்—ஒன்றுமே நடக்காத மாதிரியான பாவனையில் முகத்தை வைத்துக் கொண்டு வீட்டு வேலைகளைக் கவனித்த போதிலும், முள் ளின் மேல் நடப்பது போலிருந்தது அவனுக்கு.

அந்த முட்களை அகற்றினுலொழிய நடக்க முடியாது போலவும், அதை அன்றிரவே எடுத்துவிட வேண்டுமென் றும் யோசித்து...நிம்மதியற்றிருந்தான் அவன்.

* * *

# பதினெட்டு

நேரம் காலை ஆறரை மணியாகிவிட்டிருந்தது. மொனிக்கா ஏற்கனவே காலைக் கருமங்களை முடித்து விட் டிருந்தாள். உயர்ந்து வளர்ந்திருந்த மரவெள்ளித் தடிகளி னூடே நடப்பது மனதிற்கு ரம்மியமாகவிருந்தது அவ

ளுக்கு. தோட்டத்தின் ஒரு மருங்கில் கிடந்த தென்னங் குத்தியில் குந்தியிருந்தான் அரியம்.

வளவின் தகரவாசல்க் கதவை யாரோ அரக்கும் சத்தம் கேட்கிறது. எழுந்து நின்று எட்டிப் பார்க்கிருன் அரியம். மலகூடத்தை துப்புரவாக்கும் தொழிலாளி பாரத்தோடு வந்து கொண்டிருந்தான்.

விடியற்காலேயில் நித்திரை விட்டு எழுந்த பின்னர்— மீனென்றும், மரக்கறியென்றும், விட்டமின் என்றும், இறைச்சியென்றும் அதுவென்றும் இதுவென்றும், இன்னும் உடலுக்கு சுகமென்றும், சொல்லிச் சொல்லி உணவுகளின் வகைபார்த்து—ருசி பார்த்து—உண்டு—செரிக்கச் செய்து ஓய்கிறபோது—உண்ட வகையருக்கள் அவ்வளவும் சீண்டவோ முகரவோ முடியாத கழிவுகளாக மாறி விடுகிறது. அந்த நேரத்தில் உதவிக்கு வரும் ஆபத்பாண்டவன் இன்றும் வந்து கொண்டிருந்தான்.

மனித உடல்தான் எத்தனே நுட்பமானது. எதை ருசியானது, திறமானது எனக் கருதி ஒரு நேரம் ஏற்றுக் கொள்கிறதோ — அவையெல்லாவற்றையும் மறுநேரம்— சக்கையாகத் தள்ளிவிடுகிறது.

வந்தவன்—''அம்மா, தண்ணியூத்துங்க'' எனக் கத்துகிருன். வந்தவன் எத்தனேயோ தரம் கத்தியபின்னர், தண்ணீர் அள்ளி ஊற்றுவதுதான் எமது பெண்களின் வழக்கமான அலட்சியப் பழக்கம். அம்மா குசினிக்குள் கையில் வேலேயாக இருக்கிருள். ஐயாவின் 'சிலமனேக்' காணவில்லே. அரியம் கிணற்றடி வாத்துவாளியில் இரண்டு வாளி நீர் இறைத்துக் காவி வந்து ஊற்றி விடுகிருன். இன்னெரு முறை தண்ணீர் ஊற்றி அதில் நெருப்புத் தண்ணீரும் கலந்து கொண்டு வந்து அவன் கையில் கொடுக்கிருன்.

அவன் சுத்தமாக்கும்வரை ''மூலைக்கை'' தென்னம்பின் ளைக்குக் கீழ் மூக்கைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். தொழிலாளி சுத்தமாக்கிவிட்டு பாரத்தோடு வந்து கொண்டிருந்தான்.

''ஐயா, நீங்க நம்ம ஊரில இல்லீங்களா சாமி''...

''ஓம், நான் இப்ப கொழும்பில வேலை செய்கிறன்''...

பாரத்தைக் கொண்டு போய் தெருவோரத்தில் நிற் பாட்டியிருந்த வண்டியில் வைத்துவிட்டு வருகிறான் அவன்.

''என்ன'' என்று கேட்கிறான் அரியம்.

''ஒண்ணுமில்லீங்க சாமி, பெருநாள் வருது, புள்ள குட்டீங்களுக்கு துணிமணி இன்னும் வாங்கலீங்க...ஏது மிருந்தா குடுங்க சாமி''...

அரியத்தின் இயல்பான 'அனுதாபப்படும் மனம்' அவன் கால்களை வீட்டிற்குள் நடத்திச் செல்கிறது. ரயிலால் வந் தவுடன் கழட்டிப்போட்ட சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு ரூபாக் குத்தியொன்றை எடுத்துக் கொண்டு திரும்பி னான் அரியம்.

''இந்தாங்க, இதை வையுங்கோ, பேந்து வருசத்தண் டும் வாங்க...இங்க வீட்டில தருவாங்க''

கக்கூஸ்காரனென்றாலும், அவனை மரியாதையாக அழைக்க வேண்டுமென்று விரும்புகிறவன் அவன். உயர்ந்த தொழில் செய்யும் எஞ்சினியரோ அல்லது பெரிய ஒப்பி சரோ தமது வேலையை விட்டுப் போய்விட்டால், அந்த வேலையைச் செய்ய நான் நீ எனப் போட்டி போட்டுக் கொண்டு எத்தனையோ பேர்கள் வருவார்கள். ஆனால்— மிகக் கீழான தொழில் என்று கருதப்படும் மலகூடத்

தொழிலைச் செய்யும் தொழிலாளி ஒருவன் வேலையை விட்டுப் போய் விட்டால்—அவனது காலியிடத்தை நம்மவரில் எவராவது நிரப்பப் போவதில்லை. எஞ்சினியர் பதவி காலியாகப் போனால் யாராவது செய்து கொள்ளலாம். கக்கூஸ்காரன் பதவி அப்படிப் போனால் — நம்மவரில் யாரும் துணிவார்களா அதைச் செய்ய. அப்படிப் பார்க்குமிடத்து—எது உயரிய தொழிலாகப் படுகிறது. எஞ்சினியர் பத்து நாளைக்கு லீவு எடுத்து விட்டாரானால் நாட்டின் நிர்மாண வேலைகள் அப்படியொன்றும் தடைப்பட்டு விடுவதில்லை. கக்கூஸ்காரன் இரண்டுநாள் வராது விட்டால்—நகரமே நாற்றமெடுத்து விடும். இந்த நிலைமை ஏன் எங்கட சனங்களுக்கு விளங்குவதில்லை. சமூகத்தை நாற்றமெடுக்காமல் பாதுகாப்பதில் அவர்களுக்கு இத்தனை பங்கிருந்தும், ஏன்... நம் மக்கள் அவர்களை மதிக்கிறார்கள் இல்லை.

ஒரு டாக்டர் மக்களின் நோயைக் குறைத்துக் குணப்படுத்தி, சமூகத்தின் சுகாதாரத்தை பேணிக் கொண்டிருக்கிறார் என்பதனால் எல்லோரும் அவரை மதிக்கிறார்கள். கக்கூஸ்காரன்—வீடுகளின் வீதிகளின், நகரங்களின் நாற்றத்தைக் குறைத்து சுத்தமாக்கி, சமூகத்தின் சுகாதாரத்தைப் பேணிக் கொண்டிருக்கிறானே.. அவனை ஏன் மதிக்க மறுக்கிறது, இந்த சமூகம்.

டாக்டர் எம்.பி.பி.எஸ். பரீட்சை சித்தியடைந்து வருவது போல—கக்கூஸ்காரனும் ஏதாவது ஒருபரீட்சை சித்தியடைந்து நீட்டுக் கால்சட்டையும் அணிந்து தொழிலுக்கு வந்தால்—ஒருவேளை மதிக்குமோ இந்த சமூகம்.

இப்போது நாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தில்—எந்த வேலையென்றாலும் சரி செய்கிறோம், என்ற மனப்பான்மை இளைஞர்களிடையே வளர்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில்—கக்கூஸ்காரன் பதவிக்கு எஸ்.எஸ்.சியோடு இரண்டு கிறடிற்றும் கேட்டு—விண்ணப்பிக்கச் சொன்னால் ஒருவேளை—நம்

இளைஞர்கள் விண்ணப்பிப்பார்களோ என்னவோ. எந்த ஒரு தொழிலுக்கும் எஸ்.எஸ்.சி. தகைமை தேவையென்று சொல்லிவிட்டால்—அந்தத் தொழிலுக்கே ஒரு மரியாதை உண்டாகி விடுகிறது.

இந்தத் தொழிலுக்கு எப்பொழுதுதான் மரியாதை ஏற்படப்போகிறதோ. அதைச் செய்யும் தொழிலாளர்களை என்று தான் நம் சமூகம் மதிக்கப் போகிறதோ.

நடக்கக்கூடிய விசயமா!

அரியத்தின் பரந்த மனம் சிந்தனைச் சுழலில் பட்டு அலைக்கலைந்து திரிகிறது.

''உங்கட பெயர் என்ன''...கேட்கிறான் அரியம்.

''முனியாண்டிங்க சாமி''...

''இதேனப்பா இந்த மாதிரிப் பேர்களை வைக்கிறீங்க. உங்கட பெயர்கள் முனியாண்டி, கறுப்பாண்டி என்டு இருக்கிறதாலதான் ஒருவரும் உங்களை மதிக்கிறாங்கள் இல்லை தமிழில எவ்வளவு நல்ல பெயரெல்லாமிருக்கு. இனிமே எண்டாலும் பிள்ளை பிறந்தா நல்ல பெயரா வையுங்க.''

அரியம் புத்திசொல்லும் பாங்கில் முனியாண்டியிடம் சொல்கிறான். அது உண்மைதான். தமிழில் எவ்வளவோ நல்ல பெயர்கள் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது கேட்கவே நம்மவர்கள் அருவருப்புக் கொள்ளும் முனியாண்டியை, மாயாண்டியை ஏன் வைக்கவேண்டும். இதற்கெல்லாம் அவர்களுடைய தாழ்வு மனப்பான்மைதான் காரணமாயிருக்க வேண்டுமோ.

திரும்பவும் அரியம் கேட்டான்.

"பேப்பரில நீங்க ஏதோ, ஐஞ்சாறுநாள் ஸ்டிரைக் செய்திங்க எண்டு போட்டிருந்தது, ... என்ன நடந்தது,"

"அதுக்கு சாமி.........யூனியில வாளியில்லே, வண்டியில்லே, விளக்குமாறில்லே. நாங்க தொழில் செய்யிறதுக்கு வேணுங்கிற சாமான் எல்லாம் பற்றாக்குறை. நாங்க ஒரு வாளியை வைச்சுகிட்டு எப்பிடீங்க சாமி ஒரு ரோட்டு முழுவதையும் துப்புரவாக்கிறது. அதோட, ஞாயித்துக் கிழமையில வேலே செஞ்சிற்று ஓவல்டைம் கேட்டம், அதையும் முடியாதுண்ணுட்டாங்க...... இனி......இஞ்ச இருக்கிற ஓவர்சியர்மாரு, வேறு இரண்டொரு பெரிய புள்ளிங்க—எங்களுக்கிட்டையே, எங்கட சம்பளத்திலயே கொமிசன் தரச் சொல்லிக் கேட்கிறாங்க......... பொதுவாக எங்களை மனிசனாகவே ஒருவரும் மதிக்கிறல்லேங்க சாமி"

முனியாண்டி சொல்லிவிட்டு — தான் அளவிற்கதிகமாகப் பேசிவிட்டான் என்ற பாவனையில் தலையைச் சொறிந்து கொள்கிறான்.

நீங்க என்ன செய்ய வேணும் தெரியுமா......உங்கட, யூனியனுல குறைகள் எல்லாத்தையும் எடுத்துச் சொல்ல வேணும். உங்கட நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாத நகராண்மைக் கழகம் நரகமாண்மைக் கழகமாகத் தான் இருக்கும். அதோட, உங்கட தாழ்வு மனப்பான்மையை விட்டிற வேணும், என்ன" சரி......நான் சும்மா உங்கட வேலையை மினக்கெடுத்திக் கொண்டிருக்கிறன், என்ன? வருசத்துக்கு வாங்க"

அரியம் விடை கொடுத்தனுப்புகிறான்.

முனியாண்டி பைக்கற்றிலிருந்து வெற்றிலேச் சுருளை யெடுத்து ஒரு வாய் போட்டுக் கொண்டு "அப்ப போயிட்டு வரேங்க சாமி" சொல்லி விட்டு நகர்கிறான்.

சென்ற மாதம் அவர்களது ஸ்டிரைக் ஒன்று நடந்த போது, பத்திரிகைகளில் வெளியான சில புகைப்படங்கள் அவனது மனத்திரையில் வந்து போகின்றன. இரண்டொரு யூசி மெம்பர்கள் கக்கூஸ் எடுப்பது போலவும், தெருக்கூட்டுவது போலவும் போஸ் கொடுத்துப் படமெடுத்து—அந்தப் படங்கள் சகல தினசரிகளிலும் முன் பக்கங்களில் பிரசுரமாகியிருந்து ... அதைக் கண்ணுற்ற போது உண்மையில் அருவருப்படைந்தான் அரியம்.

மலகூடத் தொழிலாளர்கள் இனிமேல வேலைக்கு ஒரு போதும் வரப்போவதில்லை என்று முடிவு செய்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த யூசி மெம்பர்கள் தாம் படமெடுத்துப் போஸ் கொடுத்தது போன்று—எந்த நாளும் அந்தத் தொழிலை செய்ய முன்வருவார்களா?

அவர்களின் கோரிக்கைகளில்—சில நிறைவேற்ற முடியாததாக இருக்கலாம். அதற்கு நகரமன்றத்தின் பொருளாதார நிலை முக்கிய காரணமாகவுமிருக்கலாம். ஆனால்—அதற்காக, அவர்கள் கேட்கும் மூலாதாரமான சில கோரிக்கைகளைக் கூட எப்படி நிறைவேற்றாமல் விட முடியும்.

நகரமன்றத்திற்கு ஐந்து வருடத்திற்கொரு முறை வந்து போபவர்கள்—தம்முடைய காலத்திற்குள் முடிந்த அளவு உழைத்துவிட வேண்டுமென்ற முனைப்பில்—எத்தனையோ செய்கிறார்கள். அந்த 'எத்தனையோக்களில்' கக்கூஸ்காரர்களைச் சுரண்டிப் பிழைப்பதுமல்லவா ஒன்றாக இருக்கிறது. அது எவ்வளவு கீழ்த்தரமானது.

எம்முடலிலிருந்து கழிந்து போகின்ற அசுத்தத்தை நாமே—பார்க்க, நுகர, சீண்ட அருவருப்பு அடைகிற போது—அவர்கள், அதைப் பார்த்து, நுகர்ந்து, சீண்டி தொழில் செய்ய வேண்டியிருக்கிறதே .........அதற்காகவாவது அவர்களில் அனுதாபப்படக் கூடாதா.

முனியாண்டி போய்விட்டான். அரியத்தின் மனம் பழைய நிலைக்குத் திரும்புகிறது.

தூரத்தில், மரவெள்ளித்தடிக் கூட்டத்திற்கிடையே, மொனிக்கா நின்றுகொண்டு யாருடனோ கதைத்துக் கொண்டு நிற்கிறாள். மொனிக்கா தன் கொச்சைத் தமிழோடு யாரோடு கதைத்துக் கொண்டிருக்கிறாள் எனப் பார்க்க விரும்பி ... சற்றே எட்டிப் பார்க்கிறான்.

அங்கே சீதாலட்சுமி!

* * *

# பத்தொன்பது

மொனிக்காவும் தங்கையும் கதைத்துக் கொண்டு நிற்பதைக் கண்டபோது—அவ்வளவு விரைவில் அவர்கள் எப்படிப் பழக்கமானார்கள் என அதிசயப்பட்டுக் கொண்டான் அரியம். அவர்கள் இருவரும் தங்களைப் புரிந்து கொள்வதற்கு அந்தத் தனிமையான சூழல் அவசியந்தான் என்றும்—அதில் தான் சேர்ந்து கொண்டால், அவர்களது இயல்பான பழக்கத்திற்கு இடையூறு வந்துவிடுமென்று நினைத்த அரியம் அடுக்களைக்குள் நுழைந்தான்.

அம்மா குழைத்தெடுத்த மாவை பிட்டுக் குழலுக்குள் போட்டு இடையிடையே தேங்காய்ப்பூவையும் சேர்த்து அதை அடுப்பில் ஏற்றி வைத்துக் கொண்டிருந்தாள். அடுக்களையின் ஒரு ஓரத்தில் அடுக்கி வைத்திருந்த பலகைகளில் ஒன்றையெடுத்து — அம்மாவிற்குப் பக்கத்தில் அரக்கி வைத்துவிட்டு குந்திக் கொள்கிறான். தெய்வானை இன்னும் முகம் கூடக் கழுவவில்லை. காலைக் கடையப்ப வேலையை முடித்துக் கொண்டுதான் கிணற்றடிக்குப் போவாள், அவள்.

''அம்மா, எங்க ஐயாட சிலமனைக் காணேல்லை.

''நல்ல மீனைப் பாத்து வாங்கியரப் போயிற்ருர். வெள்ளனையோட போனு — வள்ளக்காரர்களிட்டை மலிவாக வாங்கலாம்.''

''புட்டுக்கு என்னம்மா கறி''

''சுட வைச்ச குழம்பு கொஞ்சம் கிடக்குது. உங்களுக்கு முட்டையும் பொரிச்சு, மாசிச் சம்பலும் போட்டுத் தாறன்.''

''அம்மா செய்யும் மாசிச் சம்பலின் ருசியே தனி. பெரிய வெங்காயம் நிறைய வெட்டிப்போட்டு அளவா தேசிக்காய்ப் புளியும் விட்டு மாசிச் சம்பல் போட்டா வெண்டால், அதோடயே ஒரு குழல் புட்டுச் சாப்பிடலாம்.''

''அம்மா, இஞ்சால தாவணனை, பெரிய வெங்காயம் வெட்டித்தாறன்''

''இப்ப எங்கால தம்பி பெரிய வெங்காயம்......ஊர் உலகந் தெரியாத பிள்ளையாயிருக்கிருய். சின்ன வெங்காயந்தான் கடையில விக்குது. அந்தா அந்தக் கடகப் பெட்டிக்குள்ள பார் சின்ன வெங்காயத்தை''

அரியம் கடகப் பெட்டிக்குள்லிருந்து சின்ன வெங்காயங்களைப் பொறுக்கியெடுத்து முன்ஞல் பரப்பி வைத்துக் கொண்டு தோல் உரிக்கும் பணியில் ஈடுபடுகிருன்.

''இந்தா, அதை உரிச்சு இந்தக் கோப்பைக்குள்ள போடு''...... அரியத்திற்கு கண்கள் எரியத் தொடங்குகிறது. புறக்கையால் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு மூக்கையும் உறிஞ்சிக் கொள்கிருன்.

''எட தம்பி, நீ உரிக்கமாட்டாய். இஞ்ச விடு'' பிட்டுக்குழலால் ஆவி வருகிறதா எனப் பார்க்கிருள் அம்மா. ''புதுக்குழல் எண்டபடியால கெதில ஆவி வருகுதில்லே. கொள்ளியும் பச்சையாக் கிடக்கு.....இதோட கால்ப் போத்தல் லாம்பெண்ணே ஊத்திப் போட்டன்.''

விறகுகளை கைகளால் விலக்கி விலக்கி, உரமாக எரிவதற்கு ஏதுவாக அடுப்பை சீர் செய்கிருள் தெய்வானை.

அடுப்பு உரமாக எரிவதற்குரிய வகையில் ஒழுங்குகளைச் செய்ய முடியும் அவளால். உரமாக, அழகாக, இவ்வவு காலமும் எரிந்து.......இன்று அவிந்து போயிருக்கிறதே.... குடும்பமாம். அதை மீண்டும் சரிவரச் செய்வதற்கு ஏற்ற வழிவகைகளைச் செய்ய முடியுமா அவளால்;

''தம்பி, வெங்காயத்தை விட்டுப் போட்டு, இதில ஒரு வாளி தண்ணி அள்ளியா'' அரியம் வாளியை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் செல்கிருன். வாளி நிரம்பத் தண்ணி ஊற்றி, வளிய வளியத் தூக்கிக் கொண்டு வந்து அடுப்படி மூலையில் வைத்து சுளகால் மூடிவிட்டு திரும்பவும் பலகையில் குந்துகிருன்.

அம்மா, அவன் மாணிக்கராசா — ராசதுரையின்ர மகன் — இப்ப என்ன செய்யிருன். எஸ்.எஸ்.சீ. பாஸ் பண்ணினவன் அல்லோ''

''ஓம் பாஸ்தான். கப்பல் கோப்பிறேசனில கொஞ்சநாள் வேலே செய்தவன். பேந்து விட்டுப்போட்டு இப்ப சும்மாதான் இருக்கிருனும்.''

''அம்மா நான் கேக்கிறனெயெண்டு கோவிக்காதை யெணே. ராசதுரைக்கு அவன் ஒரே மகன் தானே. நல்ல வீடு வாசல் எல்லாமிருக்கு. பொடியனும் அவ்வளவு பிழையான ஆளில்லே. தங்கச்சியை அவனுக்கே கட்டிக் கொடுத்தா என்னம்மா?''

''விசர்க்கதை பேசிறாய். மாத்துக் கல்யாணம் பேசின சுப்புறமணியத்துக்கு என்ன மறுமொழி சொல்றது. இப்பவே, இந்த விசயத்தைக் கேள்விப்பட்டுப் போட்டு – மனிசன் – நாலைஞ்சு நாளா எங்கட வீட்டுக்கு நடையா நடக்குது.''

''அதுக்கென்ன செய்யிறது. அவள் அவனைத்தான் கட்டப்போறன் எண்டு ஒத்தக் காலில நிண்டா, அதை நாங்கள் செய்து குடுக்கத்தான் வேணும். அதோட ராசதுரையிட்டையும் சொத்துப் பத்தெல்லாம் இருக்கு. எல்லாம் மாணிக்கராசாக்குத்தானே.''

''அதுக்காக, பொன்னும் கத்தியெண்டு வயித்திலை குத்தச் சொல்றதா... சுப்புறமணியத்தின்ர பிள்ளைக்கு உன்னையும் அவளையும் மாத்துக்குச் செய்யிறதெண்டு முடிவு செய்தது. அயலட்டைச் சனம் எல்லாத்துக்கும் தெரியும். இப்ப இவனுக்குக் கட்டி வைச்சா, ஊர் என்ன சொல்லும்.''

இருவரும் ஒருவர் பிடியை மற்றவர் கையில் கொடுக்காத வகையில் - கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அரியரெத்தினம் திருமணம் செய்தது தெரியாத நிலையில் - அந்த ஒரு நிலையே ஆறுதலாக நினைத்துக் கொண்டு எப்படியாவது சீதாவை மாற்றுக் கல்யாணத்திற்குச் சம்மதிக்கச் செய்து விடலாமென்ற ஆர்வத்துடிப்பில் - தெய்வானை பதறாமல் இருந்தாள். அரியத்திடம் ஆழ்ந்த அன்பு கொண்டவள் சீதா. அவன் சொல்கிறபடி சொல்லி-அவனை அவளது தற்போதைய மயங்கு நிலையிலிருந்து மாற்றாமல் விட்டுவிடவா போகிறாளென்ற ஒரு நம்பிக்கையே – தெய்வானையை உள்ளத்திற்குள் சாந்தம்படுத்திக் கொண்டிருந்தது.

பிட்டுக் குழலின் முனையிலிருந்து ஆவி பறக்க ஆரம்பித்தது. தென்னம் ஈக்கொன்றால் பிட்டு அவிந்திருக்கும் அளவு பார்க்கிறாள் அம்மா. அவிந்துவிட்டது என திருப்தி பட்டதும் அலுமினியச் சருவச் சட்டியில் பிட்டுக்களை தள்ளி விடுகிறாள். ஏற்கனவே குழைக்கப்பட்டிருந்த மா பிட்டுக் குழலுக்குள் தள்ளப்படுகின்றது.

''அம்மா, மத்தியானத்துக்கு றால் வாங்கி கிழங்கும் போட்டு ஒரு பிரட்டல் செய்துதாணை, சாப்பிட்டுக் கன நாளாச்சு.''

இப்ப ஐயா மீன் கொண்டந்திடுவார். நாளைக்காகட்டும் பிள்ளைக்கு பிரட்டல் கறி வைச்சுத்தாறன்.''

''சேவ் எடுக்கிற சின்னக் கண்ணாடி எங்கயணை, ரெண்டு நாளா சேவ் எடுக்கேல்லை.''...... முட்களாகக் குத்தும் இரண்டு நாள் வளர்த்தியான உரோமத்தை வருடி ஸ்பரித்துக் கொண்டே தாயிடம் கேட்கிறான் அரியம்.

''அது எப்பவோ உடைஞ்சு போச்சுது. ஒரு துண்டு தான் கிடக்கு. ஐயா சேவ் எடுத்துப் போட்டு விறாந்தைக் கட்டில வைச்சிருப்பார் பார்.''

அரியம் வீட்டிற்குள் போய் சூட்கேசிலிருந்து சேவிங் றேசரை எடுத்துக் கொண்டு வருகிறான். விறாந்தைச் சுவர் கட்டில் முக்கோண உருவத்தில் கண்ணாடித் துண்டொன்று தண்ணீர் பட்டு வெய்யில் பட்டு, ஒளியிழந்து கிடக்கிறது. சேவ் எடுக்க அந்தத் துண்டு போதும். அதை எடுத்துக் கொண்டு கிணற்றடிப் பக்கம் போகிறான், அரியம்.

டொக்யாட் வாசலிலிருந்து ஒலிக்கும் சைரன் சத்தம் ஆறுதலாகத் தொடங்கி உச்சத்திற்கு வந்து மீண்டும் தொடங்கிய ஆறுதலோடு ஓய்கிறது.

காலை ஏழு மணியாகிவிட்டதை உணர்கிறான் அரியம்.

# இருபது

இரண்டு நாள்த் தாடியை எடுத்துவிட்டு மீசையைச் சிறிய கத்தரிக்கோலால் அளவிற்கு வெட்டுகிறான். தாடையில் அங்குமிங்குமாகப் படிந்திருந்த சவர்க்கார நுரை அருவருப்பாகவிருக்கிறது. முகம் காய்ந்து போயிருக்கிறது. பிரயாணம் ஏதும் செய்த பின்னர் - அவனது முகமே அவனுக்கு விகாரமாகத் தோற்றமளிக்கும். அவன் தலைக்கு எண்ணை பூசிக்கொண்டால் — நெற்றியின் இரு பக்கங்களிலும் ஏறியிருக்கும் இளவழுக்கை தெளிவாகத் தெரியத் தொடங்கிவிடும்.

தலை மயிரை அழுத்திப் பிடித்து - முன்பக்கத் தலையின் வழுக்கையை கூர்ந்து பார்க்கிறான், அரியம். இருபத்தெழு வயதிலேயே இப்படி வழுக்கை விழுந்து விட்டது. இன்னும் இரண்டொரு வருடங்களில் இருக்கிற மயிரும் கொட்டிப் போகும்.

உச்சுத் தலையில் அரிக்கிறது. வேறொன்றுமில்லை, சொடுகுத் தொல்லை. ஆத்திரத்தில் — உச்சித்தலையை சொறிந்து கொள்கிறான். உரமாகச் சொறிந்தால் நிகத்தோடு இரண்டொரு உச்சித் தலைமயிர்கள் கழன்று அவனுக்கு ஆத்திரத்தை மூட்டுகின்றது. மயிர் - இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தான் சிறப்பு. தலையில் இருக்கும் வரை அதற்கு பிறில் கிறீம் என்றும் இச் கொக்கனட் ஓயில் என்றும் எத்தனையோ எண்ணைகளைத் தடவி அழகு பார்த்துக் கொள்கிறோம். அது கழன்று கையோடு வந்துவிட்ட பின்பு ...... அதற்குக் கிடைக்கும் மரியாதை......

சில நாட்களாகவே அரியத்திற்கு மனதில் ஒரு கலக்கம். தான் சந்திக்கும் பிற மனிதர்களது தலையழகை தன் தலையழகோடு ஒப்பிட்டுப் பார்த்து தன்னிலே பரிதாபப்

பட்டுக் கொள்வது அன்றாட வழக்கமாகிவிட்டிருந்தது. வளமான மயிரைக் கொண்டிருப்போரைக் காணும்போது தனக்கும் அப்படியில்லையேயென பெருமூச்சு விட்டுக் கொள்வான். தன்னிலும் வளம் குறைந்த தலைகளைக் காணும் போது - தன்னுடையது எவ்வளவோ பரவாயில்லை எனத் தன்னைத்தானே தேற்றிக் கொள்வான். தலைமயிரை ஒப்பிட்டுப் பார்த்து மனத் திருப்தியடைவதும் அதை இழப்பதும், அவனைப் பொறுத்தளவில் நிரந்தரக் கடமையாகிவிட்டது. சில வேளைகளில் அழகாகத்தோன்றும் அவனது தலை — பல வேளைகளில் அசிங்கமாகத் தோன்றி முழுத் தலையையுமே மொட்டை வடித்துக் கொள்வோமாவென்ற அளவிற்கு அவனை யோசிக்க வைத்து விடும். இரண்டொரு தடவைகள் மொட்டையடித்துக் கொள்வதற்காக சலூனுக்குப் போயிருக்கிறான் அவன். அடித்த பின்னர் — உண்டாகப் போகும் நடைமுறைக் கஷ்டங்கள், மற்றவர்களிட்மிருந்துதான் மாறுபட்டிருக்கும் நிலைகளை மனதிற்போட்டு சித்திரவதைப் பட்டு மொட்டையடிக்காமலே வீட்டிற்குத் திரும்பியிருக்கிறான் அவன். தலை வழுக்கையாகி விட்டால், தனக்கு யாரும் பெண் தரமாட்டார்களோவென்று கூடப் பயந்திருக்கிறான் அவன்.

அதுதானோ - இவன் இத்தனை விரைவில் வீட்டிற் கொவ்வாத திருமணமொன்றைப் புரிந்திருக்கிறான். அதுவே முக்கியமான காரணமாயில்லாவிட்டாலும் மறைமுகமான, அவனது மனம் மட்டுமே யுணர்ந்து கொள்ளக் கூடிய மற்றைய சின்னக் காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

உலகத்துப் பெரிய மனிதர்களுக்கெல்லாம் தலை வழுக்கை தான் என்று ஏதோ ஒரு பத்திரிகையில் எப்பொழுதோ பார்த்தபோது சிறிது ஆறுதலடைந்த அவனது மனத்தினால் - நிரந்தரமாக அந்த ஆறுதலை அடைய

முடியவில்லை. அது ஒரு போலி உணர்வு என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

மயிர் வெட்டும் தொழில் ஒருவாறு முடிவடைந்தது. சேவிங் ரேசரைக் கழுவி எடுத்து கிணற்றுக்கட்டில் வைத்து விட்டு குளிக்க ஆயத்தமானான் அரியம். மனம் மட்டும் இன்னும் சோம்பியேயிருந்தது.

மயிர் ஏற்படுத்திய மனச் சோம்பல் அது.

* * *

# இருபத்தொன்று

கொழும்பிலே பிறந்து வளர்ந்த மொனிக்கா திருகோணமலையில் அந்த வளவிற்குள்ளே - சடைத்து வளர்ந்திருந்த மரவெள்ளித்தடிகளிடையே நின்று பிறசால் பல் தீட்டிக் கொண்டிருக்கிறாள். கொழும்பிலிருந்து புறப்படுகின்ற போது — திருகோணமலையில் அரியத்தின் குடும்பச் சூழலை, அந்தச் சூழலிலிருந்து கிளர்ந்து எழப் போகின்ற பிரதிபலிப்பை - அந்தப் பிரதிபலிப்பினால், தன்னில் உண்டாகப் போகின்ற மனஎழுச்சியை அல்லது வீழ்ச்சியை - அந்த மன எழுச்சியினால் அல்லது வீழ்ச்சியினால் — நிமிர்ந்து நிற்கப் போகின்ற அல்லது தூர்ந்து போகப் போகின்ற தனது வாழ்க்கைக் கலகத்தை எண்ணியெண்ணி - உள்ளுக்குள்ளேயே அவதிப்பட்டு அல்லலுற்று வெளிக்காட்டி அழ முடியாத நிலையில் துன்புற்றிருந்தாள் அவள்.

தன்னை அரியம் திருமணம் செய்திருக்கிறான் என்ற - இதயத்தினால் ஜீரணம் செய்ய முடியாத உண்மையை அறிய நேர்ந்ததும் - அரியத்தின் பெற்றாரும் உற்றாரும் அவளை எப்படி நடத்தப் போகிறார்கள் என்பதை கற்பனை

யில் கொண்டுவந்து நிறுத்திப் பார்த்து முதல் நாள் இரவு முழுவதும் பயந்து கொண்டிருந்தாள்.

எது எப்படியிருந்த போதிலும், உண்மையை அவர்களுக்கு அறிவிக்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம். - அதன் பலாபலன்களை நிமிர்ந்து நின்று ஏற்றுக் கொள்வதுமாகுமென அவன் நம்பினான்.

மொனிக்கா—தன்னோடு ஒரே அலுவலகத்தில் கடமையாற்றும் ஒரு கிளார்க் என்று பயத்தினால் அவன் கூறிய பொய் அவனைச் சிறிது தடுமாற வைத்துவிட்டது. அவனும் வேறு என்ன செய்வான். அவனுடைய தங்கச்சி சீதாவும் — இவ்வளவு காலமும் சிவனே என்றிருந்துவிட்டு இந்த நேரம் பார்த்து காதலோ காதல் என்று வேலிக்கு மேலால் கடிதங்கள் பரிமாறத் தொடங்கியிருப்பது அவர்களுடைய கஷ்ட காலமல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும். தங்கச்சியின் செயலால் மரத்திலிருந்து விழுந்தவர்கள் போலிருக்கிறார்கள் ஐயாவும் அம்மாவும். அந்த நிலையில் - கொழும்பிலிருந்து வருசப் பிறப்பிற்கென வந்த 'மாடும்' ஏறி மிரித்தால் எப்படியிருக்கும். தான் - ஏறி மிரிக்கும் மாடாக மாறி விடக் கூடாதேயென்ற ஜாக்கிரதையுணர்ச்சிதான் அரியத்தை உண்மையைச் சொல்வதினின்றும் தடுத்திருக்க வேண்டும்.

சரி... இன்றைக்கு சொல்லாமல் விட்டுவிடலாம். நாளைக்குச் சொல்லாமல் விட்டு விடலாம். என்றோ ஒரு நாளைக்கு அவன் மாடாக மாறித் தானேயாக வேண்டும். என்றோ ஒரு நாளைக்கு உண்மையைச் சொல்லப் போகுமவன் - இன்றைக்கே சொல்லி - அங்கு நிலவி நிற்கும் கேள்விக்குறிக்கு முற்றுப் புள்ளி வைத்தால் என்ன? இப்படி அடிக்கடி நினைந்துப் பொருமினான் அவன். மொனிக்காவின் தாய் தயாவதிக்கு புருசன் அகாலமாக மரணமடைந்ததால் வாழ்க்கை நழுவிப் போய் விடுமோ!

ஆனால், அரியம் கடைசிவரை தன்னை கைவிடப்போவதில்லையென நம்பினான். அந்த நம்பிக்கையே அவனை கண்களிலிருந்து கண்ணீரைக் கொட்டிவிடாமல் பிடித்துக் கொண்டிருந்தது.

மொனிக்கா சிந்தனை வயப்பட்டு அது ஏற்படுத்திய இனம் இன்னதென்று பிரித்தறிய முடியாத களைப்பால் பீடிக்கப் பட்டு பக்கத்திலிருந்த மரக்குற்றியில் அமர்ந்தாள். அந்த வளவிற்குள், சில இடங்களில் மரக்குற்றிகள் கிடப்பது ஒரு வகைக்கு நல்லதாகவே படுகிறது.

மூன்று வாளித் தண்ணீர் தலையில் ஊற்றிக் கொண்ட அரியம் தூரத்தில் தெரிந்த மொனிக்காவை கிணற்றடிப் பக்கம் வரும்படி கையால் சைகை காட்டுகிறான். ஆடவனொருவன் அரையில் துவாய்த் துண்டொன்றைக் கட்டிக் கொண்டு.......

குளிக்கும் போது - அணங்கொருத்தி அதுவும் அந்த வீட்டைப் பொறுத்த அளவில் எந்த ஒரு உறவிற்குள்ளும் வந்து சேராத அணங்கொருத்தி, அங்கு பிரசன்னமாயிருப்பது அவ்வளவு நல்லதல்ல, என்பதை உணர்ந்து கொண்டு தன் உணர்ச்சிகளுக்குச் சடுதியாகப் பூட்டுப் போட்டுக் கொண்ட அரியம் மொனிக்காவை அங்கு வரவேண்டாமென அடுத்த கணமே சைகை காட்டுகிறான்.

கிணற்றடியில் பாசி மணக்கிறது.

நீர் அள்ளுவதை நிறுத்திவிட்டு ஒரு பிடி மண்ணெடுத்து பாசியை சுரண்டி விடுகிறான் அரியம். இந்தப் பாசி கூட எத்தனை தத்துவங்களைப் போதிக்கிறது. பாசியில் மிரித்துக் கொண்டு நிற்கவேண்டிய நிலையிலுள்ளவர்கள் — மிகவும் பக்குவமாக நிற்க வேண்டும். சற்றே கவனம் குறைந்து விட்டாலும் வழுக்கி வீழ்ந்து விடுவார்கள், தானும் சீதாவும் மொனிக்காவும் கவனக் குறைவினால்

வழுக்கி விழுந்து விட்டவர்கள் தானே... அரியத்தின் மனம் ஐயப்படுகிறது.

மண்ணால் சுறண்டுவதால் மட்டும் பாசி போய்விடாது. ஒரு சொறிக்கல்லை எடுத்து பாசியை சுறண்டி விடுகிறான். வாய்காலில் ஓடும் குளித்த நீர் வாழைப் பாத்திகளுக்குப் போகாமல் இடையிடையே தேங்கி நிற்கிறது. ஈரத் தலையோடு கிணற்றுக் கட்டிலிருந்து இறங்கி வாய்க்காலை 'சரி' செய்து விடுகிறான்.

கொழும்பிற்குப் போனதிலிருந்து சரியான முழுக்கில்லை. அதுதான் சொடுகு கூடிப்போய் தலை கடிக்கிறது. நாளைக்கு அம்மாட்டைச் சொல்லி அழுகல் தேசிக்காய் அவிச்சு முழுகவேணும்.

வழக்கம் போல — சின்னப்பிள்ளைகள் அவசரத்தில் குளிப்பது போல முகத்திற்கும் வயிற்றுக்கும் சன்லைட் சவர்க்காரத்தைப் போட்டு, ஐந்து வாளி தலையில் ஊற்றி ஒருவாறு குளியலை முடித்து விட்டு கிணற்றடியை விட்டு இறங்குகிறான். ஈரத்துவாயை கொடியில் போட்டுவிட்டு ஈரக்கால்களுடன் வீட்டிற்குள் போகிறான். அடுப்படிக்குள்ளிருந்து அம்மா குரல் கொடுக்கிறாள். ''தம்பியா, வீட்டுக் கொடியில தோச்சுப் போட்ட துவாயிருக்கு, எடுத்துத் தலையை உணத்து''.

ஐயாவின் 'தோச்சுப் போட்ட' வெள்ளை வேட்டி கொடியில் தொங்குகிறது. அதை எடுத்து ஒரு பட்டாகக் கட்டிக் கொண்டு...... ''அம்மா பசிக்குது'' ராகம் பாடுகிறான் அரியம். கொஞ்சம் இரப்பு ...... அந்தப் பிள்ளையும் முகம் கழுவீற்று வரட்டும். ரெண்டு பேருக்குமா மேசையில சாப்பாடு கொண்டந்து தாறன்''...... அம்மா சொன்னாள்.

மேசைக்குப் பக்கத்திலிருந்த கதிரையில் அமர்கிறான் அரியம், மேசையில் சிவபாதத்தினுடைய கல்யாண

அழைப்பிதழ் காட்கிடக்கிறது. அதை எடுத்துப் பார்க்கிருன் அரியம். சிவபாதம் அரியத்தோடு ஒன்ருகப் படித்தவன். ''டேய் போடா, வாடா'' ...... என்ற முறையில் அவர்களது அன்னியோன்யம். அரியம் கொழும்பிற்குப் போகும் வரை அவனுடைய ரகசியங்கள் இவனுக்கும் இவனுடைய ரகசியங்கள் அவனுக்கும் தெரியக்கூடிய மாதிரி அவர்களுடைய நட்பு இருந்தது. சினிமாவிற்குப் போவதிலிருந்து - திருகோணமலையின் தெருக்கள், ஒழுங்கைகள், எல்லாவற்றையும் சேர்வை பண்ணித் திரியும் அத்தனை சமயங்கள் வரை அவர்கள் ஒன்ருகவே திரிந்திருக்கிருர்கள். இளைஞர்களின் பொதுவான, இயல்பான பாலுணர்ச்சிக் கதைகள் அவர்களிடமும் பரிமாறப்பட்டிருக்கின்றன. கல்யாணம் கட்டிய முதலிரவன்று ''நீ எப்படி நடந்து கொள்வாய்'' என்று இவனும், நீ எப்படி நடந்து கொள்வாய்'' என்று அவனும் - கேள்விகள் கேட்டு, பதில் சொல்லி இன்பமாகக் கழித்த நாட்கள் எத்தனையோ. இருவரும் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டமையினுல் பெண்களிடம் முஸ்பாத்தி பண்ணித் திரிவதற்கு வசதியிருக்கவில்லை. அவர்களைப் பொறுத்த வரை - ரகசியமான முறையில் சில வாலிப சேட்டைகளில் ஈடுபட்டிருந்தும் கூட கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை. இவனைப் பற்றி பொல்லாததுமில்லாததுமாக அவனிடமும், அதே போல் அவனைப்பற்றி இவனிடமும் எவரும் சொல்வதற்குத் துணிந்திருக்கவில்லை. முகத்திற்காக ஒன்றும் அகத்திற்காக ஒன்றுமாக அவர்களின் நட்பு இருக்கவில்லை. அகத்திற்காக மட்டுமே அவர்கள் நட்பு இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இருவரும் பிரிகின்ற போது குழந்தைகள் போல அழுது வீணீ வடித்திருப்பார்களா! சிவபாதம் இப்போது பிசறீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிருன். ஊரிலேயே வேலை. வாரத்திற்கொரு முறையாவது அரியத்தை நினைவுகூர அவன் மறப்பதில்லை. பதினைந்து சதம் கையில் இருக்கும் போது கடிதமும், பத்து

சதம் கையில் இருக்கும் போது போஸ்ட்காடும் போட அவன் மறப்பதில்லை.

அந்த சிவபாதம் — இன்று இரவு ஏழு மணிக்கு 'கோணேச கோயிலில்' தாலி கட்டப் போகிறான்.

"அதாரம்மா, தம்பிராசா, பெருந்தெருவில் புத்தகக் கடைக்குப் பக்கத்தில் இருக்கிற அந்த மொட்டைத் தலையரோ"

"ஓம் தம்பி அவர்தான், அவர்ர மூத்த மகளைத்தான் சிவபாதத்துக்குக் குடுக்கிறார்"

"சரியான இடமாத்தான் பிடிச்சிருக்கிறான் சிவபாதம், அந்த ஒட்டு வீடு பெட்டைக்குத் தானே."

"ஓம், அந்த ஒட்டுவீடு, பன்குளத்தில ரெண்டு ஏக்கர் செய்கைக் காணி, பத்தாயிரம் காசு ......நல்ல பிள்ளைக்கு நல்ல இடமாகக் கிடைச்சிருக்கு. தாய் தகப்பனை மேவி நடக்கிற பிள்ளைகளுக்கு இப்பிடித்தான் நல்ல இடமாகக் கிடைக்கும் ... ஏன் உனக்கெண்டாப் போல என்ன ..... சுப்புறுமணியம் எப்பிடியெண்டாலும் உன்னை எடுத்துப் போட வேணுமெண்டுதானே ஒத்தக் காலில நிற்கிறார்."

தாயின் பதில் ஊசியெனப் பாய்ந்து உள்ளத்தை ஊடுருவியது. சாதாரண ஊசியில்லை, கறல் பிடித்த ஊசி. கறல் பிடித்த ஊசி ஏறிவிட்டால்—ஏரீஎஸ் ஊசி அடித்துக் கொள்ள வேண்டும், அல்லது மரமஞ்சள் அவித்துக் குடிக்க வேண்டும். இல்லாது போனால், ஏற்பு உண்டாகி விடும். பெற்ற தாயிடம் வாய் கூசாது பொய் சொல்லி ஏற்கனவே நைந்து போயிருந்த அந்த உள்ளத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறானே...... அவனுக்கு ஏற்பு மட்டுமில்லை, அதற்கு மேலான எந்த வருத்தமானாலும் வரலாம். அது பாவமில்லை.

அரியத்தின் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அவள் கவனிக்கவில்லை. அவள் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறாள். விருந்தாளி வேறு வந்திருக்கிறாள். அவளை நன்றாக உபசரிக்கவேண்டும். அவளை-விழுந்து விழுந்து உபசரிக்காது போனாலும். நின்று நின்றாவது உபசரித்தால்த்தானே—தன் மகனை, உலகமேயறியாத அப்பாவிப் பிள்ளையான தன் மகன் அரியத்தை—அவள் கொழும்பில் கவனமாகப் பார்பாள், என்ற பிரதிபலன் எதிர்பார்க்கும் மனம் அவளுக்கு. ஆகவே, காலைச் சாப்பாட்டைப் பூரணமாக்குவதில் ஈடுபட்டிருந்தாள் அவள்.

முகம் கழுவி வீட்டுவாசற்படியில் நின்று கால் மண்ணைத் தட்டிவிட்டு விருந்தைக்குள் ஏறினாள் மொனிக்கா.

''இப்பிடி கதிரையில இருங்கோ பிள்ளை''......முகத்தில் பட்டிருந்த கரியை சீலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டே சொன்னாள் அம்மா. செம்பில் தண்ணீர் கொண்டு வந்து மேசையில் வைத்தாள். ''உங்களுக்குத் தமிழ் தெரியுமோ''...... மீண்டும் கேட்டாள் அவள். 'ஓம் கொஞ்சம் தெரியும், முந்தி அவ்வளவு கதைக்கத் தெரியாது. உங்கட மகன் எங்கட வீட்டுக்கு வந்தபிறகுதான் நல்லாத் தமிழ் பேசப் பழகினனான்.''

அரியத்தின் முகத்தை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே பதில் சொன்னாள் மொனிக்கா. செம்புத் தண்ணீர், இரண்டு பீங்கான் கோப்பைகள், இரண்டு வெள்ளித் தம்ளர்கள்......மேசையை வந்தடைந்தன. அலுமாரிக்குள் அழகு காட்டிக்கொண்டிருக்கும் வெள்ளித் தம்ளர்கள் இது போன்ற சமயங்களில் வெளிவருவது வழக்கம்.

பிட்டு, மாசிச் சம்பல், முட்டைப் பொரியல், எல்லாவற்றையும் கொண்டு வந்து மேசை மீது வைத்தாள் அம்மா. ''அப்ப தம்பி, ரெண்டு பேரும் சாப்பிடுங்கோ

வன்''......இருவரும் கதிரைகளை இழுத்துவிட்டு உட்கார்ந்து உண்ணத் தொடங்கினர்.

''அந்த முட்டைப் பொரியலையும் போட்டுச் சாப்பிடுங்''கோவன், என்ன சொல்லிச் சாப்பிடுறீங்கள்.''...... தேவையானதைக் கவனித்து சப்பளை பண்ண தெய்வானை பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். முட்டைப் பொரியலை மொனிக்கா ஒதுக்கி வைத்திருந்தாள். சாப்பாட்டில் எண்ணெயென்றாலே அவளுக்கு அருவருப்பு.

''இது என்ன பிள்ளையள், முட்டைப் பொரியல் தின்னாத பிள்ளையள்.''

மொனிக்கா உண்டு முடிந்துவிட்டாள் அவளுடைய கோப்பையில் பிட்டு மிஞ்சியிருந்தது.

''என்ன பிள்ளை அரைவாசியில எழும்பிற்றீங்க''

''இல்லை போதும்''

எச்சில் கோப்பையைக் கழுவுவதற்காகத் தூக்கினாள் மொனிக்கா.

''ஆ......அப்பிடியே விட்டிட்டு எழும்புங்கோ, இந்தாங்க கையைக் கழுவுங்க'' தண்ணீர்ச் செம்பைக் காவிக்கொண்டு மல்லிகைச் செடிக்கருகே சென்று கை கழுவி விட்டுத் திரும்பி வந்தாள் மொனிக்கா.

அரியமும் சாப்பிட்டு முடிந்து எழுந்து விட்டான். அவனது கோப்பையில் மிச்சமில்லை. மாசிச்சம்பல் என்றால் சாப்பிடும் பீங்கான் கோப்பையையும் விழுங்கிவிடுங் குணம் அவனுக்கு.

# இருபத்திரண்டு

நேரம் ஒன்பதரையாகிவிட்டது. அரியம் கோழிக்கூட்டுக்குப் பக்கத்தில்—சாய்மனக் கதிரையில் சாய்ந்திருக்கிறான். ஐயா மீன் மலிவாக வாங்கி வந்திருந்தார். மார்க்கட்டில் மீன் வாங்கப் போனால் — மீனுக்காக விலை சொல்கிறான். யானைக்கும் குதிரைக்குமல்லவா விலை சொல்கிறான். அதனால், அதிகாலையில் ஹாபரடிக்குச் சென்று வள்ளத்தில் வைத்தே மீன் வாங்கிவிடும் பழக்கத்தை வழக்கப்படுத்திக் கொண்டிருந்தார். மொனிக்காவும், சீதாவும், வீட்டிற்குள் பாயை விரித்துப் போட்டுக் கொண்டு, ஏதோ, 'பொம்பிளைக் கதை' கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். தெய்வானை அரிசி அளைந்து கொண்டிருக்கிறாள். எதையோ நினைத்துக் கொண்ட அரியம் — சாய்கதிரையை விட்டு எழுந்து வருகிறான், சாரன் மாதிரி ஒரு பட்டாகக் கட்டியிருந்த ஐயாவின் வேட்டியை வேட்டி மாதிரிக் கட்டிக் கொள்கிறான். ஐயா பின்வளவிற்குள் ஏதோ வேலையாக இருக்கிறார்.

''அம்மா... ஐயா இப்ப எங்கயும் சைக்கிள் கொண்டு போகமாட்டார் என்ன?'' நான் ஒருக்கா சிவபாதத்தைப் போய் பாத்திற்று ஓடி வாறன்... கல்யாண நேரத்தில வேலை ஏதுமிருக்கும்... போயிற்று என்னண்டு பாத்திற்று ஓடி வாறன் ...மத்தியானச் சாப்பாட்டுக்குத் தான் வருவன்''

அம்மாவிடம் சொல்லிவிட்டு மொனிக்காவிடமும் ஒரு சொல் சொல்வதற்காக உட்செல்கிறான். அறைக்குள் சுவாரஷ்யமான அவர்களது கதை அரியத்தைக் கண்டவுடன் தடைப்படுகிறது.

''நான் ஒருக்கா கல்யாண வீட்டுக்குப் போயிற்று வாறன்''

M. SHRIBATHY, B. A. HONS

''சரி'' என்பதாக மொனிக்கா தலையாட்டுகிறாள். சீதாலட்சுமி...—அண்ணனின் முகத்தில் விழிக்கத் தனக்கு அருகதையில்லையோ எனப் பயந்து முகம் குனிகிறாள்.

''தங்கச்சி நான் போயிற்று ஓடி வாறன்......ஏன் இன்னம் சாப்பிடாமல் இருக்கிறாய், எழும்பிப் போய்ச் சாப்பிட்டுப் போட்டு, ஆறுதலாக வந்து கதை'' அரியம் வெளியில் போய்விட்டான். அண்ணன் சொல்லிவிட்டுச் சென்ற ஆறுதல் வார்த்தைகள் அவனுக்குத் தன்னிடத்தில் கோபமெதுவுமில்லை எனப் பறைசாற்றியது போலிருந்தது அவளுக்கு. சற்றே ஆறுதலடைந்தாள் அவள்.

தெருக்கதவு வரை உருட்டி வந்த சைக்கிளில் ஏறும் போது முன்வீட்டுப் பொன்னுச்சிக் கிழவி வழியைவிட்டு விலகி நிற்கிறாள்.

''எப்படியணை சுகமாயிருக்கிறீங்களோ''

''ஓம்......ஆர் தம்பி நீ......ஆ......தெய்வானையின்ரை மூத்தவனோ ...எப்ப தம்பி கொழும்பால வந்தனி........ ஆரோ சிங்களப் பெட்டையைக் கூட்டிக்கொண்டு வந்தனியெண்டு பால்காரச் சின்னத்தம்பியார் சொன்னார். உண்மையே?''

கிழவி மற்றக்கிழவிகளைப் போல—சம்பிரதாய கேள்வி பதில்களில் நேரத்தை செலவிடுவதில்லை. ஒரேயடியாக விடயத்திற்கு வந்து விடுவது அவள் வழக்கம். பதில் சொல்ல விரும்பாத அரியம், முகத்தை வேறுவிதமாக வைத்துக் கொண்டு சைக்கிளை உழக்கத் தொடங்கினான். கிழவி...''பிள்ளை தெய்வானை'' என்று குரல் கொடுத்தபடியே வளவிற்குள் நுழைகிறாள்.

கிழவி நுழைந்துவிட்டால்—திரும்பிவர ஒரு மணி நேரமாவது எடுக்கும். அந்த நேரத்திற்குள் தனக்கு வேண்

டிய அத்தனை விடயங்களையும் கிரகித்துக் கொண்டு திரும்பி விடுவாள். கடந்த இரண்டு மூன்று நாட்களாகவே அந்த வளவிற்குள் அடிக்கடி அனுதாபம் சொல்லிச் செல்லும் நேர்த்தியில் வந்து போய்க் கொண்டிருக்கிறாள் கிழவி. ஸ்கொட்லண்ட்யாட்டில் கடமை புரியவேண்டிய கிழவி வழி தவறிப் போய் இங்கு வந்து பிறந்திருக்கிறாள்.

'குருட்டுக் கிழவி—வீட்டை போய் மொனிக்காவைக் கண்டுட்டு ஊருக்குள்ள போய் என்னென்ன மாதிரி கயித்தைத் திரிக்கப் போகுதோ. சனிக் கிழவிக்கு வேறு வேலையேயில்லை. மனிசி... ஒண்டைப் பத்தா சொல்றதுக்கிடையில நாம ஐயா அம்மாவுக்கு உண்மையைச் சொல்லிப் போட வேணும்.'

மனதிற்குள் கிழவியைத் திட்டிக் கொண்டே—சைக்கிளை மிதிக்கிறான் அரியம். தெருவில் அரியத்தைத் தெரிந்தவர்கள், பால்ய நண்பர்கள், அவனை இடையிடையே நிற்பாட்டி—'எப்ப வந்தனீங்க, எப்ப போறீங்க' எப்பிடி கொழும்பு'ப் பக்கம் ஏதும் குழப்பமோ...என்ப தான சம்பிரதாயக் கேள்விகளால் மினக்கெடுத்தி... அனுப்பி வைக்கிறார்கள்.

சிவபாதத்தின் வீட்டிற்கு வந்து விட்டான் அரியம். சைக்கிளை தெருவேலியோரமாக சாய வைத்து விட்டு உள்ளே நுழைகிறான். குருமணல் குவியலொன்று. அதன் மேலிருந்து நான்கு இளவட்டங்கள் தோரணங்கள் இளைத்துக் கொண்டிருக்கிறார்கள். குலையோடு பிரட்டிய வாழைகள் நாலைந்து கீழே கிடக்கின்றன. தெரு லைட் கம்பத்தில் ஒருவன் ஏறி கொடி கட்டிக் கொண்டிருக்கிறான். உள்ளே ஒருவன் வெள்ளை கட்டிக் கொண்டு நிற்கிறான். இரு விருந்தைகளின் மூலைப்பாட்டில் மணவறை வைக்கிறார்கள் போலிருக்கிறது. சின்ன லைட்டுகள் பொருத்திய வயர்களை இருவர் மாட்டுகிறார்கள்.

குசினிக்குள் யாரோ சில பெண்களோடு கதைத்தபடி நின்ற சிவபாதம், அரியம் வளவிற்குள் நுழைந்ததைப் பார்த்ததும் ஓடி வருகிறான்.

ஆறு மாதங்களாகிவிட்டனவல்லவா இருவரும் கண்டு கதைத்து. அரியம் சிவபாதத்தினது திருமணத்திற்கென்று ஊருக்கு வரவில்லை. வந்த இடத்தில் கல்யாணத்திற்கும் போய் வந்தால் பிரச்சினை முடிந்தது என்பதுதான் உண்மை. அரியத்தைக் கண்டதும் சிவபாதம் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். தன் கல்யாணத்திற்கென்றே அவன் மினக்கெட்டு வந்திருப்பது போன்ற திருப்தியில் ஆனந்தப் பட்டான் அவன். சிவபாதத்தின் அன்பை உணர்ந்த போது — நண்பனுடைய கல்யாணத்திற்கென்றே வருவதற்கு சிவபாதம் அருகதையுடையவன் என்பதை அறிந்தான் அரியம். ஆனால் தான் வேறு விசயத்திற்காக வந்ததை நினைத்த போது—உள்ளுக்குள் வெட்கப் பட்டுக் கொண்டான்.

சிவபாதம்—தனக்கு வரப் போகின்ற பெண்ணைப் பற்றியும் ஏற்கனவே நடந்து முடிந்து விட்ட பதிவுத் திருமணத்தின் போது மணப்பெண்ணோடுதான் விட்ட முஸ்பாத்திகள் பற்றியும் அரியத்திடம் அளந்தான். மேசை லாச்சிக்குள் வைத்திருந்த பதிவுத் திருமண போட்டோக்களை எடுத்து காட்டி மகிழ்ந்தான். தனக்கு மனைவியாக வரப்போகிறவள் நல்ல குணவதியெனச் சொல்லிக் கொள்வதில் அவன் பெருமையடைந்தான். தாயாரிடம், அரியத்திற்கு கோப்பி போட்டுத் தருமாறு சொல்லி விட்டு வீட்டிற்குள் அவனை அழைத்துப் போகிறான்.

"டேய், என்னோடு நிண்டு மினக்கெடுக்கிறாய், உனக்கு எத்தினை வேலை இருக்கும், இன்விடேசன் எல்லாம் குடுத்திற்றியா", வீட்டிற்குள்ளிருந்த கட்டிலில் ஆறுதலாகக் குந்தியபடியே கேட்டான் அரியம்.

''அதெல்லாம் கொடுத்தாச்சு. எல்லா வேலையும் முடிஞ்சிற்று, சோடனைதான் கொஞ்சம் மிச்சமிருக்கு. அதைபொடியன்கள் செய்து போட்டிருவாங்கள். இப்ப கொஞ்சம் ஆறுதலாக் கதைப்பம். பேந்து எப்பிடி கொளும்பெல்லாம்? அப்ப பாத்ததுக்கு இப்ப கொஞ்சம் மெலிஞ்சு போயிருக்கிறாய் போல கிடக்கு''

''ஓம் மச்சான், நான் செய்திருக்கிற வேலைக்கு இது மட்டுமில்லை, இன்னும் மெலிய வேணும்''

''ஏண்டாப்பா, என்ன நடந்தது...சொல்லன்''?

''அதை உன்னட்டைச் சொல்லி உனர முடிவைக் கேட்கத்தானேடவந்தனான். இன்னம் வீட்டில ஒருவருக்கும் சொல்லேல்லை, மச்சான்''

விசயம் ஏதோ பாரதூரமானது என்று சிவபாதத்திற்கு விளங்க ஆரம்பித்தது. தன் வாழ்க்கையில் நடைபெற்றுப்போன அசம்பாவிதமான ஒரு திருப்பத்தினால்—அவதிப் பட்டுக் கொண்டிருக்கும் அரியத்திற்கு—தேவையானதெல்லாம் செய்ய வேண்டியது தனது கடமையென அவன் உணர்ந்தான்.

அரியம்—தான் கொழும்பு நகரின் புதிய சூழல்களுக்கு ஈடுகொடுக்க முடியாது பிழை செய்த அத்தனை விசயங்களையும் தலையிலிருந்து கால்வரை சொல்லிக் கொண்டிருந்தான் தான் பிழை விட்டது உண்மைதானென்றாலும், இனிமேல் மொனிக்காவை விட்டுப்பிரிவதென்பது நடவாத காரியமென்றும், ஆனால் அந்த நடவாத காரியத்தினால், தனது வீட்டில் ஏற்படப் போகின்ற நெருக்கடி நிலைமையைப் போக்கிக் கொள்வதற்குத் தனக்கு வழி தெரியயென்றும் சொல்லிச் சொல்லி—அழுகை வருவதான ஒரு துன்பச் சூழலில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

''மச்சான் என்னண்டாலும் நீ பிழைதான் விட்டுப் போட்டாய். ஒரு சிங்களப் பெண்ணைக் கொண்டு வந்து எங்கட அயலுக்குள் வாழவிடுவது எவ்வளவு கஷ்டமானது என்பதை நீ உணரவேயில்லை. எங்கட வோட்டர்ஸ் லிஸ்ற்றை எடுத்துப் பார். அவ்வளவு பேரும் தமிழர். இதை நான் என்னத்துக்குச் சொல்றனெண்டா—திரிகோணமலையில எவ்வளவோ சிங்கள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற போதிலும், எங்களுடைய அயல் மக்கள் சிங்கள மக்களோடு சரியாகப் பழகாதவர்கள். அந்தக் கட்சி, இந்தக் கட்சியென்று கட்சிகள் சொல்லும் வகுப்புவாத வழிமுறைகளில் சிந்தித்து வாழ்க்கை நடத்தும் இந்த வஸ்வேறபிக் மக்களிடத்தில நீ எப்படி வாழ்க்கை நடத்தப் போறாய். சிங்களவர்கள் எங்களுடைய சகோதரர்கள், அவர்களோடு நாங்கள் இணைந்து இருக்க வேண்டுமென்ற உண்மைகள் எனக்கும் உனக்குந்தான் தெரிந்திருக்கிறது. ரயிலொன்று தடம் புரண்டு நூறு பேர் மரணம் என்ற செய்தி பத்திரிகையில் வந்தால்—இறந்தவர்களில் சிங்களவர் கூடவா தமிழர் கூடவா என கூட்டல் கழித்தல் பார்த்து—சிங்களவர் கூடவாகவிருக்கும்போது அதில் ஒரு நிம்மதியும், தமிழர்கள் கூடவாக இருந்தால் அதில் ஒரு துன்பமும், அனுபவிக்கும் ஒரு சூழலில் வாழ்பவர்களல்லவா நமது மக்கள். அவர்களை கெதியில் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.''

''எந்த அரசாங்க உத்தியோகத்திற்குப் போனாலும், சிங்களவருக்குத்தான் எல்லாம் கிடைக்குது, எங்கட பிள்ளையளுக்கு ஒண்டும் கிடைக்குதில்லை என்றெல்லாம் பேசிப் பேசி ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.''

''ஐம்பத்தெட்டு கலவரத்தின் போது எங்கட தமிழ் மக்களுக்கு செய்த அநியாயத்தினால்தான் இன்று அவர்களுக்குள்ளேயே சண்டை போட்டு அழிந்திருக்கிறார்கள் என்ற இவர்கள் ரகசியமாக பேசிக்கொண்டிருப்பதை நீயே பல இடங்களில் கேட்டிருப்பாயே.''

இனி, சிங்களக் கலாச்சாரம்...எங்களுடைய கலாச்சாரப் புனிதங்களோடு ஒத்து வரக் கூடியதல்ல. நீ கோயிலுக்குப் போவாய், அவ விகாரைக்குப் போவா. உங்களுக்குப் பிறக்கிற பிள்ளை எங்கே போகுமோ. அதோடு, நான் சொன்னு நீ வருத்தப்படுவாய். நீ போய் ஆறு மாதங்கள் தான் ஆகிறது. இந்த ஆறு மாதங்களில் நீ உன் மனைவியோடு பழக ஆரம்பித்து நான்கு மாதங்கள் இருக்கும். அந்தக் குறுகிய காலத்திற்குள்—குடும்பப் பொறுப்புள்ள நீ உன்னையே அவளிடத்தில் இழந்திருக்கிறாய் என்றால்— அந்த இழப்பிற்கு—உண்மையான காதல் அல்லது நீ சொல்லிக்கொண்டிருக்கும் அன்பு ஆகியவைதான் காரணமாயிருக்கும் என்று நான் நினைக்கவில்லை. பகட்டான காமம்தான் காரணமாயிருக்க வேண்டும். இதை நான் சொல்வதால், நீ என்னில் கோபப்படலாம் ஆனுல், எனக்கு உனது நல்வாழ்க்கை தான் முக்கியம்.

பெண்களுக்கு உள்ளங்கள் பொதுவாகவே சுத்தமாக இருப்பது வழக்கம். ஏன் தெரியுமா — அவர்கள் அதை அடிக்கடி புதுசு புதுசாக மாற்றிக் கொள்கிருர்கள். உன்னுடைய மனைவியோ கொழும்புப் பெண். கொழும்புப் பெண்கள் தமது ரவிக்கையை மாற்றிக் கொள்வது போலத்தான் உள்ளத்தை மாற்றிக் கொள்வார்கள்.

நான் எனது உள்ளத்தைத் திறந்து சொல்கிறேன். நீ ஒரு சிங்களத்தியை கல்யாணம் செய்துகொண்டு வந்து நிற்கின்ற நிலையை எனது உள்ளம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அப்படியிருக்கும்போது—உன்னைச் சுமந்து பெற்று ஆளாக்கி—இப்போது உன் நிழலில் சிறிது இளைப்பாற நினைக்கும் தாய்தந்தையர்—எப்படி இதை ஏற்றுக்கொள்வர்.

சரி.. உன்னுடைய வீட்டார்தான் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என வைத்துக் கொள்வோம். அயல் ஏற்றுக் கொள்ளுமா? ஒன்றுமில்லாததற்கே அழகாக அசைந்து

கொண்டிருக்கும் அவர்களது வாய்களுக்கு நீ ஒடியல் கடிக்கக் கொடுத்திருக்கிறாய். எப்படி அவைகள் அசையப் போகின்றன என்று பொறுத்திருந்து பார்த்தாலல்லவா தெரியும்.

இந்த நிலையில், நீ அவளை மனைவியாக அடைந்து என்ன செய்ய முடியும். சமூகப் பிராணியாகிய ஒவ்வொரு மனிதனும் தன் சமூகத்தோடு ஒட்டாமல், உறவாடாமல், எத்தனை நாட்களைத்தான் தனியாகக் கழிக்கமுடியும். தமிழ்ச் சமூகமே வேண்டாம், எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விட்டு அவளோடு—அவளுடைய சமூகத்திற்கே போகின்றாய் என்று வைத்துக் கொள்வோம். அங்கு என்ன புதிதாக நடந்துவிடப் போகிறது.

எந்த ஒரு விசயத்தை எடுத்துக் கொண்டாலும், அதிலெல்லாம் தமக்குத்தான் முதலிடம் எனக் கேட்டுக் கொண்டிருக்கும் சிங்களவர்களுக்கு மத்தியில்—நீ—தன்னந் தனியனாக எப்படி வாழப் போகிறாய்.

வகுப்புவாதம் என்பது புகைந்து கொண்டிருக்கும் நெருப்புப் போன்றது. வகுப்புவாதம் இப்போது இல்லை, அது எப்போதோ அணைந்து விட்டது என்று நீ சொல்லலாம். ஆனால் அதில் உண்மையில்லை. புகைந்து கொண்டிருக்கிற நெருப்பை அணையவிடாது தூபம் போட்டுக் கொண்டேயிருப்பார்கள் சொந்த லாபம் தேடும் அரசியல் வாதிகள். கொழுந்து விட்டெரியும் ஜுவாலையாக வகுப்பு வாதம் எழுகின்றபோது முதலில் பாதிக்கப்படப் போவது உன் குடும்பமாகத்தான் இருக்கும்.

அதுதான் எனக்கு வருத்தம். நான் உணர்ச்சி வசத்தில், என்னை மறந்த நிலையில்—உன்னுடைய மனதை நோக வைக்கும் வகையில் ஏதாவது சொல்லியிருக்கக் கூடும். அதையிட்டு நீ வருத்தப்படக்கூடாது. உன் வாழ்க்கை நன்றாக அமையவேண்டுமென்பதுதான் எனது ஆசை.

சிவபாதம் சிறிது நேரம் நிறுத்திவிட்டு ... ''அம்மா கோப்பியைக் கொண்டாவனை'' என்று வெளியே போய் சத்தம் போட்டுவிட்டு வருகிறுன். அரியத்திற்கும் மௌனத்திற்கும் உறவில் நெருக்கம் கூடியிருக்கிறது. நாடியில் கைகொடுத்தபடியே நிலத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறுன்.

அம்மா கொண்டுவந்த கோப்பிக் கோப்பைகளை எடுத்து ஸ்டூலில் வைத்து அதிலொன்றை அரியத்திடம் தருகிறுன் சிவபாதம். தானும் ஒரு மூடர் அருந்திவிட்டு மீண்டும் தொடர்கிறுன்.

''கிட்டடியில் வந்த பேப்பர்களைப் பார்த்திருப்பாய் என்று நினைக்கிறேன். பங்களாதேஸ் கேட்டு வங்காள மக்கள் வென்றுவிட்ட காரணத்திஞல்; இலங்கைத் தமிழரும் யாழ்தேஸ் கேட்பதற்கு ஆயத்தமாகிருர்கள் போலிருக்கிறது என இரண்டொரு வகுப்புவாத அரசியல் வாதிகள் பேசியிருக்கிருர்கள். அவர்களின் பேச்சிற்கு அழகான உருவம் கொடுத்து தம் விற்பனையை மக்களிடையே கூட்டுவதில் முன்னிற்கின்றன சில குறிப்பிட்ட தமிழ்ப் பத்திரிகைகள். ஏதோ ஒன்றை யாரோ சொல்லிவிட்டுப் போக, அதை வகுப்புவாதமாக்கி ஒற்றுமையான மக்களிடையே பிளவை உண்டாக்கி சுயநன்மை தேடத்துடிக்கும் இவ்வகையான பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் இருக்கும் வரை, உன் போன்ற சிலர்—அதாவது சிங்களப் பெண்களை மணமுடித்த தமிழர் சிலர் — நிம்மதியாக வாழமுடியாது தான்.

கொஞ்ச நேரம் யோசித்துத் தலையைச் சொறிந்து விட்டுக் கொண்டான் சிவபாதம். ''இப்ப, எப்படி உன்னுடைய சங்கடத்தைப் போக்குவதென்றே எனக்கு விளங்குதில்லை. இதற்குத்தான் சொல்லுவார்கள்—பெண்களை அதிகம் நெருங்கவிடக் கூடாது.......ஆண்களை அதிகம் விலக

விடக் கூடாது, என்று. நீ கொழும்பீற்கு விலகிப்போனதை நிறுத்தியிருக்க முடியாது. ஆனால், மொனிக்கா உன்னை நெருங்கி வந்ததை நீ நிறுத்தியிருக்கலாம். ம்..... இப்ப என்ன செய்கிறது.'' சிந்தனை ரேகைகள் சிவபாதத்தின் முகத்தில் நெளியத் தொடங்கியது.

''முக்கியமான இன்னொன்று... என்னையே எடுத்துக்கொள். நல்ல சீதனத்தோடு கட்டப்போகிறேன். நீயோ... வாங்குகின்ற சம்பளத்தோடுதான் சமாளிக்கவேணும். கல்யாணம் செய்து முதலிரண்டு மாதங்களுக்கு சந்தோசமாகக் கழியும் காலம், அதன் போக்கில் சிறிது சிறிதாகக் குறைந்து...... ஏனடா இதற்குள் மாட்டிக் கொண்டோம் என்ற நிலைமைக்குள் சிக்க வைத்துவிடும். இதற்குக் காரணம் என்ன... காசு......காசில்லாதவனுடைய வாழ்க்கை உப்புச் சப்பற்றது.''

திருமண வாழ்க்கையின் இரகசிய உடல் உள்ள உறவுகள்—மர்மமாக, இதுவரை அனுபவித்துப் பார்த்திராத ஒன்றாக இருப்பதால் — அதனூடே ஒரு மாறாத கவர்ச்சி தோன்றி அந்தக் கவர்ச்சியின் ஆக்கிரமிப்பால் உடலின் தாபங்களைப் போக்கிக் கொள்ள வேண்டி ஜோடி ஒன்றைச் சேர்த்துக் கொண்டு..... அதுவரை அனுபவித்திராத இன்பங்களை ஒன்றொன்றாக உணர ஆரம்பித்து, நாட்களின் ஓட்டத்தில் — மர்மமாக, அதிசயமாக, பேரின்பமாக இருந்த மிகப் பெரிய சிற்றின்பமெல்லாம் — ரகசியத்தையெல்லாம் இழந்து போன மர்மமற்ற இன்பமாய், சாதாரணமாய் மாறிவிட்ட போது... வாழ்க்கையில் துன்பமான பகுதிகள் தலைகாட்டத் தொடங்கி விடும். அப்போது காசுதான் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தெரிகிறது.

சீதனத்தோடு திருமணத்தைச் செய்து கொள்கிறவன் இம்மாதிரியான நிலைமை தலைகாட்டும்போது தப்பித்துக் கொள்கிறான். ஆனால் .....சீதனம் வாங்காதவன்?

இப்பவும் உனக்கு வீடுவாசல் எல்லாம் தந்து ரொக்க மும் இருபத்தைந்து தருவதற்கு சுப்புறமணியம் தயாராக இருக்கிறார். இன்னும் காலம் கடந்து விடவில்லை. கெதியில் ஒரு முடிவிற்கு வருவதால் தற்போதய கஷ்டங்களிலிருந்து நீ தப்பித்துக் கொள்ளலாம். உனக்கு என்ன உதவி தேவை யென்றாலும்—நான் செய்யத் தயாராயிருக்கிறேன். உன்னுடைய முடிவைச் சொல்.''

சிவபாதம்—தன் நண்பன் பெரிய பாழுங்கிணற்றில் விழுந்து வெளியேறத் தெரியாது அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறான் என்பது போலவும், அவனுக்குத் தன் உதவி இச் சமயத்தில் மிகவும் தேவையானது போலவும் மனதிற்குள் ஆழமாகச் சிந்தித்ததன் விளைவாக — பெரிய லெக்சர் ஒன்றை அடித்துவிட்டு அரியத்தின் முகத்தைப் பார்த்தான். தனது விளக்கங்கள் அவனில் எந்த அளவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை அறிய அரியத்தின் கண்களை ஊடுருவிப் பார்த்தான் அவன்.

தன் நண்பன் சொல்லி முடிக்கும் வரை, சொன்னவைகள் தனக்கு உடன்பாடானவை அல்லவென்றாலும், இடையில் மறுத்துப் பேசுவது அவனுடைய உண்மையான கருத்துக்களை மாற்ற வைத்துவிடும் என்பதால் மௌனமாக இருந்தான் அரியம். அவன் சொன்னவைகள் அருவருப்பாகவும், சிலது அநியாயமாகவும் இருந்தபோதிலும், அவையெல்லாம் தனது நன்மைக்காகச் சொல்லப்பட்டமையினால்—உடனடியாக மறுப்புத் தெரிவித்து விசயத்தைக் குழப்பிக் கொள்ள விரும்பவில்லை அவன்.

வெளியே......கல்யாணச் சோடனை செய்யும் பயல்களின் 'பம்பல்' சத்தங்கள்.

''டேய் இந்த ஏணியைப் பிடி......ஏணியைப் பிடியெண்டா எங்க பிராக்குப் பாக்கிறாய்''

''வாழையை இப்ப கட்டினு வெய்யிலுக்குக் காய்ஞ்சு போயிடும்''

''மேளத்துக்குச் சொன்னதா''......''ஓம், சரியா ஐஞ்சரை மணிக்கு வாறனெண்டு சொன்னவன்''

''டேய் அந்த வெத்திலைத் தட்டத்தை எடு''

''என்ன மாப்பிள்ளையை வெளியில காணேல்லை, இப்பவே ஒத்திகை பாக்கிருர்...... கல்யாணம் கட்டினுப் பிறகு வெளீல எங்க வாறது''

அரியம்—வெளியே கேட்கும் சத்தங்களில் சிறிது நேரம் புலனைச் செலுத்திவிட்டு மீண்டும் பழைய சூழலுக்குள் கைதாகிருன். இவ்வளவு நேரமும் மௌனமாகவிருந்த அரியம் இருமிக் கொண்டு பேசத் தொடங்கினுன்,

''சிவபாதம், நான் செய்தது வாலிப வயதின் தாக்கத்தினுல் செய்த வரம்பு மீறிய தவருக இருக்கலாம். அதை நான் ஒப்புக் கொள்கிறேன். செய்த தவறுக்கு பரிகாரம் தேட வேண்டி கல்யாணமும் செய்து கொண்டு விட்டேன். என்னைப் பொறுத்த அளவில் நான் செய்த அந்தத் தவறுக்கு இதுதான் தண்டனை என்று உணர்ந்து அதை வலிந்து ஏற்றுக் கொண்டிருக்கிறேன். வலிந்து தண்டனையை ஏற்றுக் கொண்ட எனக்கு அத் தண்டனையினுல் வரப்போகின்ற கஷ்டங்களை தாங்கிக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் தேவை. அந்த மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ளவே நான் தெண்டித்துக் கொள்ள வேண்டும். என் தாய் தந்தை ஆகியோரின் நிலைமைகளை நான் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. தங்கையின் பிற்கால வாழ்க்கைக்கு என்னையே நம்பிக் கொண்டிருக்கிருர்கள் அம்மாவும் ஐயாவும். இந் நிலையில் என் தங்கைக்கு நல்வாழ்வு அமைத்துத்தர வேண்டியது எனது கடமை. ஆனுல்—என்னை நம்பி வந்திருக்கும் ஒருத்தியின் வாழ்க்கையை நான் கெடுக்கமுடி

யாது. அவளுடைய வாழ்க்கையைக் கெடுத்துத்தான் நான் எனது தங்கைக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமா?

செய்த ஒரு தவறை மறைக்க, இன்னொரு தவறு செய்கிறோமே..... அதுதான் பெரிய தவறு, என இப்போது உணர்கிறேன். கொழும்பால் வந்ததுமே, நான் யோனிக்காவை மணம் புரிந்த விசயத்தை வீட்டில் சொல்லியிருக்க வேண்டும். என்னுடைய வழமையான தயக்கம் இந்த நேரத்திலும் தன் வேலையை காட்டிவிட்டது. அது பெரிய பிழை என்று இப்போதுதான் உணர்கிறேன். நான் இப்போது எப்படியாவது உண்மையை என் வீட்டில் சொல்லிவிட வேண்டும் அதற்காகத்தான் எனக்கு உனது உதவி தேவை.

நீ சொன்னதுபோன்று எங்கள் இருவரது உறவும் காமத்தின் அடிப்படையில்தான் உருவானது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால்—இப்போது எங்களிடையே காமமில்லை. காதல்தான் இருக்கிறது. அதை நீ நம்ப வேண்டும்.

சீதனமில்லாமல் திருமணம் செய்யக்கூடாது என்று சொன்னாய். அதிஷ்டவசமாகமோ அல்லது துரதிஷ்டவசமாகவோ நான் சீதனம் வாங்கக்கூடிய நிலைமை அமைந்திருக்கவில்லை. நீ சொன்ன காரணங்கள் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதுதான். ஆனால், எனக்கு சீதனம் வாங்குவதில் அவ்வளவு விருப்பமில்லை.

இன்னொன்று சொல்வேன்.........உண்மையான அன்பிற்கு முன்னால், வகுப்புவாதம் மட்டுமல்ல வேறு எந்த முடக்குவாதம் கூட, நிற்கமுடியாது என்பது எனது அசையாத நம்பிக்கை.

எனவே..... நீ நடந்ததை மறந்துவிடு. இனி நடக்கப் போவதில் உன்னிடமிருந்து நான் எதிர்பார்க்கும் உத

வியை எனக்குச் செய்துவிடு. அதுதான் இப்போது எனக்குத் தேவை.''

அரியம் சொல்லிவிட்டு மூக்கில் படர்ந்திருந்த வியர்வையை துடைத்து விட்டுக்கொண்டான். அந்த அறைக்கு வெளியே—கல்யாண வீட்டிற்கேயுரித்தான சம்பாசணைகள் சோடனைகள் பரபரப்புடன் நடந்து கொண்டிருக்கின்றன. அரியத்தின் மூக்கு இன்னும் வியர்த்து வழிந்தது. வேட்டித் தலைப்பால் துடைத்துவிட்டான்.

''மச்சான் உனக்கு ஏப்ப நேரம் இருக்கோ தெரியேல்லை. நேரமில்லாட்டி விடு பேந்து பாப்பம்'' அரியம் சந்தேகத்துடன் கேட்டான்.

''அதுதான் சொன்னனே, எல்லாத்தையும் முடிச்சிற்றன் எண்டு. நீ யோசிக்காமச் சொல்லு''

''இல்லை மச்சான். இந்த நேரத்திலை நானல்லோ உனக்காக ஓடியாடித் திரிஞ்சு கல்யாணக் காரியங்களைப் பார்க்க வேணும். அதை விட்டுட்டு உன்னை மினக்கெடுத்திக் கொண்டு நிக்கிறன்.''

அதைப் பற்றிப் பரவாயில்லை, அரியம். நீ விசயத்தைச் சொல்லன்.''

'சிவபாதத்தை விட்டால் இந்த நேரத்தில் வேறு யாரும் துணையில்லை. என்ன செய்வது அவனைத்தான் கஷ்டப்படுத்த வேண்டியிருக்கிறது.'... எனத் துன்பமாக நினைத்துக் கொண்டான் அரியம்.

''சரி மச்சான் சொல்றன். இப்ப நீ எங்கட வீட்டை வரவேணும். நான் உள்ளுக்குள்ள வரமாட்டன். நீ போய் அம்மா ஐயாட்டை விசயத்தைச் சொல்லி விளங்கப்படுத்தி அவங்களை ஒரு மாதிரி சமாளிச்சு வை...... நான் கொஞ்ச நேரத்தால வாறன்.''

திருமண நேரத்தில் தேவையில்லாத வேலையைக் கொடுத்து கல்யாண மாப்பிள்ளையைக் கஷ்டப்படுத்துவது அரியத்தின் இதயத்திற்கு சங்கடமாக விருக்கின்றது.

''சரி வா வெளிக்கிடு... ரெண்டு பேரும் ஓண்டாப் போயிற்று, உங்கட வீட்டுச் சந்தியில மாறுவம். நீ லைப்றறி யில பேப்பரைக் கீப்பரைப் பாத்துக் கொண்டு நில்லு. பேந்து ஒரு அரை மணித்தியாலத்தால வா என்ன?...... சிவபாதம் சொல்லிவிட்டு சாரத்தை அவிட்டு ஒரு தரம் இறுகக் கட்டிக் கொண்டான். அரியமும் எழுந்து மேசையி லிருந்த சிப்பால் தலையை ஒரு தரம் இழுத்து விட்டுக் கொள் கிறான்.

''இந்த நேரத்தில ஒரு கண்டறியாத தலையிழுப்பு, வாடா'' அரியத்தை இழுத்துக் கொண்டு சிவபாதம் போகிறான். சிவபாதத்தின் தாய் அன்னலெட்சுமியை அடுக் களையில் — பலகாரச் சட்டிகளிடையே தேடிக் கண்டு பிடித்து... 'அப்ப போயிற்றுப் பேந்து வாறன்'' என்று சொல்லிவிட்டு வெளிக்கிடுகிறான் அரியம்.

அந்தத் தெரு — பொலிஸ்காரர்கள் பொதுவாகவே வராத தெரு. பின்னர் அவர்கள் யாருக்குப் பயப்பட வேண்டும். பன்னிரண்டு மணி வெய்யிலில் - அந்தத் தெரு வில் முத்தரின் வாட்டர்புறாப் சைக்கின் 'டபிள்' அடித்துப் போய்க் கொண்டிருக்கிறது.

★ ★ ★

# இருபத்திமூன்று

டபிளில் போகும் போதே, தன் வீட்டில் நடந்த ட்ர பிளைப் பற்றி — அதாவது - தங்கையின் கடிதப் பரிமாற்றம் பற்றி சிவபாதத்திடம் எல்லாம் கூறுகிறான் அரியம். சிவபா தத்திற்கு அந்த விசயம் ஏற்கனவே தெரியும். இருந்தா

லும், அரியமாக அதைச் சொல்லும்வரை தான் நினைப்பூட்டுவது இந்த நேரத்தில் அவ்வளவு அழகில்லை என அவன் நினைத்திருந்தான்.

அரியம் கேட்டான்... 'சிவா, அவன் மாணிக்கராசாவைப் பற்றி உன்ர அபிப்பிராயம் என்ன?'

''அவன் ஆள் பிழையில்லை. முந்தி கோப்பிறேசனில வேலை செய்யேக்குள்ள நல்ல சம்பளம், கொஞ்சம் குடிச்சுத் திரிஞ்சவன்தான். இப்ப விட்டுட்டான் போல. ஆனா... நல்லவன் குடும்பத்தை வைச்சு காப்பாத்துவான். நேற்றுக் கேள்விப்பட்டன்... அவனும் கட்டினா உன்ர தங்கச்சியைத்தான் கட்டிறது என்டு ஒற்றைக் காலில நிற்கிறானாம். இங்க... கூப்பன் கடை மனேச்சர் சொன்னவர்''

தன்னுடைய தாய் தகப்பன் - தங்கையை மாணிக்கராசா மணம் புரிவதற்கு மறுப்புச் சொல்லாது போனால், பிரச்சனைகளுக்கு இடமேயில்லை என சிந்தனை பூர்வமாக நம்பினான், அரியம். அவன் சிந்தனை பூர்வமாக நம்பி எதை வெட்டி முறிக்க முடியும். எல்லாம் ஐயா அம்மாவின் கைகளிலல்லவா இருக்கிறது?

சந்தி வந்தது. அரியம் இறங்கிக் கொண்டான்; சிவபாதம் 'சிங்கிளாகப்' போய்க் கொண்டிருந்தான். வாசிகசாலைக்குள் நுழைந்தான் அரியம். வாசிகசாலைக்குள் வாசிப்பவர்கள் இல்லை. வெய்யிலுக்கு ஒதுங்கியவர்களும் அரட்டை அடிப்பவர்களும், வேலையில்லாத சோம்பேறிகளுந்தான் இருந்தார்கள். அரை மணி நேரத்தைப் போக்க வேண்டுமானால், அவனும் சோம்பேறியாக மாறித்தான் ஆகவேண்டும்.

பேருக்கு அங்கு இருந்த வீரகேசரியின் பக்கங்களைத் தட்டி நுனிப்புல் மேய ஆரம்பித்தான் அவன்.

"குமுதம், ஆனந்தவிகடன், பொம்மை, பேசும்படம், கல்கண்டு, ராணி மேசையில் கசங்கிப் போயிருந்தன. இன்னொரு மேசையில் மல்லிகை, கணையாழி, மலர், தமிழமுதம்,...கசங்காது வைத்தது வைத்த மாதிரியே இருந்தன. உண்மையான இலக்கிய சேவை செய்யும் நம்மூர்ப் பத்திரிகைகளுக்கு இன்னும் ஆதரவு இல்லை. அதனுல்தான் அவை கசங்காது போட்டது போட்ட மாதிரியே இருந்தன. நம் நாட்டுப் பத்திரிகைகள் தொடங்கியது போலவே நின்று விடுகின்ற காரணத்தை அந்த வாசிகசாலையின் இலக்கிய ஆர்வத்திலிருந்து கண்டு கொண்டான் அரியம். நூறு பக்கங்களில்—கடைசி ஐம்பது பக்கங்களாவது விளம்பரங்களாலேயே நிறைக்கப்பட்டிருக்கும் குமுதம், ஆனந்த விகடன் போன்றவைகள் அங்கே பார்த்துப் பார்த்துக் கசங்கிய நிலையிலிருந்ததைக் கண்டு அரியத்தின் இதயம் கசங்கியது. இயல்பாகவே, அரியம் இலக்கியத் தாகம் உள்ளவன். போலிகளைக் கண்டு மனம் சோம்புகிறவன் அவன்.

இலக்கியத்தரமும், எளிமையும் நிறைந்தவைகள் பார்ப்பாரற்று தொடுவாரற்றுக் கிடக்கின்றன. இலக்கியத் தரமற்றதும், பகட்டானதுமான குப்பைகள் கோலோச்சுகின்றன. அந்தக் கோலோச்சிலை கொன்று அழிக்காத வரை— நம் தரமான பத்திரிகைகள் இப்படியே 'என்றும் புதிதாக' இருக்கவேண்டியதுதான். பகட்டிற்கும் படாடோபத்திற்கும் உள்ள செல்வாக்கு என்றுதான் நம்மிடமிருந்து செல்லுமோ...என உள்ளத்திற்குள் பொருமிக் கொண்டான்.

அடுத்த கணமே வீட்டில் நடந்து கொண்டிருக்கும் என அவன் எதிர்பார்த்த பிரளயத்தை எண்ணி—மனம் டிக்டிக் என அடிக்க ஆரம்பித்தது. வயிற்றுக்குள் ஏதோ பிரண்டு, மலகூடத்தை நாடவேண்டிய உணர்வை அவனிடத்தில் உண்டாக்கியது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான். அரைமணி நேரம் போகவேண்டுமே. வாசிகசாலை

யின் மணிக்கூடு பன்னிரண்டரையைக் காட்டியது. ஐந்து தரம் மணியடித்துக் கொண்டது. உள்ளுக்குள் சிரித்துக் கொள்கிறன் அரியம். உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுபவர்களுக்கொப்பாக—அந்த மணிக்கூடும் பன்னிரண்டரையைக் காட்டி ஐந்து தரம் அடித்துக் கொண்ட விந்தையை அனுபவித்துத்தான் அவன் சிரித்தி ருக்க வேண்டும்.

அந்த அறையின் ஒரு ஓரத்தே—நாலேந்து'ரீன்' வய தைத் தாண்ட இருக்கும் பிராயத்தினர்கள் இருந்து அடித் துக் கொண்டிருக்கும் அரட்டையில் அரியத்தின் மனம் வேண்டா வெறுப்பாக, இன்னும் கால் மணி நேரத்தை யாவது போக்கியாக வேண்டுமேயென்ற தேவைக்காக ஒன்றியது.

''ரிக்சாகாரன் பாத்தியாடா, நேற்று நாலு சோவும் ஹவுஸ் புல். நாலு நாளேக்கு முந்தி சொல்லி வைச்சதால தான் நேற்று டிக்கட் கிடைச்சது. இல்லாட்டிப் பாத் திருக்கேலாது.''

''எப்பிடி மச்சான் அந்த ரிக்சா பைட் புதுமையா எடுத்திருக்காங்கள் என்ன?''

''இவன் அசோகன், எம்ஜீஆரோடை வில்லனுக்கு அவ்வளவு பொருத்தமில்லே, வீரப்பா அல்லாட்டி நம்பி யார்தான் சரி...புதுமுகம் மஞ்சுளா எப்பிடிரு''

''சின்னப் பெட்டையடா...ஒரு பதினறு இல்லாட்டி பதினேழு வயசிருக்கும்...அளவான சரக்குத்தான்.''

இவர் கிழவர், தகப்பன் பாத்திரத்தில நடிக்கிறதை விட்டுட்டு, பதினேஞ்சு பதினறு வயசுப் பெட்டைய ளோடை இன்னும் நடிச்சுக் கொண்டிருக்கிறர். சிவாஜி யண்டா அப்பிடியில்லே. 'வியட்நாம் வீடு' பாத்தியா எப் படி அக்டிங் என்று''

''இங்கர், கிழவன் எண்டு சொல்லாதை, தெரிஞ்சுதா......இப்ப பாத்தாலும், இருபத்தி ஐஞ்சு வயதுப் பொடியன் மாதிரி... நல்ல சுருட்டைத் தலைமயிரும், வெள்ளைக்காரன் மாதிரிநிறமும்''

''டேய் டேய், அது டோப்பாடா, தலையிலை வழுக்கை தெரிஞ்சுதோ, அதை மறைக்கத்தான் தொப்பி போடுருர் இப்ப.''

''இவர் ஏதோ பக்கத்திலை நிண்டு பாத்த மாதிரி கதைக்கிருர். நேரில பாக்காம கதைக்கப்படாது.''

''ஏன் சிவாஜியண்டாப் போல என்ன .... அவருக்கும் இப்ப நாப்பத்தைஞ்சு வயசாப் போச்சுது ...பேத்திக்கே ரெண்டு வயதாப் போச்சு''

''ஆரு தர்மம் செய்யிறதில, எம்.ஜி.ஆரை அடிக்கேலாது... போன மாதம் சென்னையில வந்த வெள்ளத்துக்கு உடன ஒரு லட்சம் கொடுத்தவர் தெரியுமா, சிவாஜியண்டா மண்ணாங்கட்டியைத்தான் கொடுப்பார்.''

''இஞ்ச, நேற்று மட்டும் மூவாயிரம் வசூலாண்டா''

''பின்ன சும்மாவா ....சென்னையில வெள்ளி விழா கொண்டாடின படமல்லவா.''

''இந்த வருசத்துக்குள்ள வந்த படங்களில வசூல் கூட ரிக்சாக்காரனுக்குத்தான்''

''சீ ....சீ...... அப்பிடிச் சொல்லாதையும் ...சவாலே சமாளி ஏழு தியேட்டரில நூறு நாள் கொண்டாடியிருக்குத் தெரியுமா.''

''அது தம்பி தானு ஓடேல்லை, சும்மா மதிப்புக்காக ஓட்டினவங்கள்.''

''அப்படியெண்டு சொன்னு, நாங்களும் சொல்லலாம் தானே ரிக்சாக்காரனும் அப்பிடித்தான் ஓட்டினவங்களெண்டு''

''நீ தம்பி, ரிக்சாக்காரனோட, சவாலே சமாளியைக் கொண்டு ஒப்பிடாதை, எனக்குத் தெரியும்......நீ இப்படிப் பேசுவாய் எண்டு. வீண் நியாயம் பேசுவாயெண்டு தான் நான் கையோட இந்த நோட்டீசைக் கொண்டு வந்தனுன்.''

''கேள் வாசிக்கிறன்.''

ஒரு பையன் உரத்து வாசிக்கிருன்.

ஹலோ மிஸ்டர் சிவாஜி,

சவாலே சமாளிக்கு, சாந்தியில் நூற்றியேழு காட்சிகள் அரங்கு நிறைந்த வசூல் ரூ 313284/20 சதமென்று 27. 1. 72. தினத்தந்தியில் விளம்பரம் செய்திருக்கிறீர்கள். அந்த விளம்பரத்தின்படி பார்த்தால், ஒரு காட்சியின் அரங்கு நிறைந்த வசூல் ரூ. 2926/40 சதமாகிறது. அந்த நிலையில் முதல் இரண்டு வாரங்களில் வசூல் என்ன தெரியுமா? ரூ. 155099/20 சதம். ஆனல் நீங்கள் தினத்தந்தியில் 13. 3. 72ந் திகதியில் விளம்பரம் செய்தது 14 நாள் வசூல் ரூ. 155095/24 சதம்.

மீதியுள்ள ரூ 3/96சதம் எங்கே? இப்படி ஆரம்பத்திலேயே வசூல் குறைந்த 'சவாலே சமாளிக்கு' எப்படித் தொடர்ந்து அரங்கு நிறையும். உமது வசூல் விளம்பரம் போலி என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

சென்னையில் 'ரிக்சாக்காரன் வசூல் மழை பாரீர்

100 நாளில் 12 திரைகளில் ரூ. 3497648/48. இத்தனை வெற்றி வாகை சூடிய 'ரிக்சாக்காரன்' காவியத்

தைக் காண ஸ்ரீகிருஸ்ணு திரையரங்கத்திற்கு மடை திறந்த வெள்ளம் போல ஒவ்வொரு நாளும் வரும் ரசிகப் பெருமக்களைப் பாரீர்.

அன்று இல்லாளு வந்தாள், தெருக்கோடியில் நின்ருள்;

இன்று 'ரிக்சாக்காரன்' வந்தான், பொருள் கோடி தந்தான்.

எனக் கூறி பெருமையடையும் உலகம் சுற்றும் வாலிபன் எம்ஜீஆரின் ரசிகர் மன்றம். திருகோணமலை.

மதுவை விலக்கிடுவீர்......மதியை வளர்த்திடுவீர்...... வாழ்க எம்ஜீஆர்...... வீழ்க சிவாஜி.

நோட்டீசின் பொருளடக்கத்தை ஏற்றி இறக்கி எதுகை மோனையோடு வாசித்து விட்டு அவன் செருமினுன்.

சரி, நீங்கள் சொல்லிறியள்......எம்ஜீஆர் பெரிய கொடை வள்ளல், மக்களுக்காக கஷ்டப்படுகிறவர் எண்டு...... இப்ப கிட்டடியில பேப்பரில பாத்திருப்பீங்க, பத்தோ பதினைஞ்சு லட்சம் வருமான வரி கட்டாம புலுடா விட்டுக் கொண்டிருக்கிருர் ... இவ்வளவு நாளைக் குப் பிறகு இப்பதானே அவருடைய புலுடாவெல்லாம் பேப்பரில வருகுது.''

''தன்னட்டை இருக்கிற காசெல்லாத்தையும் கொடைக்குக் குடுக்கிறதாலதான் இப்படி வருமான வரி கட்டாமல் போயிருக்கும், நீ இருந்து பார்ரா எம்ஜீஆர் ஒரு நாளைக்குத் தமிழ்நாட்டு முதன் மந்திரியாக வராட்டி, நான் இந்த மொட்டை வழிக்கிறன்.''

''சும்மா போடா, வருமான வரிக்கு டிமிக்கி கொடுக் கிறதுக்குத்தான் கொடை கிடையெண்டு அவர் குடுக்

றது. நடிகனெல்லாம் முதன் மந்திரியா வந்தா அவ்வளவு தான்''

ஒருவன் கோபம் கொண்டு கத்துகிருன்.

நானும் கன நேரமாப் பாத்துக் கொண்டிருக்கிறன், நீ உன்ர வாயில வந்த மாதிரியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிருய், எதுக்கும் ஒரு அளவு இருக்கோணும். உங்கட சிவாஜியை நாங்கள் இப்படி அநியாயமா சொல்றமா.''

''டேய் அதை விடு. நாங்க எங்கட எம்ஜீஆரின்ர மன்றத்தால,......ரெண்டு மூண்டு நாளில காசு சேக்கப் போறம். இப்ப கிட்டத்தட்ட, 15000 எம்ஜீஆர் மன்றங்களிருக்கு. ஒரு மன்றம் ஆயிரம் சேத்தா எங்க வருகுது எண்டு பார்''

''ஆரிட்டைக் காசு கேக்கப் போறீங்க''

''வேறு ஆரிட்டை சனங்களிட்டைத்தான்''

ஒருவன் ஒரு பக்கத்திலிருந்து சொட்டாவி விடுகிருன்.

''சரி .....சரி .. பன்னிரண்டே முக்காலாம் போச்சு .. பசிக்குது சாப்பிட்டுட்டுப் பேந்து வாறன்''

''கூயா, கதைக்கேலாமப் போருர். கூயா.. கூயா...

சிறிது நேரத்தால் அரட்டைக் கூட்டத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவராக பசிக் காரணத்தைக் காட்டி நழுவிக் கொண்டிருந்தார்கள், வீட்டிற்குப் போனுல் சாப்பாடு தயாராக இருக்கும். கொட்டிக்கொள்ள வேண்டியது. திரும்பவும், இதே இடத்தில், வந்து கூடி தின்றது செரிப்பதற்காக எம்ஜீஆர் சிவாஜி கதைகளைக் கதைக்க வேண்டியது ....தேவையானுல் 'கூயா' போட வேண்டியது..... சண்டை பிடித்துக் கொள்ள வேண்டியது.....

அரியத்தின் மனம் உற்சாகமாக இல்லை. தன் அயல் இளைஞர்களின் இதயபூர்வமான ஈடுபாடுகள்...... எதை நோக்கி இருக்கின்றன, என்பதை எண்ணிப் பார்த்த போது வெகுவாகப் பயந்தான் அவன். எங்கேயோ இருக்கின்ற சினிமா நடிகர்களின் அகவாழ்க்கை, புறவாழ்க்கைகளின் போலித் தோற்றங்களினால் மயங்கி தம் சொந்த வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை கிஞ்சித்தும் இல்லாது அரட்டையொன்றையே காலத்தைக் கொல்லும் துணையாகக் கொண்டு... நாளுக்கு நாள் சீர் குலைந்து போய்க் கொண்டிருக்கிறார்களே ...இவர்கள் இந்தப் போலிக் கவர்ச்சிகளின் பிடிகளிலிருந்து விடுபடவே முடியாதா?

நம் நாட்டின் அத்தியாவசியமான பொருளாதாரப் புள்ளி விபரங்களை மனதில் தெரிந்து வைத்திருப்பதைக் காட்டிலும், இன்னொரு நாட்டின் நடிக நடிகைகளின் அப்பட்டமான வியாபாரத்தனமான புள்ளிவிபரங்களை மனதில் உருப்போட்டுக் கொள்வது பெருமை என்றல்லவா நினைக்கிறார்கள் இந்தப் பையன்கள்.

கடமை செய்து களைத்த நேரத்தில், அந்தக் களைப்பை மறக்க வைக்கும் பொழுது போக்குச் சாதனமாக ஏற்படுத்தப்பட்டதுதான் சினிமா. நம் இளைஞர்கள் சினிமாவைப் பற்றியே கதைத்துக் களைத்து ... அந்தக் களைப்பில் தமது கடமைகளையே மறந்து விட்டிருக்கிறார்கள்.

சரி... சினிமாவைப் பற்றிக் கதைத்தாலும் பரவாயில்லை எந்நேரமும் தென்னிந்தியக் குப்பைகளைப் பற்றியே கதை. அரை நூற்றாண்டு காலமாக வளர்ந்து வந்திருக்கும் தென்னிந்தியச் சினிமாப்படத் தொழில்—இந்தியாவின் தங்கமயில் பரிசை பெறுவதற்குத் தகுதியான சினிமாப் படத்தைத் தயாரிக்க வழிதெரியாது தவிக்கின்றபோது—இருபது ஆண்டுகள் மட்டுமே சினிமாப் படத்தொழிலில் அனுபவம் கொண்டிருக்கும் நம் நாட்டுப் படங்கள் அந்தப்

பரிசுகளைத் தட்டிக் கொண்டு வந்திருக்கின்றனவே... அவைகள் ஏன் நம் இளைஞர்களின் கண்களுக்குத் தெரியவில்லை.

காதல் என்று சொன்னால்—அது கடற்கரையில் ஓடிப் பிடித்து மணலால் எறிந்து, பூங்கா, தெரு, குளியலறை, போன்ற இடங்களில் அசிங்கமான கருத்துக்களைக் கொண்ட பாடல்களைப் பாடித் திரிவதும், பெண் பாலாரின் தசைப்பிண்டங்களின் ரகசிய இடங்களையெல்லாம் வெளிக்காட்டுவதும் தான் என இலக்கணம் கூறிக் கொண்டு வரும் தென்னிந்தியப் படங்கள் நம் இளைஞர்களின் கண்ணோட்டத்தில் தரமானவையாயும், இயற்கையானதாயும் தெரிகின்றது போலும்.

உண்மையான காதல் என்றால் இப்படித்தான் இருக்கின்றன என யதார்த்த பூர்வமாகக் காட்டுவது போல வெளிவந்த 'கொழுஹதவத்த' போன்ற அமைதியான அழகு நிறைந்த இலங்கைப் படங்கள்... தொடங்கிய உடனே பெட்டிக்குள் பூந்து கொள்கின்ற மாயம் இப்போதல்லவா புரிகிறது.

அரியத்தின் கைகள் 'சிந்தாமணியின்' பக்கங்களைத் தட்டிக் கொண்டிருந்தாலும், மனம் அதில் ஒன்றவில்லை.

# இருபத்திநான்கு

கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான் அரியம். மனம்—வீட்டில் நடக்குமென அவன் எதிர்பார்க்கின்ற விடயங்களை நாடி வலம் வரத் தொடங்கியது.

'இவ்வளவுக்குள்ள, சிவபாதம் வீட்டில விசயத்தைச் சொல்லிருவான். ஐயா ஆத்திரத்தில நிலத்தில் நிக்க மாட்டாமல் கத்திக் கொண்டிருப்பார். அம்மா, அழுது

கொண்டிருப்பா தங்கச்சி அண்ணாச்சியின்ர தவறு தன்னு டையதிலும் பார்க்கத் தாக்கத்தில கூடியது என்று கண்டு பிடிச்சு ஆறுதல்பட்டுக் கொண்டிருப்பான்.'

நேரம் பன்னிரண்டு ஐம்பத்தைந்து.

'சரி இனிப் போவம். கடவுளே எல்லாம் உன்ர கையில தான் இருக்கு'

சாரனைக் கால்கள் தெரிய மடித்துக் கட்டிக் கொண்டு வீட்டை நோக்கி ஒரு மோன நிலையில் நடந்தான் அவன். தெரு வேலியோடு அரியத்தின் சைக்கிள் சாத்தப்பட்டிருக் கிறது. தான் வீட்டிலிருந்து வெளிக்கிட்ட போது உள்ளே நுழைந்த பொன்னாச்சிக் கிழவி புதினங்களைக் காவிக் கொண்டு திரும்பி விட்டாள் போலிருக்கிறது. பக்கத்து வளவுப் பாக்கியத்தோடு கிழவி கதைக்கும் சத்தம் அரியத் தின் காதில் விழுகிறது.

அதிலெல்லாம் மனத்தை ஒன்றச் செய்வதற்கு அவ னுக்கு நேரமில்லை. நாட்டம் இல்லை. வளவிற்குள்—எலி யைப் பிடிக்கும் பூனையின் பதுங்கலில் நடந்து போகிறான் அரியம், ஐயா தன்னைப் பார்த்ததும், அனுதாபப்பட வேண்டுமென்ற தன்னிரக்கமற்ற மனப்பான்மையினால், முகத்தை வெகுபாவமாக வைத்துக் கொண்டு விறுந்தைக் குள் நுழைகிறான் அரியம்.

"ஏண்டா, இங்க வந்தனீ...வெளீல வெளிக்கிட்டிரு. இந்த நிமிசத்திலயிருந்து நான் உனக்கு அப்பனுமில்லை. நீ எனக்கு மகனுமில்லை. கொழும்பில நக்கித் திரியிற சிங்க ளத் தேவடியாளைக் கட்டினதுமில்லாம—துணிஞ்சு வீட்டுக் கும் கூட்டிற்று வந்திற்றாய். உன்ர முகத்தைப் பாக்கவே எனக்கு விருப்பமில்லை. அவள் பரத்தையையும் கூட்டிக் கொண்டு எங்கையும் கண் காணாத இடத்துக்கு போயிரு... ஓம், சொல்லிப் போட்டன்.

அரியத்தைக் கண்டதும், சிவபாதத்தின் சமாதானங்களிஞல் அதுவரை அடங்கியிருந்த முத்தரின் உணர்ச்சிகள் சாம்பிராணி தூவப்பட்ட நெருப்பாக மாறிப் புகையை வீசத் தொடங்கியது. பொதுவாகவே அருவருக்கத்தக்க விதத்தில் தமிழ்மொழியைப் பாவிப்பது அவரது வழக்கமில்லை. வழக்கங்கள்—வழக்கங்களாகவே இருந்துவிட முடியுமா…அப்படி இருக்கவேண்டுமாஞல், அரியம் சிங்களத்தியைக் கட்டிக் கொண்டு இப்படி வந்திருக்கக் கூடாது.

தெய்வானை மௌனத்தின் பிடிகளிலிருந்து இன்னும் விடுபடவில்லை. சற்று நேரத்திற்கு முன் சிவபாதத்திஞல் கொடுக்கப்பட்ட அதிர்ச்சி…இன்னும் அவளிடமிருந்து விலகவில்லை. எப்படி விலகும்? கற்பனை செய்துபார்க்க முடியாத நிகழ்ச்சிகளெல்லாம் உண்மையாக மாறிவிடுகிறபோது!

சிவபாதம் குறுக்கறுத்து நெருப்பான நிலைமைக்கு நீர் ஊற்றி மாற்றிவிட முனைந்தான். "அன்னை நடந்தது ல்ள லாம் நடந்து போச்சு. எல்லாரும் பிழை விடுறது சகஜம். நானே முதலில நம்பேல்லை, அரியம் இப்பிடிச் செய்யுமெண்டு. ஆஞ—எல்லாம் சந்தர்ப்ப சூழ்நிலைதான் நீங்க வயசில மூத்தனீங்கள். உங்களுக்கு நான் சொல்லக் கூடாது. அது வடிவாயும் இருக்காது ஆஞ மூண்டு சொல்லுவன். இந்த விசயத்தை நீங்க இதோட விட்டிறதுதான் புத்தி. இல்லாட்டி ஊரெல்லாம் நாறிப் போகும். நீங்களே இதைப் பெரிசுபண்ணிக் கொண்டு இருந்தீங்கெண்டால், அயலில இருக்கிறவங்கள் இனி வரப்போகிற ஐஞ்சாறு வருசத்துக்கு இதையேதான் கதைச்சுக் கொண்டு இருக்கப் போருங்கள். அப்பிடி அயலாக்கள் கதைச்சுக் கொண்டிருக்கிறது உங்களுக்கு நல்லதா.

நானே அரியத்தில முதலில கோவிச்சனுன். ஆஞ—இங்க வந்து பொம்பிளையைப் பாத்தாப் பிறகு கொஞ்சம் ஆறுதலாயிருக்கு. எத்திணையோ தமிழ் ஆக்கள் சிங்களப் பொம்பிளையளைக் கட்டி குடும்பமும் குடித்தனமுமா நல்லா

யிருக்கேல்லையா... இவர்... பெரிய கடை ரெத்தினசிங்கத்தின்ர மகன் . சேவையராயிருக்கிறான் ... அவனுக்கு நல்லொரு பேர்... மறந்து போயிற்றான்.. அவன் கண்டியிலே வேலை செய்யேக்கிள்ள சிங்களப் பெட்டையொண்டைத் தான் முடிச்சவன். தகப்பன் முதலில முறைச்சுக் கொண்டு தான் நிண்டவர். பேந்து என்ன செய்யிறது எண்டு போட்டு தன்னோடை சேத்திற்றார். இப்ப அவங்களுக்கு நாலு பிள்ளையளுமாப் போச்சு... நல்ல சந்தோசமாத்தான் இருக்குதுகள்.''

சொல்லிவிட்டு சிறிது நிறுத்தினான் சிவபாதம்.

அந்த இடைவெளிக்குள் புகுந்து கொண்டார் மூத்தர்.

''தம்பி, நீ சொல்றது சரி அது வேற கதை... இவனை நான் எப்பிடி வளத்தனான் எண்டு சொல்லு பாப்பம். ஏதாவது குறை வைச்சனானா எண்டு கேட்டுப் பார். ஊரில உலகத்தில இப்பிடி பிள்ளையளை வளத்திருக்கமாட்டாங்கள் தம்பி. அப்பிடி வளத்தனான். எனக்கு ஒரு சொல்—ஒரு பத்து சதத்து போஸ்ட் காட்டில கிறிக்கிப் போட இவருக்கு முடியாமப் போச்சு. பிள்ளையளால பெரிய பெயர் வரப்போகுதெண்டு. நடப்பில தலைகால் தெரியாமத் திரிஞ்சன். திரிஞ்சமாதிரியே இப்ப பிரண்டு போய் நிக்கிறன். நான் வெளீல தெருவில தலைகாட்டேலுமா எண்டு யோசிச்சுப் பார். இதுகள் இரண்டுக்கும் மாத்துக் கல்யாணம் பேசிவந்த சுப்புறுமணியத்துக்கு நான் என்ன சொல்றது. உனக்குத் தெரியாது, முந்தி நான் எண்டா சுப்புறுமணியத்துக்கு பெரிய இளக்காரம். ஆனால், கல்யாணப் பேச்சுக் காலுக்குப் பிறகுதான் சொந்தம் இந்தம் எண்டு வந்து ஒட்டினவர் அது ஏன்? என்ர பிள்ளையளைப் போல வேற குணமான பிள்ளையளைத் தேடிப் பிடிக்கேலாது எண்டு தான். இப்ப . அவன் வந்து என்ர முகத்தில காறித்துப்பினாலும், நான் மரம் மாதிரித்தான் நிக்க வேணும். என்னை உணர்ச்சியொண்டுமில்லாத மரமெண்டு நினைச்சதால

தானே இதுகள் இரண்டும் இப்படி போட்டி போட்டுக் கொண்டு இவ்வளவு அநியாயத்தையும் செய்திருக் குதுகள்.''

முத்துக்குமாருவின் கண்கள் கண்ணீரைச் சொரியத் தொடங்கின. பிள்ளைகளைதோளின் மேல் போட்டுத் திரிந்து நித்திரையாக்கி, அன்பு காட்டி அதுகளின் எதிர் காலம் அப்படியிருக்க வேணும், இப்படியிருக்கவேணும் என்றெல்லாம் கற்பனை பண்ணித் திரிந்ததற்கு ஒட்டு மொத்தமாக பிரதிபலன் கிடைத்திருக்கிறது.

உடல் குலுங்கக் குமுங்க அழுதார் முத்தர். அவரால் தனது அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தான் பெற்ற பிள்ளைகளையே கட்டுப் படுத்த முடியாதவனுக்கு அழுகையை எப்படிக் கட்டுப்படுத்த முடியப் போகிறது.

தன் கணவன் கண்ணீர் சிந்தி என்றுமே கண்டிராதவள் தெய்வானை. இன்று—இந்த அளவிற்கு அவர் கண்ணீர் சிந்துவதற்கு தன் இரண்டு பிள்ளைகள் தானே காரண மென்று உணர்ந்த போது—அவர்களைச் சுமந்த வயிறை சுவரில் அறைந்து கொள்ள வேண்டும் போலத் தோன் றியது. முற்றத்து மண்ணில் ஒரு பிடியெடுத்து ''நீங்கள் நாசமாகப் போக'' என்ற சுலோகம் பாடி அவர்களை அவள் சபித்திருப்பாள். சாபம் சிலவேளைகளில் பலித்து விடலாம். எனவே அவள் சபிக்கவில்லை.

ஐயாவும் சிவபாதமும் பேசிக் கொண்டிருந்த போது ஒன்றுமே பேசாமலிருந்த அரியம் இப்போது நிலைகொள் ளாமல் தவித்தான். தன் பெற்றோரை அழ வைக்கும் இந்த நிலைமைக்கு கொண்டு வந்து விட்ட தன் செய்கையை— அதற்குக் காரணமாக இருந்த மொனிக்காவை எண்ணி வெறுப்படைந்தான் அவன். அவளைக் கைவிடுவதனால்— அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க முடியுமானால்,

அதைச் செய்வது தவறாகாது என அந்த ஒரு கணத்தில் முடிவு செய்து...மறு கணத்தில், அது எவ்வளவு பெரிய தவறாக, எதிர்காலத்தில் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாத பாரமாக மாறிவிடும் என்பதை உணர்ந்து வேறு எதைச் செய்தால் அந்த நேரத்தில் தந்தையின் அழுகையை நிற்பாட்ட முடியும் எனப் பாரதூரமாகச் சிந்தித்து மூளையை உடைத்துக் கொண்டான் அவன்.

தனக்குள் மூளையை உடைத்துக் கொள்வதனால் மட்டும், தந்தையின் மனதிற்கு ஆறுதலைக் கொடுத்து விட முடியுமா.

முத்தர், விருந்தைக் கட்டிலருகில் வந்து மூக்கை ஒரு தரம் சீறி, தோளில் இருந்த துண்டால் துடைத்து விட்டுக் கொண்டார்.

“சே நான் இப்பிடி நினைச்சிருக்கேல்லைத் தம்பி, என்ர பிள்ளைகளே எனக்கு இப்பிடி துரோகம் செய்யுமெண்டு.. என்னை இப்பிடி உயிரோட வதைக்கிறதுக்குக் காட்டிலும் சாப்பாட்டுக்குள்ள விசத்தை வைச்சிருந்தாலும், இந்த மானங் கெட்ட விசயங்களைக் கேள்விப் படாமலே போய்ச் சேர்ந்திருப்பன். என்ற பிள்ளையள் என்னைக் கொலை செய்ய எத்தனிச்சாலும் கூட நான் இவ்வளவு வருத்தப்பட மாட்டன். என்ர மானத்தைக் குறைக்க எத்தனிச்சாப் பிறகு நான் இருந்துதான் என்ன இல்லாட்டித்தான் என்ன. இன்னம் கொஞ்ச நேரத்தால இது வெளில தெரிஞ்சு போனாப் பிறகு, நான் எப்பிடி ஊருக்குள்ள தலைகாட்டுறது.

கத்தினார் முத்தர். அவரது உடல் வியர்வையால் குளித்துப் போயிருந்தது. சரியாகப் பூட்டியிராத பைப்பிலிருந்து நீர் வழியும் நேர்த்தியில் கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் நீர் வழிந்து கொண்டிருந்தது.

விட்டுவிட்டு மழை வருவதில்லையா. ஆத்திரம் விட்டு விட்டு வந்து கொண்டிருந்தது முத்தருக்கு.

''நான் மானம் ரோசத்தோட தலை நிமித்தி நடந்து திரிஞ்சவன். என்னால தலை குனிஞ்சு வாழேலாது அந்த மாதிரித்தான் என்ர அப்பு அம்மா என்னை வளத்தவங்கள். என்னால மற்றவனிட்டையிருந்து சுடுசொல் ஒண்டும் கேட்கேலாது. பிள்ளையள் எண்டா பிள்ளையள் மாதிரி இருக்க வேணும். இல்லாட்டிச் செத்துப் போக வேணும். தங்கச்சிக்குக் காடு வெட்டப் போறன் எண்டு வாயால வெட்டி முறிச்சவன் இப்ப சிங்களத்தியைக் கூட்டிக் கொண்டு வந்து நிக்கிறன். என்ர மானம் ஊருக்குள்ளேயும் போயிற்றுது. வெளியையும் போயிற்றுது. இனி நான் இருந்து புண்ணியமில்லை... நீங்களெல்லாம் நல்லாயிருங்கோ. நீ.. உன்னுடை சீதாவையும் கூட்டிக் கொண்டு போய் அவளையும் ஒரு சிங்களவனுக்குக் கட்டிக் குடு. நான் உயிரோட இருந்தாத் தானே இதையெல்லாத்தையும் காணப் போறன், என்னவோ செய்து துலையுங்கோ'' போங்க, போங்க''

முத்தர் கத்தி ஓய்ந்தார். விறுந்தையில் புயல் அடித்து ஓய்ந்த அமைதி விறுந்தை ஜன்னல் கிராதிகளுக்குப் பின்னால் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மொனிக்கா, தன் காரணமாக அந்தக் குடும்பத்தின் சமூக நிலைமை குலைந்து விட்டதை நினைத்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் பாவம். அவள் தான் என்ன செய்வாள். சீதாவை அந்தச் சந்தடியில் காணவேயில்லை. முத்தர் துவாயை தோளில் எறிந்து கொண்டு வெளியே நடையைக் கட்டினார். அரியரெத்தின், தெய்வானை, சிவபாதச் சிலைகளில் இப்போது சிறிது அசைவுகள் தோன்றத் தொடங்கின.

# இருபத்தைந்து

மேசையிலிருந்த சிறிய அலாரமணிக்கூடு ஒன்றரை மணியைக் காட்டியது. வீட்டில் எல்லாம் போட்டது போட்டபடியே கிடக்கின்றன. சிவபாதத்திற்கு தன் கல்யாண வீடு ஞாபகத்திற்கு வந்தது. வீட்டிற்குப் போவதற்கு முன்னர், தெய்வானையுடன் கதைத்து விட வேண்டும் என விரும்பினான் அவன். தான் கல்யாண மாப்பிள்ளையாயிருந்தும், கல்யாண வீட்டில் தான் இப்போது கட்டாயமாக நிற்க வேண்டியிருந்தும், நண்பனின் நலனையிட்டு இவ்வளவு நேரமும் மினக்கெட்டு நின்றவன்—அப்படி நின்றதனால் பலனேதும் விளையாது போய் விடுமோ, அப்படி பயனேதும் உண்டாகாது போய்விட்டால், அரியம் தன் திருமணத்தின் போது சந்தோசமாகக் கலந்து கொள்ள முடியாமல் போகுமோ என யோசித்து மனங் கலங்கினான். முத்தரைத்தான் வழிக்குக் கொண்டு வர முடியவில்லை. தெய்வானையையாவது சமாதானப்படுத்தி—அவளுக்கும், அரியத்திற்கும் இடையில் திரைபோட்டு நிற்கின்ற மௌனத்தைக் கலைத்து விட்டுப் போனால் — அப்போதைக்கு போதும் போலிருந்தது.

விருந்தையிலிருந்த மேசையில் வழக்கத்திற்கு மாறான அலங்காரத்தோடு பரிமாறப்பட்டு வாழையிலையால் மூடியிருந்த மதிய உணவு — அப்படியே ஆறிக் கிடந்தது. அதைத் தொடுவாரில்லை. அந்த உணவை எவ்வளவு ஆர்வத்தோடு சமைத்து, மேசையில் ஒழுங்குபடுத்தி வைத்திருந்தாள் தெய்வானை. பாவம். வாழை இலை விலகிப் போயிருந்த கோப்பை ஒன்றில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

சிவபாதம் தெய்வானையைப் பார்த்துச் சொன்னான்.

''அம்மா, நீங்கள் இப்படி யோசிச்சுக் கொண்டிருக்கிறதைப் பார்த்தா எனக்குச் சங்கடமாயிருக்கு. இனி யோசிச்சு என்ன புண்ணியம்! சாப்பாடு எல்லாம் ஆறிப் போய்க் கிடக்கு, எழும்பிச் சாப்பிடுங்கோ.''

சாப்பாடு ஒண்டுதான் குறைச்சல் என்பது போல் முகத்தை வைத்துக் கொண்டிருந்தாள் தெய்வானை. அவள் வாயிலிருந்து சொல்லேதும் சிந்தவில்லை. அதற்கு அவளிடம் வலுவுமிருக்கவில்லை.

அடிக்கு மேல் அடி அடித்து அம்மியை நகர்த்திவிடலாம் என்ற நம்பிக்கையில் சிவபாதம் தொடர்ந்தான்.

அம்மா உங்களுக்கு அரியத்தை சிதாவைச் தெரிஞ்ச மாதிரிக்கு எனக்குத் தெரியாட்டிலும், ரெண்டு பேரோடையும் கூடப் பிறந்த சகோதரம் மாதிரிப் பழகியிருக்கிறன். இவ்வளவு காலத்திலயும், அதுகள் அது செய்தது, இது செய்தது எண்டு கெட்ட பெயர் கேட்கேல்லை. எல்லாம் காலத்தோட வந்திருக்கு. இதுக்கு நீங்க கோவப்பட்டு பிள்ளையளைக் கழிச்சு வைச்சா, அயலுக்குள்ள வேற ஆர் மதிக்கப்போறுன்கள். நீங்கள் இப்ப கோவத்தில பிள்ளையள வெளில அனுப்பினுப் போல நடந்ததை இல்லையெண்டு சொல்லேலுமா. ஏதோ தெரியாமச் செய்து போட்டுதுகள். எல்லாத்தையும் மறந்திற்று இனி நடக்க வேண்டியதைப் பாருங்கோ. ஊராக்களுக்கு பயந்து கொண்டு பெத்த பிள்ளையளை கை விடுறதா நாங்கள் நல்லாயிருந்தாலும் பொறுமைப் படுவாங்கள் கெட்டுப் போனாலும் ஏளனமா நினைப்பாங்கள். அப்படியான அயலைப் பற்றிநீங்க ஏன் கவலைப் படவேணும்... எழும்புங்கோ, எழும்பி முகத்தைக் கைகத்தைக் கழுவிப் போட்டு சாப்பிடுங்கோ, பிள்ளையளுக்கும் சாப்பிடக் குடுங்கோ.''

அரியத்தின் வயதையொத்தவனாக இருந்த போதும் அங்கு நிலவியிருந்த சூழ்நிலை காரணமாக பெரிய மனிதத்

தோரணையை வரவழைத்து அதை வாலாயப் படுத்திக் கொண்டிருந்த சிவபாதம்—தான் பெரிய மனிதன் போலக் கதைப்பதனால் பலன் அதிகம் உண்டாயிருக்கிறது என்பதை தெய்வானையின் முகமாற்றத்திலிருந்து அறிந்து சந்தோசமடைந்தான். தான் வந்ததனால்—உண்மையில் பலன் விளைந்திருக்கிறது என்பதை அறிந்த போது தன்னைவிட்டுத் தானே பெருமிதம் கொண்டான் அவன்.

''டேய் அரியம், யோசிச்சு மூளையைப் போட்டுக் குளப்பாதை, எழும்பு...போய்ச் சாப்பிடு.. எழும்பு''... அதெல்லாம் சரியா வரும், அம்மா ஒரு மாதிரி ஐயாவைச் சமாளிச்சுப் போடுவா எழும்பு, எழும்பு''

அம்மா ஒரு மாதிரிச் சமாளிச்சுப் போடுவா...என்று அவன் தேவையோடுதான் கூறினான். அது கிட்டத்தட்ட அம்மாவிற்கு ஐஸ் வைத்த மாதிரித்தான். அந்த ஐஸ் நன்றாக வேலை செய்யும் என்ற நம்பிக்கை அவனுக்கு.

'அப்ப நான் போயிற்று வாறன் அம்மா, வீட்டிலையும் கொஞ்சம் சோடினை மிச்சம் கிடக்கு. பொடியனை விட்டிட்டு வந்தனான். என்ன செய்தான்களோ, தெரியேல்லை அப்ப நான் வாறனம்மா''

''அரியம் நான் வாறன்... பிள்ளையள் வாறன்''

மொனிக்காவும் சீதாவும் அவன் கண்களில் படவில்லை. காதிலாவது படட்டும் என்று பலமாகப் போயிற்று வாறன் சொல்லிவிட்டு வெளிக்கிட்டான் சிவபாதம்,

அரியம் சொன்னான். ''சைக்கிளைக் கொண்டு போ..., சரியான வெய்யிலாக் கிடக்கு.

இதிலதானே... நான் நடந்து போறன் பேந்து ஆறுதலா வாவன் வீட்டை''

சிவபாதம் போய் விட்டான்.

சத்தம் போட்டு விட்டுப் போன முத்தர் மத்தியானம் சாப்பிட வரமாட்டார் என்று தெய்வானைக்குத் தெரியும். முச்சந்தி வேலுப்பிள்ளையின்ர கடையில நிண்டு கதைச்சுப் போட்டு நாலு ஐஞ்சு மணிபோல வருவார். அவரது சுவாபமே அதுதான். ஆத்திரம் வந்தால், அந்த இடத்தில் நிற்கமாட்டார். வேறு இடத்திற்குப் போய் வேறு யாரோடுமாவது மனம் ஒட்டாமல் நின்று கதைத்துப் போட்டு வருவார். கோபத்தின் தாக்கம் குறைந்து போய்விடும். பின் வீடு திரும்பும் போது—கோபமில்லாத முத்தராக வருவார். இன்று எப்படி வரப்போகிருர்.

எதையும், எந்தப் பாரதூரமான தவறையும் மன்னித்து மறந்து விடும் நீதிமன்றமொன்று இருக்குமாளுல்—அது தாயொருத்தியின் இதயமாகத்தான் இருக்க வேண்டும். தன் பிள்ளைகளுடைய தவறுகள்—இயற்கைக்கு மாருனதாக இல்லாவிட்டாலும்—அவைகள் தன் பிள்ளைகளினுல் செய்யப்பட்டிருக்கக் கூடாத தவறுகள் என அவள் நினைத்தாள். அந்த நினைப்பிற்கு அவளுடைய நல்ல வளர்ப்புத்தான் ஆதாரம். ஒருவேளை—அவர்களை நல்லவிதமாகத்தான் வளர்க்கவில்லையோ என்று கூட சந்தேகப்பட்டு சஞ்சலம் கொண்டாள்.

சிவபாதம் கூறியவைகள் உண்மையானவையென்றும், அவள் உணர்ந்தாள்—அவன் சொன்னது போன்று முத்தரைச் சமாதானப் படுத்தி இச் சஞ்சலங்களுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்காது விட்டால், தன் குடும்ப ஒளி குன்றி மங்கி அழிந்து விடும் எனப் பயந்தாள் அவள்.

பசியுடனே, பசியில்லாமலோ, விருப்பத்துடனே அல்லது விருப்பமில்லாமலோ மேசையிலிருந்த மதிய உணவை எல்லோரும் ஒருவாறு உண்டு முடித்தனர். உணவைப் பரிமாறும் போதோ, உண்ணும் போதோ எவருமே வாய்ச்

சொல் எதையும் செலவு செய்யவில்லை. பாசமெல்லாம் அற்றுப்போன வெறும் கடமையுணர்ச்சிதான் அங்கு நிலவியிருந்தது. அரியம் எல்லோரையும் ஓரக் கண்ணுல், அவர்கள் தன்னைப் பார்க்காத போது பார்த்துக் கொண்டான். எல்லோரிலும் ஏதோ ஒரு மௌனம்.

அம்மா வெற்றிலைத் தட்டத்தையெடுத்துக் கொண்டு கோழிக்கூட்டுக்குப் பக்கத்தில் வந்து காலை நீட்டிக் குந்தினுள். பச்சை நாறல் பாக்கை பாக்குவெட்டியால் வெட்டி வாய்க்குள் போட்டு மெல்லக்கூடிய, அளவான துண்டுகளாக எடுத்துக் கொண்டாள். தெய்வானை வெற்றிலை போடத் தொடங்கி விட்டால் — அவள் குந்தியிருக்கும் இடம், வெற்றிலைத் துப்பலால் போர்க்கப்படத்தொடங்கி விடும். இனி ஆத்திரத்தோடு போன முத்தர் திரும்பி வரும் வரை வெற்றிலையும் பாக்கும், அதன் துப்பலும்தான் அவளுக்குத் தஞ்சம்.

* * *

# இருபத்தியாறு

அந்த வீட்டின் பின் பக்க வாசலையண்டி ஒழுங்கையொன்று ஓடுகிறது. அங்குதான் - அந்தக் காலத்தில் அரியம் குண்டு அடித்து பட்டம் ஏற்றி கிட்டிப் புல், ஜாடி விளையாடி வெற்றிக் கொடி நாட்டித் திரிந்திருக்கிறுன். கிட்டத் தட்ட அவன்தான் அந்த ஒழுங்கையின் 'ஹீரோ'.

அரை குறையாக உண்ட களைப்பு. சஞ்சலங்களெல்லாம் உச்சக் கட்டத்தையடைந்துவிட்ட நிலை. சிகரட் ஒன்று குடித்தால் சிறிது ஆறுதல் கிடைக்குமோ என்னவோ!

இரண்டு மூன்று சில்லறைக் காசுகளைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டு ஒழுங்கைப் பக்கம் நழுவுகிறான் அரியம்.

ஒழுங்கைதான் அந்த அயலின் விளையாட்டுத்திடல். போவோர் வருவோர் மீது பந்துபட்டு, கிட்டி புல் பட்டு — அதற்குப் பிரதியாக பேச்சு, முணுமுணுப்பு வாங்கிப் பழகி அனுபவப் பட்டிருந்தாலும், அந்த அயல்ப் பொடியன்கள் தமது விளையாட்டிற்காக வேறு இடத்தை நாடிப் போகப் போவதில்லை. அரியம், சிவபாதம் போன்ற முன்னோர்கள் விட்டுச் சென்ற பணிகளை தொடர்ந்தும் ஆற்றுகிறார்கள் அந்தச் சிறார்கள் இப்போது முன்னேற்றமாக 'றவுண்டஸ்,' சும் சேர்ந்திருக்கிறது

அரியம் தோளிலிருந்த துவாயால் மார்பை மறைத்துப் பிடித்துக் கொண்டு வெற்றிலைக் கடையை அணுகுகிறான். தெரிந்த இளவட்டங்களானால் பரவாயில்லை, ஐயாவோடு கூடித் திரியும் பெரியவர்களானால் - அவர்கள் முன்னால் சிகரட் குடிக்க முடியாது. கஷ்ட காலம். ஐயாவைத் தெரிந்த வெற்றிவேலு பூவரச மரத்திற்குக் கீழிலிருந்த தென்னங் குற்றியில் குந்திக் கொண்டு வெற்றிலை குதப்பிக் கொண்டிருக்கிறார். போர் ஏசஸ் சிகரட் வாங்கவந்த அரியம், 'சம்பியன் பிளேட்' இருக்கா, என வேண்டாவெறுப்பாகக் கேட்டு வைக்கிறான். ஆக மிஞ்சிப்போனால் - ஐம்பது ரூபாய்க்கு மேல் மூலதனம் இல்லாத அந்தக் கடையில் பிளேட் விற்கமாட்டான்கள் என அவனுக்குத் தெரியும்.

'சீ ஒரு பதின்மூன்று சத சிகரட் குடிக்கிறதுக்கு எத்தனை பேருக்கு பயப்பிட வேண்டியிருக்கு.'

மேலும் அங்கு நின்றால், எப்ப வந்தனி, எப்பபோறாய், என்ற மாமூல் கேள்விகள் தன் மேல் வந்து விழுந்துவிடும், அதற்கு முன்னர் நடையைக் கட்டிவிட வேண்டுமென்ற நினைப்பில் அரியம் வந்த வேகத்தில் திரும்பினான்.

தூரத்தில் - ஒழுங்கையின் மற்றக் கோடியில் — பொடியன்கள் குண்டு (மாபிள்) அடித்துக் கொண்டிருப்பது தெரிகிறது. அரியமும், பதினைந்து பதினாறு வயதுவரை குண்டு அடித்துத் திரிந்தவன்தான். இப்பத்தையப் பொடியன்கள் எப்பிடி குண்டு அடிக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. நேரமும் போக வேண்டும். அரியம் ஒழுங்கையின் ஓரத்தை நோக்கி நடக்கிறான்.

'நாளைக்கு சித்திரை வருசமல்லோ, அதுதான் பொடியன்கள் நெருப்பாக குண்டு அடிச்சுக்கொண்டு நிக்கிறாங்கள்.'

மனதில் இளமைக் கால நினைவுகளின் மீட்பு ...

உணவு தீத்தும் போது அம்மா பேசுவாள்.

''டேய், எறிக்கிற வெய்யிலெல்லாம் உன்ர தலையில தானேடா எறிக்குது, இஞ்சபார் என்னை சூடு சுடுகுது என்டு... இனி ஒழுங்கைப் பக்கம் போய்ப்பார் என்னை செய்யிறனெண்டு காலை முறிக்கிறன். அறுவாங்கள்.. என்தான் சனி ஞாயிறு பள்ளிக்கூடம் லீவு விடுறாங்களோ தெரியேல்லை,'' ஒழுங்கையில் குண்டு அடிக்கும் சத்தம் கேட்கும். தாய் சோறு தீத்திக் கொண்டிருக்கும்போது — அரியம் அவசரப்படுவான்.

''டேய், இந்தா... இன்னொரு வாய்'' வாய்க்குள் சோற்றை வைத்துக் கொண்டு 'போதுமம்மா' சொல்வான். 'ஆ இதுதான் கடைசிவாய் வரவர குண்டடி மெத்திப்போச்சு.''

அரைவாசி தண்ணீர் குடித்தும் குடியாததுமாக.. ... காற்சட்டைப் பைகளுக்குள் குண்டுகள் குலுங்கி ஒலிக்க, திரும்பவும் ஒழுங்கைக்கு ஓடி விடுவான். அம்மாவும், தான் கத்துவதால் பயனேதும் உண்டாகப் போவதில்லையெனத் தெரிந்தும், தன் பழக்க தோசத்தினால் நாலு கத்

துக் கந்தி ஒய்ந்தே போவாள். சுவீற்றிக் குண்டுகள் ஒரு போத்தலில், கையான் குண்டுகள் இன்னொரு போத்தலில். சொறிக் குண்டுகள் வைப்பதற்கென இன்னொரு போத்தல். இரவு எட்டுமணியானதும் அம்மா பாயைத் தட்டி தனக்குப் பக்கத்தில் போட்டுவிடுவாள்.

''நேரத்தோட நித்திரையைக் கொள்ளு. வெள்ளனையோட பள்ளிக்கூடத்துக்குப் போக வேணும்''... அம்மா சத்தமிடுவாள். அரியம் ஒவ்வொரு வகைப் போத்தல்களில் உள்ள குண்டுகளையும் பாயில் கொட்டி, ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து, போத்தல்களை தலைமாட்டில் வைத்து விட்டு அவைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே அந்த அரவணைப்பு தந்த சுகத்தில் நித்திரை செய்வான்.

பள்ளிக்கூட லீவு நாட்களில் காலை ஏழு மணிக்கெல்லாம் தொடங்கி விடுகின்ற குண்டு விளையாட்டு - மாலை ஆறு மணியானாலும் முடியும் என்று சொல்லிவிடமுடியாது. குண்டு விளையாட்டில் சாமர்த்தியமில்லாத அல்லது அதிஷ்டமில்லாத சில பொடியன்கள் தம் தாய்மாரை துணைக்கழைத்துக்கொண்டு - நியாயம் கேட்க அரியத்தின் தாயிடம் வருவதுண்டு. அயலுக்குள் அதிருப்தியை ஏற்படுத்த விரும்பாத தெய்வானை, அரியம் வென்றெடுத்த குண்டுகளை வாங்கி தோற்றவர்களிடம் கொடுத்து விடுவாள். தோற்றுப்போன பையன்களுடைய தாய்மாரின் 'வாய்க்கொழுப்பு' கூடியிருக்கும் போது... தெய்வானை அரியம் வென்றெடுத்த குண்டுகளைத் திருப்பிக்கொடுப்பதில்லை. அரியத்தின் மேல் வீண்பழி சுமத்துவான் தோற்ற பையன். அந்தப்பழியை பலவிதங்களில்கோடுவரைந்து காட்டுவான் அவன் தாய். வீண்பழியை ஏற்கவிரும்பாத மனத்தைக் கொண்டவளாதலால், அவர்களுக்கு முன்னுக்கு வைத்தே அரியத்தை - இனி குண்டடிக்கப் போவியா, போவியா'', எனக் கேட்டு...... போனு காலை முறுச்சுப் போடுவன்''

எனச் சொல்லி நாலு முதுகிலும் வைப்பாள் அரியம் அழுதுகொண்டே, நான் வெற்றிக்குத்தானே விளையாடி வெண்டனான். ஏன் என்ரை குண்டைத் திருப்பிக் குடுத்தனிங்க'' எனச் சிணுங்கிக் கொண்டு கண்ணைக் கசக்குவான்.

அரியத்திற்கு அடி விழுந்து விட்டதேயென்ற புழுகத்தில் சமாதானமடைந்து திரும்பிப் போக எத்தனிப்பாள் தோற்ற பையனின் தாய். என் மகனுக்கு இவளால்தானே அடிக்கவேண்டி நேர்ந்துவிட்டது எனத் துக்கப்பட்டு, வந்தவளுக்கு வைவாள் தெய்வானை. அவள் தலைக்கு முன்னால் எறியப்பட்ட 'தோற்றுத் திரும்பி வந்த' குண்டுகளைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு சத்தமில்லாமல் நகர்ந்து விடுவாள்.

மகனுக்கு அடித்து விட்டேனே என்ற பரிதாபஉணர்ச்சியால் — அன்று இரவு அரியத்திற்கு முட்டைப் பொரியல் பொரித்து — பிட்டோடு ஸ்பெசலாக, நிலாக்காட்டி தீத்தி விடுவாள் தெய்வானை.

உருண்டு கொண்டிருந்த இளமைக் கால நினைவுப் பம்பரம் பொடியன்களை அண்மித்ததும் நின்றுவிட்டது. எத்தனை ரம்மியமான இளமைக் காலம். இனிவரப்போகிறதா என்ன! இளமைக் காலத்தை திரும்ப அழைத்துக் கொள்ளும் சக்தி உடையோராயிருந்தால், இன்று எத்தனைபேர் முதியோராயிருப்பர். இந்த உலகம் முழுவதும் இளமையாகவல்லவா இருந்துவிடும் எத்தனைவிதமான கஷ்டங்களிலிருந்து மீட்சி கிடைத்திருக்கும்.

குண்டு அடிக்கும் அந்தக் காலத்துச் சிறுவனாக இருக்க முடிந்திருந்தால் - கொழும்பிற்குப் போயிருக்கவும் தேவையில்லை. இன்று இவ்வளவு அல்லல்படவும் தேவையில்லை.

கஷ்டங்கள் கூடி மனம் வருந்துகின்ற வேளையில் நடக்க முடியாத அதிசயமொன்று நடந்து ...அவைகள் மறைந்து

விடவேண்டுமென்ற நப்பாசை அரியத்தில் இயல்பாகவே தோன்றுவது வழமை. இந்த அதிசயம் நிகழ்ந்து விடக் கூடுமானால் – எத்தனை மௌனிக்காக்கள் கற்பழிக்கப்பட்டு கவனிப்பாரற்று தெருக்களில் திரிய வேண்டி வந்துவிடும்.

குண்டடி மைதானத்தில் புழுதி பறக்கிறது.

பொடியன்களின் கத்தல்கள் ரசித்துக் கேட்பதற்கு இதமாக இருக்கிறது.

''கையானுக்கும் காலானுக்கும் சொல்லி எல்லாம் விட்டன்.''

'ஒற்றைக்கு ஒற்றையா, ரெட்டைக்கு ரெட்டையா''

''ரெட்டைக்கு ரெட்டை''

''சொறிக்குண்டெண்டா நான் வரேல்லை''

''சரி, நீ முதலில கட்டு''

''சா. கொஞ்சம் தவறிப் போச்சு''

''ஆ. நான் முதல், நீ ரெண்டு. குண்டன் மூண்டு, கறுவல் நாலு...சிங்கன் ஐஞ்சு ஐஞ்சு, பேருக்கு மேல வேணும் என்ன.''

''மக்கோஸ் போட்டா ரெண்டு குடுக்கவேணும்''

''தாச்சியைக் கொஞ்சம் பின்னுக்கு எடுக்கவேணும்''

''சரி.. சரி... நீ துவங்கன்''

சாரனை மடித்துக் கட்டி அந்தக் கட்டினுள் குண்டுகளை ஆடவிட்டுக்கொண்டிருந்த பையன் முதலாவதாக ஆட்டத்தைத் தொடக்கி வைக்கிறான், அவனுடைய ஆதரவாளர் இருவர் (இருவருக்கும் மூக்கால் ஓடிக்கொண்டிருக்கிறது) உருட்டாதை. குத்து. என அவனை சைட் பண்ணிக்

கொண்டு நிற்கிறார்கள். அவன் வென்றால் — அவர்கள் சைட் பண்ணியதற்காக சில சொறிக் குண்டுகள் கொடுப்பான்.

''இந்தா, விளையாடாதாக்கள் சும்மா இருக்க வேணும் தெரிஞ்சுதா''

''இதென்னடா, நாங்க எங்கட பாட்டில நிக்கிறம், இவரைப் பார்''

''நீ எங்க வைச்சுச் சுண்டிறாய்... கோட்டில வைச்சுச் சுண்டு. நில்லு நில்லு நீ மக்கோஸ் எல்லா போட்டனி... எல்லாம் விட்டியா?''

மூக்கொடிச் சிறுவர்கள் இருவரும்—ஒரு பக்கமாக இருந்து தமக்கு விருப்பமில்லாதவர்கள் குண்டு அடிக்கும் போது 'கோழிக்கால் குப்புறமுட்டி' கீறிக் கொண்டிருக்கிறார்கள். திரிசூலப் படங்களைக் கீறுவதும், அழிப்பதும்...... சில வேளைகளில் சரிவருகிறது பிழைத்தும் போய்விடுகிறது. தொடர்ந்து தோற்றுக் கொண்டிருந்த பையன் ஒருவன்—இவர்களுடைய திரிசூல மந்திரந்தான் தன் தோல்விக்குக் காரணம் என மயங்கி, சினந்து, ...கத்துகிறான்.

''டேய், எழும்பிப் போங்கடா, இனி கோழிக்கால் கீறினீங்களெண்டா, இழுத்து விட்டிடுவன்''

''இழுப்பாய், ஆளைப் பாக்கேல்லை ஐயாட்டைச் சொல்லி அடி வாங்கித் தருவன்''

''கூப்பிடு பாப்பம் உங்கட ஐயாவை, பெரிய சண்டியன் மாதிரி, எங்கட அண்ணன் பொலீசில வேலை. சொன்னன் எண்டா கொண்டுபோய் உள்ள தள்ளிருவார்''

பொலீஸ் என்றதும் மூக்கொடிகளின் 'ஆணவம்' சிறிது குறைகிறது. திரிசூலங்களை அழித்துவிட்டு சும்மா இருக்கிறார்கள்.

''ஜில்' வைப்பமாடா''

''வைக்கலாம், பெரிய பள்ளமாக்கக் கூடாது.''

'எல்லாம் விட்டன், கையான், ஜில், கோழிக்கால் கும்புறுபிட்டி, மக்கோஸ்' ......இந்தச் சொற்களெல்லாம் அரியமும் அந்தக் காலத்தில் ஒரே சொல்லியிருக்கிறான். அரியத்தின் இதழ்க் கடைகளில் இளஞ்சிரிப்பு நெளிகிறது.

''என்ன சொற்களோ, என்ன கருத்துக்களோ''

பின்னால் சத்தம் கேட்கிறது.

''டேய் அந்தா, அந்த மரத்துக்கு மேலால எறி. நூல் பந்தைப் போடு''

''சரியான இழுவையடா, படலத்துக்கு கொஞ்சம் வால் காணாது. இறக்கி வால் கொஞ்சம் கட்டிப் போட்டு பேந்து விடுவமா''?

''சீ......சீ. இப்ப இறக்கிறு.... திரும்ப ஏத்திறது கரச்சல், காத்தையும் அவ்வளவாக் காணேல்லை.''

ஒருவன் நடுத்தெருவில் நின்று படலப் பட்டத்தின் நூலைப் பிடித்திருக்கிறான். இன்னொருவன் நூல்பந்தை மின்சாரக் கம்பிகளுக்கு மேலால் வளவிற்குள் எறிகிறான். வளவிற்குள் நின்ற ஒருவன் கத்துகிறான்.

''நான் சொல்லேக்குள்ள நூலை விடு என்ன...... இதற்குள் படலப்பட்டத்தின் இழுவை பார்க்கத் துடிக்கும் இரண்டொரு இளவட்டங்கள், பாய்ந்து பாய்ந்து நூலைப் பிடித்து இழுக்கிறார்கள். ''டேய், அங்கால போங்கடா, இழுவை பாக்கிற ஆக்களைப் பாக்கேல்லை''

''எப்படா பட்டத்தை இறக்குவாய்'' ''வருசம் முடிஞ்சாப்பிறகு.''

அந்த வளவிற்குள் நின்ற முருங்கை மரக் கொப்பொன்றில் படலப் பட்டத்தின் நூல் கட்டப்படுகிறது பட்டத்தின் சொந்தக்காரன் முருங்கை மரத்திலிருந்து இறங்குகின்ற போதே 'அபாய அறிவிப்பு' கொடுக்கிறான்.

''ஆரெண்டாலும் மரத்தில ஏறித் தொட்டுப் பாருங்க, செய்யிறன் வேலை''

சிறிது நேரம் பட்டம் கட்டப்பட்டிருக்கும் முருங்கை மரத்தைச் சுற்றிக் கும்பலாக நின்று — அதன் நிறைகுறைகள் பற்றி தமக்கேயுரித்தான பாணியில் விமர்சித்து—பட்டத்தைத் தொடக் கூடாது என அதன் சொந்தக்காரன் சொல்லியிருந்த காரணத்திற்காக ''பெரிய கண்டறியாத பட்டம் ஏத்திறார்...... பார், இண்டைக்கு ராத்திரியே — காத்துக் காணாம அது இறங்காட்டி'' என ரகசியமாகச் சபித்து — அந்தச் சபிப்பினால், பட்டம் இறங்கி விட்டது போன்று திருப்தியடைந்து அந்த இடத்தை விட்டு ஒவ்வொருவராக கழன்று கொண்டனர் ஒழுங்கைச் சிறார்கள்.

அரியத்தின் இதயமும், வாயும் ஒரு தரம் சந்தோசத்தால் சிரித்துக்கொள்கின்றன.

'எத்தனை அருமையான இளமைக் காலம். வீட்டுக்குப் போனால், சோறு இருக்கும். ஒழுங்கைக்குப் போனால் குண்டடி இருக்கும். கிட்டிப் புல் ஜாடியிருக்கும். வேறு என்னதான் தேவை அவர்களுக்கு.

நேரம் மூன்று ஐந்து 'ஏழுமணிக்கு கோணேச கோயிலில தாலிகட்டு..... ஆறு மணிக்கு வெளிக்கிட்டா உஹா பரடியால போய் பீச் செல்லாம் மொனிக்காவுக்குக் காட்டிப் போட்டு முகூர்த்த நேரத்திற்குப் போயிடலாம். மொனிக்காவை கண்டா எல்லாச் சனங்களுக்கும் விசயம் விளங்கிப் போயிரும். போகட்டுமன், ஐயா அம்மாவுக்கே தெரிஞ்சு போச்சு, இனி ஆருக்குப் பயப்பட'

தன்னுடைய விசயம் வீட்டாருக்குத் தெரியாமல் இருந்தபோது — இருந்த மனத்துடிப்பு பயம், அவனிடம் இப்போது இல்லே. எல்லாம் தெரிந்துவிட்டது தானே இனி எப்படியாவது சமாளித்துவிடலாம் என்ற தைரியம்.

* * *

# இருபத்தியேழு

'உடம்பெல்லாம் ஒரே அலுப்பாயிருக்கு...... போய்க் கொஞ்ச நேரம் நித்திரையைக் கொள்ளுவம். நாலரை ஐஞ்சுக்கு எழும்பிஞ — குளிச்சுப் போட்டு வெளிக்கிடச் சரியாயிருக்கும்.

குட்டித் தூக்கமொன்று போடவேண்டுமென்ற ஆசை ........ உடம்பு அலுப்பைக் காரணமாகக் காட்டி, அவனே வீட்டை நோக்கி நடக்க வைக்கிறது. வீடு அண்மிக் கிறது. அவன் வெளிக்கிடுகின்ற போது, கோழிக்கூட்டுக் குப் பக்கத்தில் வெற்றிலேத் தட்டத்தோடு குந்திய அம்மா இன்னும் அந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லே. அம் மாவிற்குப் பக்கத்தில் புதிதாக ஒரு கிழம் வந்து குந்திருக் கிறது. அம்மாவின் வெற்றிலேத் தட்டம் காலியாகப்போய் கிடக்கிறது. அம்மாவை எதிர்கொண்டு செல்ல என்னவோ போலிருக்கிறது. பின் கோடிப் பக்கமாகச் சென்றல்—பின் விறுந்தையில் போய் சற்று உடலேச் சரிக்கலாம், அந்த வீட்டு மூன்று அறைகளின் கோடிப் பக்க ஜன்னல்களும் திறந்தபடியே கிடக்கின்றன. அரியம் காலடிகள் சப்தம் எழுப்பாத வண்ணம் கோடிஞடாக பின விறுந்தைப் பக்கம் நோக்கி நழுவுகிறுன். நடு அறை ஜன்னல் கதவடியில் சுவரைத் தழுவிக் கொண்டு எறும்புக் கூட்டமொன்று ஊர்ந்து செல்கிறது. பக்கத்தில் கிடந்த தென்னம் பொச் சுத் துண்டால் அவ்வுயிர்க் கூட்டத்தைத் தேய்த்து நசுக்கி

விடுகிறான். நசித்துக் கொல்லும் போது பரிதாபம் ஏற்பட்டாலும், நசிக்காமலும் இருக்க முடியவில்லை. பழக்க தோசம்.

ஜன்னல் கதவால் வீட்டிற்குள் எட்டிப் பார்க்கிறான். அங்கு, மொனிக்கா சிறிய குறட்டை விட்டுக் கொண்டு பாயில் நித்திரை செய்கிறாள். றெசின் கவுனின் கீழ்ப்பக்கம் கால்களை மூடிக் கொள்ள வேண்டிய பாகம் — பொத்தான் கழன்று சரிந்து விலகிக் கிடக்கிறது. மறைபட வேண்டிய பெண்ணுடலின் பாகங்கள் தம் ரகசியத் தோற்றங்கள் காட்டிச் சிரிக்குமானால், அவற்றைப் பார்ப்போரின் மனங்களல்லவா ஆடிப் போய் விடுகின்றன,

பின் விறாந்தைப் பக்கம் ரகசியமாகப் போய் சிறிது நேரம் சரிய வேண்டும் என்று நினைத்திருந்த அரியம் — இப்போது நடு அறைப்பக்கம் ரகசியமாகப் போய்க் கொண்டிருக்கிறான். இனி — மொனிக்கா எப்படி குறட்டை விட்டுத் தூங்கமுடியும்!

வீட்டிற்குள் வந்தவன் — ஜன்னல் கதவை உட்பக்கமாக இழுத்து மூடிவிட்டான். ஜன்னலை மூடிவிட்டால் புழுங்கவல்லவா போகிறது. பெரிய புதினமான புழுக்கந்தான். புழுங்கிவிட்டுப் போகட்டுமன்.

ஓசை எழுப்பாது மொனிக்காவிற்குப் பக்கத்தில் சரிந்து கொண்டவன், அவளது முகத்தை ஒரு தரம் பார்த்துக் கொள்கிறான். 'என்ன இருந்தாலும் சிங்களப் பெட்டையளின்ர உடம்பு இறுக்கமான உடம்புதான். ஈரப்பிலாக்காயும் சாப்பிட்டு கித்துல் பாணியும் குடிச்சா, உடம்பு இறுக்கமாகாமல் பின்ன என்ன செய்யும்,

மொனிக்காவின் கழுத்தோரமாக வியர்த்து வழிகிறது. அதைத் துடைத்து விடும் சாக்கில் கவுனின் கழுத்துப் பட்டனை கழற்றிவிடுகிறான். அவளது சிங்கள உடலை-அதன்

அநியாயமான அசைவுகளை அப்படியே விழுங்கிவிடும் பாங்கில்—இந்தத் தமிழ் உடல் நெருங்கிக் கொண்டிருந்தது. காமத்தின் வயப்பட்ட இரு உடல்களுக்கிடையே தமிழ், சிங்களம் என்ற பேதம் இருக்க முடியுமா? இருக்க முடியுமானால்!

அவனது கைவிரல்கள் அவளது உடல்மேடையில் நர்த்தனமாடத் துடித்தன. தன்னை மறந்து குறட்டைவிட்டுத் தூங்கும் அவளை எழுப்புவது கூடாத காரியந்தான். காமத்தினால் மறைக்கப்பட்ட மனதிற்கு கூடாததெல்லாம் தவிர்க்க முடியாத தேவைகளாக வல்லவா மாறிவிடுகிறது.

அந்தத் தவிர்க்க முடியாத தேவைகள் — செயலாக்கப்படுகின்ற போது, எழுகின்ற சிணுங்கல்கள், சினப்புகள் எல்லாம் சிறிது நேரத்தில் சிரிப்புகளாக மாறி அதன் ஆகர்ஷிப்பில் உடல் உள்ள உபாதைகளெல்லாம் உள்ளொடுங்கி — சதைகளின் சேர்க்கையொன்றே அப்போதைய மிருகத்தனமான ஆசையாகிவிடுகிறது.

மொனிக்காவும் சிணுங்கிச் சிரித்து — அவன் ஆளுகைக்குள் அடங்கி விட்டாள். இருவருடைய வியர்வைகளும் வெகுவாகப் பெருகி, ஒன்றிணைந்து அசிங்கமாகி — அந்த அசிங்கமே ஆனந்தமாகி, சேர்க்கையின் விளிம்பிலே உடல்கள் இருந்த போது வீட்டு வாசலில் ஏதோ சத்தம் கேட்கிறது.

''ஐயா தான் வந்திருக்கவேணும், அரியம் சாரனை இழுத்து மூடிக் கொண்டு மொனிக்காவினின்றும் விலகினான். ஆரம்பமாகவிருந்த விருந்து அரைவாசியிலேயே நின்றுவிட்டது. ஐயா ஆத்திரமடங்கி வந்திருக்கிறார் போலிருக்கிறது. அடுப்படிக் கதவை திறந்து மூடும் சத்தம் கேட்டதிலிருந்து ஐயாவிற்கு அம்மா சாப்பாடு கொடுக்கிறாள் என ஊகித்துக் கொண்டான்.

'ஐயா சாப்பிட்டுப் போட்டு வந்து விருந்தைச் சாய்மனைக் கதிரையில்தான் சரிவார், நாங்க இரண்டு பேரும் இதுக்குள்ள படுத்திருக்கிறம் எண்டு அறிஞ்சா — தற்காலிகமாகப் போன கோபம், சில நேரத்தில் திரும்ப வந்தாலும் வரும். சத்தம் காட்டாமக் கண்ணை மூடுவம். பேந்து இரவைக்குப் பாப்பம்'

காமமெல்லாம் உடலை விட்டு ஓடிய நிலையில் அரியம் மற்றப் பக்கமாக திரும்பிக் கண்களை மூடிக் கொள்கிறான்.

ஐந்து மணிக்கெல்லாம் எழும்பி கோணேச கோயிலில் நடக்கவிருக்கும் தாலிகட்டுக்குப் போகவேண்டும் என நினைத்தபடியே பத்து நிமிடங்களுக்குள் தூங்கிப் போனான்.

* * *

# இருபத்தெட்டு

ஐந்து மணிக்கு எழுந்துவிட வேண்டுமென்று எண்ணி நித்திரையின் பிடிக்குள் அடங்கிப் போனவன் வெளிவிறாந்தையில் முத்தரின் சப்தம் கேட்டு நித்திரை முறிந்தவனாகி மணிக்கூட்டைப் பார்க்கின்ற போது—அது ஆறு மணியைக் காட்டிக் கொண்டிருந்தது. மொனிக்காவும் ஏற்கனவே விழித்த நிலையில் ஏதோ யோசித்தவண்ணமிருந்தாள்.

''சா... ஆறு மணியாப்போச்சு, ஐயா வெளிக்கிட்டுப் போயிற்றாரெண்டா, நாங்களும் குளிச்சுப் போட்டு நேர கோயிலுக்குப் போயிரலாம். சரியா ஏழு மணிக்குத் தாலி கட்டு'' என்றான் அரியம் மொனிக்காவைப் பார்த்து.

''உங்கட ஐயா குளிச்சவர் போல இருக்கு...கொஞ்சம் முதல் கிணற்றடியில சத்தம் கேட்டுது.''......மொனிக்கா சொன்னுள்.

அரியம் எழுந்து கதவிடுக்கில் கண்ணை வைத்து 'ஐயாவின்' சிலமனைப் பார்க்கிருன்.

''ஆள் போயிற்றுர் போல கிடக்கு. சத்தத்தைக் காணேல்லை. நான் முதல்ல போய் குளிச்சிற்று வாறன். நீ பேந்து போ...என்ன'' என்று சொல்லிக் கொண்டே அரியம் சூட்கேசைத் திறந்து புதுத் துவாயொன்றை எடுத்து மொனிக்காவிடம் கொடுத்துவிட்டு பின் விறுந்தைப் பக்கம் திரும்பி நடக்கத் தொடங்கியவன்—முத்தரின் சத்தம் கேட்டுத் தன் நடைக்குப் பிரேக் போட்டுக் கொள்கிருன்.

''பாத்தியாணை அந்தப் பிள்ளையும் இவளோடை ஒத்த பிள்ளைதானே. தாய் தேப்பன்ர சொல்லைக் கேட்டு நடந்த தால, நல்ல இடத்தில சம்பந்தம் நடக்குது. நினைச்சுப்பாக் கேக்குள்ள எவ்வளவு சந்தோசமாக் கிடக்கு. நமக்கு வந்த ரெண்டும் தலையால தெறிக்கப் போய் நிக்குதுகள். சரி, அந்தப் பட்டுச் சால்வையை எடு அவன் பொடியன்ர தேப்பன்—என்னை ஐஞ்சு மணிக்கே கோயிலுக்கு வரச் சொன்னவன், இப்பவே செணடு போச்சு.''

தெய்வானை 'அடித்தைலாப்பெட்டி'யிலிருந்து பக்குவமாக எடுத்துக் கொடுத்த அந்தக் காலத்து சரிகைச் சால்வை கழுத்தில் ஏற—முத்தர் 'போட்டு வாரன்' சொல்லிவிட்டு நகர்கிருர். அந்தச் சரிகைச் சால்வையில் 'நெப்தலீன் மணம் அடிக்கிறது.

அவர் போய் சிறிது நேரத்தால் கிணற்றடியில் குளித்துக் கேட்கிறது. ஆறரை மணிக்கெல்லாம் தம்பதிகள் ரெடி. மொனிக்கா நெற்றியில் குங்குமமிட்டு—கண்ணுடியில் ஒரு தரத்திற்கு நான்கு தரம் பார்த்துக் கொள்கிருள்.

அவள் குங்குமமிட்டதைக் கண்ட போது அரியத்தின் இதய அடித்தளத்தின் எங்கோ ஒரு மூலையில் சின்ன ஆறுதல். அறையிலிருந்து வெளிவரும் போது அரியம் சொன்னான், "மொனிக்கா, அம்மா விருந்தையில் இருக்கிறா. நீ போயிற்று வாறன் மாமி எண்டு சொல்லிற்று வா. அம்மாக்கு இளகின மனம். நீ மாமி எண்டு சொன்னா, மனம் உருகிப் போயிவா......என்ன"

"எனக்கு வெக்கமாயிருக்கப்பா"........என்று சிங்களத்தில் இழுத்தாள் மொனிக்கா.

"என்ர குஞ்சல்லா, நல்ல பிள்ளை, இந்த நேரத்தில எனக்கு அம்மாதான் கொஞ்சம் ஆறுதல், அவளைக் கெதில மாத்திப் போடலாம். நீ இப்ப சொல்லிறதில தான் எல்லாம் இருக்கு......ம் . வா போவம்"

மொனிக்காவை முன்னே விட்டு பின்னே காலடிகளை எண்ணி நடக்கிறான் அரியம்.

அவர்கள் வருவதைக் கண்ட தெய்வானை ஒரு பக்கமும் திரும்பாமல் நிலத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நாங்க மாமி, கோயிலுக்குப் போயிற்று வாறம் மாமி"

சிங்களத்தியின் தமிழ் காதில் தேனைப் பாய்ந்தது தெய்வானைக்கு. மொனிக்கா நல்ல குணமுள்ளவள் என்று அவள் நினைத்திருந்தது இப்பொழுது ஊர்ஜிதமாகி விட்டது. அவள்—அரியத்திற்கு ஏற்றவளாயிருந்தாலும், அவர்களுக்கு அயல் ஏற்றதாயில்லையே என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

''ஓம் போயிற்று வாங்கோ''.........என்று சொல்லி பல்லு முப்பத்திரண்டையும் காட்டிச் சிரிக்கவும் இல்லை. 'ஊம்' என்று முகத்தை நீட்டிக் கொண்டும் இருக்கவில்லை. இவை இரண்டிற்கும் இடைப்பட்டதாக—சத்தம் அதிகம் வெளியில் கேளாத நிலையாட்டி ஆமோதிக்கும் பாவனையில் அவள், அவர்கள் இருவருக்கும் விடை கொடுத்தாள்.

சீதாலட்சுமி குசினிக்குள் நின்று கொண்டு கதவிடுக்கினூடாக அவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

''தங்கச்சி போயிற்று வாறம்''

இருவரும் தெருக் கதவைத் திறந்து போகும் போது தெய்வானை விருந்தைக் கிராதிக்குள்ளால் அவர்கள் தன்னைப் பார்க்க மாட்டார்கள் என்ற நிச்சமத்தில் வைத்த கண் இமைக்காது பார்த்துவிட்டு ஏனோ பெருமூச்செறிந்தாள்.

* * *

# இருபத்தொன்பது

அங்கொன்றும் இங்கொன்றுமாக சீனவெடி வெடித்துக் கேட்டது. நாளைக் காலையில் பிறக்கப்போகும் புதுவருடத்திற்கான ஏற்பாடுகளின் ஆரம்பந்தான் இந்த வெடிகள் என நினைத்துக் கொண்டான் அரியன்.

நேரம் ஆறு நாற்பது. இருட்டு—இருந்த கொஞ்சநஞ்சப் பகலையும் துரத்திவிட்டுக் கோலோச்சத் தொடங்கியது. தெருவெங்கும் மின்சார விளக்குகள் நகரசபையின் பெருமைபாடி நூந்துபோய்க் கிடந்தன. வழி நெடுக, ஒவ்

வொரு வளவு வாசலோரத்திலும் இரண்டொரு பெண்கள் நின்று கொண்டு தெருவில் போவோரைப் பார்த்து 'தெருக்கதை' கதைத்துக் கொண்டு நிக்கிறார்கள். அவர்கள் என்னதான் அப்படி கதைக்கிறார்கள். யாருக்குத் தெரியும். என்னவோ கதைக்கிறார்கள்.

அரியத்தின் நல்ல காலம். தெருவிளக்குகள் அவனுக்கு உதவியாக இருக்கின்றன. தெருவோரத்துப் பெண்கள், 'இதில போற ஆம்பிளை பொம்பிளை' யாரென்று இருட்டைக் கிழித்து ஊடுருவிப் பார்க்கு முன்னர், தாம் போய் விட வேண்டும் என்கின்ற முனைப்பில் அகலக் கால் வைத்து நடந்தார்கள் இருவரும். சண்முக வித்தியாலயத்தினால் வந்து காளிகோயிலடியால் திரும்பி முற்ற வெளிக்குள் விழுந்து பீச் ரோட்டில் ஏறிவிட்டார்கள்.

'இனி தெரிந்தவர்கள் வரமாட்டார்கள். கோயிலடியில தான் தெரிஞ்ச சனங்கள் நிக்கப் போகுது. நானும் மொனிக்காவும் போனப் பிறகு, மாப்பிளை பொம்பிளையைப் பாக்காம எங்கள் ரெண்டு பேரையுந்தான் பாக்கப் போகுதுகள். சின்னக்கடைத் தெருவால் வந்து கொண்டிருந்த இன்னொரு தம்பதிகள் கிட்ட நெருங்கி வந்து கொண்டிருந்தனர். திரும்பிப் பார்த்தான் அரியம்.

'அக்காவைப் போல இடக்குது. ஓம்......ஓம்......அக்காவும் அத்தானுந்தான். இவயளும் தாலிகட்டுக்குத்தான் வருகினம் போல'

நன்றாக நெருங்கி வந்து விட்டார்கள்.

''என்னக்கா சிவபாதத்திண்ர தாலிகட்டுக்கோ''...... மௌனத்தைக் கலைக்கும் நோக்கில் கேட்டான் அரியம்.

''ஆரது......தம்பியோ, எப்ப வந்தனி''

''இன்டைக்குக் காலம்பறைதான்''

''இஞ்சருங்கோ அத்தான் ஆரெண்டு''......சுவாரஸ்ஷியில்லாத பாவனையில் அக்கா சொன்ஞள். ''ம்.... தெரியுது......இனி எப்ப திரும்பிப் போறது கொழும்புக்கு''...

அதே ஆர்வமில்லாப் பாவனையில் கேட்டார் அத்தான்.

''நாளைக்கு இரவைக்குப் போறன்''......அரியம் சொன்ஞன்.

நால்வரும் கோட்டை வாசலுக்குள் நுழைந்து விட்டார்கள். ஏத்றம் ஏறி இறங்கி கோயிலடியை அனுகும் வரை ஒருவரும் ஒன்றும் கதைத்துக் கொள்ளவில்லை. மொனிக்காவைப் பற்றி யார், என்ன. எது என்று ஒன்றும் அவர்கள் கேட்கவில்லை. அரியமும் சொல்லவில்லை. வழிநெடுக. அவர்கள் கடைப்பிடித்துக் கொண்டு வந்த திட்டமிட்ட மௌனத்தைக் கண்டு தானும் மௌனமாகப் போஞன் அரியம்.

'இவர்கள் இப்படி மௌனமாக வந்ததற்குரிய காரணம் என்ன. மொனிக்காவின் விசயம் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. இல்லாவிட்டால் அக்காவும் அத்தானும் இப்படியா நடந்து கொள்வார்கள். பார்ரா...இந்த விசயம் எவ்வளவு கெதியாத் தெரிஞ்சு போச்சு. ம்...சரி... சரி ஆர் எதிர்த்தால் என்ன. நான், என்ன கொலையா செய்து போட்டன் எல்லாருக்கும் பயப்பிட'... மனம் உழன்று கொண்டிருந்தது அரியத்திற்கு.

அக்காவும் அத்தானும் தாங்கள் யாரோ எவரோ என்ற முறையில், கோயிலை அணுகியதும், பிள்ளையாரைக் கும்பிடும் சாட்டில் பிரிந்து விட்டார்கள்.

ஏழுக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருக்கின்றன. வண்ணக் கடிதாசிகளால் சோடித்த கல்யாணக்

காரொன்றை முன்னே விட்டு ஏழோ எட்டுக் கார்கள் நிற்கின்றன. சரிகை வேட்டிகளும் சால்வைகளுமாக ஆண்கள் ஒரு பக்கமும், கூறைச் சீலை சகிதம் பெண்கள் இன்னொரு பக்கமுமாக கோயிலுக்குள் நிறைந்து இருக்கிறார்கள்.

அரியம் பைப்படியில் கால்களைக் கழுவிக் கொண்டு மோனிக்காவிடமும் கழுவும்படி கூறிவிட்டு மலையடிவாரத்தை நோக்கி நடக்கிறான். முன்னர், எஸ்எஸ்சி பாஸ் செய்வதற்காக கண்ணீர் சிந்தி அழுத இடம் அந்த மலையடிவாரம். வேலை கிடைக்க வேண்டுமென்றும் அங்குதான் போய் அழுது கும்பிட்டான். இப்போதும் அங்குதான் போகிறான். எதற்காகவோ? இதயமெல்லாம் உருகி ஒரு தரம் அழவேண்டும். அதற்கு அந்த மலையடிவாரம்தான் நல்லது. ஏனோ தெரியவில்லை, அங்கு சென்றால்தான் தான் செய்த குற்றங்களை மனதிற்குள் சொல்லி அழுது மன்னிப்புக் கேட்க முடிகிறது.

மலையடிவாரம் 'ப்ரியாக' இல்லை. அங்கும் திருமணக் கூட்டம். அவனும் மோனிக்காவும் திரும்பி கோயிலுக்குள் நடக்கிறார்கள். மாப்பிள்ளையும் பெண்ணும் குடத்திற்குள் மோதிரம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முதல் இரண்டு தடவைகளும் சிவபாதந்தான் எடுக்கிறான். கடைசித் தடவை மனைவிக்காக விட்டுக் கொடுத்தது போலிருந்தது. ஓம குண்டலத்தை வலம் வந்த தம்பதிகள் திரும்பவும் மணவறையில் குந்துகிறார்கள். தாலியெல்லாம் கட்டி முடிந்திருக்கவேண்டும். அரியம் பிந்திவிட்டதை எண்ணி மனம் வருந்தினான். 'அறுகரிசி' போடுவதற்காக ஆண்கள் கூட்டம் தலைப்பாகைகளைக் கட்டிக்கொள்கிறது. முதலாவது நிற்கிறார் சிவபாதத்தின் தந்தை. இரண்டாவது அரியத்தின் முன்கோப 'முத்தர்'. இப்படி நீண்டு கொண்டே போகிறது அருகரிசி போடும் கூட்டம். சிவபாதம் தலை நிமிராமல் குனிந்தபடியே இருக்கிறான். பெண்ணுக்கும் வெட்கமாம். நிமிர்ந்த பாட்டை காணோம்.

தானும் அநகரிஜி போடும் ஆசை அரியத்தில் துளிர்க்கிறது. பக்கத்தில் நின்ற ஒருவரின் சால்வையை வாங்கித் தலையில் தாறுமாறாகக் கட்டிக் கொண்டு அந்தக் கூட்டத்தோடு ஒட்டிக் கொள்கிறான் அவன். சிலர்—தீபம் காட்டி பூசை செய்வது போல அரிசி போட்டு நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். அரியத்தின் முறை வந்து விட்டது. அரிசி தூவும் போது, அவன் நெஞ்சிற்குள்ளிருந்து "நீ நல்லாயிரு மச்சான்" என்ற ஆசீர்வாதம் வந்து விழுகிறது. சிவபாதம் நிமிர்ந்து பார்க்கிறான் அரியத்தின் கண்கள் கலங்கியிருக்கின்றன. அந்தக் கலங்கிய கண்களைச் சந்தித்து ஊடுருவி, அதற்குள் அன்பின் ஆழத்தைக் கண்டு மகிழ்கிறான் சிவபாதம்.

பெண் வீட்டார் மாறி மாறிப் புகைப்படம் எடுத்துத் தள்ளுகிறார்கள், இரண்டொருவர் தாம் படத்தில் விழ வேண்டுமென்பதற்காக மணவறையோடு ஒட்டி நிற்கிறார்கள். மணவறைக் கைங்கரியங்கள் எல்லாம் சகல முறைப் படிகளோடும் முற்றுப் பெறுகின்றன. மாப்பிள்ளை பெண்ணை சுட்டு விரலால் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு சுவாமியிடமும் போய் வருகிறான் சிவபாதத்திற்கு தலைக்குள் அரிக்கிறது தலைப்பாகைக்குள் கையை விட்டுக் கிண்டிக் கொள்கிறான்.

பகுத்தறிவுக் கண்ணோடு நோக்குமிடத்து இவ்விதமான சடங்குகள் அநாகரிகமாக, காலத்திற்கு ஒவ்வாததாக, முட்டாள்த்தனமாகப் படலாம். ஆனால், அவற்றில் தான் எவ்வளவு மனநிறைவும் சந்தோசமும் கிடைக்கிறது. அதற்காகவாவது, சகல சடங்குகளோடும் திருமணம் செய்தல் நல்லதென்றே படுகிறது. ஆனால்—அரியத்தின் விடயத்தில் சடங்குகள் இல்லையென்றே ஆகிவிட்டது.

உண்மையில் சிவபாதம் ஒரு அதிஷ்டக்காரனென்றும், அவனது நல்ல மனதிற்குத்தான் இப்படி எல்லாம் வந்த

கைக்கூடியிருக்கிறதென்றும், தனக்குள் கற்பித்து அந்தக் கற்பிதமே ஒரு சுகமாகக் கருதி ஆறுதலடைந்தான் அரியம்.

'என்னவோ, நான் குடுத்து வைக்கேல்லை, அவனுக்கெண்டாலும் குடுத்து வைச்சுதே' மணமக்கள் கல்யாணச் சோடனைக் காரைச் நோக்கி வருகிருர்கள். சிவபாதத்தோடு வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் எல்லோரும், காரைச் சூழ்ந்து நிக்கிருர்கள்.

''விஷ் யூ அ கப்பியஸ்ற் பெஸ்ற் நைட்'' அலுவலக நண்பர்கள் அவனை வாழ்த்துக் கூறி வழி விடுகிருர்கள். சிவபாதத்தின் கண்கள் தேடுகின்றன. அவைகள் அரியத்தைத் தான் தேடியிருக்கவேண்டும்.

அரியம் தம்பதிகள் அவர்களை நோக்கிப் போகிருர்கள். அவனுடன் கைகுலுக்கிக் கொள்கிருன் அரியம்

''மச்சான், அந்தா ரெண்டாவதா நிக்குது கறுப்புக் கார். அதில ரெண்டு பேரும் ஏறி வாங்க. வீட்ட வந்து சாப்பிட்டுட்டுட் தான் போக வேணும்.''

சிவபாதம் அரியம் தம்பதிகளை பார்த்துச் சொல்லி விட்டு காருக்குள் ஏறிக்கொண்கிருன். அரியம் மணப் பெண்ணை ஊடுருவிப் பார்க்கிருன்.

'மொனிக்காவுக்குப் பார்க்க கொஞ்சம் கறுப்பு. முக வாக்கும் அவ்வளவு இல்லை. எண்டாலும், கையோட காசக்லோ கொண்டந்திருக்கிருள். அவன் குடுத்து வைச்ச வந்தான்.'

தூரத்தில்—மாத்துச் சடங்கு பேசிய சுப்புறுமணியம் தம்பதிகள் அரியத்தையும் மொனிக்காவையும் ஓரக் கண்ணுல் பார்த்து விட்டுப் போய்க் கொண்டிருந்தனர்.

அவர்களின் முகங்களிலே சந்தோசமில்லை. சந்தோசம் இல்லாவிட்டால்—அந்த முகங்களில் இருப்பதுதான் என்ன? என்ன? வெறென்ன. சஞ்சலந்தான்.

அரியம் மொனிக்காவோடு ஏதோ குசுகுசுக்கிறான். சுப்புறுமணியம் திருமணவிடயமாக முத்தரின் வீட்டிற்கு இனிமேல் ஏறி இறங்க மாட்டார் என்றே தோன்றுகிறது.

கல்யாணக் காரை முன்னே விட்டு மற்றக்கார்கள் பின்னே ஊர்ந்தன. கல்யாண ஊர்வலங்களுக்கேயுரித்தான பாங்கில் அவை ஊர்ந்து சென்று ஒரு மணி நேரத்தை விழுங்கிய பின்னர் பெண் வீட்டையடைந்தது.

பலகாரம், அரியதரம், முறுக்கு ஒரு பக்கத்தாலும் கேக்துண்டு, லட்டு, வாழைப்பழம் இன்னொரு பக்கத்தாலும் வழங்கப்பட்டன. பொம்பிளை' பகுதியார் பசையுள்ளவர்கள் என்பது விளங்கியது. பலகாரத்தில் இருந்த அளவிற்கதிகமான சீனி அவர்களது செல்வத்தின் சீரினைக் காட்டியது. ஒரு றாத்தல் சீனி—ஒரு ரூபாய் ஐம்பது சதத்திற்கு விற்கும்போது—இவ்வளவு சீனி போட்டு பலகாரங்கள் செய்வது முடியாத காரியந்தான். ஆனால், இவர்களுக்கு முடிந்திருக்கிறது. இரண்டொரு வெள்ளை வேட்டி சால்வைக் கிழவர்கள் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்கள்.

''தம்பி, அங்கால அந்தா, முன்னுக்கு இருக்கிறவரைப் பார்'' ''வெத்திலை பாக்குத் தட்டத்தை வை''

''எடுங்கோ, எடுங்கோ... முருகேசு தம்பியவைகளுக்கு வாழைப்பம் குடுக்கேல்லை''

''என்ன இப்பதான் வாறீங்கள்''?

''இல்லை, கோயிலடியால வரேக்குள்ளதான் வீட்டைப் பூட்டாமை வந்திற்றன் எண்டது நினைப்பு'' வந்தது. அதுதான் ஒடிப்போய் பூட்டிற்று வந்தனான்.

''சரி வாங்கோ, எல்லாருக்கும் ராச்சாப்பாடு இங்க தான்''

''ஓம், மரக்கறிதான் இடியப்பமும் பால்சொதியும்''

அரியம் ஆண்கள் பகுயில் இருந்தான். மோனிக்கா பெண்கள் பகுதியில். மணமக்கள் அழகான வேலைப்பாடு அமைந்த சோபாவில் இருந்தனர்.

இடையிடையே பிறசண்டுகள் நடைபெற்றன. வாங்கி விட்டு கும்பிடுவோமா அல்லது கும்பிட்டு விட்டு வாங்குவோமா... திகைத்தான் சிவபாதம். அவனுக்கு 'முன்னபின்ன' கல்யாணம் கட்டி அனுபவம் இல்லை. அதனால் பிறசண்டுகள் வாங்கியும் பழக்கமில்லை, தூரத்தில் அமர்ந்திருந்த அரியம் சிவபாதத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டான். சிவபாதமும் — அந்த நேரத்தில் எல்லோரின் பார்வைக்கும் தான் ஆளாகியிருந்த போதும் தன் பார்வையை அரியத்திடம் செலுத்தி, அவன் மேல் தனக்கிருந்த அன்பைக் காட்டிக் கொண்டான்.

''சரி...எழும்புங்கோ, எழும்புங்கோ'' இலை போட் போட்டாச்சு...இந்தாங்க கையை அலம்புங்கோ''

''என்ன பாருங்கோ, இப்பதானே பலகாரம் சாப் பிட்டனுங்கள்'' அம் செமிக்க வேணுமா?''

''நல்ல புதினமான கதை கதைக்கிறியள், கல்லைப் போட்டாலும் செமிக்கிற வயசில, அருக்காணி காட்டாம எழும்புங்கோ''

''டேய், சின்னப்பு, செம்புத் தண்ணியைக் குடன்... பிராக்குப் பாக்கிறாய்...பிராக்குப் பாக்கிறதுக்கு மின்னி விட்டுருவன் கண்டியோ''

விருந்தின் முதல் பந்தியில்—மாப்பிள்ளை ஆண்கள் பகுதியிலும், பெண்பிள்ளை பெண்கள் பகுதியிலுமாக இருந்து...

வழமையான கல்யாண பகிடி சேட்டைகளுக்கு ஆளாகிக் கொண்டு இடியப்பத்தை இறுக்கிக் கொண்டிருந்தார்கள். சிவபாதத்திற்கு அவ்வளவாக உள்ளுக்குள் பூருதில்லை. முதல் இரவில் மர்ம எண்ணங்களெல்லாம், மனதில் பூத்திருக்கும் போது—இடியப்பம் எங்கே பூரப் போகிறது.

மாப்பிள்ளைக்குப் பக்கத்தில் அரியம். அவனுக்குப் பக்கத்தில் இன்னொருவர். அவருக்குப் பக்கத்தில் முத்தர். ஐயாவிற்கு மத்தியானம் வந்த கோபமெல்லாம் அடங்கியிருந்தாலும், அவர் அரியத்தைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அரியமும் ஒரு பக்கமும் திரும்பாது இடியப்பத்தை சொதியில் குழைத்துத்தள்ளிக் கொண்டிருந்தான்.

''அப்பனும் மகனும் என்ன சொல்லிச் சாப்பிடுறியள்''...தம்பி இஞ்சால முத்தண்ணைக்கு தக்காளிக் குழம்பில விடு''

''என்ன தம்பி இடியப்பம் போடவோ''

''இல்லை மாப்பிள்ளைக்குத் தான் போடுங்கோ, அவர் தான் பின்னேரத்திலிருந்து ஒரேயிரையாயிருந்து களைச்சுப் போயிற்றார்.

''என்ன எழும்பிற்றீங்க...ஆ...ஆ...இலையை வைச்சிற்று எழும்புங்கோ. றம்மில தண்ணியிருக்கு. வெத்திலைத் தட்டத்தை எடுத்துக் குடுங்கோ.

விருந்தை முடித்துக் கொண்ட முதல் பந்தியினருக்கு பீடா, சிகரட் வழங்கப்படுகிறது. சாப்பிட்டு முடித்தவர்களில் சிலர், தொங்கும் தோரணங்களில் ஈக்கில் பிய்த்தெடுத்து பற்களுக்குள் பூந்து கொண்ட உணவுத் துண்டுகளை கிண்டிக் கொண்டிருக்கின்றனர்.

முத்துக் குமாரர் சால்வையை தோளில் போட்டுக் கொண்டு மணமக்களிடம் சென்று 'என்வலப்' ஒன்றைப்

பக்குவமாகக் கொடுத்து விட்டு 'அப்ப போயிற்று வாறன்' சொல்லுகிறார்.

''என்ன அதுக்குள்ள''

''நாளைக்கு ஆறுதலா வாறன் தம்பி, வீட்டில கொஞ்சம் சுகமில்லை.''

''ஓம், போயிற்று வாருங்கோ''

முத்தரை வாசல்வரை கூட்டிச் சென்று பன்னீர் தெளித்து விடுகிறார் சிவபாதத்தின் அப்பா. தந்தை போனதைப் பார்த்துக் கொண்டிருந்த அரியம், சிவபாதம் தம்பதிகளுக்குப் பக்கத்தில் போய்க் குந்துகிறான்.

இரண்டாவது சாப்பாட்டுப் பந்தியை கலகலப்பு மூற்றுகையிட்டிருக்கிறது. பெண்களுக்கு மத்தியிலல்லாமல் ஒரு ஓரத்தில் ஒதுங்கியிருந்து புதினம் பார்த்துக் கொண்டிருந்த மௌனிக்காவை அரியம் தன்னருகே வரும்படி கூப்பிட்டு தம்பதிகளுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறான். பெண்கள் கூட்டத்திலிருந்து பல கண்கள் அவர்களைப் பார்க்கின்றன. அவர்களது வாய்கள் வெற்றிலைக் குதப்பலோடு பல விதக் கதைகளைக் குதப்பிக் கொண்டன.

இதுவரை சந்தடிக்குக் காரணமாயிருந்த 'பெண் பகுதிச் சொந்தக்காரர்கள்' வயிறு முட்டப் பிடித்து விட்டு வசதியான இடங்களில் கல்யாணப் பாய்களை விரித்து உடல்களைச் சாற்றிக் கொண்ட போது—அந்தத் திருமண வீட்டின் சந்தடி குறைந்துபோயிற்று. அரியம் தம்பதிகள் இன்னும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். இளம் தம்பதிகளை இன்னமும் காக்க வைத்துக் கொண்டிருத்தல்—கண்ணியமான செயலல்ல எனத் தெரிந்திருந்த போதும் அரியம் சிவபாதத்தை இழுத்து வைத்துக் கதைத்துக் கொண்டிருந்தான். தன்னை மீறி வந்த கொட்டாவியை சிவபாதம்

வெளிவிட்ட போது—உங்களுக்கும் நித்திரை வந்திற்றுப் போல'' எனச் சொல்லிக் கொண்டு எழுந்து... போயிற்று வாறன் சொல்லிக் கொண்டே வெளியே நடந்தான் அவன். அரியம் தம்பதிகளுக்கு பன்னீர் தெளித்து வழி யனுப்பி வைக்க அங்கு வாசலில் எவருமில்லை.

அரியமும் மொனிக்காவும் வீட்டை அடையும் போது இரவு பதினொன்றரை மணி. சில வெடிச் சப்தங்கள் இப் போது குறைந்து போயிருந்தன.

* * *

# முப்பது

வீட்டில் எல்லோரும் நித்திரையாகி விட்டிருந்த போதும், கதவுகள் திறந்திருந்தன. வீட்டிற்குள் இருவருக் கும் பாய் விரிக்கப்பட்டு இருந்தன. உடுப்புக்களைக் களைந்து, மடித்து கொடியில் எறிந்து விட்டு... இருவரும் சத் தடி செய்யாது பாயில் சரிந்து கொண்டனர். மொனிக்கா... கல்யாண வீட்டில் இடம் பெற்றிருந்த சடங்குகளை எண் ணிப் பார்த்துக் கொண்டாள். அவற்றின் பின்னணியில் தன் நிலையை யோசித்து, தன்னால் தானே அரியம் இது போன்ற சடங்குகள் இடம் பெறுமலே திருமணத்தை முடித் துக் கொள்ள வேண்டி வந்து விட்டது எனக் குழம்பி... முகட்டை வெறித்த வண்ணமிருந்தாள். தனக்குத் தமிழ் தெரியாது என்ற தைரியத்தில், நம்பிக்கையில். அங்கு வந் திருந்த பெண்கள்—அவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே—பல கதைகளைக் கதைத்த விதத்தை எண்ணி யெண்ணி—மனம் புழுங்கி கண்ணீர் வராமல் உள்ளுக்குள் அழுது கொண்டாள் அவள். தான் அரியத்தை கட்டாயப் படுத்தாது விட்டிருந்தால், ஒருவேளை அவன் தன்னை மணந்து கொள்ளாது விட்டிருக்கலாம். அப்படி விட்டிருந்

தாலும், பரவாயில்லை என ஒரு கணம் சிந்தித்துக் கொண்டான்.

திருமணத்திற்கு வந்திருந்த பெண்கள் தன்னை விசுற்ப மாகப் பார்த்த மாதிரித்தானே அரியத்தையும் பார்த்தி ருப்பார்கள். என்னுடைய மனமே இவ்வளவு துன்பப் படும் போது அவரது மனம் எவ்வளவு கஷ்டப்படும்...அதன் பல னாக, அவன் தன்னில் வெறுப்புக் கொள்வானோ... அந்த வெறுப்பு தன் வாழ்க்கைப் பாதையை மாற்றிவிடுமோ... எனப் பயந்து கொண்டாள். இம்மாதிரியான இக்கட்டான நேரத்தில், தன் தாய் தயாவதி பக்கத்திலிருந்தால் எவ்வ ளவு ஆறுதலாயிக்கும் எனவும் எண்ணியெண்ணி... பாவம் அந்தப் பேதைப் பெண் நித்திரையில்லாது அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அரியம் எப்படியெல்லாமோ உடலைத் திருப்பிப் பார்த் துக் கொண்டான். நித்திரை வரவேண்டுமானால், தலைக் குள் சுழன்று கொண்டிருக்கும் இனமறியாத குழப்பத்தை இல்லாமல்ச் செய்ய வேண்டும். எப்படி அதை இல்லாமல் செய்வது...?

மதியம் அரைகுறையாக விட்ட அந்த நிகழ்ச்சி அவ னுக்குச் சடுதியாக நினைவிற்கு வந்து சிறிது ஆறுதலைக் கொடுத்தது.

மோனிக்காவும் அரியமும் ஒருவரையொருவர் பார்த் துக் கொண்டனர். அந்த ஒரு கணத்தில் வாய்ச்சொற்கள் தேவையற்ற பொருள். மோனிக்காவை அருகேயிழுத்து அணைத்துக் கொண்டான். அந்த அணைப்பின் சுகத்தில் அவர்களுக்கு வந்திருக்கும் கஷ்டமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் பறந்து விடவேண்டும் என அவர்கள் விரும்பினர்.

இனி எங்கள் இருவருக்கும் — தாயும் உதவியில்லை, தந்தையும் உதவியில்லை, சுற்றமும் உதவியில்லை. உனக்கு

நானும், எனக்கு நீயுந்தான் உதவி...... என்ற உணர்வு அவர்கள் இருவரிலும் உருப்பெற்ற போது — அணைப்பு இன்னும் இறுகியது.

என்ன வந்தாலும் நான் உன்னைக் கைவிட மாட்டேன் மொனிக்கா...... என வெளியில் சப்தம் கேளாது புலம்பினான் அவன். அந்த வார்த்தைகள் அவளுக்கு ஆறுதலையளித்த போது தன் கைகளால் அவனை மேலும் இறுக அணைத்து அழுத்தமான முத்தமொன்றைக் கொடுத்தாள் மொனிக்கா.

இந்த அன்பு ஒன்றினாலேயே, இனி வரப் போகின்ற துன்பங்களையெல்லாம் தன்னால் சமாளித்து விட முடியும் என நிச்சயமாக நம்பினான் அரியம். அன்று காலையிலிருந்து தொடர்ந்து கொண்டிருந்த துன்ப நிகழ்ச்சிகளின் நினைவுகள் சற்றே குறைந்து மறைந்து விட்டது என அவர்கள் நினைத்த போது — நித்திரை கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை அரவணைத்தது. கட்டிப் பிடித்த வண்ணமே அவர்கள் தூங்கிப் போயினர். அலார மணிக்கூடு இரவு பன்னிரண்டு இருபதைக் காட்டியது.

எங்கிருந்தோ ஒரு மூலைவெடி வெடித்து, அடுத்த நாள் வருசப்பிறப்பு என்பதாக அறிவித்து ஓய்ந்தது.

# முப்பத்தியொன்று

*13 - 4 - 72......*

காலை நாலு மணியிருக்கும். புது வருடம் அதிகாலையிலேயே பிறந்து விட்டிருந்தது. முன்னைய வருடங்களைப் போல சீனவெடிகள் பம்பலாக அதிரவில்லை. இப்போது சீனவெடிகள் சுடக்கூடாதாம். சுட்டால் — சுட்டவரை அரசாங்கத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டவர்

களைச் சொல்லி அடைத்து விடுவார்கள். எவ்வளவு தான் பயமிருந்த போதும், இங்கொன்றும் அங்கொன்று மாக வெடிச் சப்தங்கள் கேட்டுக் கொண்டுதானிருந்தது.

மெதுமெதுவாக பொழுது புலர்ந்து விட்டது. முத்தர் மருந்துநீர் வாங்கி வர கோயிலுக்குச் சென்றிருக்கிறார். மருத்துநீர் வைத்துத்தான் அவர் குடும்பம், சித்திரைப் பிறப்பன்று முழுகுவது வழக்கம். பக்கத்து வீட்டு துலாக் கிணத்தில் ஆண்களும், பெண்களும் பிள்ளைகளும் முழுகும் சப்தம் கேட்கிறது.

சந்தியில் — சுருட்டுகள் சகிதம் நாட்டுநடப்பு பேசும் சில கிழங்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக் கென்ன, இன்று பங்கு ஆடு அடித்திருப்பார்கள், போத்த லும் எடுத்திருப்பார்கள். மத்தியானம் நன்றாக முழுகி விட்டு 'தண்ணி' போடத் தொடங்கினார்களானால், முசுப் பாத்திதான். அவர்களுடைய கதைக்கு அரியம் கதாநாய கன். மற்றவனுடைய கதையைக் கதைப்பதென்றாலே — செலவில்லாமல் ஒருவகை இன்பம் கிடைக்கிறது. அந்த இன்பத்தை இழப்பதற்கு அவர்கள் மடையர்களா...... என்ன?

சந்திக்கடை கறுவல் வேலுப்பிள்ளை, கிழவர்கள் குந்தி யிருந்து கதைப்பதற்கு ஏதுவாக தென்னங்குத்தியொன்று போட்டிருக்கிறான். அவனுக்குத் தெரியும், தென்னங்குத்தி போட்டுவிட்டால் அதில் குந்தியிருந்து கதைப்பதற்காக வாவது சிலர் தன் கடைக்கு வருவார்கள். அந்த வருகை யினால், தன் கடையில் சுருட்டு, பீடி வெற்றிலை, சிகரட், வியாபாரம் நடக்குமென்று. கிழவர்கள் நால்வர் — தென் னங்குத்தியில் தம் பாரத்தை ஏற்றி ஊர்க்கதை பேச உடல்களைச் சௌகரியப்படுத்திக் கொண்டனர்.

''அம்மாடி, ராத்திரி படுக்கேக்குள்ள ரெண்டு மணி யாப் போச்சு. அவன் பொடியன்ர தாலிகட்டுக்குப்

போயிற்று வர பதினொண்டாப் போச்சு. ராத்திரி முழுக்க ஒரே நுளம்புக் கடி. நித்திரையுமில்லை.''

"இவர் முத்தர்ர முகத்தைப் பாத்தியே ... காய்ஞ்சு போய்க் கிடந்தது'' ''பின்ன காயாம என்ன செய்யும், பெட்டை கள்ளமா காயிதம் போட்டு பொடியனைப் பிடிக்கிறாள். பொடியன் என்னடாண்டா, சிங்களத் தேவடியாளை வீட்டுக்கை கூட்டி வந்து கூத்துக் காட்டுகிறான்.... அவர்ர முகம் காயத்தானே செய்யும்''

''இவர் முத்தருக்கு வேணும், இனி இவயளை விட்டா உலகத்திலே வேறு நல்ல பிள்ளையள் இல்லையெண்டு தலையில தூக்கி வைச்சவர். அவர்ர நடப்பைபயல்லோ முந்திப் பாக்க வேணும். அதுதான் கடவுளாய்ப் பார்த்து இப்படிச் செய்திற்றார்.''

''அது சரி, உனக்கு நல்லாத் தெரியுமா...... அவன் அந்தச் சிங்களப் பெட்டையைத்தான் முடிச்சவனெண்டு. சில நேரத்தில, சும்மா ஊர் பாக்கக் கூட்டி வந்திருப்பான். கொழும்புச் சிங்களத்தியளைத் தெரியாதே.''

''பேய்க்கதை கதைக்கிறாய். அல ஊர் பாக்க இவரோட இப்பிடி கைகோத்துக் கொண்டே வரவேணும். என்ர பெருமகனும் கொழும்பிலிருந்து இவையன் வந்த றெயினிலதான் வந்தவன். புருசன் பெஞ்சாதி மாதிரி கட்டிப் பிடிச்சுக் கொண்டு வந்ததை அவன் கண்ணால பாத்திருக்கிறான்...... அதுக்கு என்ன சொல்லுறாய்'' ''எங்கட அயல் பொடியளுக்குத் தெரிஞ்சாப் போச்சு. துலைச்சுப் போடுவாங்கள். அவங்கள் ஒண்டெண்டோனை உணர்ச்சி வசப்படுறவங்கள்.''

''நீ பாத்தியோ.... பெட்டை குங்குமப் பொட்டு வைச்சு சீலையும் கட்டி தமிழ்ப் பிள்ளையளைப் போல நடிக்குது.''

"பெட்டை என்னத்தை நடிச்சாலும், சிங்களத்தி யெண்டு நெத்தியில எழுதி ஒட்டியல்லோ வைச்சிருக்குது."

"அது சரியப்பா. மூத்தர் என்ன சொல்லுருர். அது களின்ர கலியாணத்துக்கு ஓம் எண்டிட்டாரோ, இல் லாட்டி மூஞ்சியை நீட்டுருரோ."

"பக்கத்து வீட்டு பாக்கியத்தின்ர மேன் சொன்னுன். நேற்று மத்தியானம் பெரிய சண்டை நடந்ததெண்டு"

"பொடியன்ர தாய் பாவம், புருசனுக்குப் பயத்தில வாயைத் திறக்கேல்லையாம். இவர்தான், வெட்டிறன், புடுங்கிறன் எண்டு கத்தினவராம்!"

"நான் நினைக்கிறன்...... இவன் பொடியன் பெட்டைக் குப் பிள்ளை குடுத்திற்ருன் போல ... அதுதான் தப்பிக் கொள்ள வழியில்லாம கட்டியிருக்கிருன்."

"என்ன அவள் சிங்களத்தி பிள்ளைத்தாச்சியோ"

"பின்ன, விசயம் பாரதூரமாப் போகாட்டி, அவன் இங்க கூட்டிற்று வந்திருக்கமாட்டான். கொழும்புக்கு போற பொடியளுக்கு அவளுகள் துடையைத் தூக்கிக் காட்டிளு.... இவனுகளும் என்ன செய்யிறது... ஆ......"

"சரி பொடியன்தான் இப்படிச் செய்து போட்டான், நாமன் எண்டாலும் கண்டிச்சு ஒரு வழி பண்ண வேணு மெண்டு இவர் மூத்தர் ஏதும் நினைச்சாரோ."

"சும்மா சத்தம் போட்டிட்டு அப்பிடியே விட்டுட் டார். நானுயிருக்க பிள்ளையெண்டும் பாக்காம கொலை செய்திருப்பன்."

"வாறன் ஒரு வாய் வெத்திலை போட்டிட்டு"

ஒரு கிழவர் வேலுப்பிள்ளையின் கடைக்குள் செல்கிருர். கடை முதலாளி சநூலவ் வேலுப்பிள்ளை முற்றத்திற்கு தண்ணீர் தெளித்துக் கொண்டிருக்கிருர். தெருப் பையன்கள் ஆகாயத்தில் விடவேண்டிய ஈக்கில் வானத்தை நிலத்தில் வைத்துக் கொளுத்தி விடுகிருர்கள். அது பறந்து வந்துகிழவர்களை ஊடுருவிக்கொண்டு போகிறது. ஒருகிழவர் காறித் துப்புகிருர்.

''சீ வம்பில பிறந்ததுகள். தெருவிலயும் வானம் விடுகுதுகள். கண்ணில மண்ணில பட்டாத்தான் தெரியும். பன்றிகள்''

வெற்றிலை போட்டுக் கொண்ட தம்பிராசாக் கிழவர் திரும்பவும் வந்து சேர்ந்து கொள்கிருர். சீதாலட்சுமி காண்டம் ஆரம்பமாகிறது.

'மாணிக்கராசா என்னவாம், பொடியன் முடிப்பானே தெரியேல்லை'' ''அவன் எங்கே முடிக்கப் போருன். நேற்று நான் ராசதுரையிட்ட விசாரிச்சனுன். பொடியனுக்கு விருப்பமெண்டா முடிக்கட்டன் என்டுதான் சொன்னவன். பேந்து — சிங்களத்தியைக் கண்டவுடன, தன்ர மானமும் போயிடும் என்டு சொல்லி வேணுமாம். அவன் சொன்னது நியாயம் எண்டுதான் நான் சொல்லுவன்.''

''நூறு முறையும், சரி ஆ..... மாணிக்கராசாவுக்கு பெண் கிடைக்காமலே இதுகளுள்ள பூரவேணும், அவனிட்ட காகமிருக்கு''

''ம்...... சரி ..... எங்களுக்கென்னப்பா...... நாங்க பாவத்துக் கிரங்கி இதுகளைக் கரைக்கப்போரு — எங்களையும் குறை சொல்லுவாங்கள்.''

''நீ சொன்னது சரியப்பா...... நாங்கள் கதைச்சாப் போல எங்களுக்கு ஏதும் தரப் போருங்களோ...... சரி வாறன்''

''இவன் நாகன் பங்காடு அடிக்கிறன் எண்டவன்...... எனக்கும் ஒரு பங்கு தரச் சொல்லு மறந்திடாதை''

கிழவர்களின் முச்சந்தி மகாநாடு முடிந்து ஒவ்வொரு வரும் நாயிலிருந்து உண்ணி கழருவது போலக் கழன்று விட்டனர். ஊர்க்கதை பேசாது விட்டால் இந்த உண்ணிகளுக்கு உண்பது செரிக்காதோ .... என்னவோ.

* * *

# முப்பத்திரண்டு

சந்திக்கடை கறுவல் வேலுப்பிள்ளை முத்தரோடு நல்ல மாதிரி. முத்தருடைய குடும்பத்தில் கடந்த சில நாட்களில் நடந்துவிட்ட விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் அவருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது.

மருந்துநீர் வாங்கிக் கொண்டு வந்த முத்தர் — ஒரு பைக்கற் சாம்பிராணிக்குச்சுத் தாங்கோ'' என்று சொல்லிக் கொண்டே கடைக்குள் செல்கிறார். கறுவல் வேலுப்பிள்ளை சாம்பிராணிக் குச்சோடு தன் காதில் வந்து விழுந்த கிழவர்களின் அநியாயப் பேச்சில் சாராம்சத்தையும் அவருக்குக் கொடுக்கிறார்.

''நான் என்னை அண்ணன் செய்ய...... என்ர கஷ்ட காலம். வருசப் பிறப்பு' நாத்தில கூட என்ர பிள்ளையளின்ர கதையைத்தான் அயல் கதைக்குது..... ம்...... வாறன்''

அவர் வீட்டை அடைந்த போது அரியம் மொனிக்கா கிணற்றடியில் குளிக்கத் தயாராகின்றார்கள்.

தெய்வானையிடம் மருந்துநீர்ச் செம்பைக் கொடுத்து ''இந்தா அதுகள் குளிக்குது போலக் கிடக்குது. இதைத் தலைக்கும் மற்றதை காலுக்கும் வைச்சு முழுகச் சொல்லு'' என்று சொல்லிவிட்டு அப்பால் நகர்கிறார். எவ்வளவுதான் கோபமிருந்த போதும், தன் பிள்ளைகள் நல்லாயிருக்க வேண்டும் என விரும்பும் உள்ளப் பாங்குதானே அவரிடம் உள்ளது.

மொனிக்காவிற்கு மருந்துநீர் விசயம் புதினமாக இருக்கிறது. அரியம் செய்தது போல அவளும் செய்கிறாள். குளியல் முடிந்து விட்டது. அரியம் ஈரக்கால்களுடன் வாசலடிக்கு வந்து ஈரமண்ணைத் தட்டிவிட்டு உள்ளே போகிறான்.

நேற்று மதியத்திலிருந்து அரியம் இன்னமும் ஒருவரிடமும் கதைக்கவில்லை இப்போதாவது கதைக்கவேண்டும்... தம்மிடையே திரை போட்டிருக்கும் மௌனத்தை கிழித்து எறிந்து விடவேண்டும் என விரும்பினான் அவன்.

சூட்கேசிலிருந்து ஐயா அம்மா தங்கச்சிக்கென கொண்டு வந்த புது உடுப்புகளை எடுத்து வெளியே வைத்தான். தானும் பழைய வெளுத்த சாரமொன்றைக் கட்டிக் கொண்டு விறாந்தைக்குள் வந்தான். தங்கச்சி ஏற்கனவே குளித்து விட்டாள். அடுப்படிக்குள் ஏதோ வேலையாயிருந்தாள் அவள். அரியம் அவளைக் கூப்பிட்டான்.

''தங்கச்சி பிள்ளை...... இஞ்ச வாங்கோ''

''ஓம் வாறன்''

மொனிக்காவிடம் ஒரு பார்சலைக் கொடுத்து 'இந்தா இதைத் தங்கச்சிக்குக் குடு'' எனச் சொல்லிவிட்டு பின் பக்கம் போகிறான் அவன். சீதாலட்சுமி கையை அலம்பி சேலைத் தலைப்பில் துடைத்துக்கொண்டே வந்தாள்.

'இந்தாங்க'...என்று சொல்லிக்கொண்டு நைலக்ஸ் சாரி யொன்றை அவளிடம் கொடுத்தான் மொனிக்கா. 'எனக்கா'... என ஆச்சரியத்துடன் கேட்ட சீதா மொனிக்கா வின் கண்களுக்குள் எதையோ தேட முயன்று – கண்டு விட்ட சந்தோசத்தில் சாமியறைப் பக்கம் போனாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன ஐயாவும் அம்மாவும் மருந்துநீர் வைத்து முழுகி விட்டு வந்தனர். அம்மா ஈரச் சீலையை உலர்த்தி கொடியில் விரித்து விட்டாள். ஐயா சாமியறைக்குச் சென்று திருநீறு அள்ளிப் பூசிக் கொண்டு விறுந்தைக்குள் வந்தார். அரியம் மொனிக்காவைப் பார்த்து...'மொனிக்கா அந்த பாக்கில இருக்கிற உடுப்பை எடுத்துக் கொண்டு வா. இப்ப நான் சொல்ற மாதிரிச் செய்ய வேணும் ஐயாவும் அம்மாவும் விறுந்தையில இருக் கிறுங்க. நாங்கள் மெதுவாப் போய் அதுகளின்ர காலில விழுந்து கும்பிட்டு இதை குடுக்க வேணும் என்ன''... என்றான்.

காலில் விழுவதன் காரணமோ, தத்துவமோ விளங் காது போனாலும், அது ஒரு மரியாதையான செயல் என்ற மட்டில் புரிந்து கொண்டாள் மொனிக்கா. இருவரும் விறுந்தைக்கு வந்தனர். இருவர் கால்களிலும் குனிந்து கையால் தொட்டுக் கும்பிட்டனர். முத்தர் இதை எதிர் பார்க்கவில்லை. கால்களை சற்றே விலக்கிக் கொண்டார். கால்களை விலக்கிக் கொண்டதை பலமாகச் செய்யவில்லை. ஆனால் சிறிதளவாவது செய்துதான் ஆக வேண்டும்; அதன் அர்த்தம் என்ன? இன்னும் உன்னில் எனக்கு கோப மிருக்கிறது என்பதை அரியத்திற்குக் காட்டிக் கொள்ள. அரியம் அதை உணர்ந்து கொண்டாலும், வெளியில் காட் டிக் கொள்ளவில்லை. கையிலிருந்த பார்சலை ஐயாவின் மடி யில் வைத்துவிட்டு குனிந்தபடியே இருந்தான் அரியம்.

முத்தர், அவர்களின் முகங்களைப் பார்க்கவில்லை. தெய் வானை முத்தரின் பயத்தால் அவர்களைப் பார்க்கவில்லை.

அரியம் சொன்னான் ...'' ஐயா நான் தெரியாமச் செய்து போட்டனையா... அதுக்காக என்னை மன்னிச்சிருங்கய்யா. ஒரு பிழையைச் செய்த நான் அதைத் தவறு என்று உணர்ந்து திருந்திய போது இவளைக் கட்டாயம் கட்டித் தான் ஆகவேண்டிய நிலைக்குள்ளானேன். அப்படி நான் திருமணம் செய்யாது விட்டிருந்தால் – பெண் பாவம் என்னைச் சும்மா விட்டிருக்காது. செய்த ஒரு பாவத்தைமறைப்பதற்கு மேலும் மேலும் பாவம் செய்வது பிழையென உணர்ந்தேன்.

ஐயா மொனிக்கா நல்ல குணமானவள். எங்களுடைய குடும்பத்திற்கேற்ற விதத்தில் நடக்கக் கூடியவள். நாங்கள் இரண்டு பேரும் செய்த தவறை நீங்கள் மன்னிச்சிர வேணுமய்யா.''

தெய்வானையின் கண்களில் கசிவு!. முத்தரில் – வெளியில் தெரியும் மாற்றங்கள் எதுவுமில்லை. ஆயின் – அவரது இதயம்...ஈடாடியது. பெற்ற மகனும், மருமகள் என அறிமுகப்படுத்தப்பட்ட சிங்களப் பெண்ணொருத்தியும் அவரது காலடியில். ஏனோ தெரியவில்லை. அவருக்குக் கோபமே எழவில்லை. நேற்று வந்த கோபமெல்லாம் எங்கே போயிற்று. கோபம் வரவில்லையென்பதற்காக, அவர்கள் இருவரையும் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க வேண்டுமா. அப்படிக் கொடுத்து விட்டால் தன் கோபத்திற்கு மரியாதையில்லை. பூ... இவ்வளவுதானா... முத்துக்குமாரு.

அவ்வளவு கெதியில் விட்டுக் கொடுத்து விட முடியாது என நினைத்தவராய் கால்களை சிறிது அரக்கிக் கொண்டார். தெய்வானை மூக்கைச் சீறி இழுத்துவிட்டாள். மகனும் மருமகளும் எழுந்து அறைக்குள் போகும்வரை முத்தர் அசையவில்லை.

காலைக்கோப்பி கடையப்பம் எல்லாம் முடிந்து விட்டது. அரியமும் மொனிக்காவும் அறைக்குள் இருந்தார்கள். தான் கொடுத்த புது வேட்டி சால்வையை ஐயா கட்டிக் கொள்வாரென்ற நம்பிக்கையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அரியம். வெளியே செருமும் சப்தம் கேட்கிறது'

'ஐயா தான் எங்கயோ வெளிக்கிடுகிறார் போல கிடக்கு! வெளியே போகும் போது தன்னுடைய வேட்டியைக் கட்டிக் கொண்டு போகிறாரோ என்று பார்க்க வெளியே தாவி வந்தான் அரியம்.

அங்கே...... பழைய வெளுத்த வேட்டியொன்றைக் கட்டிக் கொண்டு கையில் பை ஒன்றுடன் தெருவில் இறங்கிக் கொண்டிருந்தார் முத்தர்.

* * *

# முப்பத்தி மூன்று

நேரம் பத்து மணியிருக்கும். இரவு றெயினுக்கு வெளிக்கிட வேணும். அதுக்குள்ள கணக்கா வேலை கிடக்கு. சிவபாதத்தையும் கூட்டிக் கொண்டு ஒருக்காப் போய் மாணிக்கராசாவைப் பாத்திற்று வரவேணும். தங்கச்சியின்ர விசயம் என்ர கையாலதான் முடியவேணும். இப்படி எண்ணிக் கொண்டிருந்தான் அரியம். சோம்பல் என்பதே என்ன என்று தெரியாத நேரம் எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் ஓடிக் கொண்டிருந்தது. அம்மாவும் மொனிக்காவும் அடுப்படிக்குள் இருந்தார்கள். 'அம்மா இதில போயிற்று ஓடி வாறன்''... என்று சொல்லி விட்டு ஐயாவினுடைய சைக்கிளை எடுத்தான் அரியம்.

தெரு நெடுகிலும், புது உடுப்புகளுடன் சின்னப்பிள்ளைகள் ஒழுக்கும் மறுக்குமாக போய்க்கொண்டிருந்தனர்.

வழமையாக – ஊத்தைப் பாண்டல்களோடு ஓடித் திரியும் சிறுர்கள் இன்று புனிதமாக இருப்பதைப் பார்க்க மன திற்கு இதமாக இருந்தது அவனுக்கு. சந்திக் கடையருகே சனக்கூட்டம். சைக்கிளில் இருந்த படியே காலை ஊன்றி அங்கு ஏன் கூட்டம் நிற்கிறது எனப் பார்த்தான் அரியம்.

ஒருவன் ஒரு மேசைக்கு முன்னால் நின்று கொண்டு.. ... ''ஆ.. வையுங்க .. லக்கி செவன், அண்டர்...ஆ ஐஞ்சு வைச்சா பத்து .....'' என்று உற்சாகமாகக் கத்தினான் பெரிய பொடியன்களும், ஏன்—தான் பெரிய மனிதர்கள் என நினைத்திருந்த சில இழவர்களும், அங்கு முண்டியடித் துக் கொண்டு, லக்கி செவனில் காசு வைத்து விட்டு ஏக்கத் துடன் பார்த்துக் கொண்டிருந்ததை கண்ணுற்ற போது திடுக்கிட்டான்.

''சரி, இனி வைக்கேலாது. மேசையிலிருந்து கையெ டுங்க. ஆ...குலுக்கப் போறன்'' சூதை நடத்துபவனின் கையை எல்லோரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றனர். லக்கி செவன் கட்டைகளை பேணிக்குள் போட் டுக் குலுக்கி மேசையில் கவிட்டு வைத்து பேணியை எடுக்கி ருன்.

''ஓவர் செவன்'' ......ஆ... மேசையிலிருந்து கை எடுங்கோ'' சுற்றி நின்ற சுமார் இருபது பேரில் இரண் டொருவரே ஓவர் செவனில் காசு வைத்தவர்கள். அவர்க ளுக்கு - வைத்தது போல் டபிள் பங்கு கிடைக்கிறது. மற்ற வர்கள் - அந்த ஆட்டத்தில் விட்டதை அடுத்த தடவை யில் எடுத்து விட வேண்டுமென்ற வெறியில் – கொடுக்கல் வாங்கல் முடியும் வரை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'சீ...சீ... ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்கள்.'

அரியத்தின் மனம் உளைந்தது.

''அண்ணை, சைக்கிளில நிக்கிற அண்ணை வாங்க,வாங்க லக்கி செவனில வையுங்க, ஐஞ்சுக்கு பத்து எடுக்கலாம்.''

சூதாட்ட முதலாளி சைக்கிளில் நின்ற அரியத்தை 'லக்கிசெவன்' பெருமைபாடி கூப்பிடுகிருன். ஏளனப் பார்வையொன்றை அதற்குப் பதிலாக உதிர்த்து விட்டு சைக்கிளை உழக்குகிருன் அரியம்.

'இவன் மாணிக்கராசாவைக் கண்டு கதைக்கவேணும். சிவபாதத்தோட போனுத்தான் தெம்பாயிருக்கும்.'

என நினைத்துக் கொண்ட அரியம். சைக்கிளை சிவபாதத்தின் வீட்டிற்கு விடுகிருன். சிவபாதத்தின் கல்யாண வீட்டில் ''இது மாலை நேரத்து மயக்கம்'' பாட்டு பலமாகக் கேட்கிறது. 'அவனைப் போய் இந்த நேரத்தில குழப்பிறது அவ்வளவு நல்லாயில்லை' பாப்பம், நானே தனியப் போய் அவனைக் காணுவம்.'

சிவபாதத்தின் வீட்டருகே வந்த சைக்கிள் திரும்பவும் வந்த பாதையில் போகிறது. தூரத்தில் மகிழ மரத்தடியில் தங்கராசா — மாணிக்கராசாவின் அப்பா, ராசதுரையின் சகலபாடி - நிற்கிருர். இவரோட கதைச்சுப் பாத்தா அவங்கட அபிப்பிராயம் விளங்கும்.' சைக்கிளுக்கு சடுதியாக பிரேக் போட்டுக் கொண்ட அரியம் ''அண்ணை உங்களைத்தான் தேடி வந்தனுன். ஒரு விசயம்'' என்ருன்.

தங்கராசாவோடு நன்ருகக் கதைத்துப் பழகியவனல்ல அரியம். இப்போது கதைப்பதென்ருல், அதுவும் முக்கியமான விசயமொன்றைக் கதைப்பதென்ருல் — சங்கோஜமாகத் தானிருக்கிறது. 'என்ன தம்பி, எப்ப கொழும்புக்குப் போருய்''... கேட்டார் தங்கராசா. ''இண்டை ராவைக்கு போறன்.''

விசயத்தை எப்படித் தொடங்குவது என்ற தயக்கம் அரியத்திற்கு. 'அண்ணை, உங்களைத்தான் நேற்று முழுக்கத் தேடினனான். என்ர தங்கச்சியின்ர விசயம் கேள்விப் பட்டிருப்பீங்க, நான் கொழும்புக்கு போறதுக்கு முதல் — இதில ஒரு முடிவுக்கு வரவேணும். அதுதான் உங்களைக் கண்டு கதைச்சுப் பாக்கலாம் எண்டு வந்தனான்.''

எச்சிலை மென்று விழுங்கி ஒருவாறு விசயத்தைத் துப்பினான், அரியம். ''ஓ. அதோ தம்பி, அது அவன் பொடியன் உன்ர தங்கச்சியைக் கட்டிறது எண்டுதான் நிண்டவன். தகப்பனும் என்னசெய்யிறது எண்டு போட்டு — ஒரே மகன் தானே — சரி எண்டு சொல்லியிருந்தார். இப்ப உன்ர விசயத்தைக் கேள்விப்பட்டாப்பிறகு... அவையளுக்கு அவ்வளவா விருப்பத்தைக் காணேல்லை.' .. ஒருவித அலட்சியத்தோடு பதில் சொன்னார் தங்கராசா. ''என்ன என்ர விசயம்'' என்று கேட்டு ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள ஆசை அரியத்திற்கு. ஆயினும் ஆசையை அரும்பிலே கிள்ளி விடுகிறான்.

''அப்ப, இப்ப என்ன சொல்லுகினம் அவையள்''

''அவையள் என்ன...... நீ சிங்களப் பெட்டையைக் கட்டினதால ஊரில பகைப்பட்டுப் போனாய். ஊரில பகைப் பட்டுப் போன குடும்பத்தில பெண்ணெடுக்க யோசிக் கினம்.''

தங்கராசாவின் வார்த்தைகள் அரியத்தின் இதயத்தை கேட்டுக் கேள்வியில்லாயல் திறந்து உள்ளே சென்று முள்ளாகக் குத்தியது. குத்திய முட்களைப் பிடுங்கி எடுத்து, எறிந்தவருக்கே திருப்பி எறிவது பெரிய வேலையில்லை. அப்படிச் செய்தால் - தன் காரியம் நடக்காது என்ற உண்மையை அவன் உணர்ந்திருந்ததால் சகித்துக் கொண்டான்.

''அண்ணை, நீங்க எனக்கு ஒரு உதவி செய்ய வேணும்— நான் கேட்டது எண்டு சொல்லி நீங்கள் ஒருக்கா அவைய

ளோட கதைச்சு எனக்கு ஒரு முடிவைச் சொல்லச் சொல் லுங்கோ: எங்கட வீடு வளவெல்லாம் தங்கச்சிக்குத்தான். போடப்பட்ட நகையும் ரொக்கம் ஒரு இரண்டு ஆயிரமும் தருவம் என்டு சொல்லுங்கோ.''

''சரி, தம்பீ, நான் நாளைக்குக் காலமை சந்திச்சுக் கதைச்சுப் போட்டுச் சொல்லுறன், முடிவை.''

''நான் அண்ணை, இன்டைக்கு ராவைக்கே ஊருக்கு

போறன். தயவு செய்து நீங்க இப்பவே கதைச்சுப் போட் டுக்கொண்டால் பெரிய உதவியாயிருக்கும்.'' என்று இழுத் தான் அரியம்.

'நான் அவசரமாய் போக வேண்டியிருக்கு. இவர் இப் பவே கதைச்சிற்று வரட்டாம். இந்த ஊர் வேலையளைப் பார்த்துக் கொண்டிருக்கத்தான் எனக்கு நேரமிருக்கு. இப் படியாகச் சினம் கலந்த நினைப்புப்புழு தங்கராசாவின் மன தில் நெளிந்தது. அடுத்த கணமே அந்தப் புழுவை அதிலும் பார்க்கப் பெரிய புழுவொன்று பலமாகத் தாக்கியது.

'இவன் பொடியன் உத்தியோகத்தில இருக்கிறான். அதோட நம்மளை மனுசனா மதிச்சு வந்திருக்கிறான். அய லுக்குள்ள நம்மளை நாயெண்டுந் தேடுறாங்களில்லை. ஆற் செயலா கச்சேரிக்குக் கிச்சேரிக்கு மாறி வந்திற்று தெண்டா — எதெண்டாலும் உதவிக்குப் போனா செய் வான் தானே. வீணா ஏன் கோவிப்பான் பின்னால உதவும்'

தன் சொந்த நலன் கருதி அப்போதே போய் ராச துரையோடு கதைத்து விட்டு வருவது நல்லதென நினைக் கிறார் தங்கராசா.. ''சரி தம்பி, நீ இவ்வளவு சொல்லேக் குள்ள, எனக்கு அவசரமான அலுவல் ஒண்டிருக்கு...... சரி. பரவாயில்லை .. குமர் காரியம் ...ஒப்பேற வேணும்... நீ அந்தப் பூவரச மரத்தடியில நில்லு. நான் அரை மணித் தியாலத்தில வாறன்'' ...... ''ஓமண்ணை'' ... நன்றி பாவத்

துடன் சொல்ல அரியம் தன் சைக்கிளை திருப்பி பூவரச மரத்தடியை நோக்கி உழக்கிறான்.

வெய்யிலுக்கு யாரைப் பற்றிக் கவலே. கொளுத்தித் தள்ளுகிறது தெருவில் ஒரு பசு. தகர வேலியில் ஒட்டியிருந்த 'ரிக்சாகாரன்' சினிமாப்படப் போஸ்டரை இழுத்துக் கிழித்து ருசிபார்த்துக் கொண்டிருந்தது. பசுக்கள் புல்லுத் தின்று பால் கொடுத்த காலம் எல்லாம் மலையேறி விட்டது. இப்போதெல்லாம் சினிமாப் போஸ்டர்கள்தான் அவைகளுக்குத் தஞ்சம். அதற்காகவாவது சினிமாப் போஸ்டர்கள் நிறைந்த அளவில் ஒட்டுவது நலம். எவ்வளவு கரிசனையுடன் பொடியன்கள் இந்தப் போஸ்டர்களை ஒட்டினார்கள்: இரவிரவாகக் கண்விழித்து, கனவுலகக் கதாநாயகனின் சினிமாப்படப் போஸ்டரை ஒட்டுவதற்கு அவர்களை ஊக்குவித்திருந்த ஆர்வம் பற்றி இந்தப் பசு அறிந்திருக்குமானால் — இப்படிக் கிழித்துத் தின்றிருக்குமோ...... மடைப் பசு.

அரியம் காதோரமாக வழியும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு சைக்கிளைச் சரித்து பாரில் குந்திக் கொள்கிறான்.

தூரத்திலே மாணிக்கராசா வருவது தெரிகிறது.

'யாரது, ஆ ... அடடே...... மாணிக்கராசா போல கிடக்குது...... வரட்டும், என்ன எண்டு நேரிலேயே கேட்டிருவம்'

மாணிக்கராசாவிடம் எப்படிக் கதையைத் தொடங்குவது என்று யோசித்த வண்ணம் நகர மறுத்த நேரத்தை சபித்துக் கொண்டு நின்றான் அரியம். தூரத்தில் வந்த மாணிக்கத்தின் கண்கள் ஒருதரம் அரியத்தின் கண்களைச் சந்திக்கின்றன. உன் கையில்தான் என் தங்கையின் வாழ்க்கையிருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ளும் பாவனை

யில் முகத்தை மிகப் பரிதாபமாக வைத்து மாணிக்கராசா வைப் பார்த்தான் அரியம்.

'அட, நேரா வந்தவன் என்னைக் கண்டிட்டு ஒழுங்கைக் குள்ளால போறுன். ஏன் அப்படிப் போறுன்? ஒருவேளை என்ர தங்கச்சியை பிடிக்கேல்லையா? அப்படித்தானே தங்க ராசா சொன்னவன். சரியான ஆளாக் கிடக்கு. செய்யிற தையும் செய்து போட்டு இப்பிடி ஒளிச்சுத் திரியிறுன்.'

ஒரு கணத்திற்குள் ஒழுங்கையினுல் சென்று மறைந்து விட்ட மாணிக்கராசாவின் பேடித்தனத்தை எண்ணி துன் பப்பட்டுக்கொள்கிறுன் அரியம்.

'இவனைப் போல முதுகெலும்பு இல்லாதவனுக்கு என்ர தங்கச்சியைக் குடுத்தாலும், நல்லா வைச்சுப் பார்க்க மாட்டான். தங்கராசா வந்து என்ன சொல்றுன் எண்டு பாப்பம். அதுக்குப் பிறகு நடக்கிறதை யோசிப்பம்''

நேரம் பதினொன்றரை. தங்கராசா வந்த பாடில்லை. தெருவால் போன சில தெரிந்தவர்கள், சம்பிரதாயச் சிரிப் புகளை உதிர்த்து விட்டுச் செல்கிறுர்கள். சம்பிரதாயத் திற்காக சும்மா சிரிக்கிறுர்கள். உள்ளுக்குள் என்ன நினைத் துக் கொள்கிறுர்களோ.

தங்கராசாவின் சைக்கிளின் 'கறபுற'ச்சத்தம் பின்னுல் கேட்கிறது. சிற்றிலிருந்தபடியே நிலத்தில் காலைக் குத்தி நின்று போய் வந்த விசயத்தைச் சொல்கிறுர் அவர்.

''தம்பி அவையளுக்கு அவ்வளவு விருப்பமில்லை. இனி அப்படியில்லை செய்யத்தான் போறமெண்டு நீங்கள் நிண்டா, வீடு வளவு போடப்பட்ட நகையோட ரொக்கம் பதினைஞ்சு தரட்டாம்.''

''மாணிக்கராசா என்ன சொல்லிச்சுது''?

''அவன், தம்பி — தாய் தேப்பன் சொல்லைத் தட்ட மாட்டான். நீங்கள் ஐயா அம்மாவோட கதைச்சு ஒரு முடிவுக்கு வாங்கோ ... ஒண்டு...... மாணிக்கத்தைப் போல ஒரு மாப்பிள்ளை எடுக்கிறதெண்டா ...... வலு கஷ்டம் அப்ப நான் வாறன் தம்பி''

அரியம் வேறு கேள்விகளைக் கேட்டுக் கஷ்டப்படுத்து வதற்கு முன்னர் தான் போய்விட வேண்டுமென்று நினைத்துக் கொண்ட தங்கராசா அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டார்.

''சீ...... என்ன உலகமப்பா இது ... உங்கட குடும் பத்துக்குள்ள கல்யாணத்தைக் கட்டினா மானமே போயிரும் எண்டதுகள். இப்ப ரொக்கம் பதினைஞ்சு தந்தா முடியும் எண்டு சொல்லுதுகள். போன மானத்தை பதினையாயிரம் திருப்பிக் கொண்டந்திருமா? காசுக்காக எதையும் செய்யக்கூடிய இதுகளிட்டை மாப்பிள்ளை எடுத்தா என்ர தங்கச்சியின்ர பாடு அதோகெதிதான்...... ம்... பாப்பம்... பின்னேரமா ஒருக்கா தங்கச்சியையும் பிச்சுக்குக் கூட்டிக் கொண்டு போய் கதைக்க வேணும். அவளின்ர அபிப்பிராயத்தையும் அறிஞ்சு போட்டு பிறகு யோசிப்பம் ... ஐயா அம்மா என்னத்தைச் சொல்றது...... என்ர தங்கச்சியின்ர நன்மை தீமையை நான்தானே பாக்க வேணும்''

எண்ணவிதைகள் திர்மானமாகக் கனிந்த போது அவனது சைக்கிள் அந்த இடத்தை விட்டு நகர்ந்தது.

மத்தியானம் முழுக்க ஐயாவின் சிவமணைக் காண வில்லை. அம்மா சிறிது சிறிதாக அரியத்தோடும் மோனிக்காவோடும் கதைக்கத் தொடங்கியிருந்தாள். பின்னேரம் நாலு மணியாகிவிட்டது ஐயாவைத்தான் இன்னும் காண வில்லை. அரியம் அம்மாவிடம் எல்லாம் சொன்னான். தங்கராசாவைத் தான் தூது அனுப்பியதையும், அவர்கள் அதற்குச் சொன்ன மறுமொழியையும், அவளிடம்சொல்லி

இனி அந்தச் சம்பந்தம் சரிப்பட்டு வராது என்றும், தன்னுடைய தங்கச்சியின் விசயத்தை தன்னுடனேயே விட்டு விடும்படி கேட்டுக் கொண்டான் அவன். தெய்வானை அதற்குப் பதிலேதும் சொல்லாவிட்டாலும், மனதளவில் மறுப்பில்லை அவருக்கு. பின்னேரம் நாலரை போல்—சீதா லட்சுமியையும் அழைத்துக் கொண்டு அரியம் தம்பதிகள் பீச்சுக்குப் போனார்கள்.

* * *

# முப்பத்திநாலு

அவர்கள் மூவரும் — வழியில் வருவோர் போவோரிடம் போலிச் சிரிப்புச் சிரித்துச் சமாளித்து பீச்சை அடையும் போது ஐந்து மணியாகிவிட்டது.

மாணிக்கராசாவின் பேடித்தனத்தையும், அவன் குடும்பத்தாருடைய காசு ஆசையையும் மிகவும் ஆறுதலாக சீதாலட்சுமியிடம் எடுத்துச் சொன்னான். இப்படியான ஒரு குடும்பத்தில் நீ மருமகளாகப் போவதைப் பற்றி இன்னமும் உனது அபிப்பிராயம் என்ன? என்றெல்லாம் கேட்டான் அரியம்.

கண்டதும் ஏற்பட்ட காதலும், கடிதத்தால் உண்டான காதலும் நிலைத்து நிற்காது என்றும், மாணிக்கராசா நன்றாகக் குடித்துத் திரிந்தவனென்றும், கூறித் தனது கூற்றுக்கு துணை தேடிக் கொண்டான் அவன். சீதாலட்சுமிக்குப் புத்தி சொல்லக்கூடிய அருகதை தனக்கு இல்லையென்றோ — அல்லது, அப்படிப் புத்தி சொல்வதற்குத் தேவையான அன்னியோன்யம் அவனிடத்தில் ஏற்படவில்லையென்றோ நினைத்துக் கொண்டதால் மௌனமாக இருந்தாள் மௌனிக்கா.

சீதா, அண்ணன் சொன்னதற்கெல்லாம் எதிர்ப்போ அல்லது ஆதரவோ காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், அவளது மௌனத்தை ஆதரவாகவே கணித்துக் கொண்டான் அரியம். சினிமாப் படங்களில் வருகின்ற மாதிரி வசனம் பேசிக் கொள்ளவில்லை அவர்கள். ஆனால் அங்கு நிலவியிருந்த மௌனமே பல கதைகள் பேசிக் கொண்டன.

அண்ணன் எது சொன்னாலும், அதே போல நடப்பது என முடிவு செய்து கொண்டாள் சீதா.

கடலை விற்றுக் கொண்டிருந்த பையனிடம் மூன்று சுருள்கள் வாங்கிக் கொறித்தனர் அவர்கள். நேரம் ஆறரையாகிவிட்டது. இருட்டு கொஞ்சம் கொஞ்சமாக வரத் தொடங்கியது.

''சீதா, நீயும் எங்களோட கொழும்புக்கு வா... மற்றதெல்லாம் பேந்து சொல்றன்''

மணலைக் கைகளால் கோதிக் கொண்டே சொன்னான் அரியம். அதற்கும் பதிலில்லை. மூவரும் மணலைத் தட்டி விட்டுக் கொண்டு எழுந்து நடந்தார்கள். வீட்டிற்கு வரும் போது ஏழு மணியாகிவிட்டது. இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் இருக்கின்றன, ரயிலுக்கு. வீட்டில் அம்மா பிட்டு அவித்துக் கொண்டிருந்தாள். பெரிய தலைவாழை இலையொன்று சுளகில் வைக்கப்பட்டிருந்தது. பிரயாணத்திற்காக பார்சல் கட்டிக் கொடுக்கப் போகிறாள். அடுக்களைக்குள் எட்டிப் பார்த்தான் அரியம்.

''அம்மா, தங்கச்சிக்கும் சேர்த்து புட்டுக் கட்டணை''

''ஏன்''...... ஒன்றும் விளங்காமல் கேட்டாள் அம்மா.

''தங்கச்சியை என்னோட கூட்டிக் கொண்டு போகப் போறன். இந்த ஊரில என்ர தங்கச்சியைக் கட்டிக் குடுக்

கவுமேலாது, கட்டிக் குடுக்க எனக்கு விருப்பமுமில்லை. ஐயாட்ட விசயத்தைச் சொல்லி முற்று வாங்கித் தாறது உன்ர பொறுப்பு, என்னம்மா''

அரியத்தின் இமைக்கடைகளில் கண்ணீரின் கசிவு. மொனிக்காவைத் திருமணம் செய்ததால் தனக்கு ஏற்பட்ட துன்பங்களை மறந்து போனான் அரியம். தன் விசயமாக இனி, அம்மாவும் ஐயாவும் யோசிப்பதற்கு ஒன்றுமில்லை எனக் கருதினான் அவன்.

மொனிக்கா கொடியில் காய்ந்திருந்த சீலையை மடித்து வைத்தாள். வெளிக்கிடுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. அம்மா ஒன்றுமே சொல்லவில்லை. சீதாவும் தனது சூட்கேஸ் பெட்டிக்குள் உடுப்புகளை அடுக்கிக் கொண்டிருந்தாள்.

வெளியே போயிருந்த மூத்தர் வந்தார். அவருக்குத் தெரியும், இரவு ரயிலுக்குத்தான் அவர்கள் இருவரும் போகிறார்களென்று. ஐயாவைக் கண்டதும் அரியம் முகம் கழுவும் சாட்டில் துவாயை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கிணற்றடிப்பக்கம் நழுவுகிறான். குசினிக்குள் போன மூத்தரிடம், அம்மா ஏதோ குசுகுசுக்கிறாள். அதைத் தொடர்ந்து சலசலப்பு.

உறுமல் சப்தமும் தொடர்கிறது;

''நான் உயிரோட இருக்கும்வரை அது நடக்காது''

முகம் கழுவிய அரியம் விறாந்தைக்குள் வந்தான். இனி நேரமில்லை. ஐயாட்ட எல்லாத்தையும் விளக்கமாகச் சொல்ல வேணும். பயந்து கொண்டிருந்தா ஒண்டும் நடக்காது. இப்படி எண்ணிக் கொண்ட அரியம் சாய்மனக் கதிரையில் சாய்ந்திருந்த மூத்தரிடம் பேச்சுக் குடுக்கிறான்;

''ஐயா நான் என்னோட தங்கச்சியையும் கூட்டிக் கொண்டு போறன்.''

''ஏண்டா நீ நாசமாப் போனது பத்தாம அவளையும் அங்க கொண்டு போய் நாசமாக்கப் போறியா. அவளுக்கு கல்யாணம் செய்து வைக்க எனக்குத் தெரியும். நீ உனக் கெண்டு ஒரு வாழ்க்கையைத் தேடீற்ருய், பேந்து உனக் கென்னத்துக்கு மற்ருக்களின்ர கதை .. உன்ர பாட் டைப் பார்த்துக் கொண்டு நீ போ.''

முந்தி வந்த கோபத்தின் காற்பங்கு கூட இப்போது இல்லாவிட்டாலும், இடையிடையே சினம் தலைகாட்டிய தால் முத்தர் சீறி விழுந்தார். ஆரியம் இனிமேல் சத்தம் போடாமல் இருந்தால் சரிப்படாது என உணர்ந்தான்.

''ஐயா நடந்ததைச் சொல்லிச் சொல்லி ஏனய்யா என்னைச் சித்திரவதை செய்றீங்கள். என்ர தங்கச்சியை நல்லா வைக்க வேணுமெண்டு என்ன எனக்கு மட்டும் விருப்பமில்லையா''

விருப்பமிருந்தா இப்படி நீ நடந்திருப்பியாடா''

''ஐயா நடந்த எல்லாத் தவறுக்குமாகவும் என்னை மன்னிச்சிருங்கய்யா, இனிநடக்கப் போறது நல்லாயிருக்க எனக்கு ஒரு முற்றைச் சொல்லுங்க''

''இப்ப என்னை என்ன சொல்லச் சொல்லுருய்''

''தங்கச்சியை என்னோட கொழும்புக்கு விடுங்கோ''

''ஏன் அவளையும் கொண்டுபோய் சிங்களவனுக்குக் கட்டி வைக்கப் போறியா''? முத்துக்குமாருவின் கேள்வி யில் சினமும் ஏளனமும் கலந்து நர்த்தனமிட்டன.

''ஓமய்யா, நான் அவளை சிங்களவனுக்குத்தான் கட் டிக் குடுக்கப் போறன், சிங்களவனுக்குத்தான் குடுக்கப்

போறன்'' பிறந்து வளர்ந்த இருபது வருசமா, வெளில வெளிக்கிடாம வீட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடந்து பிறத்தி ஆக்களின்ர முகத்தையே பாக்காம இருந்தானே அப்ப உங்கட அயலாக்கள் என்ன சொல்லிச்சினம். ஏன்... நீங்க என்ன சொன்னீங்க... என்னாலயும் என்ர தங்கச்சியாலயும் தான் குடும்பத்துக்கே பெயர் வந்தது எண்டு சொல்லேல்லையா .. விதிவசத்தால நாங்க ஒரு நாள் பிழை விட்ட உடன, அதையே வாழ்க்கையில் பற்றுக் கோடாகப் பிடிச்சுக்கொண்டு வாயில வந்த மாதிரி பேசித் தள்றீங்க. எங்களால இருபது வருசமா பெருமை அடைஞ்சனீங்க, ஒரு நாளைக்கு எங்களால வந்த சிறுமையைப் பொறுக்க முடியாமக் கத்துகிறீங்க. உங்களைப் பொறுத்த வரையில நாங்க சின்னப் பிள்ளையள் தானே. நாங்க பிழைவிட்டா நீங்க பொறுத்துக் கொள்ள மாட்டீங்களா; நடந்ததை மறந்து நடக்க வேண்டியதைப் பற்றிச் சிந்திக்க மாட்டீங்களா. மற்றவங்கதான், பிறத்திதானே எண்டு போட்டு வாயில வந்ததைப் பேசிறுங்கள் எண்டா, நீங்களும் அப்படிப் பேசினா நாங்க எங்க போறது எங்களைச் சாகலா சொல்றீங்க.''

மூத்தர் ஒன்றும் சொல்லவில்லை. அமைதி அவர் முகத்தில் குமிழியிட்டுக் கொண்டிருந்தது.

''ராசதுரையின்ர மகனுக்குத் தங்கச்சியைக் கேட்டு, முடிச்சு வைச்சு அதால வாற எல்லாப் பொறுப்புகளையும் நானே தாங்கிக் கொள்ளலாம் எண்டு அவனிட்டை போனா - அவன் சொல்றுன்... மானம் போனாலும் பரவாயில்லை, பதினையாயிரம் கொண்டு வா எண்டு. மாத்துச் சடங்கு பேசின சுப்புறுமணியத்தின்ர தலைக்கறுப்பையே காணேல்லை; ஊருக்குள்ளயும் நரம்பில்லாத நாக்கால என்னவல்லாமோ கதைக்கிறுங்கள். இப்படியான அயலுக்கை என்ர தங்கச்சியைக் கட்டி வைக்கிறதுக்குக் காட்டிலும், சிங்களவனுக்குக் கட்டிக் குடுக்கலாம். நீங்க

சொன்னாலும் சொல்லாட்டிலும், என்ர உடன்பிறப்பை கண் கலங்காமல் பார்க்க வேண்டிய கடமை எனக்குத் தான் இருக்கு. அதால நான் கூட்டிக்கொண்டுதான் போகப்போறன்.

''நீ வெளிக்கிடு தங்கச்சி''...... அரியம் கத்தினான்.

முத்தர் மௌனமாக இருந்தார். தோளுக்கு மூத்து விட்டால் தோழன் என்ற நினைப்பு அவரைத் தாக்கியிருந் தது. அரியம் உடுப்பை மாட்ட உள்ளே சென்றான். தங்கச் சியும் மொனிக்காவும் வெளிக்கிட்டு றெடியாகஇருந்தனர். உடுப்புகளை மாட்டிக் கொண்டான் அரியம். கொடியில் உலர்ந்திருந்த துவாயை எடுத்து மடித்து சூட்கேசிற்குள் வைத்து அதை மூடினான். றெயில்வே வாறண்டும், சில்ல றைக் காசுகளும் சட்டைப் பைக்குள் கனத்தது.

பயணக்காரர் மூவரும் வெளியே வந்தார்கள். ஐயா விருட்டென எழுந்து கிணற்றடிப் பக்கம் போய் மறைந்து கொண்டார். சிறிது நேரத்தில் கிணற்றடியில் தண்ணீர் அள்ளும் சத்தம் கேட்டது. அரியம் சொன்னான்......'' தங் கச்சி, ஐயா அம்மாட்டைப் போய் போயிற்று வாறன் எண்டு சொல்லிப் போட்டு கும்பிட்டுட்டு வாம்மா... மொனிக்கா நீயும் போ,'' மொனிக்காவும், சீதாவும் ஐயாவைத் தேடிக்கொண்டு கிணற்றடிப் பக்கம் செல்கி றார்கள் அரியம் அம்மாவின் கைகளைப்பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டான். அவளது கைகள் கண்ணீரைத் தழு வின. ''அம்மா நாங்கள் போயிற்று வாறமம்மா, ஐயா வைக் கவனமாகப் பாரம்மா. என்ன பிழை செய்தாலும் நாங்க உங்கட பிள்ளையள் தானே.'' அரியத்தின் குரல் சரி யாகக் கேட்கவில்லை. தாய் கண்ணீர் உகுத்தாள். தன் கைகளால் அந்தத் தாயின் கண்ணீரை ஆதரவாகத் துடைத்து விட்டான் அரியம்.

முத்தர் கால் மண்ணை வாசல் சாக்கில் பலமாகத்தட்டி விட்டுக் கொண்டு விருந்தையில் ஏறினர். அரியம் தந்தையின் கால்களில் விழுந்து அவற்றைப் பலமாகப் பிடித்துக் கொண்டான். ''ஐயா என்னை மன்னிச்சிருங்கய்யா, நீங்கள் எங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தெய்வம்... உங்களை எதிர்த்துப்பேசின என்னை என்னண்டாலும் செய்யுங்கோ.'' முத்துக்குமாரு ஒன்றுமே சொல்லாமல் சாமியறையை நோக்கி நடந்தார். சீதாவும் மொனிக்காவும் அம்மாவிடம் ''போயிற்று வாறம்'' என்று சொல்லிக் கொண்டு பக்கத்தில் வந்து நின்றூர்கள்.

''எட்டரை மணியாச்சு. இண்டைக்கு றெயின் கிறவுட்டாக இருக்கும். நேரத்தோட போகவேணும். வெளிக்கிடுங்கோ..., போவம்.''

மூவரும் விருந்தையை விட்டு முற்றத்திற்கு வந்தனர்.

''அம்மா, போயிற்று வாறம்'' ..... அம்மா போட்டு வாறமனை''

உஞ்சூ... ஒரு தரம் குரைத்து அடங்கியது.

சாமியறையில் விபூதியை அள்ளி நெற்றியில் அப்பிக் கொண்டிருந்த முத்தரின் காதில் ''போட்டு வாறம்'' ஒலி பாய்ந்து கனத்தது.

* * *

# முப்பத்தைந்து

எதிர்பார்த்தது போல் ஸ்டேசனில் நெரிசலில்லை. அரியத்தின் இதயத்தில் பல எண்ணங்களின் நெரிசல். ரயில்

புறப்படுவதற்கு இன்னும் பத்து நிமிடங்களிருக்கின்றன. வசதியான கோணர் சீட்டுகளில் எதிரெதிரே அமர்ந்திருக்கிறார்கள் சீதாவும், மொனிக்காவும். லோங்ஸ் பின் பைக் கற்றுக்குள் மூன்று டிக்கட்டுகளைத் திணித்து விட்டு பொத்தானைப் பூட்டி விடுகிறான் அரியம்.

கொழும்பிலிருந்து புறப்படும்போது, இருந்த பயத்தின் ஆக்கினையோ, எப்படிச் சமாளிக்கப் போகிறேன் என்ற துன்பத்தின் சாயலோ...... இப்போது அவனிடம் இல்லை.

ஆனால், இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் ஒரு விரிசல். கோணேச கோயிலுக்குப் போய் மணிக்கணக்காகக் கும்பிட்டுவிட்டு திருநீறு சந்தனம் சாற்றிக் கொள்ளாமல் திரும்பி வந்தது போலிருந்தது அவனுக்கு. யாரைத் தன் வழியில் திருப்பி - சமாளித்து விட்டுப் போகலாமென்று வந்தானோ, அவரை - அந்தத் தெய்வத்தை - ஆறுதல் படுத்தாமலே திரும்பிப் போகிறோம் என நினைத்த போது இதயக் கிணற்றின் நீர் எல்லாம் வற்றியநிலை.

'வயது போன காலத்தில ஆறுதலைக் குடுக்கிறதை விட்டுட்டு அவதியைக் குடுத்திற்றுப் போறன்'... இந்தப் பாவத்திற்குப் பதிலாக, எனக்குப் பிறக்கிற பிள்ளை என்னுடைய கடைசி காலத்தில இப்படித்தான் தவிக்க விட்டுட்டுப் போகும்...... அப்படிப் போனாத்தான் எனக்குச் சரி.'

தன்னிலேயே ஆத்திரப்பட்டுக் கொண்டான் அரியம்.

ஸ்டேசனில் முதலாவது மணி ஒலித்தது. அரியத்தின் கண்கள் தன்னிச்சையாக ஸ்டேசன் கொரிடோரைப் பார்த்துக் கொண்டன. யாரை எதிர்பார்க்கிறான், அவன் சிவபாதத்தையா? அவன் மாப்பிள்ளையாயிற்றே எப்படி வர முடியும்? தன் தமக்கையின் கணவனையா? அவர் எங்கே

வரப் போகிறார். அவர் ஸ்டேசனுக்கு வந்து வழியனுப்பி வைக்கக் கூடிய மாதிரியாகவா நடந்து கொண்டிருக்கிறான் அவன். அவருக்கு அவரது மரியாதைதான் முக்கியம். எனவே அவர் வரப்போவதில்லை.

பின் யாரை அவன் கண்கள் தேடுகின்றன.

ஸ்டேசன் மாஸ்டர் திரும்பவும் ஒப்பீசுக்குள்ளிருந்து வெளியே வருகிறார். அடுத்த மணியும் அடிக்கப் போகிறார் போலிருக்கிறது.

அரியம் கொம்பாட்மெண்டிற்குள் தாவிஏறி - ஜன்னல் கதவில் கைகளையூண்டிக் கொண்டு வெளியே பார்க்கிறான்

வரும் வருமென்று எதிர்பார்த்து, ஏமாந்ததால் இனி வரப் போவதில்லை என முடிவு செய்து, மறக்க முயற்சி செய்திருக்கும் போது வருமே கோடைமழை — அது வந்து கொண்டிருந்தது. பிளாட்போம் டிக்கற்றை டிக்கட் கலெக்டரிடம் காட்டிய படியே இரண்டாம் வகுப்புப் பெட்டியை நோக்கி வந்து கொண்டிருந்தார் முத்தர்.

ஐயாவைக் கண்டதும் கீழே இறங்கி ஓடி வந்தான் அரியம்.

சீதாவும் மொனிக்காவும் எழுந்து வந்து ஜன்னலருகே நின்று கொண்டனர்.

அரியத்திற்குக் கிட்டே வந்த முத்தர், அவனது கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அவரது கண்கள் தெரியவில்லை. கண்ணீரின் பெருக்கத்தால் கலங்கிய சுனையாகிப் போயிருந்தன அவைகள்.

'கவனமாகப் போயிற்று வாங்கோ பிள்ளையன்''

அவரது குரல் கரகரத்து மழுங்கியது.

தோளில் போட்டிருந்த புதுச் சரிகைச் சால்வையால் கண்களைத் துடைத்துக் கொண்டார் முத்தர். அது - அரியம் வருசத்திற்கென்று எடுத்துக் கொடுத்த சால்வை.

வேட்டி மடிப்பிற்குள்ளிருந்து எதையோ குனிந்து எடுத்தார் முத்தர். மூன்று ஐந்து ருபாய்த் தாள்கள்.

''இந்தாப்பு... வருசக் காசு'' ... இந்தாங்க பிள்ளையன்'' நல்லாயிருங்க......நல்லாயிருங்க ......''

ஸ்டேசன் மாஸ்டர் இரண்டாவது மணியையும் அடித்துவிட்டார். அரியம் பெட்டிக்குள் ஏறிக் கொண்டான்.

நான்கு ஜோடிக் கண்கள் சுற்றுப்புறத்தை மறந்த நிலையில் அழுது வடிந்தன.

ரயில் அரக்கி அரக்கித் தன் பயணத்தைத் தொடங்கி விட்டது.

''ஐயா, போயிற்று வாறம்''

''ஐயா, போட்டு வாறன்''

''மாமா, அப்பிகிலா என்னங்''

முற்றியது.

எல்லாம் கற்பனை

"ஈழத் தமிழிலக்கியத்தின் பதச் சோறாக விளங்கக்கூடியது இந்த நாவல்."

"எழுத்தின் ஆழமும், கவர்ச்சியுங் கொண்டு நோக்கும் பொழுது, இவரிடம் வியக்கப்படத்தக்க முதிர்ச்சியும் ஆக்கத்திறனும் காணப்படுகின்றன."

"அருள் சுப்பிரமணியத்திடம் சமூகக் கட்டுப்பாடு எனும் இலக்கிய அறம் இயற்கையான ஆக்கத் திறனுடன் இணைந்து நிற்கின்றது."

மலர்

வெளியீடு

2

"இத்தகைய இலக்கிய ஆக்கங்கள்தான் தேசிய ஒருமைப்பாட்டுக்கான யதார்த்தபூர்வமான தளத்தை ஏற்படுத்துகின்றன."

"அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்ற இந்த நாவலின் ஆற்றொழுக்கான கதையோட்டம், பாத்திரங்கள் உரையாடும் பொழுது காணப்படும் செயற்கைவாடை சிறிதும் வீசாத இயல்பான நடை ஆகியன— தமிழகத்து நாவலாசிரியரான தி. ஜானகிராமனை நினைவுறுத்துவனவாகவுள்ளன. இவ்வொப்பீடு அருள் சுப்பிரமணியத்தை ஈழத்து ஜானகிராமனாக்கும் முயற்சியன்று. தமிழ் இலக்கியப் பரப்பில்—ஈழத்துத் தமிழ் நாவலாசிரியன் ஒருவனது முதல் முயற்சி அவனை எத்தகைய மதிப்பீட்டுக்கு அருகதையுள்ளவனாக்குகின்றது என்பதைச் சுட்டிக் காட்டுவதாகும்."



கலாநிதி கா. சிவத்தம்பி

இரஞ்சனா அச்சகம், கொழும்பு 13.